2975

T.N.L.A. Debates

OFFICIAL REPORT

VOL: 39 NO: 1

April 20th 1987

வெளியீடு 1-3-1988 Issued 1-3-1988

2475

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

529/AL/88

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 20, 1987-தொகுதி 39-எண் 1
Monday, the 20th April 1987-Volume 39-No. 1


சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
**Legislative Assembly Secretariat Fort St. George,**
**Madras-600 009**

விலை ரூ.3.00 காசுகள்] [Price Rs-3.00 paise

V211, 3, 1187
N87, 39-1

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136520
சென்னை-600 008

உள்ளடக்கம்

20-4-1987

| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் Personnel of the Government of Tamil Nadu .. | i—iii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. .. | vii—viii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் .. .. .. .. .. | ix—xvii |
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. | 1—44 |
| 2. அறிவிப்பு— | |
| உரிமைக்குழு—உறுப்பினர்கள் தேர்தல் .. | 44—45 |
| 3. கவன ஈர்ப்பு— | |
| (அ) கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஏற்பட்ட தீ விபத்து .. .. | 46—50 |
| (ஆ) குடிநீர் வடிகால் வாரிய ஊழியர்களின் கோரிக்கைகள் .. .. .. | 50—60 |
| (இ) மதுவிலக்கு அமலால் சேலம் மாவட்ட வருவாய் அலகில் சிலர் பணி நீக்கம் .. | 60—62 |
| (ஈ) அம்மன்பேட்டையில் உள்ள நவீன அரிசி ஆலை கழிவு நீரால் ஏற்பட்டுள்ள பாதிப்பு .. .. .. .. | 63—64 |
| (உ) ஆதி திராவிட மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க தாட்கோ மூலம் காகித ஆலைகள் நிறுவுதல் குறித்து .. .. | 64—71 |

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR—THIRU SUNDAR LAL KHURANA

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. The Chief Minister. .. | Hon. Dr. M. G. Ramachandran. |
| 2. The Minister for Finance. | Hon. Dr. V. R. Nedunchezhian. |
| 3. The Minister for Food. | Hon. Thiru S. Ramachandran. |
| 4. The Minister for Industries and Agriculture. | Hon. Thiru K. Rajaram. |
| 5. The Minister for Health, | Hon. Thiru P. U. Shanmugam. |
| 6. The Minister for Education and Law. | Hon. Thiru C. Ponnaiyan. |
| 7. The Minister for Transport. | Hon. Thiru S. Muthusamy |
| 8. The Minister for Housing and Handlooms. | Hon. Thiru S. Thirunavukkarasu. |
| 9. The Minister for Tourism, Prohibition and Electricity. | Hon. Thiru V. V. Swaminathan |
| 10. The Minister for Noon Meal, Social Welfare and Khadi. | Hon. Thiru R. Soundararajan. |
| 11. The Minister for Commercial Taxes. | Hon. Thiru T. Ramasamy. |
| 12. The Minister for Adi-Dravidar Welfare. | Hon. Thiru A. Arunachalam. |
| 13. The Minister for Public Works. | Hon. Thiru K. K. S. S. R. Ramachandran. |

| | பக்கங்கள் |
|---|---|
| 4. வரவு-செலவுத் திட்டம், 1987-88—வாக் கெடுப்பு (தொடர்ச்சி). .. .. .. | |
| (அ) கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் .. .. | 72—170 |
| (ஆ) கோரிக்கை எண் : 44—எழுதுபொருள்—அச்சுத்துறை .. .. .. | 72, 73, |
| மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் .. | 154—169 |
| *திரு. மா. கதிர்வேலு .. .. | 73—82 |
| திரு. பு. கோ. நாராயணன் .. .. | 82—87 |
| *திரு. ஆ. நடராசன் .. .. .. | 87—97 |
| *திரு. ஏ. தங்கராசு .. .. .. | 97—103 |
| *திரு. கு. ரமணி .. .. .. | 103—118 |
| திரு. மா. சின்னராசு .. .. .. | 118—128 |
| திரு. ஆர். செங்காளியப்பன் .. | 128—135 |
| *திரு. கே. சுப்பராயன் .. .. | 135—146 |
| *திரு. ஆர். ரெங்கசாமி .. .. | 146—154 |
| 5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 170 |


2975

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர் —திரு. சுந்தர்லால் குரானா

அமைச்சரவையின் உறுப்பினர்கள்:

| | | |
|---|---|---|
| 1. | முதலமைச்சர். .. | மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன், |
| 2. | நிதி அமைச்சர். .. | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். |
| 3. | உணவு அமைச்சர். | மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். |
| 4. | தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. க. இராசாராம். |
| 5. | மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம். |
| 6. | கல்வி மற்றும் சட்ட அமைச்சர். | மாண்புமிகு திரு. சி. பொன்னையன். |
| 7. | போக்குவரத்துத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. சு. முத்துசாமி. |
| 8. | வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு. |
| 9. | சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன். |
| 10. | மதிய உணவு, சமூக நலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன். |
| 11. | வணிக வரித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. த. இராமசாமி. |
| 12. | ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எ. அருணாசலம். |
| 13. | பொதுப்பணித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன். |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. மா. சின்னராசு

டாக்டர் கே. சமரசம்

திரு. கே. குப்புசாமி

திரு. செ. செம்மலை

திரு. டி. ஆர். வேங்கடரமணன்

திரு. சி. கு. இராமசாமி
செயலாளர்

## பேரவையின் முக்கிய அலுவலர்கள்

(அகர வரிசைப்படி)

| | |
|---|---|
| பள்ளிகொண்ட பெருமாள், திரு. பெ., பி.ஏ., பி.எல். | கூடுதல் செயலாளர் |
| பத்மநாப நம்பியார், திரு. பி. எம்., பி.ஏ., பி.ஜி.எல். | இணைச் செயலாளர். |
| சீனிவாசன், திரு. சா., பி.எஸ்ஸி. | முதுநிலை குழு அலுவலர். |
| சீதாராமன், திரு. வெ., பி.காம்., பி.ஜி.எல். | துணைச் செயலாளர். |
| டில்லிதுரை, திரு. த. ப., பி.எஸ்ஸி., பி.எல். | துணைச் செயலாளர். |
| ஜானகிராமன், திரு. செ. சு., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர். |
| சீனிவாசன், திரு. கு. அ., பி.ஏ. | குழு அலுவலர். |
| இராமச்சந்திரன், திரு. ஆர். கே., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| கனகசபாபதி, திரு. பெ. ச., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர். |
| கேசவராம், திரு. பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர். |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர். |
| தியாகராஜன், திரு. கே.. பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர். |
| பாலகிருஷ்ணன், திரு. ப., பி.காம். | சார்புச் செயலாளர். |
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| ஜான் திரு. வ. சா., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| ஜேக்கப் ஆர்தர், திரு. டி., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர். |
| ஜோசப், திரு. மா. கு., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| வெங்கட்டராமன், திரு. கோ | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| சுவாமிநாதன், திரு. ச., எம்.ஏ. | தலைமை நிருபர் (குழுக்கள்). |
| **நம்பி ஐயங்கார், திரு. எஸ்.** | **தலைமை நிருபர் (பேரவை).** |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி)

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும் (1) | | தொகுதியின் பெயர் (2) |
|---|---|---|
| **அ** | | |
| 1. அண்ணாதாசன் திரு. எம். | | திருவரம்பூர் |
| 2. அப்துல் சமத் திரு. ஆ.கா.அ. | | திருவல்லிக்கேணி |
| 3. அப்துல் மஜீத் திரு. எச். | | வாணியம்பாடி |
| 4. அரங்கநாயகம் திரு. செ. | | தொண்டாமுத்தூர் |
| 5. அரிக்குமார் திரு. இரா. | | பெரணமல்லூர் |
| 6. அருணாசலம் திரு. இரா. | | நாமக்கல் (செ. வ.) |
| 7. அருணாசலம் திரு. எ. | | வரகூர் (செ.வ.) |
| 8. அன்பழகன் திரு. கே. | .. | ஓமலூர் |
| 9. அன்பழகன் திரு. தி. | .. | நாட்ராம்பள்ளி |
| 10. அன்பழகன் திரு. பொ. | .. | இளையான்குடி |
| **ஆ** | | |
| 11. ஆண்டி அம்பலம் திரு. மெ. | .. | நத்தம் |
| 12. ஆதிமூலம் என்கிற தில்லைகாந்தி திரு. | | ஆண்டிமடம் |
| 13. ஆறுமுகம் திரு. அ. | .. | வந்தவாசி |
| 14. ஆறுமுகம், திரு. எச்.ஜி. | .. | பெண்ணாகரம் |
| 15. ஆறுமுகம் திரு. ஆர்.எஸ். | .. | ஒட்டபிடாரம் (செ.வ.) |
| 16. ஆறுமுகம் திரு. எ.எஸ்.ஏ. | .. | விருதுநகர் |
| 17. ஆறுமுகம் திரு. மு. | .. | சேலம்-2 |
| 18. ஆனந்த கிருஷ்ணா திரு. ஜி. | .. | பூந்தமல்லி |
| 19. ஆனந்தன் திரு. மு. | .. | உளுந்தூர்பேட்டை |
| **இ** | | |
| 20. இரகுபதி திரு. கோ. | .. | காட்பாடி |
| 21. இரத்தினம் திரு. எம்.வி. | .. | பொள்ளாச்சி |
| 22. இரத்தினவேலு திரு. செ. | .. | முசிறி |
| 23. இராசமாணிக்கம் திரு. ஆர். | .. | அரூர் (செ.வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும் (1) | | தொகுதியின் பெயர் (2) |
|---|---|---|
| **ச—தொடர்ச்சி** | | |
| 76. சாமிக்கண்ணு திரு. தா. | .. | செங்கம் (செ.வ.) |
| 77. சித்தன் திரு. என்.எஸ்.வி. | .. | திருமங்கலம் |
| 78. சிந்தன் திரு. வி.பி. | .. | வில்லிவாக்கம் |
| 79. சிவக்குமார் திரு. ஆர். | .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 80. சிவக்குமார் திரு. எம். | .. | சூலூர் (செ.வ.) |
| 81. சிவஞானம் திரு. ந. | .. | திருவோணம் |
| 82. சிவப்பிரகாசம் திரு. சீ. | .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 83. சிவராமன் திரு. எஸ். | .. | சின்னசேலம் |
| 84. சிவராஜ் திரு. சு. | .. | ரிஷிவந்தியம் |
| 85. சின்னக்குழந்தை திரு. மு. | .. | ஆரணி |
| 86. சின்னசாமி திரு. வே.கு. | .. | பவானிசாகர் |
| 87. சின்னராசு திரு. க.இரா. | .. | கிருஷ்ணகிரி |
| 88. சின்னராசு திரு. மா. | .. | மேட்டுப்பாளையம் |
| 89. சுந்தரதாஸ் திரு. மா. | .. | விளவன்கோடு |
| 90. சுப்பராயன் திரு. கு. | .. | திருப்பூர் |
| 91. சுப்பிரமணிய ஆதித்தன் திரு. எஸ்.ஆர். | | திருச்செந்தூர் |
| 92. சுப்பிரமணியன் திரு. உ. | .. | சிவகங்கை |
| 93. சுப்பிரமணியன் திரு. வீ. | .. | கண்டமங்கலம்(செ.வ. |
| 94. சுப்புராயர் திரு. சி. | .. | கம்பம் |
| 95. சுவாமிநாதன் திரு. வி.வி. | .. | புவனகிரி |
| 96. செங்காளியப்பன் திரு. ஆர். | .. | சிங்காநல்லூர் |
| 97. செங்கோட்டையன் திரு. கு.அ. | | கோபிச்செட்டிப் பாளையம் |
| 98. செங்கோட்டையன் திரு. பெ. | | கபிலர்மலை |
| 99. செம்மலை திரு. செ. | .. | தாரமங்கலம் |
| 100. செல்லமுத்து திரு. எம். | .. | திருவாரூர் (செ.வ.) |
| 101. செல்லப்பா திரு. வி.கோ. | .. | கடலூர் |
| 102. சேகர் திரு. கே.பி.கே. | .. | பொன்னேரி (செ.வ.) |
| 103. சொர்ணலிங்கம் திரு. கா. | .. | திருவாடானை |
| 104. சோலைராசு திரு. க. | .. | மருங்காபுரி |
| 105. சௌந்திரராஜன் திரு. ஆர். | .. | ஸ்ரீரங்கம் |
| 106. சௌமிராஜன் டாக்டர் கே. | .. | தியாகராய [illegible] |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும் (1) | | தொகுதியின் பெயர் (2) |
|---|---|---|
| **ஞ** | | |
| 107. ஞானசுந்தரம் திரு. சா. | .. | மன்னார்குடி |
| **ட** | | |
| 108. டேனியல்ராஜ் திரு. எஸ். | .. | ஸ்ரீவைகுண்டம் |
| **த** | | |
| 109. தங்கமணி திரு. மு. | .. | மாயூரம் |
| 110. தங்கமணி திரு. கே.எம். | .. | திண்டிவனம் |
| 111. தங்கராசு திரு. ஏ. | .. | குறிஞ்சிப்பாடி |
| 112. தங்கராசு திரு. செ. | .. | மங்களூர் (செ.வ.) |
| 113. தங்கவேல்ராஜ் திரு. பி.எம். | .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 114. தங்கவேலு திரு. வி. | .. | வால்பாறை (செ.வ.) |
| 115. தமிழ்மணி திரு. | .. | திருப்போரூர் (செ.வ.) |
| 116. தமிழரசன் திரு. கு. | .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 117. தனபால் திரு. ப. | .. | சங்கரி (செ.வ.) |
| 118. தாமரைக்கனி திரு. இரா. | .. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 119. தியாகராசன் திரு. ஆர். | .. | விருத்தாசலம் |
| 120. திருஞானம் திரு. பி.ஆர். | .. | ஏற்காடு (ஆ. வா.) |
| 121. திருநாவுக்கரசு திரு. எஸ். | .. | அறந்தாங்கி |
| 122. திருமலைசாமிக் கவுண்டர் திரு. சு. | | உடுமலைப்பேட்டை |
| 123. தீர்த்தகிரி கவுண்டர் திரு. டி. | .. | மொரப்பூர் |
| 124. தீர்த்தராமன் திரு. ப. | .. | பாலக்கோடு |
| 125. துரை அன்பரசன் திரு. | .. | நெல்லிக்குப்பம் |
| 126. துரை கிருஷ்ணமூர்த்தி திரு. | .. | தஞ்சாவூர் |
| 127. துரை கோவிந்தராசன் திரு. | .. | திருவையாறு |
| 128. துரைசாமி திரு. சைதை சா. | | சைதாப்பேட்டை |
| 129. துரைராசு திரு. எஸ்.பி. | .. | காரைக்குடி |
| 130. துரை ராமசாமி திரு. | .. | வெள்ளக்கோவில் |
| 131. தெய்வநாயகம் திரு. எ. | .. | மதுரை சென்ட்ரல் |
| 132. தேவராஜ் திரு. வி.எம். | .. | வேலூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும் (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| **இ—தொடர்ச்சி** | |
| 24. இராசமாணிக்கம் திரு. எல்ல. .. | தாம்பரம் |
| 25. இராசரத்தினம் திரு. எப்.எம்... | கொளச்சல் |
| 26. இராசரத்தினம் திரு. எம். .. | விழுப்புரம் |
| 27. இராசாங்கம் திரு. மு. .. | திருவிடைமருதூர் |
| 28. இராசாம்பாள் திருமதி. த. .. | தலைவாசல் (செ.வ.) |
| 29. இராசாராம் திரு. க. .. | பனமரத்துப்பட்டி |
| 30. இராசாராமன் திரு. எஸ். .. | பாபநாசம் |
| 31. இராசேந்திரன் திரு. எஸ்.என். | தூத்துக்குடி |
| 32. இராமச்சந்திரன் டாக்டர் எம்.ஜி. | ஆண்டிப்பட்டி |
| 33. இராமச்சந்திரன் திரு. கே.எஸ்.எம். .. | போடிநாயக்கனூர் |
| 34. இராமச்சந்திரன் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. | சாத்தூர் |
| 35. இராமச்சந்திரன் திரு. ச. .. | பண்ருட்டி |
| 36. இராமச்சந்திரன் திரு. சோ.மா. | அண்ணாநகர் |
| 37. இராமச்சந்திரன் திரு. ப.ந. .. | பட்டுக்கோட்டை |
| 38. இராமசாமி திரு. எஸ்.என். .. | சாத்தான்குளம் |
| 39. இராமசாமி திரு. த. .. | இராமநாதபுரம் |
| 40. இராமலிங்கம் டாக்டர் கே.பி. | ராசிபுரம் |
| 41. இளங்கோவன் திரு.ஈ.வே.கி.ச. | சத்தியமங்கலம் |
| **ஈ** | |
| 42. ஈஸ்வரன் திரு. ஆர். .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| **உ** | |
| 43. உச்சி திரு. கே. .. | கூடலூர் |
| 44. உத்திராபதி திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| **எ** | |
| 45. எத்திராசன் திரு. கி. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும் (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| **க** | |
| 46. கணபதி திரு. கே.ஆர். .. | சிதம்பரம் |
| 47. கதிர்வேலு திரு. மா. .. | ராணிப்பேட்டை |
| 48. கந்தசாமி திரு. கா.வே. .. | கிணத்துக்கடவு |
| 49. கந்தசாமி திரு. பி. .. | பொங்கலூர் |
| 50. கல்லன் திரு. கே. .. | உதகமண்டலம் |
| 51. கலிதீர்த்தான் திரு. சோ. .. | சங்கராபுரம் |
| 52. காளிமுத்து டாக்டர் கா. .. | மதுரை கிழக்கு |
| 53. கிருஷ்ணசாமி திரு. கே.ஏ. .. | ஆயிரம்விளக்கு |
| 54. கிருஷ்ணசாமி திரு. வி.இரா. .. | அணைக்கட்டு |
| 55. கிருஷ்ணமூர்த்தி திரு. கி. .. | கும்பகோணம் |
| 56. கிருஷ்ணராஜ் திரு. ஜி. .. | சேலம்-1 |
| 57. குப்புசாமி திரு. கே. .. | ஒட்டன்சத்திரம் |
| 58. குப்புசாமி திரு. வே. .. | செய்யாறு |
| 59. குமரகுருபர ராமநாதன் திரு. ச. | விளாத்திகுளம் |
| 60. குமரி அனந்தன் திரு. .. | ராதாபுரம் |
| 61. குமாரதாஸ் டாக்டர் தே. .. | கிள்ளியூர் |
| 62. கோமதி சீனிவாசன் திருமதி .. | வலங்கைமான் (செ.வ.) |
| 63. கோவிந்தசாமி திரு. ஆர். .. | குடியாத்தம் |
| 64. கோவிந்தசாமி திரு. ச. .. | எடப்பாடி |
| 65. கோவேந்தன் திரு. எம்.ஆர். .. | பேராவூரணி |
| **ச** | |
| 66. சங்கரலிங்கம் திரு. ச. .. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 67. சண்முகம் திரு. இரா. .. | திருத்தணி |
| 68. சண்முகம் திரு. என். .. | சோளிங்கர் |
| 69. சண்முகம் திரு. ப.உ. .. | மேல்மலையனூர் |
| 70. சண்முகையா பாண்டியன் திரு.எம். | ஆலங்குளம் |
| 71. சந்திரசேகரன் திரு. ஆ. .. | சோழவந்தான் |
| 72. சந்திரசேகர் திரு. மு. .. | முகையூர் |
| 73. சம்சுல் ஆலம் திரு. வி.எஸ்.டி. | பாளையங்கோட்டை |
| 74. சமரசம் டாக்டர் கே. .. | காவேரிப்பட்டினம் |
| 75. சரோஜா திருமதி இரா. .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும் (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| **ந** | |
| 133. நடராசன் திரு. ஆ. | பேரூர் |
| 134. நரசிம்ம பல்லவன் திரு. க. | உத்திரமேரூர் |
| 135. நரசிம்மன் திரு. பூ.மு. | பள்ளிப்பட்டு |
| 136. நல்லமுத்து டாக்டர் க. | பெரம்பலூர் (செ.வ.) |
| 137. நல்லுசாமி திரு. என். | திருச்சிராப்பள்ளி-2 |
| 138. நாச்சிமுத்து திரு. கே.பி. | மேட்டூர் |
| 139. நாராயணன் திரு. பு.கோ. | பவானி |
| 140. நெடுஞ்செழியன் டாக்டர் இரா. | ஆத்தூர் |
| **ப** | |
| 141. பஞ்சவர்ணம் திரு. வி.எஸ். | அருப்புக்கோட்டை |
| 142. பட்டாபிராமன் திரு. செ. | திருவள்ளூர் |
| 143. பரமசிவம் திரு. பா.ந. | பல்லடம் |
| 144. பழனி திரு. த. | ஆற்காடு |
| 145. பழனிச்சாமி திரு. கா.செ. | காங்கேயம் |
| 146. பழனிமுத்து திரு. சி. | ஆத்தூர் |
| 147. பாண்டியன் திரு. பி.எச். | சேரன்மாதேவி |
| 148. பாண்டுரங்கன் திரு. மு. | கலசப்பாக்கம் |
| 149. பாப்பா சுப்பிரமணியன் திரு. | குத்தாலம் |
| 150. பாரதி திரு. ஜி.கே.ஜெ. | திருவொற்றியூர் |
| 151. பாரமலை திரு. க. | மானாமதுரை (செ.வ.) |
| 152. பாலகிருஷ்ணன் திரு. ச. | மொடக்குறிச்சி |
| 153. பாலகிருஷ்ணன் திரு. வி. | சிவகாசி |
| 154. பாலச்சந்திரன் திரு. வை. | பத்மநாபபுரம் |
| 155. பாலசுப்பிரமணியன் திரு. க. | சீர்காழி (செ. வ.) |
| 156. பாலசுப்பிரமணியன் திரு. எஸ். | அம்பாசமுத்திரம் |
| 157. பாலசுப்பிரமணியன் திரு. வேடசந்தூர் வி.பி. | வேடசந்தூர் |
| 158. பாலாஜி திரு. கே. | காஞ்சிபுரம் |
| 159. பாலுச்சாமி திரு. ஏ. | பரமக்குடி (செ.வ.) |
| 160. பாலுசாமி திரு. அ. | நிலக்கோட்டை (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **ப—தொடர்ச்சி** | |
| 161. பிரணவநாதன் திரு. அ. | கடலாடி |
| 162. பிரேம்குமார் திரு. ஆ. | திண்டுக்கல் |
| 163. புருசோத்தமன் திரு. எஸ். | அரியலூர் |
| 164. புஷ்பராசு திரு. த. | திருமயம் |
| 165. பெரியசாமி திரு. அ. | தாராபுரம் (செ.வ.) |
| 166. பெரியசாமி திரு. ரா. | தொட்டியம் |
| 167. பெருமாள் திரு. தெ. | கடையநல்லூர் |
| 168. பெருமாள் பிள்ளை திரு. கோ. | கன்னியாகுமரி |
| 169. பொன் முத்துராமலிங்கம் திரு. | மதுரை (மேற்கு) |
| 170. பொன்னம்மாள் திருமதி ஏ.எஸ். | பழனி (செ.வ.) |
| 171. பொன்னுசாமி டாக்டர் அ. | பெருந்துறை |
| 172. பொன்னையன் திரு. சி. | திருச்செங்கோடு |
| **ம** | |
| 173. மணவாளன் திரு. எஸ்.பி. | திருப்பத்தூர் |
| 174. மணிமாறன் திரு. மா. | நன்னிலம் (செ. வ.) |
| 175. மலர்மன்னன் திரு. அ. | திருச்சிராப்பள்ளி-1 |
| 176. மனோகரன் திரு. கி. | புரசைவாக்கம் |
| 177. மனோகரன் திரு. தி.நா.கோ.அ. | திருநாவலூர் |
| 178. மாசிலாமணி டாக்டர் ந. | ஜெயங்கொண்டான் |
| 179. மாதவன் திரு. செ. | திருப்பத்தூர் |
| 180. மாதையன் திரு. யு.பி. | அந்தியூர் (செ.வ.) |
| 181. மாரிமுத்து திரு. த. | குளத்தூர் (செ.வ.) |
| 182. மாரிமுத்து திரு. மு. | திருப்பரங்குன்றம் |
| 183. மீனாட்சிசுந்தரம் திரு. மா. | வேதாரண்யம் |
| 184. முகம்மது கனி திரு. ஜே. | புதுக்கோட்டை |
| 185. முகம்மது சலீம் டாக்டர் த. | பெரியகுளம் |
| 186. முசிறிபுத்தன் திரு. பி. | குளித்தலை |
| 187. முத்துசாமி திரு. சு. | ஈரோடு |
| 188. முத்துராமலிங்கம் திரு. பி.கே.எம். | உசிலம்பட்டி |
| 189. முத்துவேல் திரு. கே. | முதுகுளத்தூர் |
| 190. முந்தையா திரு. இரா. | சேடப்பட்டி |
| 191. முருகானந்தம் திரு. டி.என். | செஞ்சி |
| 192. முனிரத்தினம் திரு. இரா.சா. | கும்மிடிப்பூண்டி |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | ய | |
| 193. யசோதா திருமதி டி. | .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| | ர | |
| 194. ரகுமான்கான் திரு. அ. | .. | சேப்பாக்கம் |
| 195. ரமணி திரு. கு. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 196. ரவீந்திரன் திரு. ஏ.எஸ். | .. | திருவண்ணாமலை |
| 197. ராமஜெயம் திரு. ம.நா. | .. | வானூர் (செ.வ.) |
| 198. ராமன் திரு. கி. | .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 199. ராஜாபாபு திரு. ஜெ. | .. | போளூர் |
| 200. ரெங்கசாமி திரு. ஆர். | .. | கோவில்பட்டி |
| 201. ரெத்தினராஜ் திரு. எஸ். | .. | நாகர்கோவில் |
| | ல | |
| 202. லட்சுமி திருமதி பி. | .. | அவினாசி (செ.வ.) |
| | வ | |
| 203. வடிவேல் திரு. கு. | .. | கரூர் |
| 204. வளர்மதி திருமதி பா. | .. | மயிலாப்பூர் |
| 205. விஜயபாலன் திரு. என். | .. | பூம்புகார் |
| 206. விஜயலட்சுமி பழனிச்சாமி திருமதி | | வீரபாண்டி |
| 207. வீராலம்பலம் திரு. க.வெ. | .. | பேளூர் |
| 208. வீரய்யன் திரு. கோ. | .. | நாகப்பட்டினம் |
| 209. வீரப்பன் திரு. ஆர்.எம். | .. | திருநெல்வேலி |
| 210. வீராசாமி திரு. தா. | .. | ஒரத்தநாடு |
| 211. வெங்கடரெட்டி திரு. டி. | .. | ஓசூர் |
| 212. வெங்கடாசலம் திரு. அ. | .. | ஆலங்குடி |
| 213. வெங்கடாசலம் திரு. கி. | .. | லால்குடி |
| 214. வெங்கடாசலம் திரு. டி.எம். | .. | பரகூர் |
| 215. வேங்கடரமணன் திரு. டி.ஆர். | .. | தென்காசி |
| 216. வேணுகோபால் திரு. எஸ். | .. | டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர். |
| 217. வேணுகோபால் திரு. கே.வி. | .. | தல்லி |
| 218. வேலு திரு. கூடலூர் இ.வி. | .. | தண்டராம்பட்டு |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | ஜ | |
| 219. ஜகதீசன் திரு. ஆனூர் பு.கோ. | | செங்கல்பட்டு |
| 220. ஜான் வின்சென்ட் திரு. மு. | .. | நாங்குனேரி |
| 221. ஜெகதீசன் திரு. சு. | .. | அரவக்குறிச்சி |
| 222. ஜெயச்சந்திரன் திரு. சா. | .. | காட்டுமன்னார் கோவில் (செ. வ.) |
| 223. ஜெயராமன் திரு. வே. இரா. | .. | தேனி |
| | ஹ | |
| 224. ஹேமச்சந்திரன் திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| | ப | |
| 225. பிரான்சிஸ் திரு. ஜி.கே. | .. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

| | | |
|---|---|---|
| திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி | .. | தலைமை வழக்கறிஞர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1987, ஏப்ரல் 20, திங்கட்கிழமை.

சித்திரை 7, பிரபவ, திருவள்ளுவர் ஆண்டு-2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்"

ஒரு செயலைத் தொடங்குமுன் அதனால் அழிவதையும் அழிந்தபின் ஆவதையும் பின்பு உண்டாகும் ஊதியத்தையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### ஊட்டி மத்திய கூட்டுறவு விருந்தினர்கள் விடுதியில் புதிய அறைகள் கட்டுதல்.

400—(*வினா எண் 9360) திரு. கே. உச்சி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊட்டியிலுள்ள மத்திய கூட்டுறவு வங்கி வளாகத்தி லுள்ள கூட்டுறவு விருந்தினர்கள் விடுதியில் புதிய தங்கும் அறைகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டுமான பணி துவங்கப் படும்?

[1987 ஏப்ரல் 20

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) புதிய தங்கும் அறைகள் கட்டுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

**திரு. கே. உச்சி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் ஏராளமாக பயணிகள் வருவதன் காரணமாக அங்கே உள்ள தனியார்களுடைய ஓட்டல்களில் மிக அதிகமான கட்டணம் விதிப்பதால் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக அதிக அறைகளைக் கட்டி வரக்கூடிய பயணிகளுக்கு நல்லவகையில் உதவி செய்ய அரசு இந்தத் திட்டத்தை மறு பரிசீலனை செய்து, புதிய விடுதி கட்ட ஏதாவது யோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 17 கூட்டுறவுச் சங்கங்களின் சார்பாக நிதி உதவி செய்து, 1964-வது ஆண்டு இந்த விருந்தினர் இல்லம் அங்கே கட்டப்பட்டது. அதிலே 20 அறைகள் இருக்கின்றன. அதிலே, குறிப்பாக, கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், அலுவலர்கள், அந்த மாவட்டக் கூட்டுறவு வங்கிகளைச் சேர்ந்தவர்கள், கூட்டுறவுத் துறையைச் சேர்ந்தவர்கள் வந்து தங்குவதற்கும் இடம் தரப்படுகிறது. அவர்கள் தங்காத நேரத்தில் பொது மக்களுக்கும் இடம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதிலே ஏதாவது வாய்ப்பு இருக்குமானால் மேலும் கட்டடம் கட்டலாம். ஆனால், இப்பொழுது கட்டப் பட்டிருக்கின்ற இடத்தில் மேலும் கூடுதலாகக் கட்டப்பட வாய்ப்பு இருக்கிறதா என்று கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த தணிக்கைப் பொறியாளர், பொதுப்பணித் துறையைச் சேர்ந்த பொறியாளர் ஆகியோரைக் கேட்டபொழுது, மேல்தளம் ஓடு வேய்ந்த தரையாக அமைந்திருப்பதன் காரணமாகவும் அடித் தளம் சரியாக அமையாததன் காரணமாகவும் மேலும் மாடி எழுப்புவதற்கு வாய்ப்பு இல்லையென்றும் ஆகவே, அதிலே கூடுதலாகக் கட்டிடம் கட்டுவதற்கு வாய்ப்பு இல்லையென்றும் அக் கட்டிடம் பக்கத்திலே கூடுதலாகக் கட்டுவதற்கு இட வசதி யில்லையென்ற காரணத்தினால்தான் சாத்தியக் கூறுகள் இல்லை என்று சொல்லப்பட்டது.



1987 ஏப்ரல் 20]

**திரு. கே. உச்சி:** தலைவர் அவர்களே, ஏற்கனவே உள்ள விடுதியை ஒட்டி இடம் இருப்பதன் காரணமாக, அந்த இடத்தில் புதிய விடுதியைக் கட்ட, அதை மறுபரிசீலனை செய்ய முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அந்த இடம் போதுமான அளவிற்கு இருக்கிறதா என்பதும் ஏற்கனவே அங்கே 20 அறைகள் இருக்கின்றபொழுது அங்கே வருகின்றவர்கள் பயன்படுத்துகின்ற அளவுக்கு வாகனங்கள் மற்றவை எல்லாம் விட்டுவைக்கப் போதுமான அளவிற்கு இடம் தேவை என்பதும் கவனிக்கப்பட்டு, இந்த இடங்கள் எல்லாம் போக மீதி இடம் இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அப்படி இடம் இருக்குமானால், அதற்கான அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வசதி இருக்குமானால் மற்றவை பற்றி ஆராயலாம்.

## குத்தகைதாரர்கள் பதிவு திருத்தச் சட்டத்தின் கீழ் குழுக்கள் அமைத்தல்.

401—(* வினா எண் 10118) **திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தகைதாரர் பதிவுத் திருத்தச் சட்டத்தின் கீழ் எத்தனை வட்டங்களில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன?

(ஆ) அமைக்கப்படாத வட்டங்களில் அமைக்கும் உத்தேசம் ஏதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) அமைக்கப்பட்ட குழுக்கள் செயல்படுகின்றனவா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, (அ) தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி-கட்டபொம்மன், சிதம்பரனார், மதுரை, அண்ணா மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் 57 வட்டங்களில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) மற்றும் (இ) ஆம்.

[1987 ஏப்ரல் 20

**டாக்டர் கெ. சமரசம்:** பேரவைத் தலைவர் அவர்களே, குத்தகைதாரர் பதிவுத் திருத்தச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இந்தக் குழுக்கள் மூலமாக இதுவரையிலும் எத்தனை மனுக்கள் பெறப்பட்டுள்ளன, பதிவு செய்யப்பட்டுள்ளன? அதனால் ஏற்பட்ட நன்மைகள் என்ன என்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்களில் 57 வட்டங்களில் கீழ்க்கண்டவாறு ஆலோசனைக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் 16 வட்டங்கள், திருச்சி மாவட்டத்தில் 10 வட்டங்கள், மதுரை மாவட்டத்தில் 6 வட்டங்கள், அண்ணா மாவட்டத்தில் 3 வட்டங்கள், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் 8 வட்டங்கள், சிதம்பரனார் மாவட்டத்தில் 6 வட்டங்கள், தர்மபுரி மாவட்டத்தில் 8 வட்டங்கள், ஆக 57 வட்டங்களில் செயல்படுகின்றன. மேற்படி திட்டத்தின்படி 31—12—1986 வரை 4,39,596 பேர்கள் குத்தகைதாரர்களாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். மொத்தம் பதிவு செய்யப்பட்ட நிலத்தின் பரப்பு 6,36,709 ஏக்கர்கள் ஆகும். பதிவு செய்யப்பட்ட குத்தகைதாரர்களின் வகுப்புவாரி விவரம் வருமாறு: தாழ்த்தப்பட்டோர் 1,27,750, மலை சாதியினர் 717, பிற்பட்டோர் 1,58,080, மற்றவர்கள் 1,53,049, ஆக மொத்தம் 4,39,596 பேர்கள் ஆவார்கள். ஆகவே இதன் மூலமாக நில உடைமையாளர், இடையாள், நிலத்தைப் பயிரிடும் குத்தகைதாரர் ஆகியோரது பெயர்கள், முகவரிகள் ஆகியவற்றுடன் வட்டத்தில் அமைந்துள்ள நிலங்கள் தொடர்பான தகவல்களையும் விவரங்களையும் சேகரிக்கமுடிகிறது. அவ்வாறு சேகரிக்கப்பட்ட விவரங்களையும் தகவல்களையும் சம்பந்தப்பட்ட நிலத்திற்கு அதிகார வரம்புள்ள ஆணை அதிகாரிக்கு குத்தகை பதிவு சம்பந்தமான தகவல்களை மேற்படி சட்டத்தின்கீழ் செவ்வனே பரிந்துரை செய்யமுடிகிறது. மூலச்சட்டத்தின் பிரிவுகள், 3, 4, 5-இல் குறிப்பிட்டுள்ளபடி பதிவு ஆவணங்களைத் தயாரித்தல், குறிப்பிட்ட நிலங்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட குத்தகை ஆவணங்களைச் சேர்த்தல் மற்றும் ஒப்பளிக்கப்பட்ட குத்தகை ஆவணங்களில் உள்ள பதிவுகளில் மாற்றம் செய்தல் ஆகியவற்றில் பதிவு அதிகாரிக்கு உதவிகரமாக அமைந்து இருக்கிறது.



1987 ஏப்ரல் 20]

**திரு கு. [illegible]:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எடுத்துக்குறிப்பிட்டதைக் கணக்கின்படி பார்த்தால் குத்தகைதாரர்களில் ஒரு பாதியளவு கூட இன்னும் பதிவு செய்யப்படாமல் இருக்கிறார்கள் என்பதுதான் யதார்த்த நிலையாக இருக்கிறது. நாங்கள் கிராமங்களிலே பல இடங்களிலே போகும்போது குத்தகைதாரர்களிடமிருந்து இன்னும் பதிவு செய்யப்படாத நிலை இருக்கிறது என்ற பிரச்சினை எழுந்திருக்கிறது. ஆகவே மேலும் தொடர்ந்து எல்லாக் குத்தகைதாரர்களையும் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்களா? அதற்கு வேண்டிய உத்திரவுகளை அனுப்புவார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படாத மாவட்டங்களிலும், வட்டங்களிலும் குழு அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. சில மாவட்டங்களில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து உறுப்பினர்கள் பெயர்கள் பெறப்பட்டுள்ளது. இன்னும் மாவட்ட ஆட்சியாளர்களிடமிருந்து அறிக்கைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. அந்த அறிக்கைகள் பெறப்பட்டவுடன் அந்தக் குழுக்களை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும். அமைக்கப்பட்ட வட்டங்களில் குழு செயல்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியாளர்கள் தங்கள் மாவட்டங்களில் ஒவ்வொரு வட்டத்திலும் குழுக் கூட்டம் சிறப்பாக நடைபெற ஆலோசனைகளை கூறி வருகிறார்கள். விவரங்கள் கிடைத்ததற்குப் பிறகு மீதியுள்ள மாவட்டங்களிலும், வட்டங்களிலும் அந்தக் குழுக்களை அமைத்து எல்லா குத்தகைதாரர்களையும் பதிவு செய்வதற்கான முயற்சிகள் விரைவிலே மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குத்தகைதாரர் பதிவுச் சட்டத்தில் கொஞ்சம்கூட குறைந்தபட்சப் பாதுகாப்பு கூட நிலச்சொந்தக்காரர்களுக்கு இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. நிலச்சொந்தக்காரர் ஒரு காலகட்டத்திலே குத்தகைக்கு விட்டுவிட்டு

[1987 ஏப்ரல் 20

தாங்களே சொந்தச் சாகுபடி செய்யவேண்டுமென்று விரும்பினா லும்கூட அந்த நிலத்தைச் சொந்தச் சாகுபடிக்காகத் திரும்பப் பெறமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஒரு குடும்பத்திலே தலைவன் இறந்துவிட்டால் விவசாயம் செய்யமுடியாது என்ப தால் அந்தக் குடும்பத்திலே இருக்கிற விதவை தன்னுடைய நிலத்தை குத்தகைக்கு விட்டுவிட்டு அந்தப் பையன் மேஜராகிற போது தன் தகப்பனார் வைத்திருந்த நிலத்தை சாகுபடி செய்ய வேண்டுமென்றாலும்கூட சொந்தச் சாகுபடிக்கு நிலத்தைத் திரும்பப் பெறமுடியாத சூழ்நிலை இருக்கிறது. அதே போல் அரசாங்க ஊழியர் அரசாங்கப் பதவியிலிருந்து நீக்கப்பட்டால் அங்கே போய் சொந்த நிலத்தைச் சாகுபடி செய்ய வேண்டு மென்கிறபோது அந்த நிலத்தைத் திரும்பப் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதை நீக்குகிற வகையில் நிலத்தினுடைய சொந்தக்காரர்கள் சொந்தச் சாகுபடிக்கு வேண்டுமென்று கேட் கிறபோது அதிலே நியாயம் இருக்கும், உண்மை இருக்கும் என்கிற போது அதைக் கொடுப்பதற்கான வழிவகை செய்கிற வகையில் இந்தக் கட்டத்தில் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர அரசு வழிவகை செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்திற்கு உரிமையாளர், உடைமையாளர் விவசாயம் செய்கிறார்கள். அவர்களே விவசாயம் செய்யமுடியாத சூழ்நிலை ஏற்படுகிறபோது அவர்கள் குத்தகைக்கு விடுகிறார்கள். அப்படிக் குத்தகைக்கு விடப்படு கிற சூழ்நிலையின் அடிப்படையில் மீண்டும் தாங்களே விவசாயம் செய்யவேண்டுமென்ற சூழ்நிலை ஏற்படுகிறபோது மீண்டும் நிலத்தை எடுத்துக் கொள்வதற்கு சட்டத்தில் இடம் இருக்கிறதா இல்லையா என்ற விவரம் தெரியவில்லை. மாண்புமிகு உறுப் பினர் கூறுகின்ற அடிப்படையில் பார்க்கிறபோது மீண்டும் தாங்களே எடுத்து தாங்களே சொந்த விவசாயம் செய்வதற்கு வழிவகை இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். இல்லையென் றால் அவ்வாறு இருப்பதற்கு செய்ய முடியுமா என்பதை சட்டத் துறையைக் கலந்தாலோசித்து சட்டத்திற்குக் குந்தகம் ஏற் படாத வகையில் நியாயமான அளவுக்கு செய்ய முடியுமா என்பதை தனியாகத்தான் ஆராய வேண்டும்.



1987 ஏப்ரல் 20]

**தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை தாலுக்காவை பிரித்தல்.**

402—(*வினா எண் 12595) **திரு. மு. இராசாங்கம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை தாலுக்காவைப் பிரித்து குத்தாலம் தாலுக்காவாக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) வினாவிற்கு இடமில்லை.

(முற்பகல் 10-10)

**திரு. மு. இராசாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, மயிலாடுதுறை தாலுக்கா மிகப் பெரிய தாலுக்காவாக இருக்கிற காரணத்தாலும் பொதுமக்கள் அன்றாடம் வருவாய்த் துறையிலே பல காரியங்களைச் செய்துகொள்ள சுமார் 40, 50 கிலோ மீட்டர் செல்ல வேண்டியிருக்கிற காரணத்தாலும் வருவாய்த்துறை அதிகாரிகள் கிராமங்களில் அவ்வப்போது பார்வையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க முடியாத காரணத்தா லும் அரசு பரிசீலித்து மயிலாடுதுறையிலிருந்து குத்தாலத்தை தனி தாலுக்காவாகப் பிரிக்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இப்பொழுது வட்டங் களினுடைய பரப்பளவு, மக்கள் தொகை, நில வரி, மற்றும் பிற்பட்ட தன்மை ஆகியவற்றை எல்லாம் கணக்கிலே வைத்துக் கொண்டுதான் வட்டங்களை இரண்டாகப் பிரிக்கின்ற முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. மயிலாடுதுறை வட்டத்தை இரண் டாகப் பிரிக்கின்ற செயற்குறிப்பு தற்போது அரசினுடைய ஆய்விலே இல்லை. அதுபற்றிய தன்மைகள் வருகின்றபொழுது, தஞ்சை மாவட்டத்தை இரண்டு மூன்று மாவட்டங்களாகப் பிரிக் கின்ற சூழ்நிலை ஏற்படுகின்றபொழுது கோட்டங்களாகவும் வட்டங்களாகவும் வேறு புது கோட்டங்கள், வட்டங்கள் பிரிக் கின்ற சூழ்நிலை ஏற்படுகின்றபொழுது, அதையும் சேர்த்து கவ

ளிக்க வேண்டுமென்று ஒரு செயற்குறிப்பை குழுவிடத்திலே நாம் தருகிறோம். அவர்கள் அதுபற்றியும் பரிசீலிப்பார்கள். இப்பொழுது அதுபற்றிய செயற்குறிப்பு இல்லையென்று குறிப்பிட்டேன்.

**குமரி மாவட்டத்தில் புதிய மருத்துவக் கல்லூரி துவங்கல்.**

403—(*வினா எண் 6533) **டாக்டர் தே. குமாரதாஸ்**: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் புதிதாக ஆங்கில முறை மருத்துவ கல்லூரியோ அல்லது சித்த மருத்துவ கல்லூரியோ தொடங்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டே அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**டாக்டர் தே. குமாரதாஸ்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன, என்ன காரணங்களால் அங்கே மருத்துவக் கல்லூரியோ, சித்த மருத்துவக் கல்லூரியோ அமைக்க வாய்ப்பில்லையென்று அமைச்சர் அவர்கள் சொல்ல முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவ மற்றும் மருத்துவத் துறைக் கல்லூரிகள் இரண்டும் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் திருநெல்வேலியிலே இருக்கிற காரணத்தால் அருகில் ஒரு மருத்துவக் கல்லூரி துவக்குவதற்கு வாய்ப்புகள் இல்லையென்று சொன்னேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எந்தவிதமான ப்ரொஃபொஷனல் கோர்சஸ் கல்லூரிகளும் கிடையாது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், அங்கே சித்த மருத்துவ முறைகளில் புகழ்பெற்ற மேதைகள் இருக்கின்ற



காரணத்தாலும் அங்கே எங்கும் கிடைக்காத பல நல்ல மூலிகைகள் கிடைக்கிற காரணத்தாலும், அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு, அங்கே ப்ரஃபொஷனல் கோர்சஸ் கல்லூரி எதுவும் இல்லையென்ற குறையைத் தீர்க்கின்ற விதத்தில், ஏதாவது ஒரு கல்லூரியைத் துவக்க மீண்டும் மறுபரிசீலனை செய்து, கொண்டு வர முயற்சி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல மூலிகைகள் எல்லாம் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருப்பதாகச் சொன்னார்கள். இருந்தால் அரசுக்குத் தகவல் தருமாறு மாண்புமிகு உறுப்பினரைக் கேட்டுக் கொள்கிறேன். ஆனால், இப்பொழுது அங்கே துவக்குகின்ற சாத்தியக்கூறு இல்லையென்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வை. பாலச்சந்திரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் வேறுசில மாவட்டங்களில் நாட்டு வைத்தியம் என்ற பெயரால் பல்வேறு வகையான நோய்களுக்கு மருத்துவம் செய்யப்பட்டு வருகின்றது. கன்னியாகுமரி மாவட்டத்தில் டாக்டர் சதாசிவம் என்ற மருத்துவருக்குப் பக்கவாத நோய் ஏற்பட்டு மிகவும் பாதிக்கப்பட்டார். ஆனால், சுமார் 15 நாட்களுக்குள் தனது சொந்த வைத்தியத்தால் பூரண குணம் அடைந்து இன்றைக்கு நலமாக இருக்கிறார். அது ஆச்சரியமாக இருந்தாலும்கூட அங்கே அது நடந்தது. அந்த மருத்துவ முறைகள் சில குடும்பத்தினருக்கு மட்டும் தெரிந்து இருப்பதால், அவை இன்று அழிந்து வருகின்றன. ஆகவே, அந்த மருத்துவரோடு இந்த அரசாங்கம் ஒரு உடன்பாடு செய்து அவர்களுக்குத் தெரிந்த அறிவைப் பெற்று நாட்டு மக்கள் எல்லோரும் பயன்பெறுகிற வகையில், இந்த அழிந்து வருகிற மருத்துவ அறிவைப் பாதுகாத்துக் கொள்கிற அளவுக்கு ஒரு மையம் கன்னியாகுமரி மாவட்டம் அல்லது வேறு ஏதாவது ஒரு மாவட்டத்தில் அமைக்க அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 20

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, பக்கவாதம் வந்தால், இப்பொழுது அண்ணா நகரில் உள்ள அறிஞர் அண்ணா அரசு மருத்துவ மனையில் வைத்தியம் செய்கிறார்கள். ஏராளமான வியாதியஸ்தர்கள் சிகிச்சை பெற்று குணம் அடைந்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற தகவல்பற்றி மேற்கொண்டு விரிவாக எழுதுவாரானால், அந்த வைத்தியரிடத்திலே தகவலைப் பெற்று—அரசு அதற்கு உண்டான சன்மானம் வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராக இருக்கிறது—அவரிடம் உள்ள மூலிகை போன்ற ரகசியங்களை அரசுக்குத் தந்தால் பேருதவியாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் வாங்கித் தருவார் என்று நம்புகிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு ஏற்கனவே பழனியிலே சித்த மருத்துவக் கல்லூரியை ஆரம்பித்தது. நன்றி. அதை ஆரம்பித்து இடம் இல்லாமல் மிகவும் சிரமம் அடைந்து கொண்டிருக்கிறார்கள். ஆகையினாலே, இந்த ஆண்டு அதற்கு முன்னுரிமை கொடுத்து, நாட்டு மருத்துவ முறையாக இருக்கிற காரணத்தாலும், மக்கள் அதிகமாக விரும்பி வருகின்ற காரணத்தாலும் இந்த ஆண்டே அங்கே கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பழனியில் இடம் கிடைக்காததுதான் பெரிய தொந்தரவாக இருந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் இடம் தேடுவார்களானால் நல்லது. இடத்தை வருவாய்த் துறையும் தேடிக்கொண்டிருக்கிறது, இந்திய மருத்துவத் துறையும் தேடிக் கொண்டிருக்கிறது. இடம் கிடைத்தால் கட்டிடம் கட்டுவது பற்றி அரசு பிறகு பரிசீலிக்கும்.



1987 ஏப்ரல் 20]

### ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் குழந்தைகள் வைத்தியப் பிரிவு துவங்குதல்.

404—(*வினா எண் 8834) **டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் Paediatric Unit (குழந்தை வைத்திய பிரிவு) துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தற்போது பரிசீலனையில் இல்லை.

**திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருச்சியிலே ஜெயங்கொண்டம் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதி. அங்கே தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் அதிகமாக வாழ்கிற காரணத்தால், அங்கே குழந்தைகள் சிகிச்சைக்காக தனிப் பிரிவு ஆரம்பிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்சமயம் இல்லை என்று சொன்னேன். எதிர் காலத்தில் நிதி ஆதாரத்தைப் பொறுத்து தீர்மானிக்கலாம்.

### பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூர் 'அரவிந்த் டிஸ்டிலரி'

405—(*வினா எண் 9083) **திரு. துரை அன்பரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூரிலுள்ள 'அரவிந்த் டிஸ்டிலரி'-யின் கழிவுநீர் விளை நிலங்களை வீணாக்குவதுடன் கெடிலம் ஆற்றின் தூய்மையைக் கெடுப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

[1987 - ஏப்ரல் 20

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆரவிந்த் டிஸ்டிலரீஸ் தொழிற்சாலையிலிருந்து தற்போது கழிவுநீர் விளைநிலங்களிலோ அல்லது கெடிலம் ஆற்றிலோ வெளியேற்றப்படுவதில்லை.

(ஆ) தொழிற்சாலை செயல்பாட்டை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கண்காணித்து வருகிறது.

**திரு. துரை அன்பரசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிடுகிறபோது, கழிவு நீர் வெளியேற்றம் இல்லை என்று சொன்னார்கள். அங்கே சிறுசிறு குட்டைகளாக கழிவு நீரைத் தேக்கி, மழைக் காலங்களிலே அது ஓடுவதால் பக்கத்திலேயுள்ள கெடிலத்திலே, கலக்கிறது. அப்படிக் கலக்கும்போது அருகாமையிலுள்ள விளை நிலங்கள் ஏராளமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பது உண்மை. மாண்புமிகு அமைச்சரவர்கள் அதிகாரிகள் தந்திருக்கிற குறிப்புகளுடன் நான் சொல்லுவதையும் கவனத்தில் கொண்டு, அதை ஆராய்ந்து, அந்த விவசாய நிலங்களைப் பாதுகாத்துத் தர சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆணையிடுவார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கெடிலம் ஆற்றிலே விழவில்லை என்றுதான் சொன்னேன். குட்டையிலே சேர்க்கிறார்கள் என்பது உண்மை. அது குறித்து அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. குட்டையிலிருந்து கெடிலத்தில் விழுவதாகத் தகவல் இல்லை. அப்படி இருந்தால் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். அவர்கள், ஒரு கோடி ரூபாய் செலவில் கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலை நிறுவுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை வற்புறுத்தி, நிறுவ அரசு ஆணையிடும்.

**திரு. துரை அன்பரசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்தப் பகுதியில் உள்ள விவசாயப் பெருமக்கள் தென் ஆற்காடு மாவட்ட ஆட்சியர் அவர்களிடத்திலும், முன்னாலே இருந்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களிடத்திலும் மனுக்கள் மூலமாக விவசாய நிலங்கள் பாதிக்கப்படும் உண்மையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே கெடிலத்தில் கழிவு நீரை கலக்கவிட்டு, விளை நிலங்கள் பாதிப்பது உண்மை. மாண்புமிகு அமைச்சரவர்கள், மாவட்டத்தில அதிகாரிகள் மூலமாக கவனிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இதை விரைவாகக் கவனித்து, டிஸ்டிலரி உரிமையாளருக்கு கட்டளையிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 20]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுபோன்ற ஆலைகளிலிருந்து வரும் கழிவு நீரால் விவசாய நிலங்களும், குடிநீரும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மை. அப்படி கழிவு நீரால் நிலங்கள் பாதிக்கப் படுவதால், ஒரு கோடி ரூபாய் செலவில் அந்த அமைப்பு ஓர் சுத்திகரிப்பு ஆலை நிறுவ இருப்பதாகத் தகவல் தந்திருக்கிறது. அதை விரைவில் அமைக்க அரசு ஆணை பிறப்பிக்கும்.

**திரு. கே. பாலாஜி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலும், செங்கை மாவட்டத்திலும் தோல் தொழிற்சாலைகளிலிருந்து வருகின்ற கழிவு நீரும், செங்கையிலே இருக்கின்ற ஒரு சாராய ஆலையிலிருந்து வரும் கழிவு நீரும் ஆற்றில் கலப்பதால், குடிநீரை அசுத்தப்படுத்துவதோடு, சுகாதாரமும் பாதிக்கப்படுகிறது. எந்தெந்தச் சட்டத்திற்கு உட்பட்டு அவர்கள் தொழிற்சாலை ஆரம்பிக்க உரிமம் வழங்கப் படுகிறதோ, அந்தச் சட்டங்களுக்குப் புறம்பாக அவர்கள் செய்து கொண்டு வருகிறார்கள். அரசு அதை பல முறை எடுத்துக் கூறியும், அவர்கள் கேட்கவில்லை. எனவே அவர்கள் உரிமத்தை ரத்து செய்யும் வகையில் அரசு பரிசீலிக்குமா? மக்களுக்குப் பயன்படும் குடிதண்ணீரிலே விஷம் கலக்காமல் இருக்க இனிமேலாகிலும் கடுமையான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறுகின்ற கழிவு நீரால் பாலாற்றுப் படுகையில் நீர் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்பது உண்மைதான். வாணியம்பாடியில் கழிவுநீர் வடிகால் வாரியத்தால் போடப்பட்ட மேல் நிலைக் குடிநீர் தொட்டி பயனற்றுபோய் லட்சக்கணக்கான ரூபாய்

செலவழுத்தும் வீணாவதும்போன்று தெரிந்ததால் வேறு ஊடகத்திலே குடிநீர் தொட்டி போடுவதற்கு கிணறு வெட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. எனவேதான் அந்த கடுமையை உணர்ந்து அங்குள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கெல்லாம் எச்சரிக்கை நோட்டீசை அரசு அனுப்பியிருக்கிறது. சிலவற்றில் கூட்டுறவுத் துறையின் மூலமும், தோல் பதனிடும் தொழிற்சாலைகள் கழகத்தின் மூலமும் ஒரு சுத்திகரிப்பு ஆலைக்கு ஏற்பாடு செய்து வருகிறார்கள். மீதம் இருக்கின்ற ஆலை தொழிலதிபர்கள் அதை செய்ய முன் வராவிட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பலமுறை தெரிவித்து இருக்கிறோம். வெகு சீக்கிரத்தில் அவர்கள் எல்லாம் நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவார்கள். குற்றப்பத்திரிகை அவர்கள் மேல் தாக்கல் செய்வோம் என்பதை தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. கதிர்வேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தோல் பதனிடும் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், வட ஆற்காடு மாவட்டத்தில் ஆண்டுக்காண்டு இதுபோன்ற கூட்டங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக கூட்டப்பட்டு, அங்கே நில ஆர்ஜிதம் செய்கிறோம் என்ற பெயராலேயும் ஆண்டுக்காண்டு காலத்தை தள்ளிப்போட்டுக் கொண்டு, கோ-ஆப்பரேடிவ் சொசைட்டி என்ற பெயராலே காலத்தைத் தள்ளி போட்டுக்கொண்டு இன்றையதினம் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களில் சாகுபடிகள் பொய்த்துக் கொண்டிருக்கின்றன. இன்றையதினம் குடிநீருக்கு உரிய பாலாற்றுத் தண்ணீர் பொய்த்திருக்கிறது. மக்கள் உயிருக்குப் பாதுகாப்பு இல்லாது இருக்கின்ற சூழ்நிலையில் கடுமையான சட்டத்தின் மூலமாக அவர்களை தண்டிப்பதோடு அரசு மக்களை பாதுகாக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த அரசே இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோல் பதனிடும் தொழிற்சாலைகளை நடத்துகின்ற பெரிய தொழிலதிபர்கள் சுத்திகரிப்பு ஆலை போடுவதற்கு முன்வரவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கதிர்வேலு அவர்கள் சொன்னதுபோல, இராணிப்பேட்டை



சுற்றியுள்ள பகுதிகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. அந்த பகுதியிலே போனாலும்கூட அந்தப் பகுதி மக்கள் இதையேதான் பிரச்சினையாகக் கொடுக்கிறார்கள் என்று அரசுக்கும் தெரியும். ஆகவேதான் இதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், பொல்லூஷன் கண்ட்ரோல் போர்ட்டுக்கும் அரசு ஆணைப் பிறப்பித்திருக்கிறது. இதை நிச்சயமாக அமல் படுத்துவார்கள் என்று நம்புகிறேன். குடிநீர் பாதிக்கப்பட்டு தொழிற்சாலைகள் வரவேண்டுமென்று அரசு நினைக்கவில்லை. சிலர் வாழ பலருடைய குடிநீரைக் கெடுக்க அரசு ஒப்புக் கொள்ளாது. நிச்சயமாக கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதை மீண்டும் நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

**திரு. மு. பாண்டுரங்கன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடஆற்காடு மாவட்டத்தில், திருவண்ணாமலைக்கு அருகில் வேங்கிக்கால் கிராமத்தில் பால் குளிரூட்டும் நிலையம் இருக்கின்றது. அங்கே அதிக துர்நாற்றம் வருகிறது. அதைத் தடுக்க அரசு முன்கூட்டியே நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரலாம்.

### இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அரசினர் மருத்துவ மனையில் படுக்கை வசதியை அதிகப்படுத்துதல்.

406—(* வினா எண் 10114) **திரு. ஏ. பாலுச்சாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அரசினர் மருத்துவ மனையில் படுக்கை வசதியை அதிகப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இல்லை.

[1987 ஏப்ரல் 29

**1985-86 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் உதவி.**

**407—(*வினா எண் 10678) திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985-86 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் தொழில் தொடங்க மூலதனம் பெற்றவர்கள் எத்தனை பேர்?

(ஆ) கடன் எவ்வளவு? மான்யம் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 1985-86 ஆம் ஆண்டு ஐந்து கூட்டுறவு சங்கங்கள் மூலமாக 215 நபர்கள் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து தொழில் தொடங்க ஆரம்ப முதலீட்டுக் கடன் பெற்றுள்ளார்கள்.

(ஆ) இவர்கள் பெற்றுள்ள மொத்த ஆரம்ப முதலீட்டுக் கடன் தொகை ரூ. 1.305 லட்சம் ஆகும். மான்யமாக இக்கழகம் எந்த தொகையும் வழங்கவில்லை.

**திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொழில் தொடங்கக்கூடியவர்களுக்கு, நகரங்களில் வசிப்பவர்களுக்கு எவ்வளவு தொகை கொடுக்கப்படுகிறது, கிராமங்களில் வசிப்பவர்களுக்கு எவ்வளவு தொகை கொடுக்கப்படுகிறது என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனித்தனியாக பிரித்துச் சொல்வதற்கு விவரங்கள் தற்போது இல்லை. தொழில் தொடங்குவதற்குக் கொடுக்கப்படும் கடன் ரூ. 25,000 அளவிற்கு மேல் போகக்கூடாது



1987 ஏப்ரல் 20]

என்று விதி இருக்கிறது. அது கிராமப்புறத்திலே இருந்தாலும் சரி, நகர்ப்புறத்திலே இருந்தாலும் சரி, அந்த விதியை சற்றுத் தளர்த்தலாமா என்று அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

**டாக்டர் கே. சமரசம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் இதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கியுள்ளது? எத்தனை மனுக்கள் கொடுக்கப்பட்டுள்ளன? இந்த ஆண்டு மேலும் கொடுக்க அரசு திட்டமிட்டுள்ளதா என்பதைப் பற்றி அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கழகம் ரூ. 10 கோடி பங்கு முதலீட்டுடன் ஆரம்பிக்கவேண்டும் என்று ஆணைப் பிறப்பித்திருக்கிறது. இதுவரை ரூ. 5 லட்சம் முதல் பணமாக தந்திருக்கிறது. மற்ற விவரங்களைத் தனியாகக் கேள்வி போட்டால் சேகரித்துத் தருகிறேன்.

**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக—மதுரை மாவட்டம், உசிலம்பட்டி பகுதி மிகப் பின்தங்கிய பகுதியாக இருக்கின்றது என்று அங்கே ஒரு ஜின்னிங் பேக்டரி ரூ. 6 லட்சம் மதிப்பீட்டிலே செய்யப்பட இருந்தது. அது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக நாங்கள் அறிகிறோம். கூடிய விரைவிலே செயல் முறைக்குக் கொண்டு வர அரசு திட்டம் ஏதும் வைத்துள்ளதா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. தனியாக கேட்டால் நிச்சயமாக தகவல் சேகரித்து தரப்படும். ஆனால் அப்படி ஒரு திட்டம் இருக்குமேயானால் நிச்சயமாக அரசு கைவிடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1987 ஏப்ரல் 20

## திருவெறும்பூர் தொகுதி, பொன்மலை நகராட்சி செம்பட்டிலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலை.

408—(* வினா எண் 13566) திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவெறும்பூர் தொகுதி, பொன்மலை நகராட்சி, செம்பட்டு பகுதியில் தோல் பதனிடும் தொழிற்கூடத்தால், சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பெற்ற நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) அரசு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. எம். அண்ணாதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இங்கே குறிப்பிட்டார்கள். நன்றி. பொன்மலை நகராட்சிக்கு உட்பட்டிருக்கிற பகுதியில் இந்த தோல் பதனிடும் தொழிற்சாலை இருக்கிறது. இந்த தோல் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து வெளியேறுகின்ற கழிவு நீர் அத்தனையும் பக்கத்தில் இருக்கிற குண்டூர், திருவாச்சிப்பட்டி, போன்ற கிராமங்களில் இருக்கிற 200-க்கு மேற்பட்ட ஏக்கர் நிலங்களில் நேரடியாக பாய்கிறது. இதனால் ஒவ்வோர் ஆண்டும் நெல் பயிரிட்டிருக்கிற விவசாயிகள் அதனை அறுவடை செய்ய முடியாத அளவுக்கு வேதனைக்கு ஆளாக்கப்பட்டுக்கொண்டு வருகிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் அங்கே வேலை பார்க்கின்ற தொழிலாளர்கள் அந்தத் தொழிற்கூடத்திற்கு பக்கத்திலே, கிழக்கிலேயும், மேற்கிலேயும் குடியிருந்து வருகிறார்கள். அந்தப் பகுதி வழியாக தான் இந்த கழிவு நீர் போய்க்கொண்டிருக்கிறது. இதுகுறித்து கடந்த காலத்தில் பல முறை அதிகாரிகளிடத்திலும் சொல்லியிருக்கிறார்கள். அதனால் சுற்றுப் பகுதிகளில் இருக்கிற சுகாதார கேட்டை தடுத்து,



1987 ஏப்ரல் 20]

சுகாதாரத்தை ஏற்படுத்துவதில் தொழிற்கூடத்தில் இருக்கின்ற உரிமையாளரால் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதோடு மட்டுமல்லாமல் அங்கே போர் வெல் அரசு அமைத்தால் . . . (மணியடிக்கப்பெற்றது) (பதில் இல்லை.)

## புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கரம்பக்குடியில் செங்கல் தொழிற்சாலை.

409—(* வினா எண் 8142) திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கரம்பக்குடியில் சேம்பர் செங்கல் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கரம்பக்குடியில் பொதுப்பணித் துறை கண்மாய்களில் சேம்பர் செங்கல் தொழிற்சாலை ஒன்றை அமைக்க மண் பரிசோதனை செய்யப்பட்டு, ஊரகத் துறையிலிருந்து அந்த இடத்தில் அந்த தொழிற்சாலையை அமைப்பதற்கான செயற்குறிப்பும் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே, அந்தப் பகுதி தொழிற்சாலை இல்லாத பகுதியாக இருப்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் அந்த செயற்குறிப்பை வாங்கிப் பார்த்து, முன் உரிமை கொடுத்து அங்கே அந்தத் தொழிற்சாலையை அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய சிறப்புத் திட்டத்தின்கீழ் புதுக்கோட்டை பகுதியிலுள்ள ராயவரம் என்ற இடத்தில் அண்ணா அரிசன கூட்டுறவு செங்கல் தொழிற்சாலை என்ற

பெயரில் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டமாதிரி எந்த ஒரு கருத்துருவும் இருப்பதாக குறிப்பில் இல்லை. அப்படி ஏதாவது முயற்சி இருந்தால், புதிதாக தொடங்கப்படும் திட்டத்தோடு அதனையும் சேர்த்து, லாபகரமாக, அவசியமானது என்று கருதும் நிலை இருந்தால், அதுபற்றி பரிசீலிக்கலாம்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதிகளில் இப்படிப்பட்ட சேம்பர் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன? மேலும் எத்தனை ஆரம்பிக்க அரசு உத்தேசித்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் ராயவரம் என்கிற பகுதியில் அதனை அமைக்கின்ற பணி தொடங்கப்பட்டிருக்கிறது. மற்றபடி எந்த இடத்திலும் அதனை அமைப்பதற்கான கருத்துரு எதுவும் இங்கே இல்லையென்று முன்பே குறிப்பிட்டேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்லியதிலிருந்து, அவர் குறிப்பிட்ட இடத்தில் அவசியம் என்ற நிலை இருந்தால், நிதி ஆதாரம் மற்றும் பிரச்சினைகளை எல்லாம் பொறுத்து அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கன்னியாகுமரி விவேகானந்தர் ஆலயத்திற்கு கேபிள் கார்.**

**410—(*வினா எண் 9805) திரு. த. புஷ்பராசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி விவேகானந்தர் ஆலயத்திற்கு கேபிள் கார் வசதி செய்து கொடுக்க அரசு உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கன்னியாகுமரி விவேகானந்தர் ஆலயத்திற்கு கேபிள் கார் வசதி செய்து கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா என்ற கேள்விக்கு அதற்கு உத்தேசம் இல்லையென்று இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு வரை கன்னியாகுமரியில் மாலை நேரத்தில் கிழக்குப் புறத்திலிருந்து எழுகின்ற நிலவின் பாதியையும், மேற்கு புறத்தில் விழுகின்ற நிலவின் பாதியையும் காண்கின்ற அற்புதக் காட்சி இருந்து வந்தது. அந்த அற்புதக் காட்சியை காண உலகத்திலிருந்தெல்லாம் பயணிகள் வந்துகொண்டிருந்தார்கள். இப்போது அந்த அற்புத காட்சிகள் தெரியாதவாறு அங்கே கட்டடங்கள் அவற்றை மறைத்துக்கொண்டு இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி என்றால் அதனை மாற்றியமைக்கின்ற உத்தேசம் அரசிடம் உண்டா?

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் இதுவரை கிடைக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்களாவது அதுபற்றி அரசுக்கு தெரிவித்திருந்தால் சரியாக இருந்திருக்கும். இப்பொழுது கூட எந்தக் கட்டடம் என்று எனக்குப் புரியவில்லை. அது முறையாக இருந்தால் அதைப்பற்றி ஆய்ந்து நடவடிக்கை எடுக்கலாம.

**பட்டுக்கோட்டை தொகுதி, ஆலம்பள்ளம்-முசிறி சாலையில் பாட்டுவனாச்சி ஆற்றில் பாலம்.**

**411—(*வினா எண் 10109) திரு. ப. ந. இராமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதியில் உள்ள ஆலம்பள்ளம்-முசிறி சாலையில் பாட்டுவனாச்சி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

[1987 ஏப்ரல் 20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பட்டுக்கோட்டை தொகுதியில் உள்ள ஆலம்பள்ளம்—முசிரி சாலையில் இடையில் செல்கின்ற பாட்டுவனாச்சி என்ற காட்டாற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கான ஒரு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தார்கள். ஆனால் அமைச்சரவர்கள் அரசுக்குத் தகவல் இல்லை என்று சொன்னார்கள். முசிரி என்கின்ற அந்தத் திருத்தலம், தஞ்சையை ஆண்ட முசுகுந்த மாமன்னனுக்குத் தொழுநோய் ஏற்பட்டபொழுது, அந்தத் திருத்தலத்திற்கு வந்த பொழுது, அவருடைய நாய் அங்குள்ள குட்டைக்குச் சென்று குளித்தபொழுது அந்த நாய்க்கு இருந்த தொழுநோய் அகன்றதாகவும், பிறகு மாமன்னனும் அங்கே குளத்தை வெட்டி, கோயிலையும் விரிவுபடுத்திக் கட்டி, அந்தத் திருத்தலத்தில் உள்ள குளத்தில் குளித்ததால் அவனுக்கும் குஷ்டம்—தொழுநோய் அகன்றதாகவும், இப்பொழுதும் அந்தத் திருத்தலத்தில் சென்று குளிப்பவர்களுக்கெல்லாம் சரும நோய்கள் நீங்கி வருகின்றன. எனவே, அந்தத் திருத்தலத்தின் முக்கியத்துவத்தைக் கருதி, எனது தொகுதிக்குத் தெற்கே இருக்கின்ற ஐம்பது கிராமங்களிலுள்ள மக்கள் அந்த ஊருக்கு வருவதற்கு சிரமப்படுகிறார்கள், ஆகவே, அந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டித் தர-தமிழக அரசு—அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, தகவல் இல்லை என்று நான் சொல்லவில்லை. இதைக் கட்டுவதற்கான உத்தேசமில்லை என்றுதான் நான் சொன்னேன். அதற்கு 27 இலட்சம் ரூபாய் ஆகுமென்று கணக்குச் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய நிதிநிலைமைதான் இதற்குக் குறுக்கே நிற்கிறது. நிதிநிலைமை சரியாகிறபோது செய்யப்படும். இன்னொன்றைச் சொன்னார்கள். அங்கே போகின்றவர்கள் அங்கே குளித்தால் தொழுநோயெல்லாம் சரியாகிவிடுகிறது என்று



1987 ஏப்ரல் 20]

சொன்னார்கள். சில சிரமங்களை ஏற்றுக்கொண்டு நடந்து போகின்றபொழுது—இதுபோன்ற ஆறுகளையெல்லாம் கடந்து போகின்றபொழுதுதான் அதுபோன்ற நன்மைகளே விளைகின்ற நிலைமை இருக்கிறது. எனவே, அந்தப் பாலத்தைக் கட்ட வேண்டுமா என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் மீண்டும் ஒருமுறை நன்றாக யோசித்து, ஒருவேளை இந்தப் பாலத்தைக் கட்டுவதன் மூலமாக அதிலே இருக்கின்ற புனிதத் தன்மை போய் விட்டால் சரியாக இருக்காது. அதைப்பற்றி யோசித்து, அதற்குப் பிறகு சொன்னால் கூடச் சரியாகயிருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களின் பதிலுக்கு மிகுந்த நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். அதேபோல், அவசியம் கட்டியாக வேண்டும். நன்கு யோசித்துச் சொல்கிறேன். கோடை காலங்களில் செல்வதற்குச் சிரமமில்லை. ஆனால் மழைக் காலத்தில் 50 மீட்டர் காட்டாற்று வாய்க்காலைக் கடப்பது என்பது—6 அடி, 7 அடி தண்ணீரில்—கிராம மக்களுக்குச் சிரமமாக இருக்கிறது. ஆகவே, அருள்கூர்ந்து பரிசீலித்துக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, பரிசீலிக்கலாம்.

### பேரூர் தொகுதி, மதுக்கரை நகரியப் பகுதியில் தொழிற்பேட்டை துவங்குதல்.

412—(*வினா எண் 11731) திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி மதுக்கரை நகரியக்குழு பகுதியில் தொழிற்பேட்டை துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொழில் கூடங்கள் கட்டப் படுகின்றன.

(இ) எப்போது துவங்கப்படும்?

[1987 ஏப்ரல் 20

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

## நாகை துறைமுகம்.

413—(*வினா எண் 12064) **திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை துறைமுகத்திற்கு பயணிகள் கப்பல் வராம லிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) நாகப்பட்டினம் துறைமுகத்திற்கு வந்துகொண்டிருந்த பயணிகள் கப்பலான எம். வி. சிதம்பரம் தீப்பிடித்துக் கொண்டதால் 15—2—1985 முதல் நாகப்பட்டினம் துறைமுகத்தில் பயணிகள் கப்பல் போக்குவரத்தினை நிறுத்திக் கொள்வதாக இந்தியக் கப்பல் கழகம் அறிவித்திருக்கிறது. நாகப்பட்டினம் துறைமுகத்தில் பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடர்ந்து நடைபெற வேண்டுமென்று மத்திய அரசைத் தமிழக அரசு கேட்டுக்கொண்டுள்ளது. மைய அரசின் பதில் எதிர்பார்க்கப் படுகிறது.

**திரு. சா. ஞானசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் எம். வி. சிதம்பரம் கப்பல் நிறுத்தப்பட்டதாகத் தகவலைச் சொன்னார்கள். அந்தக் கப்பலானது இரண்டாண்டுகளுக்கு முன்னாலே தீப்பிடித்து எரிந்ததற்குப் பின்னால், தென் மாவட்டங்களில் இருக்கக் கூடியவர்கள், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்குச் செல்கின்ற வாய்ப்பினை இழந்திருக்கிறார்கள். மேலும் அங்கே வெங்காயம் போன்ற சரக்குகளை ஏற்றி அனுப்புவதற்கும் நாகை



1987 ஏப்ரல் 20]

பகுதியில் உள்ளவர்கள் சிரமப்படுகிறார்கள். எனவே, மீண்டும் கப்பல் போக்குவரத்தைத் தொடங்குவதற்கு மத்திய அரசை வலியுறுத்த முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, ஏற்கனவே மத்திய அரசை நாம் இதிலே வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். பலமுறை கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அது இயக்கப்பட வேண்டுமென்பதுதான் நம்முடைய எண்ணமாக, மத்திய அரசை வலியுறுத்திக்கொண்டேயிருக் கிறோம். மீண்டும் கூட மத்திய அரசாங்கத்திற்கு ஒரு கடிதம் எழுதுவதற்கு நாம் நடவடிக்கை எடுக்கலாம். மத்திய அரசாங்கம் சில பிரச்சினைகளைச் சொல்லி, இயக்குவதற்குக் காலதாமதம் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த உணர்வுகளை யெல்லாம் தெரிவித்து, மத்திய அரசாங்கத்திற்கு மீண்டும் ஒரு கடிதம் எழுதலாம்.

**திரு. க. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த நாகைத் துறைமுகமானது நீண்ட நாட்களாகக் கப்பல் போக்குவரத்து இல்லாததனாலே அதனுடைய கிடங்குகள் கூட உபயோகம் இல்லாத நிலையிலே அவை வீணாக போகக்கூடிய சூழ்நிலையும் இருக்கிறது. தவிரவும் சிங்கப்பூர், மலேசியா போன்ற வெளிநாடுகளிலேயிருந்து வருகின்ற சாதாரண நடுத்தர நிலையிலே இருக்கின்றவர்கள் தொழில் செய்கிறவர்கள் விமானத்தின் மூலம் வருவதற்கு சிரமப் படுகிறார்கள். ஆகவே கப்பல் போக்குவரத்தை நாம் விரைவுப் படுத்தினால் அங்கிருந்து வருகின்றவர்களுக்கு வர, போக நல்ல வாய்ப்பாக இருக்கும்; அரசுக்கு அந்நியச் செலாவணியும் கிடைக்கும் வாய்ப்பும் இருக்கும். ஆகவே . . . (மணியடிக்கப் பெற்றது).

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, ஆகவே இதையெல்லாம் விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப் படுமா என்றுதான் அவர்கள் கேட்க நினைக்கிறார்கள். ஏற்கெனவே நான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்கள் எல்லாம் இந்த அரசுக்கு உடன்பாடான கருத்துக்கள்தான். ஆகவே மத்திய அரசிடம் இதைத் தொடர்ந்து வலியுறுத்துவோம்.

[1987 ஏப்ரல் 20

திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்: தலைவரவர்களே, நாகைத் துறைமுகத்திற்கு பயணிகள் கப்பல் வராது இருப்பது பற்றிச் சொன்னார்கள். மத்திய அரசுக்கு பலமுறை எழுதியிருப்பதாகவும் சொன்னார்கள். பலமுறை எழுதியும் அவர்களிடமிருந்து பதில் வரவில்லையா அல்லது ஏதாவது சொல்லியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, அவர்களுக்கு இந்தக் கப்பல் போக்குவரத்தை இயக்குவதில் இருக்கிற சிக்கல்களைச் சொன்னார்கள். இலாபகரமாக இருப்பதில்லை என்பது ஒன்று. புதிதாக கப்பலைக் கொடுத்து, நாகப்பட்டினத்திலிருந்து இயக்க வேண்டுமென்று சொன்னால், அதனை நடைமுறைக்குக் கொண்டுவருவதில் என்னென்ன சிக்கல் அரசாங்கத்திற்கு இருக்கிறது என்பது தெரியும். இந்தக் கப்பல் போக்குவரத்தை எப்படியும் இயக்க வேண்டும் என்பது நம்முடைய எண்ணம், இந்த அரசின் கொள்கை. அந்த வகையில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இதை ஒரு குற்றச்சாட்டாகச் சொல்ல முடியாது. எப்படிப்பட்ட சிக்கல்கள் இருந்தாலும் தமிழக அரசின் உணர்வுகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தை நாம் பிரதிபலிக்கலாம்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: தலைவரவர்களே, நாகப்பட்டினத்திலிருந்து கப்பல் சர்வீஸ் நடத்த மத்திய அரசிடமிருந்து சில மாற்றுக் கருத்துக்கள் வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதனால் நம்முடைய பூம்புகார் சிப்பிங் கார்ப்பரேஷன் மூலம் ஒரு கப்பல் போக்குவரத்தை நடத்த தமிழக அரசு முன்வருமா? சாலைகளில் எல்லாம் இட நெருக்கடி இருக்கின்ற காரணத்தால் சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரையில் இருக்கிற துறைமுகங்களைப் பயன்படுத்தி 'இன்டர்னல் வாட்டர் ட்ரான்ஸ்போர்ட் சிஸ்டம்' ஒன்றை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, சிறு கப்பல்களை வைத்து பூம்புகார் சிப்பிங் கார்ப்பரேஷன் இயக்க தேவையான நடவடிக்கை எடுப்பதில் தமிழ அரசுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் மலேசியா, சிங்கப்பூர் போன்ற இடங்களுக்கும் மற்ற இடங்களுக்கும் அங்கிருந்து சிறு கப்பல்களை வைத்து இயக்க முடியாது அந்த கப்பல் போக்கு



1987 ஏப்ரல் 20]

வரத்து இலாபகரமாக மத்திய அரசுக்கு இல்லை என்பதால் அதை தமிழக அரசு இயக்க வேண்டும் என்று சொல்வது நியாயமல்ல. இலாபகரமாக இருக்கிற விமான சர்வீஸ் போன்றவற்றை நம்முடைய அரசுக்குக் கொடுக்கலாம் என்று நீங்கள் டெல்லியில் கேட்கலாம். மத்திய அரசுக்கு செய்ய வேண்டிய கடமை இருக்கிறது. அந்தப் பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்களுடைய கடமையை அவர்கள் செய்ய வேண்டும் என்ற உணர்வு எங்களுக்கு இருக்கிறது; உங்களுக்கும் இருக்க வேண்டும். இந்த அரசு அதை வற்புறுத்தும்.

திரு. கே. ஆர். கணபதி: தலைவரவர்களே, பக்கிங்காம் கால்வாயை தூர் எடுத்து, படகுத் துறைகள் அமைத்து, பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகத்தின் மூலமாக படகுகள் விட்டு, போக்குவரத்து நெரிசலைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, அதனுடைய விளக்கம் இப்போது என்னிடம் இல்லை. அதுபற்றிய ஆய்வு ஏற்கெனவே நடந்துகொண்டிருக்கிறது.

திரு. மா. மணிமாறன்: தலைவரவர்களே, நம்முடைய முக்கியமான பிரச்சனைகள் குறித்து அடிக்கடி மத்திய அரசுக்கு கடிதம் எழுதுகிறோம். ஆனால் அந்தக் கடிதங்களுக்கு முறையான பதில் வரவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட கப்பல் போக்குவரத்து அல்லது அதைப்போன்ற முக்கியமானப் பிரச்சினைகளுக்குக் கடிதம் எழுதுவதைத் தவிர்த்து நேரடியான நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே. மாண்புமிகு உறுப்பினர், திரு. மணிமாறன் அவர்களுடைய பாணி என்ன என்று எனக்குத் தெரியவில்லை. நேரடி நடவடிக்கை என்று சொல்கிறார்கள். நேரடியாகச் சென்று பேச வேண்டும் என்று சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். நேரடியாகப் போனால் இதற்கெல்லாம் டெல்லிக்குப் போக வேண்டுமா என்ற கருத்து கூட வரலாம். ஆகவே எப்பொழுதெல்லாம் எழுத வேண்டுமோ அப்போதெல்லாம் கடிதங்கள் எழுதுகிறோம். கடிதத்தை எழுதிவிட்டு, நேரடியாகப் போகின்ற வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம் அந்தந்தத் துறையின் அமைச்சர்கள் மட்டு

[1987 ஏப்ரல் 20

மல்லாமல் மற்ற அமைச்சர்களும் பேசி வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போகிறபோதெல்லாம் என்ன என்ன பிரச்சினைகளுக்கு பதில் வராமல் தேங்கி இருக்கிறதோ அதுபற்றி பேசி வருகிறார்கள். பிரதம அமைச்சருக்கும் மற்ற அமைச்சர்களுக்கும் கடிதம் எழுதுகிறார்கள். அமைச்சர்கள் பேசுவது மட்டுமல்லாமல் அங்கே இருக்கிற நம்முடைய சிறப்புப் பிரதிநிதியும் கவனித்து வருகிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலமாகவும் நடவடிக்கை எடுக்கிறோம். ஆகவே நம்முடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற எல்லா வகைகளிலும் உரிய நடவடிக்கையை முறையாக இந்த அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** தலைவரவர்களே, நாகப்பட்டினம் துறைமுகம் பயணிகள் கப்பல் போக்குவரத்து இல்லாமல் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கே சரக்குக் கப்பல் போக்குவரத்தும் இல்லாத காரணத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட நிலைமை இருக்கிறது. சென்னை துறைமுகத்தில் எல்லா சரக்குக் கப்பல்களும் வரக்கூடிய சூழ்நிலை இருப்பதால் அதிகமான சரக்குக் கப்பல்கள் பல நாட்களுக்கு நடுக்கடலில் வந்து நிற்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு, குறிப்பிட்ட சில கப்பல்களையாவது கட்டாயம் நாகப்பட்டினம் துறைமுகத்தை அடையச் செய்து. அங்கே இருக்கிற தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக விரும்பி அவர்களே போகிற வகையில் ஏதாவது ஏற்பாட்டைச் செய்யவேண்டும். கட்டாயப்படுத்துகிற போது சில பிரச்சினைகள் உருவாகலாம். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய அந்தக் கருத்துக்களில் இருக்கின்ற உண்மைகளை இந்த அரசு நிச்சயமாகப் புரிந்து இருக்கிறது. எதிர்காலத்தில் அதற்கான நடவடிக்கையை எப்படி எடுக்க முடியும் என்பதைப் பற்றி தனியாக ஆய்வு செய்யலாம.



1987 ஏப்ரல் 20]

**திரு. கடலூர் இ. வி. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்குப் போகவேண்டுமென்றால் ஒன்றரை நாட்கள் ஆகின்றன. அதே போல் வடசென்னையிலிருந்து மகாபலிபுரத்திற்குப் போக வேண்டுமென்றாலும் நெரிசல்களுக்கிடையே தான் போக வேண்டி இருக்கிறது. அயல் நாடுகளில் நீர் வழியில் செல்கிற அடிப்படையில் ஹைட்ரோ பாயில் என்று சொல்லப்படுகிற பறக்கும் படகினை விடுகிறார்கள். அதுபோன்று வட சென்னையிலிருந்து மகாபலிபுரத்திற்கும், சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்கும் பறக்கும் படகு விடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அப்படி விட்டால் அதன் மூலம் நெரிசலைத் தவிர்க்க முடியும். எனவே இப்படிப்பட்ட ஒரு திட்டத்தினை பூம்புகார் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் ஏற்பாடு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா? அப்படி முயற்சி செய்கிறபோது . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கேள்விதான் கேட்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், திரு. வேலு அவர்கள் பறக்கும் படகைப் பற்றியே பல நாட்களாகக் கேட்டு வருகிறார்கள். இதற்கு முன்பும் கூட சட்டமன்றத்தில் அதைப் பற்றிப் பேசி இருக்கிறார்கள். ஒரு ஆய்வு அதிலே செய்யப் பட்டது. அது எந்த அளவுக்கு இலாபகரமாக இருக்கும் என்பதைப் பற்றிய முழு விவரமும் இப்போது இல்லை. எனவே தனியாகக் கேள்வி போடுகிறபோதோ அல்லது அது குறித்து தனியாகப் பேசுகிறபோதோ அதுபற்றிய விவரங்களைத் தருகிறேன்.

**திரு. வே. இரா. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி துறைமுகம் ஆழமாக இல்லாத காரணத்தால் அங்கே கப்பல்கள் அதிக தூரத்திலேயே நிறுத்தப் படுகின்றன. அவ்வாறு அதிக தூரத்தில் நிறுத்தப்படுவதன் காரணத்தால் 'டெமரேஜ்' அதிகமாகி செலவு அதிகமாகிறது. அதன் மூலம் தமிழக அரசுக்கு அதிகமான பணம் நஷ்டம் ஆகிறது. எனவே இதைப் போக்க தூத்துக்குடி துறைமுகம் ஆழப் படுத்தப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, மூலக்கேள்வி நாகப்பட்டினம் துறைமுகத்திற்கு சென்னை சிதம்பரம் கப்பல்கள் போவது பற்றியது. ஆனால் இப்போது எல்லா துறைமுகத்திற்கும் போய்க்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதிலே என்ன ஆயும் இருக்கிறது என்பதைப் பற்றிய விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. இருப்பினும், நம்முடைய பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இயக்கப் படுகின்ற தமிழ் அண்ணா, தமிழ்ப் பெரியார், தமிழ் காமராஜர் போன்ற கப்பல்கள் அங்கே நிற்கின்றன. நிலக்கரி கொண்டு வருகிற கப்பல்களும் அங்கே நிற்கின்றன. அவற்றுக்குத் தேவை யான அளவுக்கு இப்போது ஆழப்படுத்தப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆனால் மற்றவற்றைப் பொறுத்தவரையில் ஏதாவது பிரச்சினை இருந்தால் தனியாக அதைப்பற்றி யோசிக்க லாம்.

திரு. ப. தீர்த்தராமன்: தலைவர் அவர்களே, அது பயணிகள் கப்பலாகவே இருப்பதன் காரணத்தால் கஷ்டம் ஏற்படுவதாக நான் அறிகிறேன். பாதி பயணிகள் போக்குவரத்து பாதி சரக்கு ஏற்றுமதி என்ற அடிப்படையில் அதனை இயக்கினால் இலாபகரமாக இருக்கும். அதுபற்றி மத்திய அரசுக்கு மாநில அரசு எடுத்துரைக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, மத்திய அரசுக்கும் இந்த யோசனை இருக்கலாம் என்று நான் கருதுகிறேன். நமக்கு எப்படியாவது கப்பல்கள் போயாக வேண்டும். அதுதான் நம்முடைய நோக்கம். எனவே இதிலே ஆலோசனை சொல்வது என்பது அவசியம் இல்லாத ஒன்று. நாங்கள் கேட்பதெல்லாம் அந்தக் கப்பல்களை இயக்க வேண்டும் என்பதைத்தான். எனவே அவர்கள் எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளட்டும். ஆனால் எவ்வளவு பயணிகள் இருக் கிறார்களோ அந்தப் பயணிகளுக்கு ஏற்ப அந்தக் கப்பல் இருக்க வேண்டும்.



1987 ஏப்ரல் 20]

## புதிய தேயிலை தொழிற்சாலை.

414—(* வினா எண் 12369) திரு. ந. மாரிமுத்து: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதியதாக தேயிலை தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆம்.

திரு. ந. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக அமைக்கப்படும் தேயிலைத் தொழிற் சாலைகள் எந்தெந்த மாவட்டங்களில் அமைக்கப்படும் என்ற விவரத்தையும், அதன் மதிப்பீட்டுத் தொகை என்ன என்பதையும், அதன்மூலம் எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்ற விவரத்தையும் அறிவிக்குமாறு நான் கோருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் உதகை வட்டத்தில் சின்னக்கோரை என்ற பகுதியில் ஒரு தொழிற்சாலையும், நீலகிரி மாவட்டத்தில் பிகட்டி என்ற பகுதியில் இன்னொரு தொழிற்சாலையும் அமைப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும் 50 பேர் பணியாற்றுவதற்கான வாய்ப்பு இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாநில அரசின் சார்பாக இரண்டாம் பகுதித் திட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டு முதல் தொழிற் சாலைக்கு 7.62 லட்சம் ரூபாயும், இரண்டாம் தொழிற்சாலைக்கு 9.52 இலட்சம் ரூபாயும் பங்குத் தொகையாக வழங்கப்பட் டிருக்கிறது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திலிருந்து ஒவ்வொன்றுக்கும் முறையே 109 இலட்சம் ரூபாய் அளிக்க ஒப்புதல் கொடுத்திருக்கிறார்கள்.

[1987 ஏப்ரல் 20

**திரு. த. மாரிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தேயிலையின் மொத்த அளவு என்ன, அது எந்தத் துறைமுகத்தின் மூலம் ஏற்றுமதி செய்யப் படுகிறது, அதன் மூலம் எவ்வளவு இலாபம் கிடைக்கிறது, 1984-85, 1986-86 ஆகிய ஆண்டுகளில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு என்ன என்ற முழு விவரங்களையும் அறிவிக்குமாறு நான் வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, 1985-ம் ஆண்டில் ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்டு, ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் மொத்த அளவு இரண்டு கோடியே 58 லட்சத்து 34 ஆயிரம் கிலோ, 1986 ஆம் ஆண்டில் ஒரு கோடியே 73 லட்சத்து 95,364 கிலோ ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. இந்த விவரம்தான் இப்போது என்னிடத்தில் இருக்கிறது. இலாப நஷ்டக் கணக்கு என்ன என்பதற்கு தற்போது விவரம் இல்லை.

**திரு. கே. உச்சி:** தலைவர் அவர்களே, புதியதாக நீலகிரி மாவட்டத்தில் சின்னக்கோரையிலும், பெக்கட்டி பகுதியிலும் தேயிலைத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கவிருப்பதற்கு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சின்னக்கோரைப் பகுதியில் தொழிற்சாலைக்கு வேண்டிய கட்டடங்கள் கட்டும் பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. ஆனால் பெக்கட்டி பகுதியில் தொடங்கப்படும் பாக்டரி பொறுத்து சில தகராறு காரணமாக பணிகள் தொடங்கப் படவில்லை. ஆகவே இதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு உடனடியாக அந்தத் தேயிலைத் தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகளைத் தொடங்கச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, அதிலே இருக்கிற தகராறு பற்றி இதுவரையில் எனக்குத் தெரிய வில்லை. அப்படி பிரச்னை இருக்குமானால் நிச்சயம் தலையிட்டு தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கும்.



1987 ஏப்ரல் 20]

**திரு. கே. கல்லன்:** தலைவர் அவர்களே, அந்த பகுதி பொது மக்கள் ஏறக்குறைய இரண்டு ஏக்கர் பூமியை வாங்கி சர்க்காருக்குக் கொடுத்தும், இந்தத் தொழிற்சாலையின் வேலை துவக்கப் படவில்லை. இதனைத் துரிதப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளிடம் தெரிவித்து நடவடிக்கையெடுக்கச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, நிலம் வாங்கிக் கொடுத்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அங்கே ஏதோ சிக்கல் இருப்பதாக மாண்புமிகு உச்சி அவர்கள் சொல்கிறார்கள். என்ன சிக்கல் இருக்கிறது என்று பார்த்து துரித நடவடிக்கையெடுக்கப்படும். சிக்கல் என்னவென்று யாருக்கும் தெரியவில்லை. அதுவே சிக்கலாக இருக்கிறது. அதிகாரிகளிடம் கலந்து பேசி நடவடிக்கை யெடுக்க ஏற்பாடுகளைச் செய்யலாம்.

### தூத்துக்குடி வானொலி நிலையம்.

415—(*வினா எண். 6856) **திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் வானொலி நிலையம் அமைக்குமாறு மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தி வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தூத்துக்குடியில் வானொலி நிலையம் அமைக்கப்பட உள்ளது.

(ஆ) இவ்வானொலி நிலையம் அமைப்பதற்காக தேவைப் படும் நிலத்தை கையகப்படுத்தி வழங்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க மாநில அரசு நடவடிக்கை மேற் கொண்டு வருகிறது.

[1987 ஏப்ரல் 20

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் வானொலி நிலையம் அமைக்கும்போது நல்ல செயல் திறனுள்ள நிலையமாக அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? ஏனென்றால் இப்போது நாகர்கோவிலில் ஒரு வானொலி நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் அதற்கு போதுமான செயல்திறன் கிடையாது. கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டும் தான் அது பயன்படும். சென்னை, திருச்சி போன்ற இடங்களில் அந்த நிலையத்தின் நிகழ்ச்சிகளை கேட்க முடியாது. ஆகவே திறனுள்ள நிலையமாக அதை அமைக்க வேண்டும். மேலும் அந்த நிலையத்தின் நிகழ்ச்சி நேரம் மாலை 6 மணி முதல் 9 மணி வரை என்று இருக்கிறது. அதனை காலை, மதியம், மாலை, இரவு என்று எல்லா நேரங்களிலும் நிகழ்ச்சிகள் இருக்கிற அளவிற்கு அரசு நடவடிக்கையெடுக்குமா? இதற்கு மத்திய அரசினை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, அதிக திறன் கொண்ட வானொலி நிலையம் அமைக்க மாநில அரசு மத்திய அரசிடம் சொல்லியிருக்கிறது. அதற்குத் தேவையான 5.14 எக்கர் நிலத்தை கையகப்படுத்துவதற்கு மத்திய அரசு 26.48 லட்சம் ரூபாயைக் கொடுத்திருக்கிறது. அந்த இடத்தை விரைவில் வானொலி பொறியியல் துறைக்கு ஒப்படைக்க வருவாய்த் துறையிடம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வேறு எந்தெந்த இடங்களில் வானொலி நிலையம் அமைப்பதற்கு மத்திய அரசை மாநில சர்க்கார் வற்புறுத்தி இருக்கிறது? மதுரையில் வானொலி நிலையம் அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்து முடித்து கட்டடங்கள் எல்லாம் கட்டி முடித்து ஆறு மாதங்கள் ஆகின்றன. அங்கே வேலை பார்க்கும் பணியாளர்களுக்கு விடுதியும் கட்டி முடித்தாகி விட்டது. இன்னும் அந்த நிலையம் இயங்கவில்லை. அதனை இயங்க வைப்பதற்கு மத்திய அரசை மாநில சர்க்கார் வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 20]

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உதகமண்டலம், கொடைக்கானல் ஆகிய இடங்களில் புதிய வானொலி நிலையங்களை அமைப்பதற்கு மத்திய அரசை வற்புறுத்தி, அது நடவடிக்கையில் இருக்கிறது. மதுரையைப் பொறுத்தவரையில் ஏற்கனவே ரூபாய் மூன்று கோடி செலவில் 10 கிலோவாட்ஸ் திறனுள்ள ஒலிபரப்பு நிலையம் அமைப்பதற்கு ஏற்பாடாகி, திறப்பதற்கு தயார் நிலையில் அது இருக்கிறது. மத்திய அரசின் சம்பந்தப்பட்ட அமைச்சர் வராததால் அதன் திறப்பு விழா தள்ளிப் போடப்பட்டிருக்கிறது.

**திரு. சு. சிவராஜ்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் போது உதகமண்டலம், கொடைக்கானல் ஆகிய இடங்களில் புதியதாக வானொலி நிலையம் துவங்குவதற்கு மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது என்று தெரிவித்தார்கள். அதைப்போல மலைவாசஸ்தலமாக இருக்கிற கல்ராயன் மலையிலும் வானொலி நிலையம் அமைப்பதற்கு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக வினா போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சோ. கலிதீர்த்தான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிற போது, கல்ராயன் மலையில் வானொலி நிலையம் அமைப்பதற்கு தனியாக கேள்வி போடும்படி சொன்னார்கள். அங்கே வானொலி நிலையம் அமைப்பதற்கு மத்திய அரசை வலியுறுத்த மாநில அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி விசாரித்து, பின்னர் பதில் சொல்கிறேன்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை வானொலி நிலையம் செயல்பட ஆரம்பித்து, அதை தொடக்கி வைக்கின்ற நேரத்திலே, மாண்புமிகு

[1987 ஏப்ரல் 20

அமைச்சர் அவர்கள் வராத காரணத்தாலே, அது ஒத்திவைக்கப் பட்டதாக மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே தகவல் தெரிவித்தார்கள். ஆனால் உண்மை யிலே எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு, மதுரை வானொலி நிலையத்தினுடைய அலைவரிசையும், திருநெல்வேலி நிலையத்தி னுடைய அலைவரிசையும் ஒன்றாக இருந்த காரணத்தாலே, அதாவது ஜாமிங் என்று சொல்வார்கள், இரண்டு அலைவரிசை களின் நிகழ்ச்சிகளும் ஒன்றாக ஒரே நேரத்திலே கேட்ட காரணத் தினால்தான், நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக்கூட இதுபற்றி கடிதம் எழுதியிருக்கிறேன். அதனால் ஏற்பட்ட சிக்கலின் காரணமாகத்தான், அந்த அலைவரிசையை மாற்று வதற்காகத்தான் அந்த நிகழ்ச்சியை ஒத்திவைத்திருக்கிறார்கள் என்ற விஷயம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதுமட்டுமல்லாமல் ராமேஸ்வரத்திலே ஒரு டி. வி. நிலையம் அமைப்பதற்காக, மைய அரசை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதுரையோடு நிறுத்திக் கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்த தகவல் தமிழ்நாட்டில் உள்ள வானொலி நிலையம் தந்த தகவலின் அடிப்படையில் உள்ளது.

**திரு. வி. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் மே மாதம் 1 ஆம் தேதி மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி அவர்களும், மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும் சேலத்திற்குச் செல்ல இருக்கிறார்கள். அந்த நாளிலே மதுரை வானொலி நிலையத்தை திறப்பதற்கு அரசு முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, திறப்பதற்கு மாநில அரசு வலியுறுத்தும்.



1987 ஏப்ரல் 20]

## தக்கலை மின் கோட்டத்தைப் பிரித்தல்.

410—(வினா எண். 7358) **திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு உணவு, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தக்கலை மின் கோட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை. ஆனால், குழித்துறையை தலைமையிடமாகக் கொண்ட ஒரு புதிய கூடுதல் பங்கீடு கோட்டம், கன்னியாகுமரி மின் அமைப்பில் தோற்றுவிக்கப் பட்டுள்ளது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்கலைமின் கோட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்ட நேரத்திலே, அங்கே அதிகாரிகளைப் போட்டு ஒரு உட்கோட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்களேயல் லாமல், ஒரு சப்-ஸ்டேசன் ஆரம்பிக்கப்படவில்லை. விளவங் கோடு தொகுதியிலே ஒரு சப்-ஸ்டேசன் ஆரம்பிக்கவேண்டும் என்று பல ஆண்டுக்காலமாக ஒரு முடிவு எடுத்து, ஆரம்பிக்கும் உத்தேசம் இருப்பதாக சொன்னார்கள். ஆனால் பல ஆண்டுக் காலம் கடந்தோடியும் இதுவரையில் அதை ஆரம்பிப்பதற்கான ஆக்கப்பூர்வமான வேலைகள் நடைபெறவில்லை. அதாவது மருதங்கோடு என்ற பகுதியில் ஒரு சப்-ஸ்டேசன் ஆரம்பிப்பதற் கான எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. எனவே இந்த ஆண்டாவது உடனடியாக ஆரம்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, ஏற்கனவே நாகர்கோவில் மற்றும் தக்கலை ஆகிய இரண்டு இடங் களில் 2 கோட்டங்கள் இருந்தன. அதை மூன்றாவது கோட்ட மாக ஏற்படுத்துவதற்கு, தக்கலையிலிருந்து ஒரு சப்-ஸ்டேசன் அதிலே சேர்க்கப்பட்டு இருக்கிறது. அவ்வளவுதானே தவிர, அந்த சப்-ஸ்டேசனுடைய அலுவலகம் அங்கேதான் இருக்கிறது. மூன்றாவதாக ஒரு சப்-ஸ்டேசன் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

[1987 ஏப்ரல் 20

### செங்கற்பட்டு மாவட்டம், செம்பரம்பாக்கம் ஏரிப்பகுதியில் சுற்றுலா மையம் அமைத்தல்.

417—(* வினா எண் 8195) திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், திருப்பெரும்புதூர் தாலுக்கா, செம்பரம்பாக்கம் ஏரிப்பகுதியில் ஒரு சுற்றுலா மையத்தை உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தற்போது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு அருகிலே இன்றைக்கு எந்தவிதமான டூரிஸ்ட் ஹோட்டல்களோ, டூரிஸ்ட் மையங்களோ கிடையாது. மேலும் பிக்னிக் ஸ்பாட் என்ற முறையில், அல்லது பிக்னிக் கேம்ப் என்ற முறையில் எதுவும் கிடையாது. செம்பரம்பாக்கம் பகுதி ஏரிகள் நிறைந்த பகுதியாகவும், இயற்கைக் காட்சிகள் நிறைந்த பகுதியாகவும் டூரிஸ்ட் வாசஸ்தலம் அமைவதற்கு ஏற்ற வசதிகளைப் பெற்ற பகுதியாகவும் இருப்பதாலே, உடனடியாக அல்லது வெகு சீக்கிரத்திலே ஒரு சுற்றுலா மையத்தை அங்கே அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 14—4—1987 அன்று சுற்றுலாத்துறை, சென்னை படகுக் குழாமுடன் இணைந்து, செம்பரம்பாக்கத்தில் ஒரு படகுப் போட்டியை நடத்தியது. மாவட்டந்தோறும் குறைந்தது 2 சுற்றுலாத் தலங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற முறையில் செங்கற்பட்டு மாவட்டத்தில், பழவேற்காடு—புலிக்காடு, அடுத்தது பூண்டி நீர்த்தேக்கம் ஆகிய இரண்டு பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. பழவேற்காட்டில் படகுப் போக்குவரத்துக்கு என 2.85 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது.



1987 ஏப்ரல் 20]

**திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தது ஒரு பிக்னிக் ஸ்பாட் அல்லது பிக்னிக் கேம்ப் என்று சொல்வார்களே, அப்படிப்பட்ட ஒரு நிலையை யாவது அங்கே ஏற்படுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கருத்துப்படி 'பிக்னிக் ஸ்பாட்'—டாக அறிவிப்பதற்கு வழி இருக்கிறதா என்பதை ஆய்வு செய்ய துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

### சென்னை தொலைக்காட்சியில் காலை நிகழ்ச்சிகளை தமிழில் ஒளிபரப்புதல்.

418—(* வினா எண் 13417) திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை தொலைக்காட்சியில் காலை நிகழ்ச்சிகளை தமிழில் ஒளிபரப்பு செய்ய மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வரின் ஆணைப்படி, 23—2—1987 முதல், தொலைக்காட்சியில் காலையில் இந்தி மொழியில் ஒளிபரப்பப்படும் தேசிய நிகழ்ச்சி வரவேற்க தக்க ஒன்று அல்ல என்றும், தேசிய நிகழ்ச்சியில் பொருத்தமான நேரத்தில், தமிழிலும் செய்தி ஒளிபரப்ப வேண்டும் என்றும் மாநில அரசால் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழக மக்களின் உள்ளக்கிடக்கையை எடுத்துக்காட்டுகின்ற வகையில் கடிதம் மூலம் எழுதியிருக்கின்ற அந்த கோரிக்கை இன்னும் நிறைவேற்றப்படாமல் இருப்பதை அறிந்து, தமிழக மக்களின் உணர்வுகளை மதித்து, காலையிலே ஒளிபரப்புகின்ற அந்த நிகழ்ச்சியானது தமிழிலே வந்தால் பொதுமக்கள் அனைவருக்கும் பார்ப்பதற்கும், ரசிப்பதற்கும் ஏதுவாக இருக்கும்.

[1987 ஏப்ரல் 20

தொலைக்காட்சிப் பெட்டி இப்போது இதுபோன்ற ஒளிப்பரப்புகளால் மக்கள் மத்தியிலே "தொல்லைக்காட்சிப் பெட்டியாக" பரப்புவதற்கு மீண்டும் வலியுறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா பரப்புவதற்கு மீண்டும் வலியுறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு தனது கடிதத்தில் சென்னை தொலைக்காட்சியில் இரண்டாவது அலை வரிசை வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கும்போது, அதையும் சமீபத்தில் சென்னை—கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையம் மின்னலை மூலம் இணைக்கப்பட்டுள்ள தருணத்தில் இத்தகைய புதிய நிகழ்ச்சி வரவேற்கத்தக்கதல்ல என்றும் மாலை 5-30 மணி வரையிலும் சென்னை தொலைக்காட்சியில் மாலை நிகழ்ச்சிகள் எதுவும் இல்லாத காரணத்தால் காலை தேசிய நிகழ்ச்சியில் தமிழ் செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒளிபரப்பு செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், இந்தியும், ஆங்கிலமும் தெரியாத மக்கள் தமிழ்நாட்டில் பலர் இருக்கின்றனர் என்றும், தமிழ்நாட்டில் 60 முதல் 70 சதவீதம் வரை தொலைக்காட்சியில் ஒளிபரப்பு உள்ளதென்றும், இந்தப் புதிய நிகழ்ச்சியை பலர் விரும்பவில்லை என்றும் காலையில் ஒரு புதிய நிகழ்ச்சியைத் தொடங்குவதாக இருந்தால் அது வரவேற்கத்தக்க ஒன்றாக அமைய வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. போன்ற [illegible] நடவடிக்கை எடுப்பதாக 27—2—1987 அன்று பதில் வந்திருக்கிறது.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சிப் பெட்டிகள் இன்றைக்கு தமிழகமெங்கும் ஊராட்சிமன்றங்கள் தோறும் நாம் வைத்திருக்கிறோம். ஆகவே இப்படி பொது மக்கள் மத்தியிலே எல்லோரும் பார்த்து ரசிக்கவும் விபரங்களை தெரிந்துக் கொள்ளும் வகையிலே இருக்கின்ற காரணத்தால், கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளை நேர்முகமாக ஒளிபரப்பு செய்கின்றபோது, ஏன் சட்டமன்ற நிகழ்ச்சிகளைக்கூட பொதுமக்கள் அறிந்துகொள்கின்ற வகையிலே ஒளிபரப்புவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 20]

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தையும், தமிழ்நாட்டு மக்களுடைய கருத்தையும் நிச்சயம் தமிழக அரசு மைய அரசுக்கு வலியுறுத்தும்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சியிலே இரண்டாவது அலை வரிசையை தொடங்கவேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசுக்கு கோரிக்கை அனுப்பி இருக்கிறதென்பதை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி தொடங்குகின்ற இரண்டாவது அலை வரிசையை முழுக்க முழுக்க மாநிலத்திற்கு ஒதுக்கி, மாநிலமே தன்னுடைய பொறுப்பிலே ஒளிபரப்பு செய்துகொள்வதற்கு அனுமதியை மத்திய சர்க்கார் வழங்க வேண்டுமென்று மாநில அரசு கோருமா என்கின்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் பிரகாரம் மத்திய அரசை மாநில அரசு கோரும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லி அஞ்சலில் தேசியப்படங்கள் என்று வாரா வாரம் ஒளிபரப்பு செய்யப்படுகின்றன. அதிலே, தமிழ், தெலுங்கு, மலையாளம் போன்ற படங்களையெல்லாம் போடுகிறார்கள். அவ்வாறு போடும்போது அவர்கள் பேசுகின்ற வசனங்களையும் பாடல்களையும் ஆங்கிலத்தில் டிரான்சிலேஷன் செய்து எழுத்து வடிவமாகக் காட்டுகிறார்கள். இந்திப் படங்கள் காட்டும்போது அப்படி காட்டுவது கிடையாது. அதையும் ஆங்கிலத்தில் டிரான்சிலேஷன் செய்து காட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமா? தமிழ்ப் புத்தாண்டு அன்று தமிழ் படங்களைக் காட்டுவது கிடையாது. அதையும் காட்டுவதற்கு மத்திய அரசை மாநில சர்க்கார் வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 20

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துப்படி மைய அரசுக்கு தெரிவிக்கப்படும்.

**டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிரிக்கெட், டென்னிஸ் போன்ற விளையாட்டுக்களை ஒளி பரப்புகின்றபோது பகல் நேரங்களில் ஒளி பரப்புகின்றார்கள். இதனால் கல்விக்கூடங்களிலும், அரசு அலுவலகங்களிலும் பணியாற்றுகின்றவர்களின் கவனமெல்லாம் விளையாட்டின்பால் ஈர்க்கப்படுகிறது. இதைத் தவிர்க்கின்ற வகையில், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை இரவு நேரங்களில் ஒளிபரப்பலாம் என்கின்ற ஆலோசனையை மைய அரசுக்கு மாநில அரசு வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனையை மாநில அரசு மைய அரசுக்கு தெரிவிக்கும்.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சிக்கு நிகழ்ச்சி நிரல்களைத் தயாரிக்கின்ற போது மத்திய அரசாங்கம் நம்முடைய மாநில செய்தித் துறை அதிகாரிகளைக் கலந்து இந்த நிகழ்ச்சி நிரல்களைத் தயாரிக்கின்றதா? அப்படி தயாரிக்கவில்லையென்று சொன்னால் தம்முடைய மாநிலத்தினுடைய அதிகாரிகளைக் கலந்து அந்த நிகழ்ச்சி நிரல்களைத் தயாரிப்பதற்கு நம்முடைய அரசாங்கம் அவர்களை வலியுறுத்துமா, வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அவர்கள் ஆலோசிப்பது இல்லை. எப்போதும் கலந்து செய்யவேண்டும் என்றுதான் நாம் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம்.



1987 ஏப்ரல் 20]

**பெரியார் மாவட்டம், ஈரோட்டில் சுற்றுலா பயணியர் தங்கும் விடுதி.**

419—(*வினா எண் 13481) **திரு. கு. அ. செங்கோட்டையன் மற்றும் திரு. ச. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு சுற்றுலா, மது விலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், ஈரோட்டில் சுற்றுலா பயணியர் தங்கும் விடுதி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு.

### உரிமைக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு: 1987-88 ஆம் ஆண்டுக்கான உரிமைக் குழுவுக்கு தமிழ்நாடு சட்டப் பேரவையின் 14 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் பொருட்டு

[பேரவைத் தலைவர் [1987 ஏப்ரல் 20

கீழ்க்கண்ட 14 உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கி. மனோகரன்.

திரு. டி. வெங்கட ரெட்டி.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்.

திரு. எஸ். டேனியல்ராஜ்.

திரு. ஆ. பிரேம்குமார்.

திரு. க. பாலசுப்பிரமணியன்.

திரு. இரா. சா. முனிரத்தினம்.

திரு. தி. அன்பழகன்.

திரு. கூடலூர் இ. வி. வேலு.

திருமதி பா. வளர்மதி.

திரு. சி. சுப்புராயர்.

திரு. கே. பாலாஜி.

திரு. ஜி. கிருஷ்ணராஜ்.

திரு. பாப்பா சுப்பிரமணியன்.

முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்கு சமமாக இருப்பதால் 1987-88 ஆம் ஆண்டிற்கான உரிமைக் குழுவுக்கு இவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றதாக நான் அறிவிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பேரவைத் துணைத்தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவையின் 227 (3)-வது விதியின் கீழ் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இக்குழுவின் தலைவராக இருப்பார்.



1987 ஏப்ரல் 20]

### 3. கவன ஈர்ப்பு.

**(அ) கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஏற்பட்ட தீ விபத்து.**

**திரு. கூடலூர் இ. வி. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 37 லட்சம் ரூபாய் பெறுமான சர்க்கரை தீயிற்கு இரையானது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :—

**அறிக்கை.**

11—3—1987 அன்று காலை 8 மணிக்கு வழக்கம்போல் கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் கிடங்கு பணியாளரும், தென் ஆர்க்காடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி நியமித்த கிடங்கு காப்பாளரும் சர்க்கரை மூட்டைகளை உள்ளே அடுக்குவதற்காக கிடங்கின் கதவுகளை திறந்தபோது உள்ளிருந்து பெருமளவில் புகை வருவதைக் கண்டனர். உடனே அவர்கள் மற்ற பணியாளர்களையும் தங்களுடன் அழைத்துக் கொண்டு, தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். உடனே ஆலையின் சங்கு ஒலிக்கப்பட்டு ஆலையின் அனைத்து ஊழியர்களும், அலுவலர்களும் ஒன்று கூடி தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

2. மேலும் ஆலைக்கு அருகாமையில் உள்ள தீ அணைக்கும் நிலையங்களுக்கு உடனடியாக தொலைபேசி மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டு, திருவண்ணாமலை, போளூர், செங்கம், கள்ளக்குறிச்சி மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் இருந்து ஒன்றன் பின் ஒன்றாக தீ அணைக்கும் வண்டிகள் பெறப்பட்டு அவைகளை தீயணைக்கும் பணியில் ஈடுபடுத்தி காலை

11-30-க்குள் தீ முழுவதும் அணைக்கப்பட்டுவிட்டது. ஆலை விரைவாகவும் துரிதமாகவும் எடுத்த நடவடிக்கையின் காரண மாக, தீ மேலும் பரவாமல் விரைவில் அணைக்கப்பட்டுவிட்டது. இதன் காரணமாக மிக அதிக அளவிலான சேதம் தவிர்க்கப் பட்டது.

3. விபத்து நேர்ந்த செய்தி கேட்டு சர்க்கரைத் துறை இயக்குநரும் மற்ற அலுவலர்களும் சென்று விபத்து நடந்த இடத்தை நேரில் பார்வையிட்டு அதற்குண்டான மேல் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

4. தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணங்களைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்கும்பொருட்டு ஓய்வு பெற்ற தொழிலாளர் துணை ஆணையாளர் ஒருவர் விசாரணை அலுவலராக (Enpuiry Officer) நியமனம் செய்யப்பட்டு அவர் 18—3—1987 அன்று காலை முதல் உள் விசாரணை மேற்கொண்டுள்ளார். இவ் விசாரணையின் முடிவு அறிக்கையை விரைவில் அரசுக்கு அனுப்பி வைக்கும்படி சர்க்கரைத்துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட் டுள்ளார்.

5. மேலும் சட்டப்படியான நடவடிக்கை தொடரும் பொருட்டு வடபொன்பரப்பி காவல் நிலையத்தில் ஆலையின் சார்பில் தீ விபத்து குறித்து புகார் ஒன்றும் கொடுக்கப்பட்டுள்ளது. காவல் துறையும் இதுகுறித்து விரிவான விசாரணையை மேற் கொண்டுள்ளது.

6. ஆலை தனது அனைத்து சொத்துக்களையும் சர்க்கரை உட்பட ரூபாய் 11 கோடிக்கு முறையாக யுனைட்டட் இந்தியா காப்பீடு நிறுவனத்தில் முழுமையாக காப்பீடு Officer செய்துள்ளது. இக்காப்பீடு செயல்படும் காலவரையில் உள்ளது. தீயில் பாதிக்கப்பட்ட சர்க்கரை உட்பட அனைத்து சர்க்கரை





மூட்டைகளும் தக்க பதிவேடுகளில் சரியாக எழுதப்பட்டு பாராமரிக்கப்பட்டுள்ளன. இது காப்பீடு கழகத்திற்கு நிரூபணமாக அமையும். அதனால் இழப்புத்தொகையை காப்பீட்டுக் கழகத்திட மிருந்து முறைப்படி ஆலை பெறுவதற்கு இது உதவிகரமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

7. மேற்கண்ட தீ விபத்தில் 1,774 மூட்டை சர்க்கரை தீயி னாலும், 5,238 மூட்டைகள் தீயணைப்பு முயற்சியின்போது பயன் படுத்தப்பட்ட தண்ணீராலும் சேதமடைந்துள்ளன. இதுதவிர தீப்பற்றிய இடத்தைச் சார்ந்திருந்த கிடங்கில் 1,710 மூட்டை களும் சேதமடைந்துள்ளன. சேதமடைந்த மொத்த சர்க்கரை மூட்டைகள் 3,484 எனவும் அவற்றின் பண மதிப்பு அதிகபட்சமாக ரூ. 47 லட்சம் இருக்குமெனவும் உத்தேச மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது. ஆலைக்கு ஏற்பட்ட இழப்புக்கு ஈடான தொகையை காப்பீட்டுக் கழகத்திடமிருந்து பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

8. மேல் விவரித்தபடி கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஏற்பட்ட தீ விபத்து தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்கப்பட்டுள்ளன. அரசு மட்டத்தில் தொடர் நடவடிக்கைகளையும் கண்காணித்து வருகிறது.

**திரு. கூடலூர். இ. வி. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் 11—3—1987-லே சர்க்கரை ஆலையில் தீ பிடித்து, காரணங்களைக் கண்டறிய ஓய்வு பெற்ற துணை ஆணையாளர் ஒருவர் விசாரணைக்காக அங்கே நியமனம் செய்யப்பட்டுள்ளதாக சொல்லியிருக்கிறார்கள். 1½ மாத காலம் ஆகியும் இதுவரை அதில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது? அதற்கு வேண்டிய விசாரணை நடைபெற்றதாகத் தெரியவில்லை. மக்கள் எல்லாம், விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் ஏதோ நிர்வாகத்தினுடைய குறைதான் என்று அங்கே பேசிக்கொண்டு இருக்கிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா என அறிய விரும்புகிறேன்.

[திரு. க. இராசாராம்] [1987 ஏப்ரல் 20

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்து நடந்த உடனே சர்க்கரை இயக்குநர் அவர்கள் அந்த ஊருக்குப் போய் எல்லாவற்றையும் ஆய்வு செய்து பார்த்தார்கள். அதற்குப் பிறகு ஓய்வு பெற்ற தொழிலாளர் துணை ஆணையாளர் ஒருவர் விசாரணை அலுவலராக (Enquiry Officer) -ஆக நியமனம் செய்யப்பட்டு அவர் 18—3—1987-லிருந்து விசாரணையை மேற்கொண்டு இருக்கிறார்கள்.

**திரு. கூடலூர் இ. வி. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தீ விபத்து நடந்த இடத்திற்கு சர்க்கரை இயக்குநர் அவர்களும் மற்றவர்களும் சென்று அங்கு எடுக்க வேண்டிய மேல் நடவடிக்கைகளை எடுத்ததற்காக நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால்—அந்தப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம்—அதாவது சர்க்கரையை அச்சில் ஏற்றுவதற்கு சிறிய மின் மோட்டார் பயன்படுத்தப்படுகிறது; அதற்கு வெளியில் இருந்து மின்சாரம் அந்த குடோனுக்கு வருகிறது. அப்படி வருகிற மின்சாரம் ஒரு ஒயர் மூலமாக சீலிங் செய்யாத தரைப் பகுதியில் பதியப்பட்டு வெளிப்புறத்தில் வந்த காரணத்தால் மின்சாரம் ஷாக் அடித்ததன் காரணமாக இரவோடு இரவாக [illegible] பற்றிக் கொண்டதாக விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் பேசிக்கொள்கிறார்கள். எனவே சீலிங் செய்யப்பட்ட ஒயரை அந்தக் தரைப் பகுதியில் பொருத்தி மோட்டாரைப் பயன்படுத்தினால் இதுபோன்ற நிகழ்ச்சிகள் ஏற்படாது என்று விவசாயப் பெருங்குடி மக்கள் பேசிக்கொள்கிறார்கள். எனவே அந்தவகையில் சீலிங் செய்யப்பட்ட ஒயரை தரைப் பகுதியில் பொருத்தி அதன் மூலமாக அந்த மோட்டாரைப் பயன்படுத்துகிற அளவில் அதை அமைப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா? சென்ற ஆண்டு அதே குடோனில் இதுபோன்ற ஒரு விபத்து ஏற்பட்டதாக அங்கே இருக்கிற விவசாயிகள் பேசிக்கொள்கிறார்கள். ஏற்பட்டு இருந்தால் ஒரு ஆண்டுக்குப் பிறகு மீண்டும் அப்படி ஏற்படுகிறது. எனவே நிர்வாகத்தில் ஏதோ தாமதம், மந்தம் இப்படி [illegible] காரணம் என்று விவசாயப் பெருங்குடி மக்கள் பேசிக்கொள்கிறார்கள். [illegible] குறைகள் எல்லாம் நிவர்த்தி செய்யப்பட்டு [illegible] ஒயரை தரைப் பகுதியில் பொருத்த நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 20]

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு விபத்து நடந்ததாக ஒரு தகவலும் இல்லை. அதோடு கடந்த 2 ஆண்டுகளாக எந்த விபத்தும் அந்த சர்க்கரை ஆலையில் நடந்ததாகத் தெரியவில்லை. எதிர்பாராத வகையில்தான், மின்சாரத் கோளாறு காரணமாகத்தான், இந்த விபத்து ஏற்பட்டு இருக்கிறது. எதிர்காலத்தில் விபத்து ஏற்படாத முறையில் மின்சார ஒயர் பதிப்பது போன்ற காரியங்களில் அங்கே இருக்கின்ற துறையினர் மேற்கொள்வார்கள்.

**(ஆ) குடிநீர்-வடிகால் வாரிய ஊழியர்களின் கோரிக்கைகள்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் கு. ரமணி, வி. பி. சிந்தன், கோ. வீரய்யன் மற்றும் எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரிய ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை வாரிய நிர்வாகம் ஏற்கவில்லை என்று அவ்வூழியர்கள் தொடர் உண்ணாவிரதம் மேற்கொண்டு இருப்பதால் ஏற்பட்டிருக்கும் நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

[திரு. க. இராசாராம்] [1987 ஏப்ரல் 20

அறிக்கை.

சி.ஐ.டி.யூ. சங்கத்துடன் இணைக்கப்பட்ட தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரிய தொழிலாளர் யூனியன் தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத் தலைவருக்கு எழுதிய தங்களது 16—3—1987 நாளிட்ட கடிதத்தின் மூலமும், போஸ்டர்களின் மூலமும் கீழ்க்கண்டவைகள் யூனியனின் முக்கிய கோரிக்கைகள் எனத் தெரிகிறது:—

1. மக்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அதிக நிதி ஒதுக்கீடு செய்தல்;

2. நிலை ஆணை விதிகளை அமல் செய்தல்;

3. தினப் பணியாளர்களை நிரந்தரம் செய்தல்;

4. 20 சதவீதம் போனஸ் வழங்குதல்;

5. தினப் பணியாளர்களுக்கும் பொங்கல் இனாம் வழங்குதல்;

6. மூன்றாம் நிலை பணி ஆய்வாளர்களுக்கு ரூ. 610 அடிப்படை ஊதியம் வழங்குதல்.

**1. மக்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அதிக நிதி ஒதுக்கீடு செய்தல்:**

இந்தப் பிரச்சினையை சமாளிக்க அரசு எல்லாவித நடவடிக்கைகளும் எடுத்து வருகின்றது. வாரியம் ஏராளமான தொகையை குடிநீர்த் திட்டங்களுக்கு செலவழித்து வருகிறது. 1986-87 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டின்படி, வாரியம் பல்வேறு குடிநீர் வடிகால் திட்டங்களுக்கு ரூ. 7,965.26 இலட்சங்கள் செலவிட உத்தேசித்துள்ளது. மேலும் அரசு வறட்சி நிவாரண பணிகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்கிறது. இதிலிருந்து அரசும் வாரியமும் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்குத் தங்களால் இயன்ற எல்லா முயற்சிகளையும் செய்து வருவது தெளிவாகும்.



1987 ஏப்ரல் 20] [திரு. க. இராசாராம்]

**2. நிலையாணை ஏற்படுத்துதல்:**

வாரியம் ஒரு தொழில் நிறுவனமா இல்லையா என்பது நீண்ட நாட்களாகக் கருத்து வேறுபாட்டிலுள்ளது. இது குறித்து வாரிய மின் பணியாளர் ஒருவர் வாரியப் பணியாளர் ஒழுங்கு முறை விதிகள் மற்றும் வாரியப் பணியாளர் ஒழுங்கு முறை, மற்றும் மேல் முறையீட்டு விதிகளில் சில ஷரத்துகளை எதிர்த்தும், தான் ஒப்புதலளிக்கப்பட்ட நிலையாணைகளினால்தான் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றும், மேற்குறிப்பிட்ட விதிமுறைகளின்படி அல்லவென்றும், சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளார். தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியப் பணியாளர் ஒழுங்குமுறை விதிகளில், பணியாளர் எவரும் தொழிற் சங்கங்களில் சேருவதைத் தடை செய்யும் விதியை எதிர்த்து, தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியப் பணியாளர் ஒன்றியமும் ஒரு ரிட் மனுவைத் தாக்கல் செய்துள்ளது. மேற்படி இரு ரிட் மனுக்களையும் உயர்நீதிமன்றம் 28—7—1986 அன்று இறுதியாக முடிவு செய்தது. உயர்நீதி மன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக வாரியம் மேல் மனு தாக்கல் செய்துள்ளது. இது தற்போது நிலுவையிலுள்ளது. இந்த ரிட் மேல் மனு மீது இறுதியாகத் தீர்ப்பளிக்கப்பட்ட பின்பே வாரியத்திற்கென தனி நிலையாணைகள் ஏற்படுத்துவது பற்றி பரிசீலிக்கப்படும்.

**3. தினப் பணியாளர்களை நிரந்தரப்படுத்துதல்:**

வாரியத்திலுள்ள காலி இடங்களுக்கு வெளியிலிருந்து புதிய நபர்களைத் தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக, வேலை வாய்ப்பு நிறுவனத்தின் மூலம் பணியிலமர்த்தப்பட்ட தினப் பணியாளர்களையே அவர்களின் கல்வித் தகுதியின் அடிப்படையில் நியமிக்கலாம் என்று வாரியம் முடிவு செய்துள்ளது. 19—3—1987 நாளிட்ட வாரிய ஆணையில் சிறுவாணி குடிநீர்த் திட்டத்தின்கீழ் பணியாற்றி வந்த 57 தினப் பணியாளர்களைத் திட்டப் பராமரிப்புக்

கென உருவாக்கப்பட்ட பல்வேறு நிரந்தர பதவிகளில் பணியிமைர்த்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. 20—2—1987 அன்று நடந்த வாரிய இயக்குநர் குழு கூட்டத்தில் சுமார் 160 ஐ.டி.ஐ. கல்வி பயின்றவர்களை ஆழ் துளையிடும் கருவிகளில் உதவியாளராகப் பணியிலமர்த்த முடிவு செய்யப்பட்டது. மேலும் 19—3—1987-ல் நடைபெற்ற வாரிய இயக்குநர் குழு கூட்டத்தில் எட்டாம் வகுப்புக்கும் குறைந்த கல்வித் தகுதியுடைய சுமார் 80 நபர்களை ஆழ்துளைக் கருவிகளில் காவலராகப் பணியில் அமர்த்த முடிவு செய்யப்பட்டது. மேலும் தற்போதுள்ள சுமார் 200 அலுவலக உதவியாளர் பதவிகளில் தினப் பணியாளர்களையே நியமிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதுபோன்ற டிப்ளமா தகுதி பெற்றுள்ள 32 நபர்களை தொழில் நுட்ப உதவியாளர் பதவியிலும், ஒரு பட்டதாரியை இளநிலை உதவியாளர் பதவியிலும் நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தொழில் நுட்பக் கல்வித் தகுதியில்லாத இதர நபர்களை எதிர்காலத்தில் உண்டாகும் காலி இடங்களில் நியமிக்கப்படும்.

### 4. போனஸ் வழங்குதல்:

போனஸ் சட்டத்தின் கீழ் போனஸ் வழங்குமாறு வாரியத்தை அறிவுறுத்தக் கோரி பல்வேறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்படாத சங்கங்கள் உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளனர். ஆரம்பத்தில் இவ்வழக்கை விசாரிக்குமுன், தற்காலிக ஆணை மூலம், 31—12—1983-க்குள் ஒரு மாத ஊதியத்தை ஒவ்வொரு ஊழியருக்கும் வழங்குமாறு 15—9—1983 அன்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. மேலும் இவ்வழக்கில் வாதிகள் தோற்றுவிட்டால் போனசாக வழங்கப்பட்ட தொகையை ஊழியர்களின் சம்பளத்தில் ஈடு செய்துகொள்ள உத்தரவிடப்பட்டது. இவ்வுத்தரவிற்கிணங்க ரூ. 1,600-க்கு மேற்படாமல் சம்பளம் வாங்கும் எல்லா ஊழியருக்கும் ரூ. 750-க்கு மேற்படாமல் ஒரு





மாத ஊதியம் இடைக்கால போனசாக 1983 அக்டோபர் மாதத்தில் வழங்கப்பட்டது. 1984 ஆம் ஆண்டும் உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பை எதிர்நோக்கி, எல்லா ஊழியருக்கும் ஒரு மாத ஊதியம் அல்லது ரூ. 750 இதில் எது குறைவோ, அத்தொகையைப் பிடித்தம் செய்யப்படக் கூடிய முன் பணமாக வழங்கப்பட்டது. உயர்நீதிமன்றம் தனது 15—11—1984 தேதிய ஆணையில் போனஸ் சட்டத்தின் பிரிவு 32(ப) (சி)-யின் கீழ் வாரியம் லாப நோக்கத்துக்காக அமைக்கப்படவில்லையாதலால் அதன் ஊழியர்கள் போனஸ் பெறத் தகுதியற்றவர்கள் எனத் தீர்ப்பளித்தது. எனவே ரிட் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. இத்தீர்ப்பை எதிர்த்து சங்கங்கள் ரிட்மேல் மனு தாக்கல் செய்துள்ளன. இவை உயர்நீதி மன்றத்தில் நிலுவையிலுள்ளன.

### 5. தினப் பணியாளர்களுக்குக் கருணைத் தொகை வழங்குதல்:

நிதித்துறையின் ஆணைப்படி தினப் பணியாளர்கள் கருணைத் தொகையைப் பெறத் தகுதியற்றவர்களாதலால் அவர்களுக்குக் கருணைத் தொகை வழங்கப்படவில்லை. தினப் பணியாளர்களுக்கும் கருணைத் தொகை வழங்கலாமா என்கிற வாரியத்தின் கோரிக்கை நிதித் துறையின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

### 6. பணி ஆய்வாளர் மூன்றாம் நிலைக்காக சம்பளத்தை ரூ. 610-ல் நிர்ணயித்தல் :

அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பள விகிதம் வாரிய ஊழியர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. அரசு ஆணைகளின் படி, பணி ஆய்வாளர் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை ஊழியர்களுக்கு அடிப்படை சம்பளம் ரூ. 705—1,230 மற்றும் ரூ. 610—1,075 என ஒப்பளிக்கப்பட்டுள்ளது. பொதுப்பணித் துறையினால் ஒப்பளிக்கப்பட்ட ஊதிய விகிதங்களில், பணி ஆய்வாளர் மூன்றாம் நிலை பதவி இல்லை. இருப்பினும் சங்கத்தின் கோரிக்கை மனு அடிப்படையில், இந்த விஷயம் 1987 பிப்ரவரித் திங்களில் விரிவாக வாரியத்தால் பரிசீலிக்கப்பட்டது.

[திரு. க. இராசாராம்] [1987 ஏப்ரல் 20

மற்றும் சங்கத்தின் சார்பில் வைக்கப்பட்ட மற்ற சில கோரிக்கைகளையும் அதன் நிர்வாகிகளுடன் 1987 பிப்ரவரி திங்களில் தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்தால் விவாதிக்கப்பட்டது. அதன்மீது தொடர் நடவடிக்கை வாரியத்தினால் கவனிக்கப்பட்டு வருகிறது. அக்கோரிக்கைகள் பற்றிய சிறு குறிப்புகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன :—

(1) **சங்க நிர்வாகிகளுடன் விவாதிக்கப்படுபவைகள் சம்பந்தமாக** :—வாரியம் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுடன் மட்டும் தான் விவாதிக்கப்பட வேண்டும் என்றாலும் கூட அங்கீகரிக்கப்படாத சங்கங்களுடன் அவர்கள் விரும்பிய காலத்தில் பேச்சு வார்த்தை நடத்த வாரியம் மறுத்ததில்லை.

(2) **வேலைநிதி ஊழியர்களில் 6 வருடங்கள் பணி முடித்த தினக்கூலி பணியாளர்கள் முறைப்படுத்தப்பட்ட பணிக்கு கொண்டு வருதல் சம்பந்தமாக** :—5 வருடங்கள் பணிமுடித்த வேலைநிதி ஊழியர்களை முறைப்படுத்தப்பட்ட பணிக்கு வாரியம் கொண்டு வந்துள்ளது. அதுபோல தேவையின் அடிப்படையில் வெளியிடங்களிலிருந்து ஆட்களை எடுக்காமல் முறைப்படுத்தப்பட்ட பணிக்கு தினக்கூலி அடிப்படையிலான பணியாளர்கள் எடுக்கப்படுகின்றனர். என்.எம்.ஆர். பணியாளர்களுக்கு தொழிற் சட்ட அடிப்படையில் பாதுகாப்பு கொடுக்கும் பொருட்டு எண்ணற்ற வழக்குகளை வாரியம் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. இவைகள் யாவும் உயர்நீதி மன்றத்தில் நிலுவையாக உள்ளன. இருப்பினும் தினக்கூலி அடிப்படையிலான பணியாளர்கள் முறைப்படுத்தப்பட்ட பணிக்கு காலி இடங்கள் வரும்பொழுது எடுக்கப்படுகிறார்கள்.

(3) **சமமான பணிக்கு சமமான ஊதியம் அமுல்படுத்துதல் குறித்து** :—வாரியத்திற்கு என தனியான ஊதியக் கொள்கை வைத்துக் கொள்ளவில்லை. அரசு ஊழியர்களுக்கு அவ்வப்பொழுது வழங்கப்படும் ஊதியம் மற்றும் பிற சலுகைகள் வாரிய ஊழியர்களுக்கும் அனுமதிக்கப்படுகிறது.



1987 ஏப்ரல் 20] [திரு. க. இராசாராம்]

(4) **மாநில அளவில் பணிமூப்புப் பட்டியல் தயாரித்தலும், பணியாளர்களை நியமித்தலும்** :—நிர்ணயிக்கப்பட்ட பணிமூப்பு பட்டியல் முடிவுக்கு கொண்டு வரும் நிலையில் உள்ளது. மாநில அளவிலான பணிமூப்பு பட்டியல் மற்றும் தகுதி அடிப்படையில் காலியிடங்கள் நிரப்பப்படுகின்றன.

(5) **அனைத்துப் பணியாளர்களுக்கும் விடுப்பு, வார விடுப்பு மற்றும் 8 மணிநேர வேலை வழங்குதல் குறித்து** :—அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் விடுப்பு சலுகைகள் எல்லா முறைபடுத்தப்பட்ட பணியாளர்களுக்கும் பொருந்தும். தினக்கூலி ஊழியர்களுக்கு எந்தவிதமான விடுப்புகளும் பெற தகுதியில்லை.

(6) **மின்பணியாளர் மற்றும் பொருத்துபவர்களுக்கு சீருடை மற்றும் கருவிகள் வழங்குதல் குறித்து** :—இதுபற்றி, பிற நிர்வாக ஆணைகளின் அடிப்படையில் விரிவாக பரிசீலிக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

(7) **காலியிடங்களை நிரப்புதல் குறித்து** :—வாரியத்தில் காலியாக உள்ள அனைத்துப் பதவிகளையும் நிரப்ப ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(8) **கீழ்நிலையில் பணிபுரிபவர்களைக் கொண்டு இளநிலை உதவியாளர்கள் பதவிகளை நிரப்புதல் குறித்து** :—அடிப்படை கல்வித் தகுதிகளுடன் 5 வருடங்கள் பணி முடித்திருந்து, சிறப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் இளநிலை உதவியாளர்கள் பதவிக்கு தகுதியானவர்கள். தலைமைப் பொறியாளர் அவர்களிடமிருந்து பட்டியல் பெற்று அடுத்த சிறப்புத் தேர்வு நடைபெறவுள்ளது.

(9) **89 நாட்கள் வேலை செய்த தினக்கூலி பணியாளர்களை வேலை நீக்கம் செய்தல் குறித்து** :—முறைப்படுத்தப்பட்ட பதவிகள் இல்லாத பணிகளுக்கு தினக்கூலி பணியாளர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள். அவர்களை முறைபடுத்தப்பட்ட பணிக்கு கொண்டுவர வாரியத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[திரு. க. இராசாராம்] [1987 ஏப்ரல் 20

(10) **கூடுதல் பஞ்சப்படி வைப்பு தொகைகளை திரும்ப வழங்குதல் குறித்து** :—எங்கெங்கு நிலுவையிலுள்ளதோ அங்கெல்லாம் கணக்குகளை முடிக்க அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகிறது.

(11) **ஊழியர்களுக்கு தேர்வு நிலை வழங்குதல் குறித்து** :—அரசு ஆணையின் அடிப்படையில் வாரியத்தில் தேர்வுநிலை வழங்கப்படுகிறது.

(12) **குடும்பநல நிதியை ரூபாய் 10,000-ல் இருந்து ரூபாய் 20,000-க்கு உயர்த்துதல் குறித்து** :—இந்த விஷயத்தில் ஒரு முடிவுக்கு வந்து 19—3—1987 அன்று நடைபெற்ற வாரிய கூட்டத்தில் பரிசீலனைக்கு வைக்கப்பட்டது. இந்த பிரச்சினை தள்ளி வைக்கப்பட்டுள்ளது. விரைவில் வாரியத்தின் ஆணை வழங்கப்படும்.

(13) **இயந்திர வட்டத்தில் உள்ள துளைக்கருவிகளில் பணி செய்யும் அனைத்துப் பணியாளர்களையும் முறைப்படுத்தப்பட்ட பணிக்கு கொண்டு வருதல் குறித்து** :—1987 பிப்ரவரித் திங்களில் நடந்த வாரியக் கூட்டத்தில் இயந்திர வட்டத்தில் உள்ள துளைக் கருவிகளில் பணி செய்யும் ஊழியர்களை முறைப்படுத்தப்பட்ட பணிக்கு கொண்டுவர தீர்மானிக்கப்பட்டது.

(14) **நேரடியாக தேர்வு செய்யப்பட்ட வேலைநிதி ஊழியர்களை முறைப்படுத்தப்பட்ட பணிக்கு கொண்டு வருதல் குறித்து** :—வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் வராத 81 பணியாளர்களை பணியில் அமர்த்தியதை பின்னேற்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. வாரியத்தின் மற்றொரு செயற்குறிப்பு பரிசீலனையிலுள்ளது.

(15) **பிரிவு அலுவலகம் உள்ள இடததில் அந்தப் பிரிவின் தொழிலாளர்களுக்கு தலைமை இடம் அமைத்தல்** :—வேலைகள் நடைபெறுவதை பொறுத்து அந்த இடத்தில் தலைமை இடம் அமைக்கப்படுகின்றது.

(16) **வாரிய ஆணை எண் 512, நாள் 19—12—1985-ல் வழங்கப்பட்ட ஆணையினை, எல்லா வேலை வைப்பு நிதி மூன்றாம் நிலை ஊழியர்களுக்கு அமல் செய்தல்** :—வீராணம் திட்டத்தில் பணியாற்றுபவர்கள் மூன்றாம் நிலை வேலை வைப்பு நிதி ஊழியர்கள் என்ற பெயரில் இரண்டாம் நிலை வேலை வைப்பு நிதி



1987 ஏப்ரல் 20] [திரு. க. இராசாராம்]

ஊழியர் சம்பள விகிதம் பெறுகின்றனர். ஆகையால் அவர்களுக்கு ரூ. 610—1,075 என்று இரண்டாம் நிலை வேலை வைப்பு நிதி ஊழியர் சம்பள விகிதம் வழங்கப்பட ஆணையிடப்பட்டது. இதனைப்போல் இரண்டாம் நிலை வேலை வைப்பு நிதி ஊழியர் சம்பளம் பெறுகின்ற மூன்றாம் நிலை ஊழியர்கள் இருப்பின் அவர்களுக்கும் 610—1,075 சம்பள விகிதம் வழங்குவது குறித்து வாரியத்தால் பரிசிலிக்கப்படும்.

(17) **தினப் பணியாளர்களுக்கு கருணைத் தொகை வழங்குதல்** :—தினக்கூலி தொழிலாளர்களுக்கு கருணைத் தொகை வழங்குவது பற்றிய செயற்குறிப்பு நிதித் துறையின் பரிசீலனையிலுள்ளது.

(18) **ஊர்தி ஓட்டுநர் பதவிக்கு தினக்கூலி தொழிலாளர்களையும் பரிசீலித்தல்** :—ஊர்தி ஓட்டும் உரிமம் உள்ள கீழ்நிலை பதவிகளில் உள்ளவர்களைக் கொண்டு ஓட்டுநர் பதவியினைப் பூர்த்தி செய்ய தலைமைப் பொறியாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(19) **தலைமையகத்தில் உள்ள ஊழியர்கள் 13—9—1985 முதல் 19—9—1985 வரை வேலைக்கு வராத காலத்தை வரன்முறைப்படுத்துதல்** :—அந்த பணியாளர்கள் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தை மண்டலமாக்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். அவர்கள் வேலைக்கு வாராததால் அந்தக் காலத்தை சம்பளமற்ற விடுப்பாக மாற்றப்பட்டு வரன்முறைப் படுத்தப்பட வேண்டும். தலைமைப் பொறியாளரிடமிருந்து சில விபரம் பெற்றவுடன் வாரியத்தால் வரன்முறை செய்யப்படும்.

(20) **வரன்முறைப்படுத்தப்படாத அனைத்து வேலை நிதி ஊழியர்களுக்கு வைப்பு நிதிக்கு பிடித்தம் செய்தல்** :—வரன்முறைப்படுத்தப்படாத வேலைநிதி ஊழியர்கள் வைப்புநிதி திட்டத்தில் சேர தகுதி இல்லை.

(21) **வாரிய ஊழியர்களுக்கு வாடகை பிடித்தமற்ற இலவச குடியிருப்புகள் வழங்குதல்** :—அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட விகிதத்தின்படி குடியிருப்புகளில் உள்ள ஊழியர்களுக்கு வாடகை பிடித்தம் செய்யப்படுகிறது.

[திரு. க. இராசாராம்] [1987 ஏப்ரல் 20

**(22) எல்லா ஊழியர்களுக்கும் பதவி உயர்வு ஏற்படுத்துதல் :**—ஊழியர்களின் கல்வித் தகுதி மற்றும் பதவிகள் உள்ளமை இவைகளைக் கருத்தில் கொண்டு பதவி உயர்வுகள் வழங்கப்படுகின்றன.

**(23) கல்வித் தகுதியின்படி சம்பளம் நிர்ணயம் செய்யும் ஆணையை ரத்து செய்தல் :**—அரசு நிலை ஆணை எண் 740, நிதி (சம்பள பிரிவு), நாள் 14—8—1986 மற்றும் அரசு நிலை ஆணை எண் 762, நிதி, நாள் 28—8—1986-ன்படி அரசு மாநில பொதுப் பணித் துறையில் உள்ள சில தொழில்நுட்ப பதவிகளுக்கு சம்பளங்களை மாற்றி அமைத்துள்ளது. எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற்ற ஐ.டி.ஐ. சான்றிதழ் உள்ளவர்களுக்கு ரூ. 610—1,075 சம்பள விகிதமும், எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெறாத ஐ.டி.ஐ. சான்றிதழ் உள்ளவர்களுக்கு ரூ. 555—970 சம்பள விகிதமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதே வரன்முறை மற்றும் நிபந்தனைகளின்படி அந்த அரசு ஆணை வாரிய ஊழியர்களுக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.

**(24) வரன்முறைப்படுத்தாத பணி காலங்களுக்கு உரிய பணிக் கொடையினை வைப்பு நிதியில் சேர்த்தல் :**—இந்த கோரிக்கை குறித்து விரிவாக வாரியத்தால் ஆராயப்படும்.

**(25) வரன்முறைப்படுத்தப்படாத பணிக் காலத்தை ஓய்வு ஊதியம் பெற கணக்கிடுதல் :**—அரசு ஊழியர்களுக்கு வரன்முறைப்படுத்தப்படாத பணிக்காலத்தை ஓய்வூதியம் பெறுவதற்கு கணக்கிட ஆணை வழங்கினால் அதனை வாரிய ஊழியர்களுக்கும் வழங்குவது குறித்து கவனிக்க முடியும். தற்போது அக்காலங்களை ஓய்வூதியம் பெறுவதற்கு எடுப்பதில்லை.

**(26) உலக வங்கித் திட்டங்களில் கம்ப்யூட்டர் பயன்படுத்தக் கூடாது :**—இது குறித்து பரிசீலிக்கப்படும்.

**(27) வாரிய ஊழியர்களுக்கு சம்பள மாற்றம் குறித்து யூனியனின் பரிந்துரைகளை கணக்கிடல் :**—ஏற்கனவே கூறப்பட்டபடி, வாரியம் தனியாக சம்பளக் கொள்கை வைக்கவில்லை. அரசு ஆணைகள் வாரிய ஊழியர்களுக்கு நீட்டிக்கப்படுகிறது.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, இந்த அறிக்கை ரொம்ப பெரிய அறிக்கைதான். ஆனால் கேள்வி இரண்டுதான் கேட்க முடியும். அந்த நிலைமையில் இந்த உண்ணாவிரதம் நடக்கும்பொழுது இந்த மன்றத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள்



1987 ஏப்ரல் 20] [திரு. கு. ரமணி]

திரு. வி. பி. சிந்தன் அவர்களும், திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களும் நமது அமைச்சரவர்களை நேரில் சந்தித்துப் பேசியபோது முக்கியமான ஒரு விஷயத்தை வற்புறுத்தினார்கள். பல வருஷங்களாக, 8, 10 வருஷங்களாக, அங்கே வேலை செய்யும் தினக் கூலிகளாக இருக்கக்கூடிய ஊழியர்களையும், அதுபோன்று சர்வீசானவர்களையும் முறையாக நிரந்தரம் செய்ய வேண்டும். 6 மாத காலம் சர்வீஸ் ஆனவர்களையும் நிரந்தரமாக்க வேண்டுமென்ற கோரிக்கைகளை அமைச்சரவர்கள் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். அந்தக் காரியம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அதை நிறைவேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, அறிக்கையில் எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறோம். தினக் கூலி ஊழியர்களை நிரந்தரப்படுத்துவதில் இருக்கிற சிரமங்களையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். 57 தினப் பணியாளர்களைத் திட்டப் பராமரிப்புக்கென உருவாக்கப்பட்ட பல்வேறு நிரந்தரப் பதவிகளில் பணியிலமர்த்த ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அத்தோடு 160 ஐ.டி.ஐ. கல்வி பயின்றவர்களை ஆழ்துளையிடும் கருவிகளில் உதவியாளராகப் பணியிலமர்த்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் 80 நபர்களை ஆழ்துளை கருவிகளில் காவலராகப் பணியிலமர்த்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது. சிலபேர் நிரந்தரப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். பலர் இன்னும் நிரந்தரப்படுத்தப்படவில்லை.

**திரு. கு. ரமணி:** தலைவா அவர்களே, அமைச்சரவர்கள் இப்போது கொடுத்துள்ள விவரங்கள் எல்லாம் விவாதத்திற்குரிய விஷயங்கள். வேலை காலியிருக்கும்பொழுது அங்கே ஏற்கனவே பணியிலிருப்பவர்களை நிரந்தரமாக்குவதற்குப் பதிலாக வெளியிலிருந்து ஆட்களை எடுப்பது சரியல்ல. அதைத் தவிர்க்க வேண்டும். அந்தக் காரியங்களிலே எல்லாம் விவாதம் செய்து முறையாக ஒழுங்குபடுத்தி, அந்தக் கோரிக்கைகளை ஒரு முடிவிற்குக் கொண்டுவர, அந்த வாரியத்தைச் சார்ந்த அனைத்து சங்கங்களும், ஒன்று, இரண்டு சங்கங்கள் மட்டுமல்ல, எல்லா சங்கங்களின் பிரதிநிதிகளையும் அழைத்துப் பேசி முடிவிற்கு வர உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா? எந்தக் காலத்திற்குள் செய்வார்கள் என்று அறிவித்தால், மிக நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, இந்த அரசு பேச்சுவார்த்தையில் நம்பிக்கையுள்ள அரசு. ஆகவே அவர்களை அழைத்துப் பேசுவதில் எந்தத் தயக்கமும் கிடையாது. பேசி ஒரு நல்ல முடிவு காணலாம்.

## (இ) மதுவிலக்கு அமலால் சேலம் மாவட்ட வருவாய் அலகில் சிலர் பணிநீக்கம்.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வருவாய்த் துறை பிரிவின்கீழ், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 1984 ஆம் ஆண்டு தொகுதி நான்கில் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி வந்த இளநிலை உதவியாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

தமிழ்நாட்டில் மதுவிலக்கு அமுல்படுத்தப்பட்டதால் சில மாவட்டங்களில் பணியிடம் காலியின்மையால் ஒரு சிலர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதன் விளைவாக சேலம் மாவட்ட வருவாய் அலகில் பணிபுரிந்துவந்த 79 இளநிலை உதவியாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டனர். இந்த 79 நபர்களில் 8 பேர்கள் தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் சேலம் மாவட்ட வருவாய் அலகில் 1984-ல் பணியமர்த்தப்பட்டு பின்பு பணியிடமின்மையால் பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள். இவர்களை வேறு துறைகளுக்கு மறு ஒதுக்கீடு செய்ய தமிழ்நாடு தேர்வாணையம் நடவடிக்கை எடுத்து வருகிறது. மீதமுள்ள 71 பேர்கள் 22—9—1984 நாளிட்ட பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அரசாணை எண் 996-ன்படி சேலம் மாவட்ட வருவாய் அலகில் பணியமர்த்தப்பட்டு பின்பு பணியிடமின்மையால்





மறு ஒதுக்கீடு செய்ய தமிழ்நாடு தேர்வாணையத்திற்கு தெரிவிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட 71 பேர்களுக்கு அரசே மறு ஒதுக்கீடு செய்யவேண்டும் என தமிழ்நாடு தேர்வாணையம் தற்போது கூறியுள்ளதால் இவர்களை வேறு துறைகளில் ஒதுக்கீடு செய்ய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**திரு. செ. செம்மலை:** தலைவர் அவர்களே, பணிநீக்கம் செய்யப்பட்ட இவர்களுக்கு பல்வேறு துறைகளில் ஒதுக்கீடு செய்ய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற செய்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் அளிக்கக்கூடியதாய் நிச்சயம் இருக்கும். 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேர்வாணைக் குழு வால பணியிலமர்த்தப்பட்ட ஜூனியர்ஸ் இன்றைக்கு பணியில் தொடர்ந்து இருந்து வருகிற நிலையில், 1984 ஆம் ஆண்டு பணியிலமர்த்தப்பட்ட சீனியர்ஸ்ஆன இவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டு இருப்பது உள்ளபடியே பரிதாபத்திற்குரிய ஒன்று. அத்தோடு அவர்களுக்கு இப்போது 'பிரேக் ஆஃப் சர்வீஸ்' ஏற்பட்டிருக்கிறது. எனவே பணியிலமர்த்தப்பட்ட பிறகாவது அவர்களுக்கு இது 'கன்டினியூவஸ் சர்வீசாக' ட்ரீட் செய்யப்படுமா? அவர்களுடைய 'சீனியாரிட்டி' பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புவதோடு, இன்றைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, 7, 8 மாதங்கள் ஓடி விட்டன. அவர்களுக்கு விரைவான நியமனம் கிடைக்கும் வகையில் அரசு பார்த்துக்கொள்ளுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இவர்களுக்கு மறு ஒதுக்கீடு செய்யும்படியாக தேர்வாணையைக் கேட்டுக்கொண்டோம். தேர்ந்தெடுக்கின்ற வேலை தான் தங்களுக்கு தவிர, மறு ஒதுக்கீடு அரசே செய்ய வேண்டும் என்று அவர்கள் சொல்லிவிட்டதன் காரணமாக இப்பொழுது மறு ஒதுக்கீடு செய்கின்ற பணியை அரசு மேற்கொண்டிருக்கிறது. ஆனால் அவர்களுடைய பணி விதிகள் மற்றவைகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்துத்தான், அவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டபோது அவர்கள் புரோபேஷனில் இருந்தார்களா அல்லது பெர்மனன்ட்டாக ஆனவர்களா என்ற வகைகளை எல்லாம் பார்த்து அவர்களுடைய பணி மூப்பு நிலை மற்ற

வைகள் எல்லாம் ஆராயப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற கருத்துக்களை நினைவிலே வைத்து, சட்டப்படி, விதிப்படி எதைச் செய்ய இயலுமோ அதை அரசு செய்ய முன்வரும்.

## (ஈ) அம்மன்பேட்டையிலுள்ள நவீன அரிசி ஆலை கழிவுநீரால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம் அம்மன் பேட்டையில் அமைந்துள்ள தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் நவீன அரிசி ஆலையில் இருந்து வெளியேறும் கழிவு நீரால், பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் ஏற்படும் விவசாயப் பயிர் பாதிப்பு, குடிநீர் பாதிப்பு மற்றும் சுற்றுப்புற சுகாதார சீர்கேடு ஆகியவற்றால் அப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

### அறிக்கை.

நவீன அரிசி ஆலையானது தஞ்சாவூர் மாவட்டம் அம்மன் பேட்டை கிராமத்தில் அமைந்துள்ளது. இந்த ஆலை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் பொறுப்பில் உள்ளது. இவ்வாலையில், நாளொன்றுக்கு 50 டன் புழுங்கல் அரிசி உற்பத்தி ஆகிறது. நெல் இரும்புத் தொட்டிகளில் ஐந்து மணி நேரத்திற்கு 70 டிகிரி சென்டிகிரேடு வெப்ப அளவில் ஐந்து மணி நேரம் ஊற வைக்கப்படுகிறது. இதற்குப் பின் கழிவுநீர் வெளியேற்றப்பட்டு நெல் நீராவியின் மூலம் அவிக்கப்படுகிறது. அவிக்கப்பட்ட நெல் வெப்பக் காற்று மூலம் உலர வைக்கும் இயந்திரத்தில் ஐந்து மணி நேரம் உலர வைக்கப்படுகிறது. உலர்த்தப்பட்ட நெல் அரவை இயந்திரம் மூலம் அரைக்கப்பட்டு அரிசியாக்கப்படுகிறது. ஊற வைக்கும் தொட்டியிலிருந்து வெளியேற்றப்பட்ட கழிவுநீர் ஆலையின் தொழிற்சாலைக் கழிவு நீராகும். தொழிற்சாலை நாளொன்றுக்கு 80,000 லிட்டர் தண்ணீரை உபயோகித்து 60,000 லிட்டர்கள் தொழிற்சாலைக் கழிவு நீரை வெளி விடுகிறது.





தொழிற்சாலைக் கழிவு நீர் மஞ்சள் நிறமாகவும், உயிர் இரசாயன உயிரகத் தேவை உள்ளதாகவும், மிதக்கும் திடப் பொருள்கள், கரையாத திடப் பொருட்களையும் கொண்டுள்ளது. சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் நிலைகளிலோ அல்லது நிலத்திலோ வெளியேற்றப்படும்பொழுது நெடியும், முடை நாற்றத்தையும் ஏற்படுத்துகிறது.

4—3—1987 அன்று இத்தொழிற்சாலையைப் பார்வையிட்ட பொழுது தொழிற்சாலையிலிருந்து 600 மீட்டர் தொலைவில் ஓடும் வயலூர் வாய்க்காலில் ஒரு நிலக் கால்வாய் மூலம் வெளியேற்றப் படுவது தெரிய வந்தது. அவ்வப்பொழுது இத்தொழிற்சாலைக் கழிவு நீர் விவசாயிகளால் வயலுக்குத் திருப்பப்பட்டு பாசனம் செய்யப்படுகிறது.

1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 25 ஆவது பிரிவின்படி அன்றாடக் கழிவு நீர்/தொழிற்சாலை கழிவு நீரை வெளியிட வாரியத்தின் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளது. இதற்கு ஒப்புதல் இதுவரை வழங்கப்படவில்லை. தொழிற்சாலை, கழிவுநீர் சுத்திகரிப்பு பற்றிய கருத்துருவை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. மத்திய அரசில் நிறுவனமான சென்னையில் உள்ள திருவாளர்கள் ரிச்சர்ட்சன் மற்றும் குருடாஸ் (1972) லிமிடெட் கம்பெனியிடம் கழிவுநீர் சுத்திகரிப்பு சம்பந்தமாக கருத்துருவிற்காக அணுகியுள்ளதாக இவ்வாலை தெரிவித்துள்ளது. தொழிற்சாலைக்கு அனுமதி வழங்கும் போது வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைகளுக்கேற்ப சுத்திகரிப்பு செய்து கழிவு நீரை வெளியிட வேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதி வழங்கப்படும். வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

திரு. எஸ். இராசாராமன்: தலைவர் அவர்களே, இந்த கழிவு நீரால் அந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாய நிலங்கள் எல்லாம் பாதிக்கப்படுகின்றன. இந்த அறிக்கையிலே 80,000 லிட்டர் தண்ணீர் தினசரி உபயோகப்படுத்தப்படுவதாக குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். அந்த நிலம் எல்லாம் இன்று பாழ்படுவதோடு மட்டுமல்லாமல் அந்தப் பகுதியில் இருக்கின்ற குடிநீர் எல்லாம்—அது ஃபில்ட்டர் பாயிண்ட்டாக இருந்தாலும் அல்லது கிணறுகளாக இருந்தாலும்—குடிப்பதற்கு உபயோகம் அற்ற அளவிலே இருப்பதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, அரசு அறிந்துதான் அந்த ஆலையை வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அந்த ஆலைகூட மத்திய அரசு நிறுவனமான சென்னையில் உள்ள திருவாளர்கள் ரிச்சர்ட்சன் அண்டு குருடாஸ் லிமிடெட் கம்பெனியிடம் கழிவுநீர் சுத்திகரிப்பு சம்பந்தமாக ஒரு கருத்துருக்கு அணுகியுள்ளதாக தெரிவித்திருக்கிறார்கள். அரசு விரைவிலே அந்த சுத்திகரிப்பு ஆலையை நிறுவும்படி வற்புறுத்தும்.

**திரு. எஸ். இராசாராமன்:** தலைவர் அவர்களே, இதுபோன்ற ஆலைகள் ஆரம்பிப்பதற்கு முன்பு அல்லது இதுபோன்று சுத்திகரிப்பு செய்வதற்கு அனுமதி பெற்றதற்கு பின்பு லைசென்ஸ் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, இப்போது வழங்குகின்ற உரிமங்கள் எல்லாம், இவைகள் எல்லாம் போடப்பட்டால்தான் வழங்கி வருகிறோம். ஏற்கெனவே இருக்கின்ற ஆலைகளில்தான் இந்தப் பிரச்சினை வருகிறது. ஏற்கெனவே இருக்கின்ற ஆலைகளில் சுத்திகரிப்பு ஆலையை நிர்மாணிக்க வேண்டும் என்று அரசாங்கம் வற்புறுத்தி வருகிறது.

### (உ.) ஆதி திராவிட மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க டாட்கோ மூலம் காகித ஆலைகள் நிறுவுதல் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் மா. சின்னராசு மற்றும் வே. கு. சின்னசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "தாட்கோவின் மூலம் ஆதி திராவிட மக்களுக்கு வேலையளிக்கும் சிறு காகித ஆலைகள் நிறுவ, கட்டிடங்கள் கட்டப்பட்டும் கதர் வாரியம் இதற்கான இயந்திரங்களைப் பொருத்தும் பணியை முடிக்காததும் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை

1983-84 ஆம் ஆண்டில் சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் 15 கைமுறை காகித அலகுகளை ஆரம்பிக்க அரசாணை எண் 2246, சமூக நலத்துறை, நாள் 3—9—1983-ல் அரசு ஆணை வழங்கியுள்ளது. இதற்காக அரசு ஒரு அலகிற்கு ரூ. 9,46,800 வீதம் 15 கைமுறை காகித அலகுகட்கு ரூ. 1,42,02,000 ஒதுக்கியுள்ளது. கைமுறை காகித அலகுகள் ஆரம்பிக்கப்படவுள்ள இடங்கள் பின்வருமாறு :—

| மாவட்டம் | வட்டம் | அலகு ஆரம்பிக்குமிடம் |
|---|---|---|
| 1 செங்கற்பட்டு | மீஞ்சூர் | கோலூர் |
| 2 பெரியார் | வெள்ளக்கோயில் | மயில்ரங்கம் |
| 3 தென்னாற்காடு | மங்களூர் | தொழுதூர் |
| 4 பெரியார் | கொடுமுடி | வடக்குப்புதுப்பாளையம் |
| 5 தஞ்சை | கொள்ளிடம் | திருமயிலாடி |
| 6 திருச்சி | வேப்பூர் | ஓலைப்பாடி |
| 7 தஞ்சை | தஞ்சாவூர் | நாஞ்சிக்கோட்டை |
| 8 வடாற்காடு | அனக்காவூர் | அனக்காவூர் |
| 9 வடாற்காடு | மாதனூர் | பள்ளிகொண்டா |
| 10 வடாற்காடு | அரக்கோணம் | கோணலம் |
| 11 கோவை | கோவனூர் | பெரியநாய்க்கன் பாளையம் |
| 12 பசும்பொன் முத்துராமலிங்கம் | காரைக்குடி | காமனிவாசல் |
| 13 தருமபுரி | காவேரிப்பட்டினம் | மணியம்பாடி |
| 14 நீலகிரி | கூடலூர் | கூடலூர் |
| 15 மதுரை | அலங்காநல்லூர் | அலங்காநல்லூர் |

[திரு. எ. அருணாசலம்] [1987 ஏப்ரல் 20

2. மேலும் மேற்குறிப்பிட்ட அலகுகளைத் தவிர கீழ்க் குறிப்பிட்ட இடங்களிலும் கைமுறை காகித அலகுகள் ஆரம்பிக்க அரசு ஆணை வழங்கியுள்ளது :—

| | அரசாணை எண் மற்றும் நாள். | அனுமதிக்கப் பட்ட தொகை ரூ. லட்சத்தில் | மாவட்டம் | வட்டம் | அலகு ஆரம் பிக்கும் இடம் |
|---|---|---|---|---|---|
| 1 | 1506 / சமூக நலத் துறை 15.4.1983 (கூட்டமைப் புத் திட்டம்) | 8.89 | வடாற்காடு | நெமிலி | கிழந்துறை |
| 2 | 215, சமூக நலத் துறை நாள் 20.1.83 (சிறப்பு உள் ளடக்கத் திட் டம்) | 7.25 | திருச்சி | கிருஷ்ண தேவராய புரம் | மாயனூர் |
| 3 | 1148, சமூக நலத் துறை நாள் 20.3.82 (சிறப்பு உள்ள டக்கத் திட் டம்) | 7.99 | வடாற்காடு | வந்தவாசி | வந்தவாசி |

3. மேற்கண்ட அலகுகளில், கீழ்க்குறிப்பிட்ட ஆறு அலகுகளுக்கான கட்டிடங்கள் கட்டப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டன :—

1. நாஞ்சிக்கோட்டை
2. ஓலைப்பாடி
3. அனக்காவூர்
4. வந்தவாசி
5. மயில்ரங்கம்
6. மாயனூர்

4. மேலே வரிசை எண் 1 முதல் 5 வரையுள்ள அலகுகளுக்கு இயந்திரங்களை விநியோகம் செய்ய திண்டுக்கல் கோரமண்டல் ஹைட்ராலிக்ஸ் நிறுவனத்திற்கும், வரிசை எண் 6-ல் உள்ள அலகுக்கு கோவை இந்தியா மெட்டல் மற்றும் அலாய்



1987 ஏப்ரல் 20] [திரு. எ. அருணாசலம்]

நிறுவனத்திற்கும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் ஆணை வழங்கப்பட்டுள்ளது. ஓலைப்பாடி, அனக்காவூர் மற்றும் வந்தவாசி ஆகிய காகித அலகுகளுக்கான இயந்திரங்களை விநியோகம் செய்து, இயந்திரங்களும் அலகில் பொருத்தப்பட்டு விட்டன. மின் இணைப்பு கிடைக்கப்பெற்றதும், இவ்வலகுகளை ஆரம்பிக்க தயார் நிலையில் உள்ளது. மேலும், இந்நிறுவனம் நாஞ்சிக்கோட்டை அலகிற்கு இயந்திரங்களை விநியோகம் செய்துள்ளது. இயந்திரங்கள் அலகில் பொருத்தும் பணி நடை பெற்றுக்கொண்டு வருகிறது. இயந்திரங்கள் அலகில் பொருத்தியதும் மும்முனை மின் இணைப்பு பெற்று இவ்வலகு ஆரம்பிக்கப்படும். மேலும் இந்நிறுவனம், மயில்ரங்கம் அலகிற்கு மோட்டார்கள் மட்டும் விநியோகம் செய்துள்ளது. இயந்திரங்களை விநியோகம் செய்ய நிறுவனம் கோரப் பட்டுள்ளது. மாயனூர் கைமுறை காகித அலகிற்கு இயந்திரங்களை விநியோகம் செய்ய கோவை இந்திய மெட்டல் மற்றும் அலாய் நிறுவனத்திற்கு ஆணை வழங்கியதில், அந்நிறுவனம் இன்னும் இயந்திரங்களை விநியோகம் செய்ய வில்லை. இயந்திரங்களை உடன் விநியோகம் செய்யும்படி கேட்டு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

5. தற்போது பெரியநாய்க்கன்பாளையம், திருமயிலாடி மற்றும் கீழந்துறை அலகுகளுக்கான கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு விட்டதினால் மேற்கண்ட மூன்று அலகுகளுக்கும் இயந்திரங்களை பம்பாய் கதர் ஆணைக் குழுவிடமிருந்து கொள்முதல் செய்ய விவரங்கள் கோரப்பட்டுள்ளன. வடாற்காடு மாவட்டம் பள்ளிக்கொண்டா மற்றும் கோணலம் ஆகிய அலகுகளுக்கு கட்டிடங்கள் கட்டிமுடிக்கப்பட்டுவிட்டன. ஆனால் இவ்விடங் களில் போதிய தண்ணீர் வசதி கிடைக்காததினால் அவ்விடங்களில் கைமுறை காகித அலகினை துவங்குவதற்கு பதிலாக பள்ளிக்கொண்டாவில் அலுமினியம் பாத்திரம் தயாரிக்கும் அலகும், கோணலத்தில் இரும்பு சாமான்கள் தயாரிக்கும் அலகும் ஆரம்பிக்க சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகிறது.

[திரு. எ. அருணாசலம்] [1987 ஏப்ரல் 20

6. மீதமுள்ள கீழ்க்காணும் ஏழு அலகுகளின் செயலாக்கத்தின் முன்னேற்றம் கீழ்க்கண்டவாறு உள்ளது :—

(1) **கோவூர்** :—கோவூரில் கைமுறை காகித அலகினை ஆரம்பிக்க போதுமான வாய்ப்புகள் இல்லாததனால் இவ்வலகினை நெய்தவாயலில் இருக்கும் ரெட்டிப்பாளையம் தேயாழி தறி அலகிற்கு கட்டப்பட்ட கட்டிடத்தில் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(2) **தொழுதூர்** :—இவ்வலகினை எங்கு ஆரம்பிப்பது என்பது குறித்து இரு கிராமத்தாரிடையே கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டு உயர்நீதி மன்றத்தில் வழக்கு நிலுவையாக உள்ளதால் கட்டிடம் கட்டும் பணி தாமதப்படுத்தப்பட்டுள்ளது.

(3) **வடக்கு புதுப்பாளையம்** :—கட்டிடம் கட்டுவதற்கான இடத்தில் பிரவேசித்துக் கட்டிடம் கட்ட, சென்னை நிலம் மற்றும் நிர்வாக சிறப்பு ஆணையரின் அனுமதி வாரியத்தால் கோரப்பட்டுள்ளது. அவரது அனுமதி கிடைக்கப்பெற்றதும் கட்டிடம் கட்டும்பணி துவக்கப்படும்.

(4) **மணியம்பாடி** :—கட்டிடம் கட்ட திட்டம் மற்றும் மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு தாட்கோ செயற்பொறியாளரால் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(5) **கழனிவாசல்** :—இவ்வலகினை கண்டனூர் கிராமத்தில் இலவசமாக கிடைத்த 30 ஏக்கர் நிலத்தில் கட்டிடம் கட்ட தாட்கோ நிர்வாக இயக்குநருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

(6) **கூடலூர்** :—கூடலூரில் ஆரம்பிக்க தேவையான வாய்ப்புகள் இல்லாததினால் இவ்வலகினை தஞ்சை மாவட்டம் திருப்பாட்சிபுரம் நேபாளி தறி அலகிற்கான கட்டிடத்தில் ஆரம்பிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(7) **அலங்காநல்லூர்** :—மதுரை மாவட்டம் கப்பலூரில் உள்ள தனியாருக்குச் சொந்தமான கைமுறை காகித தொழிற்சாலையை வாங்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



1987 ஏப்ரல் 20]

**திரு. மா. சின்னராசு** : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்திருக்கின்ற இவ்வறிக்கையில் 1983-84-ம் ஆண்டில் சிறப்பு உள்ளடக்க திட்டம், க்ளஸ்டர் புரோக்ராமின்கீழ் 15 காகித ஆலைகளுக்கு இதுபோன்ற அனுமதி வழங்கப்பட்டு, இதுவரை ஒரு ஆலை கூட உற்பத்தியை துவக்கவில்லை என்று தெரிகிறது. ஆகவே, தாட்கோவில் இருக்கின்ற அதிகாரிகள் இதனை முனைப்பாகச் செயல்படுத்த தவறிவிட்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அல்லது கதர் வாரியத்திற்கு இயந்திரங்களைப் பொருத்துகின்ற பணியை ஒப்படைத்ததால் அங்கே காலதாமதம் ஏற்பட்டதா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். இங்கே 11 ஆவது இடத்தில் கோவை மாவட்டத்தில் இருக்கின்ற என்னுடைய தொகுதியில் இருக்கின்ற கோவனூர் என்ற ஊரில் கட்டிடங்கள் முழு அளவு கட்டப்பட்டு விட்டன. கட்டிடப் பணிகள் துவக்கப்படுகின்றபோதே இயந்திரங்கள் பொருத்துவதற்கான உத்திரவும் வழங்கப்பட்டு இருந்தால், டெண்டரும் கோரப்பட்டிருந்தால், அந்தப் பணிகள் இதற்குள் முடிக்கப்பட்டிருக்கும். இனிமேலாவது கால தாமதத்தைத் தவிர்க்கின்ற வகையில் மிக விரைவிலே வேலை வாய்ப்பை அளிக்கின்ற காகிதத் தொழிற்சாலையை உடனடியாகத் திறப்பதற்கான முயற்சியை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டு சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழும், அதேபோல், கிளஸ்டர் ப்ரோக்ராம் திட்டத்தின் கீழும், ஸ்பெஷல் காம்போனென்ட் பிளான் என்ற இரண்டு திட்டங்களின் வாயிலாக 15 காகித ஆலை அலகுகளைத் துவக்குவதற்கு உத்தரவு போடப்பட்டது. அதிலே இப்போது 11 கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. அந்த காகித ஆலை அலகுகள் கோயம்புத்தூரைச் சேர்ந்த அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஒரு கம்பெனியிடம் மெஷினை வாங்குவதற்கு உத்தரவு போட்டிருக்கிறோம். அது கிடைக்கின்றபோது சீக்கிரம் கட்டி முடிக்கப்படும். அதைப்போல், இங்கு மாண்புமிகு

உறுப்பினர் சொன்னதுபோல், கோவைப் பகுதியைச் சேர்ந்த பெரியநாய்க்கன்பாளையத்தில் இயந்திரம் பொருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதைப்போல், அந்த 11 இடங்களிலேயும் இயந்திரம் பொருத்தும் பணியும், மின்சாரம் சப்ளை கொடுக்கின்ற பணியும் நடந்துகொண்டிருக்கின்றன. கூடிய விரைவிலே இயந்திரங்கள் பொருத்தப்பட்டு, அந்த ஒவ்வொரு பகுதிக்கும் அங்கு ஆலைகளை கூடிய விரைவில் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும். அது மட்டுமல்லாமல், சில இடங்களில் இடப் பிரச்சினையாக, நீதிமன்றங்களுக்குச் சென்று தடங்கல் இருப்பதன் காரணமாக தாமதம் ஏற்படுகின்றது. ஆகவே, கூடிய விரைவிலே அந்த இடங்களுக்கு—கட்டிடங்கள் கட்டிய இடங்களில் —அந்த அலகுகள் சீக்கிரம் நிறுவப்படும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. வே. கு. சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கைமுறை காகித அலகு துவங்குவதற்கு பெரியார் மாவட்டத்திலே இரண்டு இடங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. வெள்ளக்கோயில் வட்டம் மயில்ரங்கம பகுதியில் கட்டிடங்கள் கட்டப்பட்டு அதற்குண்டான இயந்திரங்கள் வாங்குவதற்கு ஆர்டர்கள் கொடுக்கப்பட்டும் மின் மோட்டார் மட்டும் அங்கே வழங்கப்பட்டிருக்கிறது. கொடுமுடி வட்டத்திலே இருக்கின்ற வடக்குப் புதுப்பாளையத்திலே இடமே ஆர்ஜிதம் செய்யப்படாமல் இருக்கிறது. அங்கு இருக்கின்ற பகுதிகள் முழுவதும் நஞ்சை நிலங்கள் நிறைந்த பகுதியாக இருப்பதால், அங்கே நிலம் ஆர்ஜிதம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அங்கு புறம்போக்கு நிலங்களும் இல்லை. ஆகவே, அந்த இடத்திலே தனிக்கவனம் செலுத்தி, நஞ்சை நிலமாக இருந்தாலும் ஆர்ஜிதம் செய்ய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? அப்படி முடியவில்லையென்றால், பவானிசாகர் பகுதியில் அரசு பொதுப்பணித்துறை நிலங்கள் நிறைய இருக்கின்றன. அந்த இடத்திற்கு மாற்றியமைத்து துவங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்கள் நலனைக் கருதித்தான் ஒரு ஆலையைத் திறப்பதற்கு, ஒரு அலகுக்கு 9,46,800 ரூபாய் விதம் கிட்டத்தட்ட இந்தத் திட்டத்தின் வாயிலாக ரூ. 1,42,02,000-இல் அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன ஈரோட்டுப் பகுதியைச் சேர்ந்த இடங்களுக்கு—அங்கே மயில்ரங்கம். மாயனூர் போன்ற அந்த இடங்களுக்கு எல்லாம்—சில இடங்களில் இடம் கிடைக்காத சூழ்நிலையால் தாமதம் ஏற்படுகிறது. இடம் கிடைக்கின்ற நேரத்தில் அந்த இடத்தை எடுத்து, அந்தப் பகுதியிலே கட்டிடங்களைக் கட்டி தாட்கோ மூலமாக கட்டிடத்தினைக் கட்டி, கதர் வாரியத்தின் மூலமாக அந்த மெஷினைப் பொருத்துவதற்கு உத்தரவிடப்படும்.

## 4. வரவு-செலவுத் திட்டம், 1987-88—வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

### (அ) கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 29,63,16,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

**திரு. ஆர். செங்காளியப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 29.63.16,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. திருப்பூர் பனியன் தொழிற்சாலைகளில் 95 சதவீதத்திற்கு மேற்பட்ட கம்பெனிகளில் தொழிற்சாலை சட்ட விதிகள்

[திரு. கே. சுப்பராயன்] [1987 ஏப்ரல் 20

அமுல்படுத்தப்படாமல் இருப்பதால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 29,63,16,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மகாலட்சுமி நூற்பாலை மூடப் பட்டுள்ளதால் அவதியுறும் தொழிலாளப் பெருமக்களுக்கு ஏற்படுத்த உள்ள நிவாரணம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 29,63,16,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**(ஆ) கோரிக்கை எண் 44—எழுதுபொருள்-அச்சுத்துறை.**

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 44—எழுதுபொருள்-அச்சுத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 19,31,51,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

(முற்பகல் 11-20)

**திரு. மூ. இராசாங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்ட அரசு அலுவலகங்களுக்குத் தேவையான எழுதுபொருள்களை கும்பகோணம் பகுதியில், அச்சகம் நிறுவி தயாரிப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 44—எழுதுபொருள்-அச்சுத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 19,31,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



1987 ஏப்ரல் 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன் வைக்கப் பெற்றுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை* நான் படித்ததாகக் குறிப்பேட்டில் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

*** திரு. மா. கதிர்வேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற தொழிலாளர் நலத்துறை மானியத்தின் மீதும், அச்சுத் துறை குறித்த மானியத்தின் மீதும் நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இன்றையதினம் தொழிலாளர் நலனைப் பொறுத்தவரையில் பல திட்டங்களை நாம் அறிவித்திருந்தாலும்கூட நடைமுறையில் பார்க்கிறபோது அவைகள் சரியாகச் செயல்படுத்தப்பட்டு, அவை தொழிலாளர்களுக்குப் பலன் அளிக்கிறதா என்று பார்க்கிற போது, இல்லாத நிலை இருக்கிறது என்பதைத்தான் நான் இங்கே உண்மைநிலையை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் உதாரணத்திற்கு என்னுடைய மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் பீடித் தொழிலாளர்கள் நிறைந்த பகுதி; தோல் பதனிடும் தொழிலாளர்கள் நிறைந்த பகுதி; மிகப் பெரிய தொழிற்சாலைகளைக் கொண்ட இராணிப்பேட்டை சிப்காட்டை உள்ளடக்கிய பகுதி. இவ்வாறு ஏறத்தாழ ஒரு லட்சம் தொழிலாளர்கள் வசிக்கிற பகுதி என்னுடைய பகுதி. அப்படிப் பட்ட பகுதியில் தோல் பதனிடும் தொழிலை எடுத்துக் கொண்டால் இங்கே அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது தோல் தொழிற்சாலைகளின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிட்டன என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் நான் வேதனையோடு

* 171-287-ஆம் பக்கங்களில் இணைப்புகள் I, II ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

[திரு. மா. கதிர்வேலு] [1987 ஏப்ரல் 20

ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தோல் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் அவைகள் நடைமுறையில் செயல்படுகிற நிலையைப் பார்க்கிறபோது உண்மையிலேயே அங்கே இருக்கிற முதலாளிகள் தொழிலாளர்களைச் சுரண்டுகிற நிலைதான் இருக்கிறது. ஆறு ரூபாய் அல்லது எட்டு ரூபாய் தினக் கூலி என்ற பெயரில் அட்டென்டென்ஸ் ரெஜிஸ்டர் கூட மெயின்டெயின் பண்ணாமல் தொழிலாளர்கள் நிரந்தரப்படுத்தப்படாமல் தொடர்ந்து பல ஆண்டுகளாக இருந்து வருகிறார்கள். ஆண்டுக்காண்டு இந்த நிலைமைதான் நீடித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அங்கே இருக்கிற தொழிலாளர் நல அதிகாரிகள் என்பவர்கள் தொழிற்சங்கத் தலைவர்களை கூப்பிட்டு வைத்துப் பேசி ஒரு நிரந்தரமான முடிவை எடுத்திருக்கிறார்களா என்றால் இல்லை என்பதுதான் என்னுடைய கருத்தாகும். காரணம் அங்கே இருக்கிற தோல் தொழிற்சாலைகளின் முதலாளிகளுடைய ஏ.சி. ரூம்களுக்குள் சென்று அங்கே தொழிலாளர்களின் நலன் காக்க வேண்டிய அதிகாரிகள்—தொழிலாளர் நல அதிகாரிகளாக இல்லாமல் முதலாளிகள் நல அதிகாரிகளாகப் பணி புரிபவர்களாக இருக்கிறார்கள் என்பதை வேதனையோடு இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தோல் பொருள்களைத் தயாரிக்கும் வேலையில் பல தரப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பணியில் பெண்கள் பயன்படுத்தப்படுகிறார்கள். இத்தொழிலில் எங்கள் மாவட்டத்தில் சுமார் 5,000 பெண்கள் பணிபுரிகிறார்கள். பெண்களின் சம உரிமையைப் பற்றி பேசுகிற இந்தக் காலத்தில் அந்தப் பெண்கள் வாங்குகிற சம்பளம் 150 அல்லது 200 ரூபாய்தான். அங்கு அவர்கள் கொத்தடிமைகளைப் போல் கசக்கிப் பிழியப்படுகிறார்கள். அரசு தரப்பில் கொடுக்கப்படும் சலுகைகள் ஒன்றுகூட அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறதா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் மெத்தப் பணிவன்போடு கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த பெண் தொழிலாளர்களுக்கு அங்கே காப்பகங்கள் உண்டா? பெண்களுக்கான தனி உணவு அறைகள் உண்டா என்று கேட்க விரும்புகிறேன். எந்தத் தொழிற்சாலையிலும் இவைகள் இல்லாத



987 ஏப்ரல் 20] [திரு. மா. கதிர்வேலு]

நிலைமைதான் இருக்கிறது. இப்படிப்பட்ட அதிகாரிகளின் தவறு காரணமாக உண்மையிலேயே அரசுக்குத்தான் கெட்ட பெயர் ஏற்படுகிறது. எனவே அதிகாரிகளின் இந்தப் போக்கை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து பெண்களுக்கான கூலி நிர்ணயம் செய்யப்பட்டு கடுமையான சட்டங்கள் மூலமாக அவை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பீடித் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். கர்நாடகத்திலும், கேரளத்திலும் அவர்களுக்குக் குறைந்தபட்ச கூலியை நிர்ணயித்திருப்பதைப் போல் இங்கே குறைந்தபட்ச கூலி நிர்ணயிக்கப்படவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் வெளி மாநிலங்களில் உள்ள முதலாளிகள் இங்கே வந்து தொழிலாளர்களைச் சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள். மங்களூர் பீடித் தொழிற்சாலையின் முதலாளி இங்கே வந்து தொழிலாளர்களைச் சுரண்டி லாபம் சம்பாதிக்கிறார். அங்கே அவருடைய மாநிலத்தில் தொழில் நடத்தத் தயாராக இல்லை. காரணம் இங்கேதான் தொழிலாளர்களுக்குக் குறைந்த கூலி கொடுக்க முடிகிறது.

பீடித் தொழிலாளர்கள் இங்கே மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். சிறுவர்கள் இந்தத் தொழிலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். பெண்களும் ஆண்களும் ஈடுபடுத்தப்படுகிறார்கள். என்றாலும்கூட அவர்கள் பெண்களைக் கணக்கில் வைப்பதேயில்லை. பெண்களைக் கணக்கில் வைத்தால் அவர்களுக்குச் சில வசதிகளைச் செய்துகொடுக்கவேண்டும் என்று ஆண்களை மட்டும் கணக்கில் வைத்து அதிகமான லாபத்தைச் சம்பாதித்து அவர்கள் பங்கிட்டுக் கொள்ளும் சூழ்நிலைதான் இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் 18 வயதுக்குட்பட்ட பெண்கள் வீடுகளில் பணிபுரிகிறார்கள். தமிழகம் முழுவதுமாக ஏறத்தாழ 2 லட்சம் தொழிலாளர்கள் இப்படிப் பணிபுரிகிறார்கள். இப்படிப்பட்ட இரண்டு இலட்சம் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவிட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வேன்.

பீடி தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் வீடு இல்லாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். இன்றைய தினம் தமிழக முதல்வர் அவர்கள் பலதரப்பட்டவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறார்கள். பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கும் வீடுகளை கட்டித் தருவதற்கு உத்தரவிட வேண்டும். என் பகுதியில் உள்ள மேல் விசாரத்தில் உள்ள ஆயிரக்கணக்கான பீடி தொழிலாளர் களுக்கு குடியிருப்புகளைக் கட்டித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

SIPCOT தொழிற்பேட்டையைப் பொறுத்த வரையில் கடந்த இரண்டாண்டுகளாகவே நானும் சொல்லிக் கொண்டு வருகிறேன். இராணிப்பேட்டையில் உள்ள தொழிற்சாலைகளைப பொறுத்த வரையில் ஸ்ரீ நிதி ஸ்டீல்ஸ் பிரைவேட் லிமிட்டெட், அப்பர் இந்தியா பேரிங்ஸ், ஒமேகா கேபில்ஸ், மற்றும் இரசாயனத் தொழிற்சாலைகளான டியூப்பர் பார்மா கெமிக்கல்ஸ், போசாக் கெமிக்கல்ஸ், பல்லவா கெமிக்கல்ஸ், ரால்சன் கெமிக்கல்ஸ், மற்றும் ராணிப்பேட்டை லெதர் ஃபினிஷிங், எண்ணெய் தொழிற்சாலைகளான சவரன் சால்வன்ட்ஸ், சால்வக்ஸ் ஆயில்ஸ், மற்றும் அகஸ்தியர் பேப்பர் போர்ட் ஆகிய இந்த தொழிற்சாலைகளில் கிட்டத்தட்ட ஆயிரம் பேர் பணி புரிகிறார்கள். இந்த தொழிற்சாலைகள் இரண்டு வருஷங்களாக மூடப்பட்டு செல்லரிக்கப்பட்ட தொழிற்சாலைகளாக, இயந்திரங்கள் எல்லாம் பழுதடைந்த நிலையில், எந்தவிதமான நடவடிக்கையும் இல்லாமல் இருந்து வருகின்றன. இதனால் அந்த தொழிற்சாலைகளில் பணிபுரிந்த கிட்டத்தட்ட ஆயிரம் தொழிலாளர்கள் நடுத்தெருவில் பரிதாபத்திற்குரிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பங்கள் பட்டினி சாவுக்குரிய நிலையிலே இருக்கின்றன. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை கவனத்திலே எடுத்துக்கொண்டு முதல்வர் நிவாரண நிதியிலிருந்தாவது அவர்களுக்கு பணத்தைக் கொடுத்து அவர்களுடைய குடும்பங்களை வாழ வைக்கத் துணை நிற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த தொழிற் சாலைகளை விற்றாவது தொழிலாளர்களுக்கு செட்டில்மெண்ட் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் உடனடியாக உத்திரவிட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து, இன்றைய தினம் நகரங்களில் பணிபுரிகின்ற ரிக்ஷா தொழிலாளர்கள், மூட்டை தூக்கும் தொழிலாளர்கள் மீது அரசு தனிக் கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால் ரிக்ஷா தொழிலாளியாக நடித்து தமிழக முதல்வர் அவர்கள் அவர் களுடைய உள்ளங்களில் இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் கடும் வெய்யிலுக்கும், கடும் மழைக்கும் தங்க இடம் உண்டா? ஆகவே சாதாரண ஏழை மக்களாக உள்ள ரிக்ஷா தொழிலாளர் களுக்கும், மூட்டை தூக்கும் தொழிலாளர்களுக்கும் அவர்கள் தங்கி உணவு அருந்துவதற்கும் இளைப்பாறவும் குளிக்கவும் ஒவ்வொரு நகரத்திலும் தங்கும் விடுதிகளை கட்டுவீர்களே யானால் அந்த ஏழைகள் என்றென்றும் உங்களைப் பாராட்டு வார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மேலும் இன்றைய தினம் பலருக்கு விகிதாசாரம் என்ற பெயரால் உரிமை கொடுக்கிறோம். பலவகைகளில் முன்னுரிமையைக் கொடுக்கிறோம். இன்றைய தினம் அடிப்படை ஊதியத்தில் குறைந்த ஊதியம் பெறுகிற தோல் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள், ரிக்ஷா தொழிலாளர்கள், மூட்டை தூக்கும் தொழிலாளர்கள் ஆகியவர்களுடைய பிள்ளைகள் படிக்க வசதியற்றவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர் களுக்கு தமிழக முதல்வரும், அமைச்சர் அவர்களும் கருணை உள்ளத்தோடு உயர் கல்வி கற்க, மற்றவர்களோடு சம அந்தஸ்தோடு வர பொறியியல் கல்லூரிகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும் 10 சதவீதம் இடம் ஒதுக்கீடு செய்து உத்தரவிட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

E.S.I -யைப் பொறுத்த வரையில் நான் ஒன்றை மெத்தப் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். தொழிலாளர்களிடமிருந்து 2.5 சதவீதத்தை வாங்குகிறார்கள். அவற்றையெல்லாம் முதலாளி களிடமிருந்து முழுமையாகப் பெற்றுத் தர நீங்கள் துணைபுரிய தொகுதியில் இராணிப்பேட்டையில் 27 ஆயிரம் தொழிலாளர்கள் வேண்டும். E.S.I. -யைப் பொறுத்த வரையில் என்னுடைய இருக்கிறார்கள். அவர்களுடைய மனைவிமார்கள் கருவுற்றால் அங்கிருந்து 35 கிலோமீட்டர் தாண்டி வேலூருக்குப் போகிறார்கள். ஒரு ஆக்சிடெண்ட் நடந்தால்கூட மருத்துவ மனையில் அனுமதிக்க வேண்டுமென்றால், 35 கிலோமீட்டர்

[illegible] சென்று மருத்துவமனையில் சிகிச்சை பெற வேண்டும். ஆனால் அப்படி சென்றாலும் அங்கே பராமரிப்பு சரியாக இல்லை. பராமரிப்பு சரியாக இல்லாததால் எம். எம். [illegible] பணிபுரியும் ஒரு தொழிலாளியின் மனைவி கருவுற்று பிரசவத்திற்காக மருத்துவமனையில் அனுமதித்தபோது பிரசவ நேரத்தில் டாக்டர் இல்லாமல் நர்ஸ் இல்லாமல் பிரசவத்தை ஆயா பார்த்து குழந்தை கால் ஒடிந்து பிறந்தது. அதே தொழிற்சாலை தொழிலாளி வயிற்று வலி என்று சென்றால் எந்தவிதமான சிகிச்சையும் அளிக்காமல் பரிசோதித்துப் பார்க்காமல், மாத்திரையைக் கொடுத்து இதை சாப்பிட்டால் உன் வியாதி தீர்ந்துவிடும் என்று சொல்லிவிட்டார்கள். பிறகு தொழிலாளர்கள் எல்லாம் ஒன்று திரண்டு அவரை சி.எம்.சி. மருத்துவமனையில் சேர்த்த பிறகு ஒன்றரை கிலோ அளவுள்ள இரணக் கட்டி வயிற்றிலே இருக்கிறது என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இப்படி கேட்பாரற்ற நிலையிலே ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 11-30)

அடுத்து, எங்கள் பகுதியில் மத்திய அரசின் குழு ஒன்று வந்தது. 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையை அமைக்க சர்வே செய்தது. இதற்கு முன்னால் இருந்த மாண்புமிகு அமைச்சர், திரு. கே.ஏ.கே. அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வரும்போது தொழிற்சாலை உரிமையாளர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோரை வைத்துக்கொண்டு, 100 பெட் கொண்ட மருத்துவ மனை அமைக்கப்படுமென்று ஸ்டேட்மெண்ட் கொடுத்தார்கள். அது சம்பந்தமான புள்ளி விவரங்களை எல்லாம் எடுத்து வந்து அமைச்சரவர்களுக்குக் கொடுத்து, இலாக்காவுக்குக் கொடுத்து, மருத்துவ மனை அந்த சிப்காட் தொழிற்பேட்டைக்கு வருமென்று எண்ணிக்கொண்டிருக்கும்போது, அது இல்லாமல் இருக்கிறது. அங்கே 100 பெட் கொண்ட மருத்துவ மனையை அமைத்தால்தான் ஏறத்தாழ 27,000 தொழிலாளர்களின் குடும்பங்கள் வாழ்க்கூடும் நிலைமை ஏற்படும். விபத்துக்கு உள்ளாக்கப்பட்ட தொழிலாளர் அங்கே மருத்துவ மனை இல்லாமல், அவர்கள் 35 கிலோ மீட்டர் தூரம் செல்லும்போது,





உயிர் இழப்புகள் ஏற்படுகின்றன. அங்கே மருத்துவ மனை அமைத்தால், அதைத் தவிர்க்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தொழிலாளர்களுக்காக வழங்குகின்ற பணத்தில் தொழிலாளர்களுக்காக திருமணக் கூடங்கள், தொழிலாளர் விடுதி, தொழிலாளர் கூட்டுறவு அங்காடிகள், விளையாட்டுத் திடல் ஆகியவற்றை என்னுடைய பகுதியில் அமைத்துத் தர வேண்டும்—இராணிப்பேட்டை பகுதிக்கு அமைத்துத் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு தொழிலமைச்சர் திரு. இராஜாராம் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்தபோது 1,000 வீடுகள் ஓசூரில் கட்டியதுபோல், கட்டித் தரப்படுமென்று சொன்னார்கள். அவருக்கு வரவேற்பு கொடுத்த நேரத்தில் அவர்கள் சொன்னார்கள். வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக சிப்காட் நிர்வாகத்திற்கு 22 ஏக்கர் நிலத்திற்குப் பணம் கொடுத்தும், அந்தப் பணத்தைத் திரும்பவும் கொடுத்துவிட்டார்கள். தொழிலாளர்கள் ஆயிரம், ஐநூறு என்று வாடகை கொடுத்து எப்படி வாழ முடியும்? குறைந்த சம்பளம் வாங்கும் அவர்களுக்கு, குறைந்த செலவில் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டாமா? எந்தவிதப் பிரச்சினையும் இல்லாமல் இருக்கும் தொழிற்பேட்டை அல்லவா அது. அவர்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்தித் தருவது அரசின் கடமையல்லவா? எனவே ஆயிரம் வீடுகளை அங்கே கட்ட மாண்புமிகு அமைச்சரவர்கள் துணை புரிய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின் வாரியத்தைப் பொறுத்தவரையில் அங்கே தற்காலிக ஊழியர்களாக இருக்கிறவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும். அடுத்து, சுகாதாரப் பாதுகாப்பு பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். எந்த ஒரு தோல் பதனிடும் தொழிற்சாலையிலாவது தொழிலாளர்கள் சேறிலும், சகதியிலும் இல்லாமல் பணி செய்கிறார்களா? அந்த விஷத் தன்மையோடு கூடிய வாயுவிலே அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மலாடி டிரக்ஸ் J.C.C. திருமலை கெமிக்கல்ஸ், பாரி போன்ற தொழிற்சாலைகளால் சுகாதாரத் தன்மைகள் கெட்டிருக்கின்றன. அங்கே சுற்றுப்

[திரு. மா. கதிர்வேலு] [1987 ஏப்ரல் 20

புறச் சூழல் பாதிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்று. நம்முடைய அச்சுத் துறையைப் பொறுத்த வரையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அரசு ஊழியர்களுக்கு 6 நாட்களாக வேலை செய்யும் நாட்கள் இருந்ததை 5 நாட்களாகக் குறைத்தபோது, விடுமுறை நாட்களும் குறைக்கப்பட்டது. ஆனால் அரசு அச்சகத்தில் பணி புரியும் தொழிலாளர்கள் வாரம் 6 நாட்கள் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கும் விடுமுறை நாட்கள் குறைக்கப்பட்டிருக்கிறது. இது நியாயமா? அவர்கள் பணியாற்றுவது 6 நாட்கள். அவர்கள் 6 நாட்கள் பணி புரிந்தும், அவர்களுக்கு விடுமுறையைக் குறைப்பது எந்த விதத்தில் நியாயம்? அவர்கள் சேவை செய்கிறார்கள். அப்படி சேவை செய்யும் அவர்களுக்கு, பழைய அளவு விடுமுறையை நடைமுறைப்படுத்த மாண்புமிகு அமைச்சரவர்கள் உத்திரவிட வேண்டும்.

மேலும், தமிழக அரசாலே கொடுக்கப்படும் பேப்பர்களைப் பார்க்கும்போது தரமில்லாத பேப்பர்களாக இருக்கின்றன. இவற்றை மாற்றி அமைக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசு முத்திரையோடு லெட்டர் பேட் கொடுக்கும்போது, பெயரையும் அச்சிட்டு கொடுக்க அமைச்சரவர்கள் துணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அரசு முழுக் கவனம் செலுத்தி, அவர்களுடைய வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் துணை இருக்கும் வகையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். லேபர் கமிஷனர்கள் 2, 3 ஆண்டுகளுக்கு ஒரு வழக்கை நடத்திச் செல்லுகிறார்கள். எனவே குறித்த காலத்திற்குள் வழக்குகள் முடிக்கப்பட வேண்டும். ஓராண்டுக்கு மேல் சென்றால், சம்பந்தப்பட்ட நிர்வாகத்தின் முதலாளிகளை நிர்பந்தம் செய்ய அரசு துணையாக இருக்க வேண்டும். மேலும் அரசு அப்படி நிர்பந்தப்படுத்தும்போது, சில தொழிற்சாலைகள் அதைக் கேட்கவில்லை என்ற நிலை இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அரசு அவர்களுக்குச் சொல்லியும்



1987 ஏப்ரல் 20] [திரு. மா. கதிர்வேலு]

கூட, நிர்வாகம் செய்யச் சொல்லியும்கூட அந்தத் தொழிற்சாலை கேட்கவில்லை என்றால், அந்தத் தொழிற்சாலையை அரசு ஏற்று நடத்த தயாராக இருக்க வேண்டும். அரசு சொல்வதைக் கேட்கவில்லை என்றால், எப்படி அரசு நிர்வாகம் நிர்வாகமாக இருக்குமென்று சொல்லி, தொழிலாளர்களை வாழ வைக்கும் நிலை இருந்தால்தான் உற்பத்தித் திறன் அதிகமாக இருக்குமென்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

**திரு. பு. கோ. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பின்னர் தமிழ்நாட்டில் தொழில்கள் பெருகி வருவதற்கும் அதன் மூலம் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கும் காரணம் இந்த அரசு தொழில் அமைதியை பாதுகாத்து வருவதுதான் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடந்த பத்து ஆண்டு காலமாக வேலையில்லாமல் இருக்கின்ற லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தி மறுவாழ்வு அளிக்கின்ற வகையில் சிறு தொழில்கள், மத்தியரசு தொழில்களை பெருக அரசு ஊக்கமும் ஆதரவும் அளித்துவருவது பாராட்டத் தக்க ஒன்றாகும். ஒரு பக்கம் புதிய தொழில்கள் உருவாவதற்கு நடவடிக்கைகள் சீராக எடுத்து வருவதுடன், தொழிலாளர்கள் நலனைக் காக்க பல புதிய முற்போக்கு சட்டங்கள் இங்கே போடப்பட்டு நிறைவேற்றி தொழில் அமைதியை ஏற்படுத்தி சிறப்பான முறையில் இந்த அரசு செயல்பட்டு வருவதை கொள்கை விளக்க குறிப்பிலிருந்து அறிய முடிகிறது.

அமைப்பு இல்லாத ( unorganised ) தொழிலாளர்களுக்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசில் கொண்டு வந்ததைப் போன்று சட்டங்கள் வேறு எந்த மாநிலத்திலும் கொண்டுவரப்படவில்லை என்பதை உறுதியோடு கூறவிரும்புகிறேன்.

[திரு. பு. கோ. நாராயணன்] [1987 ஏப்ரல் 20

அமைப்பு உள்ள ( Organised ) தொழில்களைப்பற்றித் தான் அறிந்துக்கொண்டு இருந்தோம். அன்றாட கூலிக்கு வழியில்லாமல் எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் இருந்த தொழிலாளர்களுடைய நல்வாழ்வுக்காக அதிக அளவில் அக்கறை எடுத்துக் கொண்டு சட்டங்களின் மூலம் பாதுகாப்பு திட்டத்தை அளித்த டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களை விவசாய கூலிகள், கல் உடைக்கும் தொழிலாளர்கள், பாரம் தூக்கும் தொழிலாளிகள் ஆகிய அனைவரும் மனதார பாராட்டி வாழ்த்திக் கொண்டு இருக்கின்றார்கள்.

போக்குவரத்துத் துறையிலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை என்று இருந்ததை மூன்று வருடங்களுக்கு ஒரு முறை என்று மாற்றி, மூன்று வருடங்கள் முடிவதற்கு முன்பே ஊதிய உயர்வு, அவர்களுடைய மனநிறைவு அடைகின்ற வகையில், கொடுத்துக் கொண்டு இருப்பது பாராட்டத் தகுந்த ஒன்றாகும்.

போக்குவரத்துத் துறையில் வேலைநிறுத்தம் என்ற பேச்சுக்கு இடமில்லை என்ற அளவிற்கு கேட்காமலேயே சலுகைகளைத் தாராளமாக அள்ளிக் கொடுத்திருக்கிறார்கள். மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப்பார்த்தால் பேருந்து கட்டணம் நமது மாநிலத்தில் மிகக் குறைவாகவே இருந்து வருகிறது.

டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் கையாளுகிற நடைமுறை, அணுகுமுறை நல்ல முறையில் இருப்பதால் தொழில் தகராறு காரணமாக தொழிற்சாலைகள் மூடப்படுவது தமிழகத்தில் பெரும்பாலும் தவிர்க்கப்பட்டு வந்து இருக்கின்றது. தமிழ் நாட்டில் பொருள்கள் உற்பத்தி குறையாமல், பொருளாதார வளர்ச்சி தடைப்படாமல் சீரான முன்னேற்றம் தமிழகத்தில் ஏற்பட்டு இருப்பதற்குக் காரணம், புரட்சித் தலைவர் அவர்கள் கையாளுகிற அணுகுமுறை, தொழிலாளர்கள் நலனில் காட்டி வருகிற அக்கறை, நிலவி வருகின்ற தொழில் அமைதி என்பதை மற்ற மாநிலத்தைச் சார்ந்தவர்கள் போற்றிப் பாராட்டுகிறார்கள்.



1987 ஏப்ரல் 20] [திரு. பு. கோ. நாராயணன்]

டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், தொழிலாளர்கள் நலன் பாதுகாப்பாக இருப்பதற்கு யோசனையாக ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அந்தந்த தொழிற்சாலைகளிலே வேலை பார்க்கின்ற தொழிலாளர்களிலே ஒருவர் தலைவராக வந்தால்தான் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வாய்ப்பு ஏற்படும். இந்த கருத்தைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் வலியுறுத்தி வந்தார்கள். அண்ணாவின் கனவை நினைவாக்க வேண்டும் என்றுதான் புரட்சித் தலைவர் அவர்கள் தொழிற்சாலையிலே வேலை செய்கின்ற ஒருவர் அந்த தொழிற்சாலையின் சங்கத்திற்குத் தலைவராக வர வேண்டும் என்று வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். இப்படி எந்த மாநிலத்திலும் ஒரு முதலமைச்சரும், தொழிலாளர்களிலேயிருந்து யாராவது ஒருவர் தலைவராக வரவேண்டுமென்று சொன்னதாக வரலாறு இல்லை. புரட்சித் தலைவர் அவர்கள் சொன்ன அந்த கருத்தை பல்வேறு தொழிற்சங்கங்களில் இன்றையதினம் நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

அதிக தொழிலாளிகள் வேலை செய்கின்ற தொழிற்சாலைகளில்தான் போனஸ் கொடுக்கப்படும் என்ற நிலையை மாற்றி 10 தொழிலாளர்கள் வேலை செய்யும் தொழிலகத்தில்கூட போனஸ் கொடுக்கவேண்டும் என்று டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் சட்டம் கொண்டு வந்தார்கள்.

அது மட்டுமல்லாமல், 24 மாதங்களில் 480 நாட்கள் வேலை செய்த தொழிலாளிகள் அனைவரையும் நிரந்தரமாக்கவேண்டும் என்ற சட்டத்தையும் பணிக்கொடை திருத்தச் சட்டத்தையும் தொழிலாளர்கள் நலன் காக்க புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்தார்கள்.

உழைக்கும் வர்க்கத்தை பழி வாங்குவதற்காக ஆலை அதிபர்கள் தொழிலாளர்களை தற்காலிக வேலை நீக்கம் செய்து ஆண்டுக்கணக்கில் விசாரணை என்கிற பெயரில் காலம் கடத்திப் பட்டினிப் போட்டு பணிய வைத்த காலம் உண்டு. ஆனால் அந்த நிலைமை மாற்றி தற்காலிக வேலை நீக்க காலத்திற்கு வாழ்க்கை

[திரு. பு. கோ. நாராயணன்] [1987 ஏப்ரல் 20

ஊதியம் வழங்க வகை செய்த ஒரே தலைவர் புரட்சித் தலைவர் என்பதை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதன்படி தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட முதல் 90 நாட்களுக்கு 50 சதவிகித ஊதியமும், 90 நாட்களுக்கு மேல் 180 நாட்கள் வரை 75 சதவிகித ஊதியமும், 180 நாட்களுக்கு வேலை நிறுத்தம் நீடித்தால் முழு ஊதியத்தையும் கொடுக்கவேண்டும் என்று ஆலை நிர்வாகத்திற்கு உத்தரவிடும் சட்டத்தை தமிழகத்தில் நடைமுறைப்படுத்தி வருவது நமது புரட்சித் தலைவர் அவர்கள்தான்.

(முற்பகல் 11-40)

240 நாட்களுக்குக் குறைவாக பணி செய்திருக்கும் தொழிலாளிகளுக்கும் பணிக் கொடை வழங்க வேண்டும் என்று பணிக்கொடை திருத்தச் சட்டத்தையும் இங்கே நாம் நடைமுறைப்படுத்தி வருகிறோம். தொழிலாளர் பிரச்சினையில் தீர்வு காணவும், முதலாளிகளை இணங்க வைக்கவும் தொழிலாளர் நலன் கருதி தொழிற் தகராறு சட்டம் 10-பி என்ற பிரிவை அறிமுகப்படுத்தி, அதன்மூலம் பஞ்சப்படி, போனஸ் போன்ற பல சலுகைகளை தொழிலாளர்களுக்காக இந்த அரசு வாங்கித் தந்து கொண்டிருக்கிறது. இதுபோன்ற முற்போக்கான சட்டங்கள் வேறு எந்த மாநிலத்திலும் கொண்டு வரப்படவில்லை. தொழிலாளர் நல சட்டங்களைக் கொண்டு வருவதில் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக, வழிகாட்டியாக தமிழகம் விளங்கி வருகிறது என்று பெருமையோடு கூற விரும்புகிறேன்.

அடுத்து, இந்த அரசுக்கு முன்பு இருந்த 7½ ஆண்டுக்கால தி.மு.க. ஆட்சியில் தொழிலாளர்கள் பிரச்சினையில் எந்தவிதமான முற்போக்கு நடவடிக்கைகளையும் எடுக்காதது மட்டுமல்ல, தொழிலாளர்களுக்கு விரோதமான முடிவுகளையும் எடுத்தார்கள். அப்போது தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பு இல்லை, தொழிற் சங்கத் தலைவர்களுக்கும் பாதுகாப்பு இல்லை. 1974 ஆம் ஆண்டில் மரியாதைக்குரிய தொழிற் சங்கத் தலைவர் வி. பி. சிந்தன் அவர்கள் ஓடுகின்ற பேருந்தில் பாதுகாப்பற்ற நிலையில், அரசுக்கு எதிராக, தொழிலாளர்கள் வர்க்கத்திற்கு ஆதரவாக சில கருத்துக்களைச் சொன்னார் என்பதற்காக கத்தியால் குத்தப்பட்டார். அதேபோல திரு. குசேலர் அவர்கள்



1987 ஏப்ரல் 20] [திரு. பு. கோ. நாராயணன்]

பட்டப்பகலில் பலர் முன்னிலையில் தாக்கப்படுகிற கோர காட்சியெல்லாம், தொழிலாளர் தலைவர்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் நடைபெற்றது. அதுமட்டுமல்லாமல் தி.மு.க. ஆட்சியில் தொழிலாளர்களின் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தம் செய்ததை 19 முறை தடை செய்து இருக்கிறார்கள். ஆனால் எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் வேலை நிறுத்தத்தை எப்போதுமே தடை செய்தது கிடையாது. தொழிலாளர் நலன் கருதி அவர்கள் வேலை நிறுத்தம் செய்ததாகவும், அதனை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு தடை செய்ததாகவும் வரலாறு கிடையாது.

அடுத்தபடியாக, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் தொழிலாளர்களின் நலன் கருதி தங்கும் ஓய்வு விடுதி குற்றாலத்தில் கட்டியிருக்கிறார்கள். அதுபோல சென்னையில் 3 ரூபாய், 5 ரூபாய் வாடகைக்கு தொழிலாளர்களுக்கு கிடைக்கும் வகையில், தங்கும் விடுதி ஜீவா இல்லம் என்ற பெயரில் கட்டியிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் உழைப்பவர் உலகம் என்கிற பத்திரிகையையும் தொழிலாளர் நலன் கருதி மாதம் ஒரு முறை வெளிவரும் வகையில் நடத்தி வருகிறோம்.

அடுத்து, வேலையின்மையைப் போக்க இந்த அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. இன்றைக்கு கல்வித் தகுதி இருந்தாலும், தொழில் நுட்ப திறமை இல்லாவிட்டால் வேலை கிடைப்பது அரிதாக உள்ளது. அதை உணர்ந்து இந்த அரசு மாநில அளவில் 42 தொழிற் பயிற்சி நிலையங்களை ஏற்படுத்தி பல்வேறு தொழில் பிரிவுகளில் தொழில் பயிற்சி நல்ல முறையில் கொடுத்து வருகிறது. அதுமட்டுமல்லாமல் பெண்களுக்கு 5 தனி தொழிற் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. வேலையில்லா திண்டாட்டத்தை சமாளிக்கும் பொருட்டு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு குடும்பத்தில் ஒருவருக்கு வேலை அளிக்கும் திட்டத்தை கொள்கையாக ஏற்றுக் கொண்டு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. பெண்கள் அதிக அளவில் வேலைவாய்ப்பு பெறுவதும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய

[திரு. பு. கோ. நாராயணன்] [1987 ஏப்ரல் 20

ஆட்சியில் தான். சத்துணவுத் திட்டத்தின் மூலம் கிட்டத்தட்ட 1 லட்சம் தாய்மார்கள் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். அதுபோல இலவச காலணி வழங்கும் திட்டத்தின் மூலம் கிராமத்தில் வாழுகின்ற ஏழையெளிய தொழிலாளர்கள் ஆயிரக் கணக்கான பேர் வேலைவாய்ப்பைப் பெற இருக்கிறார்கள். அதேபோல சுய வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் பல தொழில் பிரிவுகளில் பயிற்சி பெற்றவர்களுக்கு கடன் உதவி வழங்கப் படுவதும் பாராட்டத்தக்க ஒன்றாகும்.

ஆகவே, தொழிலாளர்களுக்கு எல்லா சலுகைகளையும், உதவி களையும் சட்ட பாதுகாப்புடன் கொடுத்து வருகிற காரணத் தால் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசை தொழிலாளர் நல அரசு என்று மக்கள் எல்லாம் மனதார பாராட்டுகிறார்கள் என்று நான் கூறி பேச வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

* **திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த மானிய கோரிக்கையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்கின்றேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர், ஆளும் கட்சியின் சார்பாக பேசுகின்றபோது தி.மு.க. ஆட்சிக் காலத் திலே தொழிற்சங்கத் தலைவர்கள் எல்லாம் தாக்கப்பட்டதாக எடுத்துச் சொன்னார்கள். நான் அதை மறுக்கவில்லை; ஒரு சில இடங்களில் அப்படி நடந்திருக்கலாம். ஆனால் இன்றைய தினம் வேலை நிறுத்தம் செய்து, உண்ணாவிரதம் இருந்த, மாண்புமிகு உறுப்பினர் அவர்களாலே குறிப்பிடப்பட்ட மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. வி. பி. சிந்தன் அவர்கள் உண்ணாவிரதம் இருந்த நேரத்தில் பந்தலிலேயே தாக்கப்பட்ட குரூரமான காட்சி இந்த ஆட்சியிலே தான் நடை



1987 ஏப்ரல் 20] [திரு. ஆ. நடராசன்]

பெற்றது என்பதை நான் உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இன்றையதினம் எந்தத் தொழிற்சங்கமாக இருந்தாலும் அவைகள் வேலை நிறுத்தம் போன்ற நடவடிக்கை களில் ஈடுபடுவதற்கே அச்சப்படுவதற்கு என்ன காரணம்? திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலிருந்தபொழுது தங்களுடைய கோரிக்கைகளை எழுப்பினார்கள். 'தட்டினால் திறக்கப்படும்' என்ற கொள்கையைக் கொண்ட ஒப்பற்றத் தலைவர் கலைஞர் ஆட்சியில் தொழிலாளர்களுடைய உரிமைகள் காக்கப்பட்டன. ஆனால் உங்களுடைய ஆட்சியிலே என்ன நிலைமை?

பல சட்டங்கள் இருக்கின்றன. ஆனால், அந்தச் சட்டங் களை—நீங்களே கொண்டு வந்த சட்டங்களை—அமல்படுத்து கின்ற சக்தியற்ற ஒரு அரசாங்கமாக, ஒரு நிர்வாகத் திறமை யற்ற அரசாங்கமாக இருக்கிறது என்று நான் குறிப்பிட விரும்பு கிறேன். ஏன்? அது மாத்திரம் அல்ல. இரண்டாண்டுக் காலத் திலே நீங்கள் மூன்று தொழிலாளர் நல அமைச்சர்களைப் போட்டிருக்கிறீர்கள். தற்காலிகமாக இருக்கக் கூடிய தொழி லாளர்களை நிரந்தரம் செய்யுங்கள் என்கிற கோரிக்கையை நாங்கள் ஆண்டுக்கு ஒருமுறை உங்களிடத்திலே எடுத்துச் சொன்னதற்குப் பதிலாக, நீங்கள் தொழிலாளர் நல அமைச்சரை நிரந்தரப்படுத்துங்கள் அல்லது அந்த இலாக்காவை அந்த அமைச்சரிடத்திலே பர்மனெண்ட் செய்யுங்கள் என்று சொல்ல வேண்டிய துர்ப்பாக்கியமான நிலைமைதான் இந்த அரசாங்கத் திலிருக்கிறது என்பதை வேதனையோடு நான் குறிப்பிட விரும்பு கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக்காலத்திலே மத்திய அரசாங்கம் அவசர காலத்தைக் கொண்டு வந்து போட்ட சட்டம், போனஸ் சட்டம், இருபது சதமானத்திற்கு மேல் போனஸ் வழங்கக் கூடாது என்று அறிவித்த நேரத்தில், இராணுவ பலம் மிக்க ஒரு ஆட்சி நடைபெறுகிறது. 'இம்' என்றால் சிறைவாசம், 'ஏன்' என்றால் சிறைக்கோட்டத்திலே கொண்டுபோய்த் தள்ளுகின்ற நிலைமையிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஒப்பற்ற முதல்வர் கலைஞர்

[திரு. ஆ. நடராசன்] [1987 ஏப்ரல் 20

அவர்கள் இருபது சதமானத்திற்குமேல் போனஸ் வாங்கிக் கொடுத்ததைப் பஞ்சாலைத் தொழிலாளர்கள் மறந்திருக்க மாட்டார்கள்; மறக்கவும் முடியாது.

குறைந்தபட்ச போனஸ் 8.33 என்று இருக்கிறது. அதை மாற்றுவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டாமா? எங்களுடைய ஆட்சிக் காலத்திலே அவசரக் காலச் சட்டத்தையே எதிர்த்தோம். ஆனால் நீங்கள் எந்தச் சட்டத்தையும் அமல்படுத்துவதற்குத் தயாராக இல்லை என்கிற நிலைமைகளைத்தான் பார்க்கிறோம். 240 நாட்களிலே பணிக் கொடையை வழங்குகிறோம் என்று பெருமிதமாகப் பேசுகிறீர்கள். 480 நாட்கள் வேலை செய்த தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று நீங்கள் சட்டம் கொண்டு வந்தீர்களே அந்தச் சட்டத்தை அமல்படுத்த முடிந்ததா? தனியார் துறையில் தேவையில்லை; உங்களுடைய பொதுத் துறையிலே, பொதுப் பணித் துறை மற்றும் பல்வேறு துறைகளிலே இன்றையதினம் என்ன நிலைமை? அவர்களையெல்லாம் நிரந்தரம் செய்வதற்கு கோரிக்கை போட்டுக் கொண்டிருக்கிறோம். என்.எம்.ஆர், தொழிலாளர்களை, பத்தாண்டுகள் முடிந்து விட்டால் நீங்கள் நிரந்தரம் செய்ய வேண்டுமென்று சொல்கிறீர்கள். ஆனால் இரண்டாண்டுகள்—480 நாட்கள் பணியாற்றிய தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று நீங்களே சட்டம் கொண்டு வருகிறீர்கள். இது முன்னுக்குப் பின் முரணாக இல்லையா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

பஞ்சாலைகளைத் திறக்க வேண்டிய பிரச்சினை. இன்றையதினம் கோவை மாவட்டத்திலேயும், தமிழ்நாட்டிலேயும் ஏறக்குறைய பத்து ஆலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்காளியப்பன் அவர்கள் உட்பட திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சார்பிலே மதிப்பிற்குரிய திரு. துரைசாமி அவர்களும், ஏ.ஐ.டி.யு.சி. சங்கத்திலே திரு. ஏ. கணபதி அவர்களும், ஐ.என்.டி.யு.சி, சங்கத்தின் சார்பிலே திரு. பி. எஸ். சுப்பையா



1987 ஏப்ரல் 20] [திரு. ஆ. நடராசன்]

அவர்களும், எச்.எம்.எஸ். சங்கத்திலே திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்களும், சி.ஐ.டி.யூ. சங்கத்திலே திரு. கணேசன் அவர்களும் ஆகிய ஆறு தலைவர்கள் தொடர்ந்து பத்து நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். என்ன நிலைமை? இந்த அரசாங்கத்திலே அன்றையதினம் கல்வியமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய திரு. அரங்கநாயகம் அவர்கள் அங்கே போய்ப் பார்த்தார்கள். ஆனால் பிரச்சினையைத் தீர்க்கின்ற சக்தி உங்களிடத்திலே இருந்ததா? நான் உங்களைப் பார்த்துக் கேட்கிறேன். ஆறு மாத காலமாகி விட்டது. ஸ்ரீஹரி மில் திறக்கப்பட்டிருக்கிறது. பவானி மில் திறக்கப்பட்டது ஆடிக்கொண்டிருக்கிறது, ஓடவில்லை. எனவே, அரசாங்கம் கொடுத்த சலுகைகளை, வாக்குறுதி அளித்த சலுகைகள் இன்னும் தரப்படாமல், சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள் என்று நிர்வாகம் கேட்கின்ற பரிதாபமான நிலைமையிலே இருக்கிறது. இவைகளை மாற்றுவதற்கு நீங்கள் எடுத்த நடவடிக்கை என்ன? மீதி ஆலைகளைத் திறப்பதற்கு ஆறு மாத காலமாக அனைத்துச் சங்கங்களும்—உங்களுடைய தோழமையாக இருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உட்பட—தொழிற்சங்கங்களிலே அவர்களுடைய அமைப்பிலே தீர்மானம் போட்டு இங்கே சட்டமன்றத்திலே இருக்கக்கூடிய எதிர்க்கட்சித் தலைவர்களிடத்திலே கொடுத்தோம். ஆனால் இதுவரை முதல்வர் அவர்கள் பேசியிருக்கிறார்களா? கொள்கைக் குறிப்பிலே என்ன சொல்கிறீர்கள்? அமைச்சர்கள் நிலையிலே நாங்கள் பேசுகிறோம் என்று. எந்த அமைச்சர் பேசுகிறார்? பேசுவதும் இல்லை; கூப்பிடுவதும் இல்லை. எந்தவிதமான பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு உங்களுக்குச் சக்தி இல்லாத நிலைமைகளை நாம் பார்க்கிறோம்.

12,000 தொழிலாளர்கள் இன்றைக்குப் பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைக்காக இங்கே நாங்கள் குரல் கொடுக்கிறோமே தவிர, அந்தக் குரலை மதிக்கக்கூடிய நிலைமை இருக்கிறதா என்பதை அருள்கூர்ந்து அமைச்சரவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே, இந்தக் குறைகளை நீங்கள் நீக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய காலத்திலே தவறு நடந்து விட்டதாக 11 ஆண்டுக் காலமாகச் சொல்கிறீர்கள்.

[திரு. ஆ. நடராசன்] 1987 ஏப்ரல் 20]

உங்களுடைய ஆட்சியினுடைய அலங்கோலங்களை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றையதினம் ஒரு தொழிலாளி போராடுவதற்கு அஞ்சுகிறான். போராடினால் அந்தத் தொழிலாளர்கள் தண்டிக்கப்படுகிறார்கள்; காலிகளால் தாக்கப்படுகிறார்கள் என்கின்ற நிலைமைகளைப் பார்க்கிறோம்.

(முற்பகல் 11-50)

அது மட்டுமல்ல. நீங்கள் சாதனைகள் என்று பலவற்றைச் சொல்கிறீர்கள். ஆனால் கோவையிலே துணை ஆணையாளர் இல்லாமல் எத்தனையோ வருஷமாக அந்த இடம் காலியாக இருக்கிறது. மொத்தமாக இன்றைக்கு 7, 8 துணை ஆணையாளர்கள் இடம் காலியாக இருக்கிறது; நியமனம் செய்யப்படாமல் இருக்கிறது. நீதிபதி மோகன் அவர்கள் இதுபற்றி ஒரு தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது வேண்டாம். அவைக் குறிப்பிலிருந்து அது நீக்கப்படுகிறது. நீங்கள் நேராக கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. ஆ. நடராசன்:** நீதிபதி ஒரு தீர்ப்பைத் தந்த பின்னாலும் நீங்கள் எட்டு துணை ஆய்வாளர்களை இன்னும் நியமிக்கவில்லை. அது நியாயம்தானா என்று நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் இல்லாத காரணத்தால் தொழிலாளர்களுடைய பிரச்சினைகள் குறித்து தொழிற்சங்கங்கள் பேச்சுவார்த்தை நடத்த வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திற்கு ஒரு பெரிய கட்டடத்தை, ஆறு மாடிக் கட்டடத்தை டாக்டர் கலைஞர் அவர்கள் கட்டினார்கள். அந்தக் கட்டடத்தில் ஒரு மாடியை காலி செய்து, வங்கிகள் நடத்த வாடகைக்கு விட்டிருக்கிறீர்கள்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1987 ஏப்ரல் 20] [திரு. ஆ. நடராசன்]

தொழிலாளர் நலனுக்கு என்று, தொழிலாளர் நல வாரியத்திற்குக் கட்டப்பட்ட கட்டடத்தை காலிசெய்துதான் வங்கி நடத்த வேண்டுமா? அதற்கு தனியாக ஒரு கட்டடத்தைக் கட்டுவதுதானே! ஜீவா இல்லம் கட்டினோம் என்று சொல்லிப் பெருமைப்படுகிறார்கள். இன்றைக்கு அந்தத் தொழிலாளர் நல வாரியக் கட்டடத்தில் ஒரு மாடியை காலி செய்து வங்கி நடத்த வாடகைக்கு விட்டதால், தொழிலாளர் நல அலுவலகங்கள் மூலைக்கு ஒன்றாக இயங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக தொழிற்சங்கப் பிரதிநிதிகள் பரிதாபகரமாகச் சுற்றுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

கோவையிலேகூட ஏ.சி.எல். அலுவலகம் இருக்கிறது. டி.சி.எல். அலுவலகம் இருக்கிறது. அவையும் மூலைக்கு ஒன்றாகத்தான் இருக்கின்றன. கோவையில் ஜெயில் காம்பவுண்ட் இருக்கிறது. பல்வேறு அலுவலகங்கள் அங்கே வந்திருக்கின்றன. போக்குவரத்துத் துறை அலுவலகம் இருக்கிறது; பி.எஃப். அலுவலகம் இருக்கிறது; ஆதிதிராவிடர் மாணவர் ஆஸ்டல் இருக்கிறது. ஆனால் அந்த இடத்திலே உழைக்கின்ற மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வசதியாக ஒரு கட்டடம் இல்லை. அந்தக் கட்டடத்தை அங்கே கட்டுவதில் இந்த அரசுக்கு என்ன ஆட்சேபணை இருக்க முடியும்? அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சாலைத் தொழிலாளர் மலிவு விலை வீட்டு வசதி திட்டம், தனியார் துறை தொழிலதிபர் திட்டம் என்று ஒரு திட்டம் இருக்கிறது. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் 2(1) பிரிவின்கீழ் வரும் தொழிலாளர்களின் பயனுக்காக வீடுகள் கட்ட தனியார் தொழிலதிபர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி அளிக்கப்படுகிறது. இப்படிச் செயல்பட்டு வந்தத் திட்டம் 1982-ல் நிறுத்தப்பட்டது. எனினும் நிதி உதவி அளிக்கப்பட்டு, 1,334 வீடுகள் கட்டியிருக்கிறார்கள். ஆனால் தமிழ் நாட்டில் இலட்சக்கணக்கானத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தத் திட்டத்தை நிறுத்திவிட்டு 30 இலட்சம் வீடுகள் கட்டப் போகிறோம் என்று டாம்பீகமாகப் பிரச்சாரம் செய்கிறீர்கள். இது நியாயமா?

[திரு. ஆ. நடராசன்] [1987 ஏப்ரல் 20

அதைப்போன்று ஆசிரியர் வீட்டுவசதி வாரியம் ஒன்றை அமைத்தீர்கள். புலவர் அறிவுடை நம்பி அதிலே தலைவராக இருந்தார். இப்போது முன்னாள் மேலவை உறுப்பினர் திரு. மாசிலாமணி தலைவராக வந்திருக்கிறார். அந்த ஆசிரியர் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் நீங்கள் ஆசிரியர்களுக்கு கட்டிய வீடுகள் எத்தனை? இரண்டு ஆண்டுகாலமாக ஒருவர் தலைவர் பதவியில் இருக்கிறார்; அலுவலகம் இருக்கிறது; செலவுகள் எல்லாம் செய்யப்படுகின்றன. ஆனால் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றனவா என்றால் இல்லை. ஏன் இந்நிலை?

மேலும் எஸ்.ஐ.எச்.எஸ். காலனி சிங்காநல்லூரில் இருக்கிறது. 350 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அந்த வீடுகள் எல்லாம் பழுதடைந்து, ஓட்டையும் உடைசலுமாக இருக்கின்றன. 15 ரூபாய் வாடகை வசூல் செய்யப்பட்டது. இப்போது வாடகையை உயர்த்தியிருக்கிறார்கள். 25 ஆண்டுகாலம் ஆன கட்டடத்திற்கு, ஓட்டையும் உடைசலுமாக இருக்கின்ற கட்டடத்திற்கு இப்போது இந்த அரசு 174 ரூபாய் என்று வாடகையை உயர்த்தியிருக்கிறது. ஒருபக்கம் வீடு உடைந்திருக்கிறது; மறுபக்கத்தில் வாடகையை உயர்த்தியிருக்கிறீர்கள். இது என்ன நியாயம்?

அதைப்போன்று திருப்பூரிலும் பிளைமேட்டிலும் இந்த காலனி இருக்கிறது. அந்த வீடுகளை எல்லாம் தொழிலாளர்கள் தங்களுக்கு உரிமையாக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். பழுதடைந்த நிலையிலிருக்கிற அந்த வீடுகளை குறைந்த விலையில் அவர்களுக்கு உரிமையாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வீட்டு வாடகைப் படி கொடுக்க சட்டம் கொண்டு வர வேண்டும். தொழிலாளர் நல ஆலோசனைக் குழுவில் சட்டம் கொண்டுவர வேண்டும் என்று முடிவு செய்து 1½ ஆண்டுகள் ஆகிவிட்டன.



1987 ஏப்ரல் 20] [திரு. ஆ. நடராசன்]

வேகமாகச் செயல்படுவதாகச் சொல்கிற இந்த அரசு 1½ ஆண்டுகள் ஆகியும் சட்டம் கொண்டு வருவதில் ஏன் தயக்கம் காட்டுகிறது, ஏன் தாமதம் ஏற்படுகிறது என்று தெரியவில்லை. இந்தச் சட்டம் மேற்கு வங்காளத்தில் இருக்கிறது; மராட்டியத்தில் இருக்கிறது; உடனடியாக இங்கேயும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு பல்வேறு தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் உயரழுத்தக் குழாய்த் தயாரிப்புத் தொழிற்சாலை மூடப்பட்டிருக்கிறது. அதிலே 421 தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். 23—2—1987-லிருந்து வேலைநிறுத்தம் செய்தார்கள். ஸ்பெஷல் டி.சி.எல்., வேலைக்குச் செல்ல வேண்டுமென்று அறிவுரை வழங்கினார். அந்தத் தொழிலாளர்கள் அதன்படி வேலைக்குச் சென்றார்கள்.

ஆனால் என்ன கொடுமை? கான்ட்ராக்ட் தொழிலாளர்கள் 175 பேரை வேலைக்கு எடுக்க மறுக்கிறார்கள். டிட்கோ நிறுவனம் அரசாங்கத்தின் சார்பில் நடைபெறக்கூடிய நிறுவனம். அப்படிப்பட்ட நிறுவனத்தில் வேலைநிறுத்தம் நடக்கிறபோது நேர்முகப் பேட்டி நடத்துகிறீர்கள். நியாயமா இது? நேர்மையா இது? தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டிய நிலைமையில் இருக்கின்ற அரசாங்கத்தின் சார்பில் நடைபெறக்கூடிய நிறுவனத்தில் வேலைநிறுத்தம் நடக்கிற காலத்தில் ஆட்களை எடுப்பதற்காக நேர்முகப்பேட்டி நடத்துவது என்பது நியாயம் இல்லை. இந்த நிலைமையை மாற்றவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வடலூர் கங்கப்பா பேப்பர் மில்லில் 500 தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்ற வகையில் கதவடைப்பு செய்யப்பட்டு இருக்கிறது. 6 மாத காலம் ஆகிவிட்டது. தவறான நிர்வாகம்தான் அதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. டிட்கோ 30 இலட்சம் ரூபாய் கடனாகத் தர மறுத்து இருப்பதால் அங்கே 500 தொழிலாளர்கள் பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமையை மாற்ற வேண்டும்.

[திரு. ஆ. நடராசன்] [1987 ஏப்ரல் 20

அடுத்து, பலமுறை பேசியாகிவிட்டது. மாதவரம் பால் பண்ணைத் தொழிலாளர்கள் 1,500 பேர் ஒரே ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்ததற்காக அவர்களை நீக்கி இருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையை அனுதாபத்தோடு பரிசீலனை செய்யுங்கள் என்று திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். வேலை நிறுத்தம் என்பது தொழிலாளர்களின் உரிமை. அந்த உரிமையை நிலைநாட்டுகின்ற வகையில் ஒரேஒரு நாள் வேலைநிறுத்தம் செய்ததற்காக 1,500 பேர்களை வேலை நீக்கம் செய்வது என்ற கடுமையான நெஞ்சம் தேவையா? இதுபற்றிச் சிந்தித்துப் பார்த்து புதிதாக இந்தப் பொறுப்பினை ஏற்றிருக்கின்ற மதிப்பிற்குரிய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் உரிய வகையில் இதிலே ஈடுபடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மரம் ஏறும் தொழிலாளர்கள் 30,000 பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் 2,000 ரூபாய் தருவதாகச் சொல்லியிருக்கிறது. ஆனால் அதனை ஏற்கெனவே அங்கே இருந்த கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வாங்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறீர்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு நீங்கள் பாதுகாப்புத் தர வேண்டும். அந்தச் சங்கங்கள் மூலம் நிச்சயமாகப் பெற முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து தோட்டத் தொழிலாளர்கள் இன்றையதினம் வேதனையோடு இருக்கிறார்கள். பல்வேறு எஸ்டேட் முதலாளிகள் சின்னச்சின்ன தோட்டங்களாகப் பிரித்து நிரந்தரமான தொழிலாளர்களை தற்காலிகத் தொழிலாளர்களாக மாற்றக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அதைத் தடுக்க அரசாங்கம் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி மன்றங்கள் போன்றவற்றில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள், குறிப்பாக துப்புரவுத் தொழிலாளர்கள் 100 ரூபாய் சம்பளத்தில் வேதனைப்படுகிற நிலைமை இருக்கிறது. நிரந்தரமாகவும் இல்லை. இன்னொரு பக்கத்திலே துப்புரவு வேலைக்கு ஆட்கள் இல்லாமல் பல ஊராட்சி மன்றங்களிலும், பேரூராட்சி மன்றங்களிலும், நகராட்சி மன்றங்களிலும் பல சுகாதாரக் கேடுகள் ஏற்பட்டிருக்கின்றன. எனவே உரிய வகையில் தொழிலாளர்களை நியமிப்பதற்கு தொழிலாளர் நலனிலே அக்கறையுள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



[1987 ஏப்ரல் 20 [திரு. ஆ. நடராசன்]

அடுத்து சிம்சன் தொழிலாளர்கள் போராட்டம். இதுபற்றி ஆளும் கட்சி உறுப்பினர்களும் சொன்னார்கள். வேலையிழந்த 15 தொழிலாளர்களின் வேலைக்கு உத்தரவாதம் தருவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி நான்காண்டுக் காலம் ஆகிவிட்டது. இன்னும் தரப்படவில்லை. எனவே மேலும் நீடிக்காமல் அந்த 15 பேரையும் உடனடியாக எடுப்பதற்கான முயற்சியை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மாதவரம் சுந்தர் அலாய் பவுண்டரி தொழிற்சாலை. 271 பேர்கள் பணியாற்றும் தொழிற்சாலை. அந்த நிறுவனம் மூடப்பட்டு பின்னாலே திறக்கப்பட்டு இருக்கிறது. அதிலே எங்களுடைய சங்கத்தின் பொதுச் செயலாளர் பாதிக்கப்பட்டு, வழக்கு மன்றத்திற்குப் போவதற்குக் கூட அரசாங்கம் தடையாக இருக்கிறது. ஆனால் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? தொழிலாளர்கள் நேரடியாக வழக்கு மன்றத்திற்குப் போவதை இந்த அரசு ஆதரிக்கிறது, அதற்கான ஆணையைப் பிறப்பித்திருக்கிறோம் என்று சொல்கிறீர்கள். ஆனால் ஒரு சங்கத்தினுடைய பொதுச் செயலாளராக இருக்கக்கூடிய ஒரு தொழிலாளி—தொழிலாளியே தலைவனாக இருக்கவேண்டும் என்று முதலமைச்சர் பெருமையோடு சொன்னார் என்றெல்லாம் பெருமையோடு பேசுகிறீர்கள்—ஆனால் நான் உங்களைக் கேட்கிறேன், தொழிலாளியாக இருக்கக்கூடிய ஒரு பொதுச் செயலாளர்—மூன்றாண்டுக்காலமாக வழக்கு மன்றத்திற்குச்

செல்வதற்குக் கூட இந்த அரசு தடையாக இருக்கிறது. அதற்குக் காரணம் அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்பதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அடுத்து ஸ்ரீராமகிருஷ்ணா இன்டஸ்ட்ரீஸ் தொழிற்சாலை. ஐந்தாண்டுக்காலமாக அங்கேயுள்ள தொழிலாளர்கள் மிகுந்த வேதனையோடு இருக்கிறார்கள். அவர்களில் பலபேர் இறந்து விட்டார்கள். இன்னும் பலபேர் இறக்கக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். எனவே இதிலே அரசாங்கம் வேகமான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.
அடுத்து ஆயிரம் தொழிலாளர்கள் பணியாற்றக்கூடியது எவரஸ்ட் தொழிற்சாலை. இது என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அதை ஓட்டுவதற்கான வேகமான முயற்சியை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அட்சயா டெக்ஸ்டைல்ஸ் கோவையிலே இருக்கக்கூடியது. கடந்த ஒன்றரை வருட காலமாக மூடப்பட்டிருக்கிறது அந்த மில் விலை பேசப்பட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் வேண்டு மென்றே தாமதப்படுத்துகின்ற நிலைமை இல்லாமல் உடனடியாக விலைபேசி முடித்து அதனை விரைவில் ஓட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

(நண்பகல் 12-00)

* திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள மானியக் கோரிக்கை எண் 29 தொழிலாளர் நலன் மற்றும் மானியக் கோரிக்கை எண் 4, எழுதுபொருள் மற்றும் அச்சு ஆகிய மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.





மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் தொழிலாளர்களுக்கு வேண்டிய பல சலுகைகளை இந்த அரசாங்கம் செய்திருக்கிறது என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையின் பொறுப்பையேற்ற பிறகு தமிழகத்தில் தொழிலாளர் வர்க்கம் அவர்களிடத்தில் நிறைய எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது என்பதையும் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு பல தொழிலாளர் நலச் சட்டங்களைக் கொண்டு வந்துள்ளது. தொழிலாளர்களுக்கு நிலையான அந்தஸ்த்தை வழங்க வேண்டு மென்ற அடிப்படையில் இந்தச் சட்டங்களை அரசாங்கம் கொண்டு வந்துள்ளது. குறைந்தபட்ச ஊதியம் வழங்கல் சட்டத்தையும், வாழ்க்கைப்படி வழங்கும் சட்டத்தையும், தொழிலாளர்கள் வைப்பு நிதி சட்டத்தையும், தொழிலாளர்கள் இழப்பீட்டுச் சட்டத்தையும், தொழிலாளர்களுக்கு பணிக்கொடை வழங்குவதற்கான சட்டத்தையும், மற்றும் இதுபோன்ற பல்வேறு சட்டங்களையும் தொழிலாளர் நலனில் அக்கறை கொண்ட இந்த அரசாங்கம் கொண்டு வந்துள்ளது என்பதைப் பெருமையோடு கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம். இந்த ஆய்வு ஆண்டில் தகராறுகள் சம்பந்தப்பட்ட மொத்தம் 10,041 வழக்குகள் அதிகாரிகளிடம் விசாரணைக்கு வந்துள்ளன. அவற்றை நம்முடைய அதிகாரிகள் பரிசீலனை செய்து 8,112 வழக்குகள் குறித்து தீர்ப்பு வழங்கியுள்ளார்கள். மீதமுள்ள 1,929 வழக்குகள் தான் இன்னும் பைசல் செய்யப்படாமல் உள்ளன. அரசும், அதிகாரிகளும் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் விளைவாகத்தான் இவ்வளவு அதிகமான வழக்குகள் பைசல் செய்யப்பட்டுள்ளன. அந்தவகையில் தமிழகத்தில் இருக்கிற தொழிலாளர்களையும், தொழில்களையும் பாதுகாப்பதற்கு இந்த அரசு நடவடிக்கையெடுத்து வருகிறது. அதற்காக இந்த அரசாங்கம் 20 அம்சத் திட்டத்தை ஒருங்கிணைத்து, திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தொழில்களுக்கிடையே

[திரு. எ. தங்கராசு] [1987 ஏப்ரல் 20

உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதற்காக, தொழில்களுக்கிடையே ஆரோக்கியமான போட்டியை ஊக்குவிக்கும் பொருட்டு ஆண்டொன்றுக்கு 30 ஆயிரம் ரூபாய் செலவில் பரிசு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வரவிருக்கிறது. அந்தவகையில் தொழில்களை வளப்படுத்துவதற்கான வாய்ப்புகளை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

தொழிற்சாலைகளில் விபத்து ஏற்படுகிறபோது அதனால் பாதிக்கப்படுகிற தொழிலாளர்களுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களின் நிதியிலிருந்து நிவாரணம் வழங்குகிறார்கள். அந்த வகையில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நான்கு லட்சத்து 49 ஆயிரத்து 800 ரூபாய் நிவாரணமாக வழங்கியிருக்கிறார்கள். இதன்மூலம் 2,749 தொழிலாளர்கள் பயனடைந்து இருக்கிறார்கள். அந்தவகையில் தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் பணியாற்றும்போது விபத்து ஏற்பட்டு உயிர் இழப்பு ஏற்பட்டால் நம்முடைய அரசாங்கம் அதனை கண்காணித்து தகுந்த உதவியை அந்தத் தொழிலாளர்களுக்குச் செய்து வருகிறது. ஆண்டுதோறும் விபத்துகளில் ஏற்பட்டுள்ள உயிர் இழப்பைப் பார்க்கிறபோது இந்த ஆண்டு கொஞ்சம் உயிர் இழப்பு அதிகமாக ஏற்பட்டிருக்கிறது.

அதற்குப் பின்னால் காயம் அடைந்தவர்கள் எண்ணிக்கை—உயிரிழப்பு ஏற்படாமல் இருக்கிற விபத்துக்கள்—குறைந்திருக்கிறது என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். ஏனவே தொழிற்சாலைகளில் ஏற்படுகின்ற இந்த விபத்துக்களை நாம் குறைத்திட வேண்டும் என்பதையும், அதற்கான வாய்ப்புகளைப் பெறவேண்டும் என்பதையும் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி ஏற்பட்ட பிறகுதான், தொழிலாளர்களுக்கு சலுகைகள் கொடுக்கப்பட வேண்டும், நிரந்தரம் இல்லாத தொழிலாளர்களை நிரந்தரப் படுத்தவேண்டும் என்ற அடிப்படையில் இந்த அரசாங்கம், 1981 ஆம் ஆண்டில் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. வேன்



1987 ஏப்ரல் 20] [திரு. எ. தங்கராசு]

அடிப்படையில், 1982 ஆம் ஆண்டு, ஜனவரி முதல் இந்தச் சட்டத்தை செயல்படுத்துவதற்கான வாய்ப்பைப் பெற்றிருக்கிறது. ஆகவே தொழிலாளர்கள் பெயரிலே மிகுந்த அக்கறை கொண்டு தான் இந்த அரசாங்கம் பணியாற்றி வருகிறது. ஆகவே அந்த வகையிலே 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த வகையிலே ஒரு கோரிக்கை மனுக்கள் வரப்பெற்று அதன்மீது பரிசீலனை செய்து, 415 கோரிக்கைகள் முடிவு செய்யப்பட்டுள்ளன என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். எனவே நம்முடைய அமைச்சர் அவர்கள் இதில் இன்னும் கொஞ்சம் வேகமாக செயல் பட்டு, பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நல்ல வாய்ப்பைத் தருவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கும் பின்னால், தொழிலாளர்கள் வேலை செய்கின்ற போது ஏற்படுகின்ற விபத்துக்களின் காரணமாக இறந்து விட்டால், அல்லது தொழிலாளர்கள் வேலை செய்கின்றபோது விபத்தில் சிக்க நேர்ந்தால், அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், 15—9—1984 ஆம் ஆண்டு அண்ணா பிறந்த நாளிலே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த வகையிலே தொழிலாளர்களை இழந்த பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 10 ஆயிரம் வழங்கவேண்டும் என்றும், ஒரு கை, கால்களை இழந்தால், அல்லது ஒரு கை, கால் இழந்தால், 5 ஆயிரம் வழங்க வேண்டும் என்றும் அரசு ஆணையை வைத்து, அதன்படி நம்முடைய அரசு தொழிலாளர்களுக்கு பணத்தை வழங்கி வருகிறது. அந்த வகையில் இந்தத் திட்டத்தின்கீழ் 208 தொழிலாளர்கள் பயனடைந்திருக்கின்றனர். இதன் அடிப்படையில் 18 லட்சத்து 42 ஆயிரம் ரூபாய் இதுவரையில் வழங்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

அடுத்து, தனியார் துறையாக இருந்தாலும், அல்லது சொந்தமாக தொழிற்சாலையை வைத்து நடத்துகின்றவர்களாக இருந்தாலும், எந்தத் தொழிலாக இருந்தாலும் பின்தங்கிய, தாழ்த்தப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு விகிதாசார அடிப்படையில் கொடுப்பது இல்லை.—நம்முடைய அரசு ஆணையின்படி, பின்தங்கிய சமுதாயத்திற்கும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கும் ஒருகுறிப்பிட்ட விகிதாசார வேலை வாய்ப்பைக் கொடுக்க வேண்டும் என்று தற்போது சட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள்—ஆனால் இந்த விகிதாசாரத்தின் அடிப்படையில் எந்தத் தொழிற்சாலையும், பின்தங்கிய சமுதாயத்திற்கும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கும் வேலைகள் கொடுப்பதில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசை வலியுறுத்தி, எந்தத் தொழிற்சாலையாக இருந்தாலும், பின்தங்கிய சமுதாயத்திற்கும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கும் விகிதாச்சார அடிப்படையில் வேலை வாய்ப்பைத் தருவதற்கான நிலைமையை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்குப் பின்னால், தமிழகத்திலே இருக்கிற தொழிற் சங்கங்கள். எந்தத் தொழிற்சங்கமாக இருந்தாலும், அதை நாம் ஒரு வரைமுறைக்கு கொண்டுவரவேண்டும். ஆகவே தொழிற் சங்கங்களை வரைமுறைக்குக் கொண்டு வருவதற்கான ஒரு வாய்ப்பை நாம் பெற்றாகவேண்டும். அது கைத்தறி நெசவாளர் சங்கமாக இருந்தாலும் அல்லது தொழிலாளர் சங்கமாக இருந்தாலும், அது எந்தச் சங்கமாக இருந்தாலும், அந்த தொழிற் சங்கங்களை ஒரு வரைமுறைக்குக் கொண்டு வரவேண்டும். ஏன் என்று சொன்னால், எந்தத் தொழிலாளி எந்தச் சங்கத்தில் இருக்கிறார் என்பதைக் கண்டுகொள்வதற்கும், அவர்களை அடையாளம் தெரிந்து கொள்ளவும் தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு 'பாஸ் போர்ட் சைசில்' ஒரு போட்டோ கொடுக்கப்படவேண்டும். ஒரு காப்பியை மேனேஜ் மென்டும், ஒரு காப்பியை தொழிற்சங்கமும், வைத்துக்கொள்ள





வேண்டும் சில சங்கங்களில் இருப்பதைப் போல, ஒரு வரிசை அடிப்படையை ஏற்படுத்தினால், அரசுக்கும் நல்லது, தொழிற் சங்கத்திற்கும் நல்லது, தொழில் நிறுவனங்களுக்கும் நல்லது என்பதை நான் கோடிட்டுக் காட்டி, அந்த நிலைமையைக் கொண்டுவரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.10)

அதற்குப் பின்னால், வடலூரில் சேஷசாயி இன்டஸ்டரீஸ் மற்றும் நெய்வேலியில் சிராமிக்ஸ், ஆகிய 2 இடங்களிலும் மருத்துவமனை ஏற்படுத்தப்படும் என்று 1982 ஆம் ஆண்டு அப்போதிருந்த மாண்புமிகு தொழிலாளர் அமைச்சர் அவர்கள் உறுதி தந்தார்கள். ஆனால் இதுவரை ஈ.எஸ்.ஐ. புதிய மருத்துவ மனை துவங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அதைத் துவக்குவதற்கு விரைவில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெய்வேலி கார்ப்பரேஷன் ஒரு பொது நிறுவனம் ஆகும். அது பொது நிறுவனமாக இருந்தாலும் நல்ல லாபத்தில் இயங்கி வருகிறது. உற்பத்தியில் முதலிடம் பெறுகிறது. விளையாட்டுத் துறையிலும் முதலிடம் பெறுகிறது. ஆகவே, இந்த நிலைமையை மேலும் மேலும் வளர்ப்பதற்குண்டான வாய்ப்பைப் பெறவேண்டு மானால் நெய்வேலியில் இருக்கின்ற காண்டிராக்ட் தொழிலை ரத்து செய்ய வேண்டும். காண்டிராக்ட் தொழிலை ரத்து செய்து அங்கே இருக்கின்றவர்கள் தார் ரோடு போடுகின்ற, சாலைகள் போடுகின்ற தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள், கட்டடத் தொழிலாளர்கள் போன்ற இப்படிப்பட்ட தொழிலாளர் களுக்கெல்லாம் நெய்வேலியின் வளர்ச்சியில் பங்குண்டு. ஆகவே அந்த வகையில் அங்கே கீழ்க்கண்ட இடங்களில், சுரங்கப் பகுதியில் சிவில் தொழிலாளர்கள் 1,200 பேர் இருக்கிறார்கள். டெக்னிக்கல் ஸ்டாப் 1,500 பேர் இருக்கிறார்கள். சுரங்கம் இரண்டாவது பகுதி 1,200 பேர் சிவில் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். டெக்னிக்கல் தொழிலாளர்கள் 1,300 பேர் இருக்கிறார்கள். அனல் மின் நிலையம்-1—200 பேர் சிவில் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். டெக்னிக்கல் ஸ்டாப் 3 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். உர ஆலைப்பகுதி—200 பேர்

V211.31 N87
126420

[திரு. ஏ. தங்கராசு] [1987 ஏப்ரல் 20

தொழிலாளர்கள் இருக்கிறார்கள். டெக்னிக்கல் ஸ்டாப் 400 பேர் இருக்கிறார்கள். காக்கட்டை ஆலைப் பகுதியில் 900 பேர் நிரந்தரம் இல்லாத சிவில் தொழிலாளர்கள்; 300 பேர டெக்னிக்கல் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இப்படி 12 ஆயிரம் நிரந்தரமில்லாத தொழிலாளர்கள் நெய்வேலி நிறுவனத்தில் பணியாற்று கிறார்கள். ஐந்து ஆண்டுக்கு மேல் 10 ஆண்டுக்கு குறையாமல் ஒவ்வொரு தொழிலாளியும், சுமார் 12 ஆயிரம் தொழிலாளர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். காண்டிராக்ட் லேபர் என்கிற முறையில் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நான் இந்த நேரத்தில் அவர்கள் நிரந்தரமான வேலைவாய்ப்பைப் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு குறைந்தபட்சக் கூலி பெறுகின்ற முறையில் ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று வழங்கப்படுகிறது. ரூபாய் 13.50 பைசாதான் வழங்கப்படுகிறது. அப்படிப்பட்ட தொழிலாளர்களை நிரந்தரம் செய்யவேண்டும். இல்லையென்றால், சென்னையில் மணலியில் இருக்கின்ற மணலி சுத்திகரிப்பு நிர்வாக இயக்குநர் தீனதயாளன் என்பவர் அங்கே கூட்டுறவு முறையில் காண்டிராக்ட் லேபரை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சென்னையிலிருக்கின்ற, எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலையில் இருக்கின்ற காண்டிராக்ட் தொழிலாளர்களைப் போல நெய்வேலியிலேயும் தொழிலாளர்களை கூட்டுறவு முறையில் காண்டிராக்ட் லேபர்களை கொண்டுவரவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் வலியுறுத்தி, வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. கு. ரமணி: மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, மார்க்ஸிஸ்ட் கட்சியின் சார்பில் இந்த மானியத்தின் மீது சில முக்கியமான விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். நேரம் இல்லாத நெருக்கடி என்னையும் பாதிக்காமல் தலைவர் அவர்கள் கொஞ்சம் பாதுகாத்து தரவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். 1986 ஆம் ஆண்டு தொழிலாளி வர்க்கம் கடுமையான கஷ்டங்களுக்கு ஆளாக்கப்பட்டு, கொடிய சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்ட காலம் இது. நூற்றுக்கணக்கில் தொழிற்சாலைகள் மூடல்; ஆயிரக்கணக்கில் வேலை இழப்பு; பட்டினியால் பாதிக்கப்பட்டு சிலர் அதனால் உயிரிழந்துள்ள நிலைமைகள். இவையெல்லாம் இந்தக் காலத்தில் நடைபெற்றுள்ளன. சென்ற



1987 ஏப்ரல் 20] [திரு. கு. ரமணி]

காலத்தில் போராடிப் பெற்ற பல உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. இவைகளை எதிர்த்து நீண்ட போராட்டங்கள் நடத்தப்பட்டு, அவைகளில் போலீஸ் அடக்குமுறைகளையும், பொய் வழக்குகளையும் தொழிலாளி வர்க்கம் தாங்கி நிற்கவேண்டி வந்தது. இத்தனை நடவடிக்கைகளும் நடைபெற்றுள்ளன. முதலாளி வர்க்கத்தின் இஷ்டம்போல் சட்ட மீறல்கள் நடைபெற்று வருகின்றன. தொழிற்சங்க இயக்கத்தை உடைக்கும் தாக்குதல்கள், தொழிலாளிகளை பழி வாங்குதல் போன்ற அக்கிரமங்களை முடிந்தவரை அவர்கள் செய்து வருகிறார்கள். அரசாங்கத்தின் கொள்கைக் குறிப்பு நமக்குத் தரப்பட்டுள்ளது. அது எப்போதும் போல் சொல்லவேண்டியவைகளை சொல்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளைத் தடுப்பதற்கு அரசாங்கம் தானாகவே முன்வந்து அதனுடைய இலாக்காக்கள் மூலம் எப்படி உழைப்பாளி வர்க்கத்தினுடைய உரிமையைப் பாதுகாப்பது என்பதை அந்தக் கொள்கைக் குறிப்பிலிருந்து நாம் புரிந்துகொள்வதற்கு இல்லை.

மூடப்பட்டுள்ள ஆலைகள். ஆலைகளைத் திறப்பதற்கு தொழிலாளர் இலாக்கா பொறுப்பு என்ற முறையில் நான் சொல்லவில்லை. அரசாங்கமே அதற்குப் பொறுப்பு. தொழிற்சாலைகள் மூடப்பட்டால் புல்லாயிரக்கணக்கான உழைப்பாளிகள் எப்படி வேலை இழக்கிறார்கள்? அப்புறம் அவர்களுக்கு தொழிலாளர் நலச் சட்டங்கள் எங்கே வேலை செய்யும்? எப்படி பாதுகாப்பு கிடைக்கும்?

1986-87ல் பஞ்சாலைகள், இன்ஜினியரிங் சிறு தொழிற்சாலைகள் பல மூடப்பட்டு இருக்கின்றன. பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையை இழந்து இருக்கிறார்கள், இதில் தலையிட்டு தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்க உருப்படியான நடவடிக்கைகளை எடுக்க முடியவில்லை. அதற்கான சரியான கொள்கை நிலை இந்த அரசுக்கு இன்னும் இல்லை. அதே மாதிரி தான் மத்தியில் ஆளுகின்ற மத்திய அரசிலும் அப்படித்தான். பஞ்சாலைகள் மூடப்பட்டு போராட்டம் நடைபெற்றது என்பதைப் பற்றி எல்லாம் இங்கே முக்கியமாக பல தோழர்கள், பல மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். 1986-ல் கோவையில் ஒரு பஞ்சாலை முதலாளிகளை உண்டாக்கும் தொழிற்சாலை உட்பட 8 பஞ்சாலைகள் மூடப்பட்டு அங்கே

[திரு. கு. ரமணி] [1987 ஏப்ரல் 20

போராட்டம் நடைபெற்றது. தொழிலாளர் நல இலாகா தலையிட்டும் பயன் இல்லை என்ற நிலைதான் ஏற்பட்டது. அமைச்சர் மட்டத்தில் தலையிட்டு வாக்குறுதி கொடுக்கப்பட்டது. ஆனால் அந்த வாக்குறுதி பிரயோசனப்படவில்லை, நிறைவேற்றப்படவில்லை. சங்கத் தலைவர்கள் உண்ணாவிரதம் இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. வேறு வழி இல்லாமல், சென்னை நகருக்கு ஊர்வலம் வந்தார்கள். இங்கே வந்தால் கோட்டை பக்கமே வரக்கூடாது என்று கைது செய்து கொண்டு போய் காவல் நிலையத்தில் வைத்தார்கள். பொது வேலைநிறுத்தம் அங்கே நடைபெற்றது. ரோடு மறியல் நடைபெற்றது. 2 ஆயிரம் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டார்கள். முதலமைச்சருக்கு இந்தச் செய்தி போய்ச் சேர்ந்து அவருடைய தலையீடும் இதில் இருந்தது என்று சொல்கிறார்கள். அதற்குப் பிறகு இந்த கோட்டைக்குள் நமது மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் எங்களிடத்தில் பேசி இந்த ஆலைகளைத் திறப்பதற்கு சில ஆலோசனைகளை உருவாக்கியதில், இரண்டே இரண்டு ஆலைகள்—ஒன்று இருக்கிற ஆலைகள் என்ன ஆனது? ஜெனார்த்தனா மில், ஏற்கெனவே சங்கத்தினருக்கும் மேனேஜ்மென்டுக்கும் இருந்த சண்டையின் காரணமாக மூடப்பட்டிருந்தது திறக்கப்பட்டது. அது இப்போது ஆட்டம் கொடுத்துக்கொண்டு இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நடராசன் அவர்கள் இங்கே சொன்னார்கள். அடுத்து ஸ்ரீஅரி மில் என்று திறக்கப்பட்டது. மூன்று ஆண்டுகளுக்கு சம்பள வெட்டு. அதற்குப் பிறகு 3 ஆண்டுகளுக்குப் பிறகு திருப்பிக் கொடுப்பது என்ற நிபந்தனையில் தான். அப்படிப்பட்ட நரக வேதனையை அனுபவித்துத்தான் அதுவும் திறக்கப்பட்டது. அப்படித்தான் அந்த ஆலை நடந்துகொண்டு இருக்கிறது. பாக்கி இருக்கிற ஆலைகள் என்ன ஆனது? ஜெனார்த்தனா மில். விசந்தா மில், மேட்டூர் பெயர்ட்செல், காவேரி நூற்பாலை, லட்சுமி சண்முக மில், ஜெயலட்சுமி மில், கதிரேசன் மில், பிரபு ஸ்பின்னிங் மில், ஆர். ஜி. இண்டஸ்ட்ரீஸ், முருகன் ஸ்பின்னிங் மில், கல்யாண ஸ்பின்னிங் மில், சிவசக்தி ஸ்பின்னிங் மில், பாலகிருஷ்ணா ஸ்பின்னர்ஸ், அட்சயா மில்ஸ், ராதாகிருஷ்ணா மில்ஸ், காட்சாத் மந்திரி அரசு அமைச்சருடைய மில்லே மூடப்பட்டு இருக்கின்றது.



1987 ஏப்ரல் 20] [திரு. கு. ரமணி]

என்ன செய்வது? இங்கே இருக்கிற தொழிலாளர்களுக்கு நாம் என்ன செய்வது? அவர்களுக்கு வேறு வழி இல்லை. பட்டினிதான் இருக்க வேண்டும். வேறு எங்கேயும் அவர்களுக்கு வேலை கிடைக்காது. அதுதான் வேலையில்லாத் திண்டாட்டத்தினுடைய போட்டி நடக்கிற சமயம்.

அதே மாதிரி இன்ஜினியரிங் தொழில். பல தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. கோவை ராமகிருஷ்ணா இன்டஸ்ட்ரீஸ் இந்த பஞ்சாலைகளுக்கு உண்டான இயந்திரங்களை உருவாக்கும் தொழிற்சாலை 4 வருடமாக மூடப்பட்டு இருக்கின்றது. எவரஸ்ட் இன்ஜினியரிங் மத்திய அரசினுடைய டிபன்ஸ் டிபார்ட்மெண்டுக்கும், ரயில்வேக்களுக்கும் பொருள்கள் செய்து கொடுக்கும் தொழிற்சாலை மூடப்பட்டு இருக்கிறது. சென்னை பின்னி இன்ஜினியரிங்ஸ் என்ன ஆனது என்று நாம் பார்ப்போம். இந்தியா போர்ஜ் பவுண்டரி இங்கே சென்னையில் இருப்பது, சிறு பவுண்டரிகள் நூற்றுக்கணக்கானவை மூடப்பட்டு இருக்கின்றன. இல்லை என்று யாரும் சொல்ல முடியாது. இங்கே இருக்கிற தொழிலாளர்களுக்கு என்ன கதி? இவர்களுடைய வேலைக்கு என்ன வாய்ப்பு? என்ன வழி? எதுவும் இதில் இல்லை. நம்முடைய நாட்டில் இருக்கிற பயங்கரமான நெருக்கடியின் நேரடி தாக்குதல் பளு அந்தத் தொழிலாளர்கள் மீது விழுகிறது என்று சொல்லுவது இது தான். இதைப் பாதுகாத்து எல்லாவற்றையும் இந்த அரசு முடித்துக் கொடுக்க முடியும் என்று நாங்கள் நினைக்கவில்லை. இவர்கள் உள்ள வேலையை இழக்காமல் இருப்பதற்கு பாதுகாப்பு என்ன? அதற்கு வழி என்ன? அதற்கு எதாவது சட்டங்கள் இந்தக் காலத்தில் செய்ய முடிந்ததா? இல்லையில்லை. [illegible] போகிறது. இப்படி பல ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலையை இழந்து இருக்கிறார்கள். பின்னி கம்பெனி, இங்கே இருக்கிற பெரிய கம்பெனி அதுபற்றி உங்களுக்குத் தெரியும். அது மூடப்பட்டு இன்றைக்கும் அது பேச்சுவார்த்தையில் இருக்கிறது. சுப்ரீம் கோர்ட் வரைக்கும் போய் சம்பளம் வாங்குவதற்கு [illegible] நடக்க வேண்டி வந்தது. அங்கே 10-பி சட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். 10-பி சட்டம் நமக்கு ஒரு பெரிய [illegible]. [illegible] தொழிலாளர் நலத்துறை அமைச்சர் [illegible] சொன்னார்கள் [illegible]? [illegible] இருந்தபோது [illegible], என் [illegible] பார்க்க

[திரு. கு. ரமணி] [1987 ஏப்ரல் 20

முடியாது. அப்படிப்பட்ட சட்டம் அது என்றார்கள். அப்போதே நாங்கள் சொன்னோம், இரண்டு பக்கமும் கூர்மை இருக்கிற கத்தி இது. எங்கள் கழுத்தையும் அறுக்கும். சரியாகப் பயன் படுத்தினால்தான் எதிரிகளைத் தாக்கும். இப்படிப்பட்ட அந்தச் சட்டத்தைத்தான் அங்கே போட்டது. அந்தச் சட்டத்தை மதித்தார்களா அந்த முதலாளிகள். அதை நிறைவேற்ற முடிந்ததா? அந்தச் சட்டம் போட்டதால் அன்றைக்கு இருந்த தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் காலி, பதவி இழந்தார். அந்தச் சட்டத்தினால் இது நடந்தது. வேறு ஒன்றும் நடக்கவில்லை. என் என்றால் முதலாளிகள் பவர்புல், அந்த முறையில், அந்தச் சட்டத்தின்படி கொடுக்க வேண்டிய காசை வாங்குவதற்கே சுப்ரீம் கோர்ட் வரை போக வேண்டிய நிலை ஏற்பட்டது. நம்முடைய தொழிலாளர் நல இலாகா சொன்னால் தூக்கி எறிந்து விடுவார்கள் முதலாளிகள். இன்றைக்கும் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது.

அதே சமயத்தில் திருப்பூர் பனியன் தொழிலாளர்கள் 20 ஆயிரம் பேர் போராடினார்கள். ஒரு பஞ்சப்படியே

(பிற்பகல் 12.20)

இல்லாத கேஸ் அது. அந்தத் தொழில் உண்டானதிலிருந்து பஞ்சப்படி கொடுக்கவில்லை. கடைசியில் 10-பி சட்டத்தைப் போட்டு அந்தச் சட்டமும், ஒவ்வொரு சமயத்திலே இப்படிப் போடுகிறார்கள். இருந்தால் கூட, அந்தச் சட்டம் போட்டு, பஞ்சப்படி மாதம் ரூ. 46 கொடுக்க வேண்டுமென்று போட்டார்கள். இன்றைக்கு அந்தத் தொழிலாளிகள் வாங்கிக் கொண்டு வருகிறார்கள். மாதம் ரூ. 46 கொடுக்கப்பட்டு வருகிறது. அது ஒரு நல்ல நடவடிக்கை. அதைத் தவறு என்று சொல்லவில்லை. ஆனால் அந்தக் கேசை கோர்ட்டிற்கு அனுப்பி மூன்று வருஷம் தாண்டிவிட்டது. இந்த மூன்று வருடத்திற்குள் ஒரு சம்பள உயர்வு ஒப்பந்தமாவது அந்தத் தொழிலாளிகளுக்கு வந்திருக்க வேண்டும். இதிலே அந்த முதலாளிகளுக்குத்தான் என்ன லாபம் கிடைத்தது? ஒரு மூன்று ஆண்டு காலத்திற்கான ஒரு சம்பள உயர்வு ஒப்பந்தம் தேவையில்லாமல் போய்விட்டது. அப்படி தொழிலாளிகளுக்கு நாமம் சாத்தியாகிவிட்டது. அப்படி போய் விட்டது. கேஸ் இப்போது தான் ஸ்பெஷல் இண்டஸ்ட்ரியல் ட்ரிபியூனல் முன் வந்திருக்கிறது. அப்படிப்பட்ட நிலை வந்



1987 ஏப்ரல் 20] [திரு. கு. ரமணி]

திருக்கிறது. 10-பி சட்டத்தினுடைய அற்புதமான சாதனைகளை இப்படியும் பார்க்க வேண்டியிருக்கிறது. சில இடங்களில், சில நேரத்தில் முதலாளிக்குக் கொஞ்சம் தாக்குதல் கொடுப்பதற்குப் பயன்படுகிறது. அவர்களும் தொடர்ந்து திரும்பத் தாக்குகிறார்கள். லேபர் டிபார்ட்மெண்ட் இதற்கு ஒன்றும் பிரமாதமாக செய்ய முடியாது. அப்படிப்பட்ட நிலை. அப்படி பாதிக்கப்பட்ட தொழிலாளிகளுக்கு நீதி கிடைக்காத நிலை. எங்கே போனாலும் அவர்களுக்கு நீதி கிடையாது. ஆலைகளில் மூடல்கள், கதவடைப்புகள் பற்றி தொழிலாளர் இலாகா மூலம் நாம் பிரச்சினை கொண்டுபோனால், அநேகமாக அது தீர்வதே கிடையாது. தொழிலாளர் இலாக்காவில் இருக்கக்கூடிய அதிகாரிகள் மீது தப்பு ஒன்றும் நான் சொல்லவில்லை. அவர்கள் முயற்சி எடுக்கிறார்கள். அவர்கள் போடுகிற உத்தரவிற்கும், தாக்கீதிற்கும் யார் மதிப்பு கொடுக்கிறார்கள்? அந்த முதலாளிகள் கொடுக்கிறார்களா என்றால் கொடுப்பதில்லை, ஏன்? கைது செய்து சிறையில் அடைக்கக்கூடிய ஆபத்து ஒன்றும் அவர்களுக்கு இல்லை. அவர்களுக்கு பாதுகாப்பு இருக்கிறது. தண்டனை பைன் தானே. அதை கம்பெனியின் லாபத்திலிருந்தே கட்டி விடுவார்கள். ஆகவே அதிகாரிகள் முயற்சி எடுத்தால் கூட முடியாது. கேஸ்கள் விசாரணைக்கே வருவதில்லை. பல கேஸ்கள் விசாரணைக்கு வந்தால்கூட, முதலாளிகள் கேஸ்களுக்கு வருவதில்லை. தொழிலாளிகள் பாதுகாப்பு கிடைக்காமல் வருடக் கணக்கில் போராடி, பலமிழந்து அடிமைச் சீட்டில் கையெழுத்திடுகிற அளவிற்கு சரணாகதி அடைகிறார்கள். அப்போது தான் கம்பெனி திறக்க வேண்டி வரும். இப்போது நடக்கிற வேலையே அப்படித் தான். இப்போது சிங்காநல்லூரில் ஜனார்த்தனா மில்லில் அப்படிப்பட்ட முயற்சி நடக்கிறது. எந்த உரிமைகளைத் தொழிலாளர்கள் பெற்றிருந்தாலும், அத்தனையும் 'கம்ப்ளீட்லி, வைப்ட் அவுட்' ஒரு மொத்தத் தொகையை ஊதியமாகக் கையில் வாங்கிக் கொள்ளச் சொல்கிறார்கள். 'நீ போய் வேலை செய்' என்று சொல்கிறார்கள். 55 வயதானவர்களை 'வெளியே போ' என்று விரட்டுகிறான். பூரா தொழிலாளிகளையும் கம்பெனியை விட்டு வெளியிலே போகச் சொல்கிறார்கள் சில முதலாளிகள். இதற்கெல்லாம் பாதுகாப்பே கிடையாது. அப்படி தொழிலாளிகள்

[திரு. கு. ராமணி] [1987 ஏப்ரல் 20

பட்டினி தாளாமல் வருடக் கணக்கில் போராடி, அடிமைச் சீட்டில கையெழுத்திட்டு வேலைக்குத் திரும்புகிற நிலையை முதலாளிகள் வகுத்து வைத்திருக்கிறார்கள். இது முதலாளிகள் இஷ்டம். அவர்கள் இஷ்டம் நிறைவேறுகிறது. அவர்கள் நினைப்பது நிறைவேறுகிறது, பல பகுதிகளில் அதைத் தடுக்க முடியாத நமது அரசாங்கத்தினுடைய கொள்கைக்கு என்ன பெயர் சொல்வது, சொல்ல முடியவில்லை. ஒரு கொள்கையும் இல்லாத நிலையில் இந்த தொழிலாளர் இலாக்கா இன்றைக்கு உழன்று கொண்டிருக்கிறது என்று சொல்வது சரியாக இருக்கும். ஆனால் இது சரியல்ல. மாற்றப்பட வேண்டும். நீங்கள் சாதனையைப் பற்றி, சில இன்சூரன்ஸ் ஸ்கீம் கொண்டு வந்திருப்பதைப் பற்றி நன்றாகச் சொல்லுங்கள். அதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் அதெல்லாம் இன்றைக்கு கணக்காகாது. அதெல்லாம் இன்றைக்கு உள்ள நிலைமைக்கு ஈடு அல்ல. முதலில் அவர்கள் உயிரோடு இருப்பதற்கு வேலையிருக்கிறதா? உத்தரவாதம் இருக்கிறதா? என்பதே கேள்வி.

அடுத்தது கோர்ட்டுக்கு பிரச்சினைகளை விடுவதில் காணப்படுகிற பெரிய சங்கடம், பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் கோரிக்கையைப் பொறுத்தவரையில், கோர்ட்டிற்குப் போவது கொள்கை என்று சொன்னார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் பிரச்சினைகளை தமிழக அரசு கோர்ட்டிற்கு அனுப்ப மறுத்துள்ளது. சுப்ரீம் கோர்ட் வரைக்கும் போய் விவாதம் பண்ண வேண்டியிருக்கிறது. அதற்கு ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற உதாரணம். டி.வி.எஸ். கேஸ் ஒன்றே போதும். 1978 ஆம் வருடத்தில் 154 பேரை வெளியே நிறுத்தி அங்கே இருக்கின்ற தொழிற் சங்கத்தை உடைப்பது அந்த மேனேஜ்மென்டினுடைய திட்டம். அப்படிப்பட்ட ஒரு காரியத்தைச் செய்துவிட்டு அவர்கள் அந்தனை பேரும் மன்னிப்பு கையெழுத்து போட்டால், வேலை கொடுக்கிறேன் என்று சொல்லி, 154 பேரும் எழுதிக் கொடுத்தார்கள். ஆனால் 134 பேர்களை வேலைக்கு வைத்து, 20 பேரை கழித்துவிட்டார்கள். சொத்தைக் கத்தரிக்காயைக் கழிப்பது போல் கழித்து விட்டார்கள். இந்தக் கொடுமை ஒன்றிற்காக சுப்ரீம் கோர்ட்டிற்குப் போன பிறகு, சுப்ரீம் கோர்ட் பரிசீலனை செய்து, இப்படிப்பட்ட நடவடிக்கை சரியல்ல, இதை



1987 ஏப்ரல் 20] [திரு. கு. ராமணி]

உடனடியாகப் பரிசீலனை செய்து, கோர்ட்டிற்கு அனுப்ப இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று திருப்ப இங்கே அனுப்பினார்கள். ஆனால் அரசு அளித்த பதில் என்ன? அதுவும் அரசு எடுத்த முடிவு சரியானது என்ற ஒரு பிடிவாதம். இங்கேயிருந்து திருப்ப பதில் அங்கே போனதும், சுப்ரீம் கோர்ட்டிலிருந்து அவர்களுடைய கேஸ் ரெபரன்ஸ் கொடுக்கப்பட்டு, கோர்ட்டிற்கு அனுப்பப்பட்டு, செலவுத் தொகை ரூ. 3,000 கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பு சொன்னார்கள். நான் இன்றைக்கு ஏன் இதைச் சொல்கிறேன் என்று கேட்டால், இவ்வளவு தூரத்திற்கு ஏன் பிடிவாதம் என்று தான் புரியவில்லை. ஒரு தொழிலாளிக்கு சட்டப்படியோ அல்லது முதலாளிகள் நடத்துகின்ற விசாரணையிலோ கிடைக்கின்ற நீதி அல்லது நீதியின்மை—இதைப்பற்றி விசாரிக்கத்தானே ஒரு ட்ரிபியூனல். சர்க்காருடைய பிடிக்குள்ளே இருக்க வேண்டும் என்று ஏன் எதிர்பார்க்கிறீர்கள்? என்ன இன்டரஸ்ட்? ஏன் அதை கோர்ட்டுக்கு அனுப்புவதில்லை? என்ன கஷ்டம்? என்ன கெடுதல்? அதைச் செய்வதில்லை. அந்தக் கொள்கை நீடிக்கின்றது. அது நீடிக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது குறைந்தபட்ச கூலிச் சட்டம். இப்போது புதிது புதிதாக பல சிறு தொழில்களைப் பட்டியலிலே கொண்டு வருவதற்கு அதிகாரிகள் முயற்சி எடுத்திருக்கிறார்கள். அது நல்லது. அதை வரவேற்கிறேன். ஆனால் 1981-லே பெங்களூரில், தென் பிராந்திய தொழிலாளர் நல அமைச்சர்களுடைய கூட்டத்தில், கூலி நிர்ணயம் செய்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டால் அல்லது விலைவாசி 50 புள்ளிக்கு மேலே உயர்ந்தால், இந்த இரண்டிலே எது வந்தாலும் திரும்பவும் பரிசீலனை பண்ணி குறைந்தபட்ச கூலியை மாற்றியமைக்கணும் என்று தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது. செய்கிறோமா? செய்யவில்லை. இது நடைமுறைப்படுத்தப்பட்டதா? (மணியடிக்கப் பெற்றது). எவ்வளவு தொழிலாளர்கள் என்னென்ன தொழில்களில் கூலி உயர்வைப் பெற்றார்கள் என்பதையெல்லாம் நீங்கள் சரியான முறையிலே இங்கே விளக்கியிருந்தால் நன்றாக இருக்கும். ஆனால் அந்த சிறு சிறு தொழில்கள் எல்லாம் இந்தக் கொள்கை குறித்து நின்றிருக்கிறது என்னவென்று கேட்டால், சில கூலி

[திரு. கு. ரமணி] [1987 ஏப்ரல் 20

நிர்ணயம் சில தொழில்களுக்கு வந்திருக்கிறது. அப்படி கூலி நிர்ணயம் வந்தாலும் அது நடைமுறைக்கு வராது. கூலி நிர்ணயம் செய்து இவ்வளவு நாள் ஆயிற்று, திரும்ப இரண்டு வருடங்களுக்குப் பிறகு கவனித்திருக்க வேண்டியது அல்லது 50 புள்ளி ஏறினால் கவனித்திருக்க வேண்டியது. அதைச் செய்யவில்லை. இவையெல்லாம் நீங்கள் செய்யாத விஷயங்கள். செய்திருந்தால் எவ்வளவு தொழிலாளிகள் அதனால் நன்மை அடைந்திருப்பார்கள். அது வரவில்லை. தோல் பதனிடும் தொழிலில் 1978-லே நிர்ணயிக்கப்பட்ட கூலி, பிறகு 1986-ல் 8 வருடங்களுக்குப் பிறகு மறுபடியும் ஒரு நிர்ணயம் ஏற்படுகிறது. அந்தக் கூலியும் கொடுப்பதில்லை. எங்கே சங்கம் கொஞ்சம் பலமாக இருக்கிறதோ அந்த இடத்தில் கிடைக்கும். மற்ற இடத்தில் கிடைக்காது. அப்படிப்பட்ட சர்க்காருடைய சட்டங்களை என்னதான் செய்வது? தொழிற்சங்கங்கள் போராடும் என்ற தத்துவத்தை எல்லாம் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். நாங்கள் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அது மட்டும் போதாது. அரசாங்கம் முனைப்பாக இருந்து இதைச் செய்ய வேண்டும். மற்ற இடங்களில் அந்தக் கூலி கிடைக்கவில்லை. சில இடங்களில் கிடைக்கின்றது. இதை தொழிற்சாலை இணை ஆய்வாளர் மூன்று ஊனப்பியும் அதற்கு நமக்குத் தீர்வு இல்லை. அதேமாதிரி கைத்தறி நெசவுத் தொழிலாளிகளுக்கு 1—5—1983 முதல் குறைந்த பட்ச கூலி அமுல் நடத்த தமிழக அரசு உத்தரவு இட்டது. இதை முதலாளிகள் ஆட்சேபித்து உயர்நீதி மன்றத்தில் வழக்கு, 4 ஆண்டுகளாக கூலிச் சட்டம் அமுலாகவில்லை. குறைந்தபட்ச கூலியை 2 வருடத்துக்கு ஒருமுறை திருத்தி அமைப்பதாக இருந்தால் 1985-லும், 1987-லும் இரண்டு தடவை திருத்தி அமைத்திருக்கலாம். அது போச்சு. அது நடக்கவில்லை. அதே மாதிரி கைத்தறித் தொழிலாளர்கள் சட்டத்தை அமுலாக்குவதிலே ஒன்று பிரச்சினை. லேபர் டிபார்ட்மெண்ட் அமுலாக்குமா? ஹேண்ட்லூம் டிபார்ட்மெண்ட் அமுலாக்குமா? இதே மாமன்றத்தில் சொல்லப்பட்டது, 5, 6 மாதங்கள் நாங்கள் பரிசீலனை பண்ணிப் பார்த்து பிறகு முடிவு செய்வதாக. லேபர் டிபார்ட்மெண்ட் அமுலாக்கும் என்று சொன்ன அமைச்சரை இப்போது கேட்க வழியில்லை. அந்த அமைச்சர் இப்போது இல்லை. அதற்கு அடுத்து வந்த அமைச்சரும் இல்லை. இப்போது இருக்-



1987 ஏப்ரல் 20] [திரு. கு. ரமணி]

கின்ற அமைச்சரைத்தான் கேட்க வேண்டும். I have to sympathise with you நீங்கள் வந்து 2, 3, 4 நாட்கள்தான். இல்லையென்றால் கொஞ்ச நாள் ஜாஸ்தி இருக்கலாம். அவர் என்ன பண்ணுவார்? இது சர்க்காருடைய கொள்கை. அவருக்கும் அதில் பொறுப்பு இருக்கிறது. அவரையும் விட முடியாது. பரிசீலனை நடக்க வேண்டும். அப்படி அந்த குறைந்த பட்ச கூலி நிர்ணயம் 2 தடவை செய்ய முடியாமல் போய் விட்டது. கோர்ட்டில் இந்த கேஸ்களை துரிதப்படுத்தி கொண்டு வருவதற்கு இந்த இலாக்கா ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது? இன்னொரு விஷயம். என்ன கொள்கை அடிப்படை? ஒன்றும் நமக்குப் புரியமாட்டேன் என்கிறது. சில நேரங்களில் மற்றப் பகுதிகளில் வேலையற்ற தொழிலாளிகள் கும்பலாக வந்து நிற்பார்கள். அங்கே போய் உனக்கு இத்தனை அணா கூலி, இந்தனை ரூபா கூலி என்று சொல்லி கூட்டிக்கொண்டு போவார்கள். அந்தக் கொள்கையா? அப்படியானால் அதற்கு இந்தச் சர்க்கார் தேவையில்லை. சர்க்காருக்கு என்ன கொள்கை? விலைவாசி ஏற்றத்தை ஓரளவாவது ஈடு கட்டுகின்ற முறையில் அந்த கூலி நிர்ணயம் இருக்க வேண்டும். விலைவாசி ஏற்றத்தின் பயங்கர விளைவுகளைக் கண்டுகொள்ளாத கொள்கையாக இன்றைக்கு இருக்கிறது. அது தான் கொள்கை. நெசவாளர்கள் பட்டினிக்கு இந்தப் போக்கு தான் காரணம். குறைந்த பட்ச கூலியை நிர்ணயிக்கும்போது ஓரளவிற்கு அன்றைக்கு அமுலில் இருக்கக்கூடிய நியாயமான கூலியாக அது வரவேண்டும். அது இல்லாமல் நாங்கள் தொழிலாளிகளைக் காப்பாற்றுவோம். தொழிலாளிகளைக் காப்பாற்றுவோம் என்று சொல்வது சரியல்ல. தொழிலாளிகளைக் காப்பாற்றவில்லை. அவர்களுக்கு அடிக்கடி கைகளில் காப்புகளை ஏற்றுகிறீர்கள் போலீஸ் அரெஸ்ட் மூலம். காப்பாற்றுவது என்பது அப்படியும் நடக்கிறது, இப்படியும் நடக்கிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து காண்ட்ராக்ட் தொழிலாளிகள் சில தொழிற்சாலைகளில் ஒப்பந்தத்தை சீரமைப்பதே ஒரு பயங்கரமான கஷ்டம். ஏதாவது ஒரு சங்கத்தில் செல்வாக்கு படைத்த தலைவர் இருந்தால் போதும். அரசாங்க வட்டாரத்திற்கெல்லாம் போய் வருவதற்கு, ஒப்பந்தங்களைத் தடுப்பதற்கு. அங்கே 12 (3)-ன் கீழ் ஒரு ஒப்பந்தம் போட வேண்டும் என்று மெஜாரிட்டி

[திரு. கு. ரமணி] [1987 ஏப்ரல் 20

தொழிலாளர் சங்கம் சொன்னாலும் கூட லேபர் இலாக்கா செய்யாது. ஏன் செய்யவில்லை? அதற்கு அவர்களுக்கு என்ன தடை?

(பிற்பகல் 12-30)

சொல்ல முடியாத வேறு ஏதாவது இடையூறு இருக்கலாம். ஒசூர் அசோக் லேலண்டிலே இதுதான் நடந்தது. நடந்து கொண்டிருக்கிறது. இப்போது பேச்சுவார்த்தை நடக்கிறது என்று நினைக்கிறேன். 12 (3)-ன் கீழ் ஒப்பந்தம் செய்வதற்கே தொழிலாளர் இலாக்கா தயாராக இல்லை. அதைச் சொல்ல முடியாத நிலை. அப்படிப்பட்ட இந்த எக்ஸ்ட்ரேனியஸ் இன்ப்ளுயன்ஸ் எப்படியோ எக்சர்ட் ஆகிறதே அதை உடைத்துத் தகர்க்க வேண்டும். அது இல்லாமல் நீங்கள் கொள்கை இருக்கிறது என்று சொல்லிப் பிரயோசனம் இல்லை. நீங்கள் தொழிலாளர்களுக்குச் செய்யக்கூடிய நல்ல காரியம் அந்தத் தடைகளை உடைப்பதுதான் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

காண்ட்ராக்ட் தொழிலாளர்கள்—அரசுத் துறை நிறுவனங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் அந்த காண்ட்ராக்ட் முறை எக்கச்சக்கமாக இருக்கிறது. அரசுத் துறையிலேயும் எக்கச்சக்கமாக இருக்கிறது. காண்ட்ராக்ட் முறையைக் கட்டுப்படுத்துவது ஒழிப்பது என்ற கொள்கையெல்லாம் போச்சு, மின் வாரியத்திலே இருக்கிறது. போக்குவரத்துத் துறையிலே இருக்கிறது. அரசு சிமெண்ட் ஆலைகளிலே இருக்கிறது. அரசு ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் குழாய் கம்பெனியிலே இருக்கிறது. இப்படிப்பட்ட பல்வேறு துறைகளை நான் சொல்ல முடியும். இதைக் கண்டுதான் கீழே இருக்கக்கூடிய அத்தனை தனியார் முதலாளிகளுக்கும் ரொம்ப சந்தோஷம், சர்க்காரே நம்ம பாதையிலே போகிறதப்பா என்று சொல்லி வருகிறார்கள். அந்த மாதிரி நிலை. இதையெல்லாம் கொள்கை அறிக்கையிலே பார்த்தால், அப்படிப்பட்ட விஷயங்கள் இல்லை. என்னைக் கேட்டால் அந்த காண்ட்ராக்ட் லேபர் ரெகுலேஷன் அபாலிஷன் என்ற சட்டம் தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் கோல்ட் [illegible] என்றுதான் சொல்ல விரும்புகிறேன். [illegible] முடியவில்லை. காண்ட்ராக்டர்களுக்கு [illegible] [illegible] இன்றைக்கு இருக்கிறது. [illegible]



1987 ஏப்ரல் 20] [திரு. கு. ரமணி]

அரசாங்கம் கவனிக்கவில்லை என்று சொன்னால், அந்த காண்ட்ராக்ட் தொழிலாளிகளுடைய எழுச்சியே ஏற்படும் இந்த நாட்டிலே. அது யாரும் சொல்லி அல்ல. அவர்களே செய்ய வந்து விடுவார்கள். வேறு வழி கிடையாது.

அதேமாதிரி, இந்த அறிக்கை பக்கம் 26-லே 151 பேர்களை முதலாளிகளாகப் பதிவு செய்ததும், 1.046 காண்ட்ராக்டர்களுக்கு பதிவு செய்து உரிமம் வழங்கிய விவரமும் இருக்கிறது. எப்படி அவர்கள் இந்தச் சட்டத்தையே சர்க்கம்வென்ட் பண்ணி, எப்படி காண்ட்ராக்டை அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் இன்றைக்கு? அப்படிப்பட்ட விவரங்கள் இதில் இல்லாமல் இருப்பது ரொம்ப வருந்தத்தக்கது.

அதேமாதிரி வேலை நிரந்தரச் சட்டம் அமுலில் இருக்கிறது என்று சொல்கிறார்கள்—480 நாட்கள் சர்வீஸ் ஆனால் நிரந்தரம். இப்போது நாம் போக்குவரத்துத் துறையிலே 280 நாட்கள் சர்வீஸ் ஆனால் நிரந்தரமாக்குவது என்று ஒப்பந்தமே பண்ணியிருக்கிறோம். நல்ல ஒப்பந்தம். நாங்கள் அத்தனை பேரும் போக்குவரத்து அமைச்சர் அவர்களும் இருந்து செய்த ஒப்பந்தம். ஏன் அப்படிப்பட்ட முறைகளை மற்ற இலாக்காக்களிலே கையாளக் கூடாது? ஆனால் அங்கே அமுல் நடத்துவதில் சில கொள்கைகள் இருக்கின்றன. அங்கே ஒவ்வொரு கார்ப்பரேஷனிலும் ஒவ்வொரு விதமான இன்டர்ப்பிரட்டேஷன் கொடுக்க ஆரம்பித்து இருக்கிறார்கள். அது சரியல்ல. ஒப்பந்தமான கற்குப் பிறகு 240 நாட்களா? ஏற்கெனவே 10 வருடமாகியிருந்தால் அது காலியாகிறதா என்று எல்லாப் பிரச்சினைகளும் இருக்கின்றன. இவையெல்லாம் பேசித் தீர்க்கப்பட வேண்டியவை. ஆனால் ஒப்பந்தத்தை . . . (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள்.

திரு. கு. ரமணி: முடிக்கப் போகிறேன். கொஞ்சம் தயவு காட்ட வேண்டும். இதே மாதிரி இவைகளை ஒழுங்குபடுத்துகிற நிலையான [illegible] பல பொருள்களிலே நடவடிக்கைகள் கிடையாது. காசுவல் காண்டிராக்ட் லர்னர் பிரிவுகள் என்று இருக்கிறது,

[திரு. கு. ரமணி] [1987 ஏப்ரல் 20

அரசுத் துறையிலேயே. இது முழுவதும் குறைந்த கூலிக்கு ஆளை வேலைக்கு வைக்கிற தனியார் துறையினுடைய தந்திரம் தான். வேறு ஒன்றுமில்லை. அரசு கொஞ்சம் கடுமையாக இருந்து அதில் செயல்பட வேண்டும்.

அரசாங்கத்திற்கு தேயிலைத் தோட்டக் கழகம் என்று ஒன்று இருக்கிறது. 'டான் டீ'. அதிலே ஒரு நிலையான விதியை உண்டாக்க வேண்டும் என்று சொன்னால், சர்க்கார் விதியையும், வேறு நிலையான விதிகளிலே இருக்கக்கூடிய சில அம்சங்களையும் சேர்த்து ஒரு அவியல் பட்டியல் வைத்து ஏதோ செய்து கொண்டு இருக்கிறார்கள். அதற்கு ஒரு காரஸ்பான்டன்ஸ், லேபர் கமிஷனருக்கும் மற்றவர்களுக்கும் கூட நான் அனுப்பி வைத்தேன். அப்படிப்பட்ட நிலை இருக்கிறது அரசாங்கத் துறையிலே இருக்கக்கூடிய பல நிர்வாகத் தலைவர்களுடைய போக்கு அது.

கூட்டுறவு சர்க்கரை ஆலையிலே தொழிலாளர்களுக்கு சம்பளம் நிர்ணயிப்பதற்கே கூட நீண்ட காலத் தாமதம். போனஸ் எல்லாம் ஒரு தலைப்பட்சமான அறிவிப்பு. எல்லாம் பிரகடனங்கள்தான். பழைய காலத்து ராஜாக்கள் பிரகடனம் மாதிரி, பிரகடனம்தான். அது எல்லாம் தொழிற்சங்கங்களோடு பேசி முடிவு செய்யவில்லை.

அதுமாதிரி போக்குவரத்துக் கழகத்திலே ஒப்பந்தம் அமுலாக்குவதிலே சில குறைகள் இருக்கின்றன. அதையெல்லாம் பேசி, தொழிலாளிகளுக்கு நியாயம் வழங்க வேண்டும். முதல் ஸ்தாபன தொழிலாளர்கள் குறையை மிகுந்த அசிரத்தையுடன்தான் இந்த அரசு அணுகுகிறது என்பது எங்களுடைய கருத்து. ஆள் குறைப்பு. வேலை நேரம் அதிகம். நகரத்திலே போதுமான வீட்டுகள் இல்லை. சுகாதாரம் கெட்டுப் போகிறது. 1973 முத்தையா கமிட்டி சிபாரிசு செய்தபடி, அந்த சிபாரிசுகள் அமுலாக்கப்படவில்லை. அந்த நிலைக்கு ஆளாகி இருக்கிறவர்கள் பெரும்பாலான தாழ்த்தப்பட்ட மக்கள்.

அதேமாதிரி குடிநீர் வடிகால் வாரியத் தொழிலாளிகள். இன்றைக்கு இங்கே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானமே வந்தது. அவர்களுடைய பிரச்சினைகள் பேசி முடிக்கப்பட வேண்டும். சங்கமே வைக்கக்கூடாது என்று அதிகாரிகள் போராடுகிறார்கள். நான் கேட்கிறேன். சர்க்காருடைய கொள்கை என்ன? சங்கம் கூடாது



1987 ஏப்ரல் 20] [திரு. கு. ரமணி]

என்பதா? எப்படி அந்த அதிகாரிகளை அப்படிப் போராடுவதற்கு அனுமதித்தீர்கள்? கடைசியிலே ஐகோர்ட்டிலே போய் சங்கம் வைக்கலாம் என்று உரிமை கொடுத்து, அவர்களுக்கு போனஸ் கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பு கொடுத்த பிறகு, போனஸ் வழங்கப்பட்டது. இப்போது அதற்குள்ளே வேறுவிதமாக, தாங்கள் நினைக்கிற மாதிரி அந்த சங்கத்தை ஆட்டிப் படைக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். சுருங்கச் சொன்னால், கையாள் சங்கம் வருமா என்ற நிலை. அது எல்லாம் கூடாது. அது சட்ட விரோதமானது. கூட்டுறவு சிறப்பங்காடியிலே இருக்கக்கூடிய ஊழியர்கள் இங்கே வந்தார்கள்—அவர்கள் அரசாங்கத்தைப் பார்த்து பேசினால் ஏதாவது கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்கலாம் என்று எண்ணி வந்தார்கள். ஆனால், அவர்களுக்கு நல்ல தடியடிப் பிரயோகம் கிடைத்தது. அதை விடுத்து, தயவுசெய்து—கூட்டுறவுத் துறையிலே வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு வேறு வழியே கிடையாது—அவர்களுடன் பேசி, பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

இதை அரசு கவனிக்க வேண்டும். தொழிற்சாலைச் சட்டங்கள் என்பவை அமுலாக்கப்பட முடியாதவை அல்ல. ஆனால் இன்றைக்குப் பலவிதமான தவறுகள் இதிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதை நாம் சரி செய்தாக வேண்டும். அதை ஆய்வு செய்கிற அதிகாரிகள், தொழிற்சாலைக் கட்டிடங்கள், கூரை, ஜன்னல்கள், வெளிச்சம், குடிநீர் டேங்க், கேன்டீன், காற்று வசதி என்று இப்படி எல்லாவற்றிற்கும் தொழிற்சாலை நிர்வாகம் வழி செய்துள்ளதா என்று பார்க்க வேண்டும். அது நடப்பதில்லை. ஆனால் தொழிலாளர்களின் நடைமுறை—அவர்களின் வேலை முறை இருக்கிறதே—சர்வீஸ் கன்டிஷன் இருக்கிறதே—இவைகளைப்பற்றி மட்டும் தொழிற்சங்கம் கேட்கக்கூடாது என்று நிர்வாகிகள் குதிக்கிறார்கள். அது சரியில்லை. அவர்களுக்கு முறையான அளவுக்கு சம்பள உயர்வு கொடுக்க வேண்டும் (மணி அடிக்கப் பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் ரொம்ப நேரம் கொடுத்துவிட்டேன். நீங்கள் கொஞ்சம் தயவு காட்டுங்கள். இன்னும் நிறைய பேர் பேச இருக்கிறார்கள்.

[1987 ஏப்ரல் 20

**திரு. கு. ரமணி:** இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். அடுத்து, தனியார் மோட்டார் தொழிலாளர்களைப் பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அரசுத் துறையைப் பொறுத்தவரையில் அந்தத் தொழிலாளர்களைப்பற்றி ஓரளவுக்கு திருப்தியாக ஒப்பந்தம் போட்டிருக்கிறோம். ஆனால் தனியார் கம்பெனி தொழிலாளர்கள் இன்றைக்கும் கடும் கஷ்டங்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே அவர்களுடைய பிரச்சினையை சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களும், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களும் கவனத்தில் கொண்டு இருவரும் இதில் கவனம் செலுத்தி நல்ல முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கு மேலும் ஒரு முக்கியமான விஷயம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே நீங்கள் உட்பட இதைக் கவனிப்பது நல்லது. உங்கள் கடைக் கண்பார்வையையும் இந்தப் பக்கம் திருப்புங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

லேபர் இலாக்காவில் இருக்கும்படியான—அங்கே வேலை செய்யும்படியான அதிகாரி—ஊழியர்களிடையே இன்றைக்கு மகிழ்ச்சி இல்லை. கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. நமது சட்டங்களையெல்லாம் அமுலாக்க வேண்டியவர்கள் அவர்கள். பதவி உயர்வுகள், மற்றும் இதர சலுகைகள் கொடுக்கிற விஷயத்தில் அவர்களுக்கு மனக் கஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது. அவர்கள் அதைக் கேட்டு தொழிற்சங்கம் வைக்க முடியாது என்பதால், அதை அரசாங்கம் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டி எ.சி.எல். பதவிகள் இன்றைக்கும் நிரப்பப்படாமல் விட்டிருக்கிறதென்ற தகவல் எனக்கு வந்திருக்கிறது. அவர்கள் நீதிமன்றம் சென்று நீதி வாங்கக்கூடிய சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவர்களைக் கொஞ்சம் கலந்து பேசி ஒரு நியாயமான முறையில் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளர் ஆலோசனைக் குழுக்கூட்டம் 1984 ஆம் ஆண்டுக்குப் பிறகு 2 தடவைதான் நடைபெற்றிருக்கிறது. அது 4, 5 தடவையாவது நடந்திருக்க வேண்டும். எனவே அந்தக் கமிட்டி கூட்டம் எப்படியாவது அடிக்கடி நடக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து வீட்டு வாடகைச் சட்டம் கொண்டு வரவேண்டும். அதற்கான சட்ட முன்வடிவு சட்டசபையில் கொண்டு வரப்படும் என்று முன்னே சொல்லப்பட்டும் இதுவரை சட்டம் கொண்டு வரப்படவில்லை. அந்தக் கமிட்டியில் நாங்கள் இருப்பதற்கு லாயக்கு இல்லை என்று எங்களில் பலபேரை வெளியே தள்ளிவிட்டார்கள். சௌகர்யமாக ஆளும் கட்சித் தலைவர்களே உள்ளே இருக்கட்டும், இருந்தாலும் நல்லதுதான். எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் Can they deliver the goods? என்று பாருங்கள். எனவே அந்த நிலைமை சரியில்லை என்று மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். ஜனநாயகத்தின்பாற் பட்டதல்ல இந்த நடவடிக்கை என்று மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டதிட்டங்களில் உள்ளதைப் பரிசீலிக்க ஒரு கமிட்டி வேண்டுமென்று கேட்டு வந்தோம். சட்டங்களில் உரிய திருத்தம் கொண்டு வருவதற்காக லேபர் லா கமிட்டி என்று ஒன்று போட்டு நீக்கி விடக்கூடாது. அதில் எல்லாச் சங்கங்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தொழிற்சாலைகளில் ஆய்வு செய்வதில் பெரிய தவறு நடக்கிறது. பல இடங்களில் ஆய்வே நடக்கவில்லை. கட்டிட வசதி, கழிப்பிட வசதி, குடிநீர் வசதி, சுகாதார வசதி, பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவை சரியாக இல்லாமல் நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் இருக்கின்றன. இவைகள் எல்லாம் எவ்வாறு ஆய்வு செய்யப்பட்டிருக்கின்றன என்றே தெரியவில்லை. எனவே அமைச்சர் அவர்களும் மேல் மட்டத்தில் இருப்பவர்களும் இதில் தலையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல தவறுகள் நடைபெற்று இருக்கின்றன என்று சுட்டிக்காட்டுகிறேன். இப்படிப்பட்ட நிலைமை இருப்பது சரியில்லை. இதை மாற்ற வேண்டும். மாற்றினால்தான் நல்லது—அதுவே நீங்கள் தொழிலாளர்களுக்குச் செய்கிற மிகப் பெரிய நியாயமாகும். அதைத் தவிர வேறு ஒன்றும் நீங்கள் தொழிலாளர்களுக்குப் பெரிதாகச் சாதிக்க முடியாது. ஏற்கெனவே இருக்கிற சட்டங்கள் உரிமைகள் ஆகியவை பறிக்கப்படாமல் இருந்தாலே போதும். வடாற்காடு மாவட்டத்தில் சோளிங்கர் மில்லில் 2 கொலையே நடந்தது. ரேணுகா மில்லில் 200, 300 தொழிலாளர்களை வெளியேற்றினார்கள். இதிலெல்லாம் லேபர் டிபார்ட்மெண்ட் தலையிட்டு

[திரு. மா. சின்னராசு] [1987 ஏப்ரல் 20

தொழிலாளர்கள் போராடுகிறபோது அடக்குமுறையைப் பயன்படுத்துகிறோம் என்று சொல்லுவது, சட்டங்களை நிறைவேற்றுவதில் நாம் அக்கறை கொள்ளவில்லை என்று சொல்லுவது எல்லாம் "ஆடு நனைகிறதே என்று ஓனாய் அழுதது போல" இருக்கிறது.

புரட்சித் தலைவர் அரசு பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு எந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் அரசு தவறியிருக்கிறது என்றும், இந்தச் சட்டத்தை தொழிலாளர்களுக்காக நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லும்போது எதை நடைமுறைப்படுத்தத் தவறிவிட்டது என்றும் சுட்டிக்காட்டவில்லை. ஆனால் பொதுவாக அரசைச் சாட வேண்டும் என்று சொல்லி எல்லா இடங்களிலும், எல்லா நிலைகளிலும் அரசு அதிகாரிகளுடைய தயாள குணத்தால், அவர்களுக்குள்ள டிஸ்கிரிஷனரி பவரை தொழிலாளர்கள் பக்கம் பயன்படுத்த வேண்டும் என்ற அரசின் கொள்கையால் பயன்களைப் பெற்று விட்ட தொழிற் சங்கத் தலைவர்கள் இங்கே சட்டமன்றத்திலே அரசு தொழிலாளர்களுக்கு விரோதமான கொள்கையைக் கடைப்பிடிக்கிறது என்று சொல்லுகிறார்கள்.

உதாரணமாக, கோவையில் உள்ள இலட்சக்கணக்கான பஞ்சாலைத் தொழிலாளர்கள் பலகாலம் நடத்தி வருகிற உரிமைப் போராட்டங்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியின்போது மட்டுமல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டபோதும், காங்கிரஸ் ஆண்டபோதும் தொழிலாளர்களுக்காக தொழிற்சங்கத் தலைவர்கள் பல்வேறு போராட்டங்களை உரிமையாக நடத்தி வந்திருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். ஆனால் கால வித்தியாசத்தின் காரணமாக, ஆட்சியின் அணுகுமுறையின் வேறுபாடுகள் காரணமாக நிலைமைகள் மாறியிருக்கின்றன என்பதை மறந்துவிடக்கூடாது. 1976-ல் பஞ்சாலை ஸ்ட்ரைக் வந்தபோது எத்தனை நாட்கள் அந்த ஆலைகள் மூடப்பட்டிருந்தன? அதனால் நாம் பெற்ற பயன் என்ன? அப்போது அதனால் தொழிலாளர்களுக்குக் கிடைத்த ஊதியம் என்ன என்பதையெல்லாம் அருள்கூர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆனால் இப்போது புரட்சித் தலைவர் ஆட்சியில் பஞ்சாலை தொழிலாளர்களுக்காக, அவர்கள் உரிமைக்காக போராடிப் பெற்றிருக்கிற உயர்வு என்ன? ஒரு நாளும்



1987 ஏப்ரல் 20] [திரு. மா. சின்னராசு]

இந்த நூற்பாலைகள், இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் பல கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருள்களை உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகள் மூடப்படாமல் நிவாரணம் கண்டிருக்கிறோம். அது இந்த அரசின் அணுகுமுறையின் காரணமாக, தேவையான நடவடிக்கைகளை உரிய நேரத்தில் எடுத்து வருவதன் காரணமாக, ஏற்பட்டிருக்கிறது என்பதற்கு உதாரணம். சட்டத்தை மட்டும் பயன்படுத்தி இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்ற காரணத்தாலே எவ்வளவு தூரம் பேச்சு வார்த்தையை நடத்த முடியுமோ, எவ்வளவு தூரம் தொழிலாளர் தலைவர்களை, நம்முடைய தொழில் அமைதிக்காக பக்குவப்படுத்த முடியுமோ அந்த அளவிற்கு முயற்சிகளை மேற்கொண்டு... யாருக்கும் உரிமை இழப்பு இல்லாமல், அதே நேரத்தில் தொழில் நசிந்து விடாமல், உற்பத்தியும் குறைந்து விடாமல் பார்த்துக் கொண்டு, வெற்றிகரமாக முடிக்கப்பட்ட பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய பிரச்சினை புரட்சித் தலைவர் அவர்கள் அரசின் தொழிற் கொள்கைக்கு எடுத்துக் காட்டாக அமைந்திருக்கக் கூடிய ஒன்று என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த அளவுக்கு இன்று ஏற்கெனவே அமைக்கப்பட்ட கமிட்டி தீர்ப்பைக் கொடுத்திருக்கிறார்கள்.

திருப்பூர் பனியன் தொழிலாளர்களும் இன்று தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி வேலைநிறுத்தப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களும் கமிட்டி தீர்ப்பை அமுல்படுத்த வேண்டும் என்றும், தீர்ப்பிலே சொல்லப்படாத கோரிக்கைகளை நாம் இன்னும் கேட்டுப் பெற வேண்டுமென்றும் போராடுகிறார்கள். போராடுகிற உணர்வைக் குறைத்து மதிக்கவோ அல்லது போராடக் கூடாது என்று சொல்லவோ நான் முன்வரவில்லை. போராடுவதற்கு முன்னால் தொழிற் தகராறைத் தீர்க்க ஒரு கால அவகாசத்தைக் கொடுத்துக் கொள்வது தொழிலாளர்களுக்கும், தொழில் நடத்துகிற சாதாரண மக்களுக்கும் உகந்த கொள்கையாக இருக்கிறதா என்பதை இந்த தொழில் போராட்டத்தில் யார் ஈடுபட்டாலும் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

[திரு. மா. சின்னராசு] [1987 ஏப்ரல் 20

(திரு. கே. சுப்பராயன் அவர்கள் எழுந்தார்கள்).

பனியன் தொழிலைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் பின்னால் பேசுவார்கள் என்று நினைக்கிறேன். . . .

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஸ்டிரைக் நடக்கவில்லை.

**திரு. மா. சின்னராசு:** ஒரு நாள் நடத்த இருக்கிறார்கள். மேலும் நடத்த முயற்சி வேண்டாமென்பதற்காகச் சொல்கிறேன். தகராறை பேச்சு வார்த்தையின் மூலமாகத் தீர்க்க முடியும். புரட்சித் தலைவர் அவர்களின் அரசு அப்படித் தீர்த்திருக்கிறது. இந்த அரசுக்கு அப்படித் தீர்க்கிற உணர்வு இருக்கிறது. தொழிலாளர் நலன் என்பது தொழில் செய்யும்போதுதான் பாதுகாக்கப்படும். தொழிலை நிறுத்திவிட்டு அதற்குப் பின்னால் ஊதியம் இல்லாமல் போராடுவது என்பதை நமக்கு பல்வேறு நிலைகளிலே ஏற்பட்ட கசப்பான நிலைமைகளின் அடிப்படையிலே தவிர்க்க வேண்டுமென்று தான் சொல்கிறேன். இன்று அவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிற பிரச்சினைகளில் முக்கியமானவைகளை பேச்சு வார்த்தையால் தீர்க்க முடியும் என்பதால், உடனடியாக பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்து, தொழிற்சங்கத் தலைவர்களையும், தொழிலதிபர்களையும் அழைத்து, அரசினுடைய முடிவுக்கு அவர்கள் கட்டுப்பட வேண்டுமென்ற நல்ல முடிவை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசில் 8,000-க்கும் மேற்பட்ட தொழிற் தகராறுகள் அதிகாரிகள் மட்டத்திலே பேசித் தீர்க்கப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்கள் மீது அக்கறை இல்லை என்றால் நிர்வாகத்திலே இருக்கிற தொழிலாளர் நலத் துறையிலே உள்ள அதிகாரிகள் 8,000-க்கும் மேற்பட்ட சிக்கலான தொழில் தகராறுகளைப் பேசித் தீர்க்க முடியாது. இன்னும் பல்வேறு கொள்கை ரீதியான பிரச்சினைகளில் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டிய கட்டாயம் இருப்பதால், நீதிமன்றத்திற்கு அவைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. தொழில் நீதிமன்றங்களில் அதைத் தவிர்ப்பதற்கான முயற்சியை எடுக்க வேண்டும். 33 (சி)-இன்கீழ் எந்தவிதத் தொழிற் தகராறு அங்கே அனுப்பப் பட்டாலும் ஒரு காலகெடுவிற்குள் தீர்ப்பு அளிக்கப்பட வேண்டு



1987 ஏப்ரல் 20] [திரு. மா. சின்னராசு]

மென்ற வரையறையை சட்டத்தின் மூலமாக ஏற்படுத்த வேண்டும். அது நீதிபதிகளின் டிஸ்கிரிஷனாக இருக்கக்கூடாது. தொழிலாளிகள் வேலையிழந்து இருக்கும்போது, வேலைக்காக நீதிமன்றத்திற்குச் செல்லும்போது, பட்டினியால் பலகாலம் நீதிமன்றத்திலேயே காத்திருக்க வேண்டிய நிலைமையை தொழிற் தகராறு சட்டத்திலே மாற்றியமைக்க வேண்டும்.

கோவை மாவட்டத்தில் இருக்கிற பல்வேறு தொழிற்சாலைகள் குறிப்பாக நூற்பாலைகள் மூடப்பட்டிருக்கிற நிலைமையைப் பல்வேறு நேரங்களிலே சட்டமன்ற உறுப்பினர்கள், தொழிற் சங்கங்களிலே ஈடுபட்டிருக்கிறவர்கள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். நானும் அதை வலியுறுத்தி, நூற்பாலைகளைத் திறக்கவேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்திருக்கிறேன். நூற்பாலைகளை திறக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்திருக்கிறார்களே தவிர, ஒவ்வொரு நூற்பாலையின் பிரச்சினையைச் சொல்லி அதைத் திறப்பதற்கான வழிமுறைகளை அரசுக்கோ, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கோ முழு அளவிலே, செயலாக்கும் அளவிலே கொடுக்கவில்லை என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். மத்திய அரசு நூற்பாலைகளை எடுக்க முடியாதென்ற தீர்க்கமான கொள்கை முடிவைச் சொன்ன பிறகு, எந்த விதத்தில் தமிழக அரசு மட்டும் அதைத் திறந்துவிட முடியும் என்பதற்கான பரிகாரத்தை நாம் சொல்ல வேண்டுமென்பது என்னுடைய எண்ணம். அந்த வகையிலே இராமகிருஷ்ணா மில்ஸ், அட்சய மில்ஸ், ஜனார்த்தனா மில்ஸ் திறக்கப்படலாம் என்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ரமணி அவர்கள் தன்னுடைய கருத்துரைகளை வைப்பார்கள் என்றால் நிச்சயமாக அது அரசுக்கும் உதவியாக இருக்கும். தொழிலாளர்களுக்கும் உதவியாக இருக்கும்.

(பிற்பகல் 12-50)

ஆக நாம் எல்லாம்கூட கலந்து பேசி ஒவ்வொரு நூற்பாலையையும் இதுபோன்ற வழிமுறைகள் மூலம் அரசாங்கம் திறக்க முடியும் என்று சொல்லலாம். இராதாகிருஷ்ணா மில்ஸ்-ஐ பொறுத்த அளவில், அது அபிசியல் லிக்விடேட்டர், ஹைகோர்ட்டினுடைய நிர்வாகத்திலே இருக்கிறது. நாம் எல்லாம் சேர்ந்து முடிவு செய்து விட்டாலும்கூட, உயர்நீதி மன்ற லிக்விடேட்டர் அவர்கள் ஒப்புதல் இல்லாமல் செய்ய முடியாது. நாம் ஜோதி

[திரு. மா. சின்னராசு] [1987 ஏப்ரல் 20

...லே செய்து திறந்ததைப் போல, அபிசியல் லிக்விடேட்டர் அவர்களை ஒரு பங்கு உள்ளவராக அல்லது அவரையே ஒரு பார்ட்டியாகச் சேர்த்தும் திறக்க முடியும். ராமகிருஷ்ணா இன்டஸ்ட்ரிஸ். அது ஒரு நூற்பாலை. ... அது ஒரு இஞ்சினியரிங் இன்டஸ்ட்ரியாக இருக்கிறது. அதனுடைய தன்மையே வேறு. அதே போன்று நூற்பாலைகள் இருக்கின்றன. ஒவ்வொரு நூற்பாலையும் ஒவ்வொரு காரணத்தினால் மூடப்பட்டிருக்கிறது. பெரும்பாலும், நான் உண்மையில் சொல்கிறேன், தொழிலாளர்கள் ஒத்துழைப்பு இல்லை என்ற நிலை இல்லை. அதிலே மூடப்பட்டிருப்பவைகள் தொழில் பிரச்சினைகளால் இல்லை என்பது என்னுடைய கருத்து. அந்த வகையிலே நிர்வாகத்தில் ஏற்படுத்த வேண்டிய மாறுதல்கள் மூலம் இந்த ஆலைகளைத் திறப்பதற்கான மாற்று வழிகளை அரசு காணவேண்டும் என்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இன்றையதினம் இருக்கின்ற ஆலைகளைத் திறப்பதன் மூலமாகவோ, எந்தக் காரணத்தினால் மூடப்பட்டிருந்தாலும், அவைகளின் பிரச்சினைகளில் தீர்வு காணுவதாலோ மட்டும் எதிர்காலத்திலே தொழிற்சாலைகளுடைய, தொழிலாளர்களுடைய நலன்கள் நம்மால் காக்கப்படும் என்று சொல்ல முடியாது. இன்று நூற்பாலைகள் இருக்கின்றன. வருகின்ற காலகட்டங்களில் பல நூற்பாலைகள் மூடப்படுகிற ஒரு சூழ்நிலையை பொருளாதார அடிப்படையிலே ஒரு நெருக்கடியை சந்தித்துக் கொண்டிருக்கின்றன என்ற உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது. சில ஆயிரம் தொழிலாளர்கள் மூடப்பட்டிருக்கின்ற ஆலைகளால் பாதிக்கப்படுகிறார்கள் என்று எண்ணுகின்ற நேரத்தில், வருகிற காலகட்டத்தில் எல்லா நூற்பாலைகளும் ஏதோ ஒரு காரணத்தினால் மூடப்படுகின்ற நிலை வரும் என்றால், நாம் அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத்தான் வேண்டும். ஆனால் அந்த நிலை தென்னிந்தியாவிலே குறிப்பாக தமிழகத்திலே இருக்கின்ற நூற்பாலைகளுக்கு இருக்கின்றது. வட இந்தியாவிலே உள்ள நூற்பாலைகள் பொறுத்த அளவிலே இருக்கின்ற மத்திய அரசு கொள்கைகள் இன்று நம்முடைய நூற்பாலைகள் நலிவுற காரணமாக இருக்கின்றன என்பதையும் பொருளாதார நிலையிலே, அந்த அடிப்படையிலே இவைகள் இனிமேல் சர்வைவ் ஆக முடியாது, நிலைத்திருக்க முடியாது என்ற



1987 ஏப்ரல் 20] [திரு. மா. சின்னராசு]

தொழில் அமைதியை ஏற்படுத்துவதற்கு அரசியல் கட்சி அளவுகளுக்கப்பட்ட அறநுக் கொள்கைகளை சென்று கொண்டிருக் அனறுவ வழிபதையும் நான் சுட்டிக்காட்டி அதிலே தேவையான மாறுதல்களைச் செய்ய வேண்டும். ஸ்பின்னிங் மில்ஸ், வீவிங் மில்ஸ், கம்பைன்ட் யூனிட்டுகள் இருக்கின்றன. நம்முடைய நூல்களுக்கு மார்க்கெட் வட இந்தியாவில்தான் இருக்கின்றது. மார்க்கெட் இல்லை என்னும்போது, நிச்சயமாக எதிர்காலத்தில் தொழில் பாதிக்கப்படும் என்பதைக் கருத்திலே கொண்டு இப்போதிருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நம தொழிலாளர்கள் தலைவர்களைக் கலந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு தொழிற்சாலை நிர்வாகத்திலேயும் தொழிற் சங்கத் தலைவராக பணியாற்றுகின்றவர்களை, தொழிலாளர்களுடைய தலைவர்களை, பங்கு கொள்ளச் செய்கிறபோது, எதிர்காலத்திலே ஆர்கனைஸ்ட் செக்டாரிலே இருக்கின்ற ஆலைகள் எதுவாக இருந்தாலும், அவர்களுடைய பிரச்சினைகளை சமாளிப்பதற்கு உதவியாக இருக்கும் என்ற கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன். இது புரட்சித் தலைவர் அவர்கள் மட்டுமல்ல பேரறிஞர் அண்ணா அவர்களும் வலியுறுத்தி வந்த கொள்கைதான். அந்தக் கொள்கையின் அடிப்படையிலேதான் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்திலே பங்கு என்ற அளவில், தொழிலாளர்களுக்கு நிர்வாகத்திலே பங்கு ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் தொழில் அமைதியை ஏற்படுத்துவதற்கு வழி காணவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய மேட்டுப்பாளையம் நகரத்திலே மிகப் பழமையான யுனைட்டட் பிளீச்சர்ஸ் லிமிடெட் என்ற ஒரு சாயத் தொழிற்சாலை இன்று மூடப்பட்டிருக்கிறது. அதிலே ஸ்ட்ரைக் நடக்கிறது. ஒரு வார காலமாக நடந்து கொண்டிருக்கிறது. அதிலே முக்கியப் பிரச்சினையாக எடுத்து வைத்திருப்பது ஏற்கெனவே நீதிமன்றத்திலே அரசாங்கம் ரெபர் செய்து, அது பஞ்சாலை சட்டத்தின்கீழ் வராது என்ற தீர்ப்பின் அடிப்படையிலே நிர்வாகம் நடவடிக்கை எடுத்து இருக்கின்றது. அந்தத் தொழிற்சாலையில் பழைய கால வழக்கப்படியே பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படுகின்ற சலுகைகளும், ஊதிய உயர்வும், பஞ்சப் படியும் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி அனைத்துத் தொழிற்சங்கங்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றன. அதைக் கொடுக்கின்ற வகையில்

[திரு. மா. சின்னராசு] [1987 ஏப்ரல் 20

ஏற்கெனவே ஏற்றுக்கொண்டிருக்கின்ற கொள்கையிலிருந்து அந்த
நிர்வாகம் மாறாமல் பார்த்து மற்ற பஞ்சாலைத் தொழிலாளர்
களுக்கு கொடுக்கின்ற சலுகைகளை அந்த யூனிட்டுத்
பிள்சால் மெட்டில் வழங்குவதற்கான வாய்ப்பினை
ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
சுரண்டல் என்பது தொழிலதிபர்கள் செய்வது மட்டுமல்ல.
தொழிற்சங்கத் தலைவர்களும் தொழிலாளர்களைச் சுரண்டுவது
உண்டு. அந்த முயற்சியில் யாராவது ஈடுபட்டாலும் கூட,
தொழிலாளர்களின் அறியாமையைப் பயன்படுத்திக்கொண்டு
செய்வதும்கூட ஒரு வகையில் சுரண்டல் என்றுதான் சொல்ல
வேண்டும். பல தொழிற்சாலைகளில் ஒரு மாதத்திற்கு ஒரு கொடி
பறக்கிறது. ஒரு குறிப்பிட்ட தொழிற்சங்கம் சார்ந்த தலைவர் ஒரு
பிரச்சினையைத் தீர்த்துக் கொடுக்கிறேன் என்று சொல்கின்ற
போது ஒரு கொடி பறக்கிறது. அடுத்த மாதத்திலே அடுத்த
கொடியும், அடுத்த மூன்றாவது மாதத்திலே மூன்றாவது கொடி
யும் பறக்கிறது என்றால், நிச்சயமாக தொழிலாளர்களுடைய நல
னுக்கும் அல்லது தொழிற்சாலையினுடைய தொழில் நலனுக்கும்
அது உகந்ததாக இருக்காது என்றும் சொல்லிக் கொள்கிறேன். நம்
முடைய தொழிலாளர்களுடைய பொருளாதார மேம்பாட்டிற்கும்
அதே நேரத்தில் தொழில் அமைதிக்கும் இவைகள் உதவியாக
இருக்காது என்பதையும் கருத்தில் கொண்டு, முடிந்த அளவுக்கு
தொழிற்சங்கங்களில் அரசியல் கட்சியினுடைய தலையீடு இல்லா
மல், அரசியல் கட்சியினுடைய சார்பு தொழிற்சங்கங்கள் இல்லா
மல் பார்த்துக்கொள்வது, அது அண்ணா திராவிட முன்னேற்றக்
கழக தொழிற்சங்கமாக இருந்தாலும் சரி, மற்ற கட்சி தலைமை
பெற்று இருக்கின்ற சங்கமாக இருந்தாலும் சரி எதிர்காலத்திலே
கோடிக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்குகின்ற
தொழில் அமைதியை ஏற்படுத்துவதற்கு அரசியல் கட்சிகளின்
நேரடியான ஈடுபாடுகள் அதில் இருப்பதைத் தவிர்க்க வேண்டும்
என்ற என்னுடைய கருத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக்
கொள்கிறேன். ஆகவே, அந்த வகையிலே, அரசியல் ஆதாயங்
களுக்காக பல நேரங்களில் ஒப்பந்தங்களில் கையெழுத்து போட
மாட்டோம் என்று சொல்கிற அரசியல் கட்சிகளும் இன்றைக்கு
இருக்கின்றன. ஒப்பந்தம் பற்றி பேச்சே எடுக்கக்கூடாது என்று
அவர்கள் சொல்கிற நிலைமையும் இருக்கிறது. ஒப்பந்தம் ஏற்
பட்டால் சில அரசியல் நோக்கங்களுக்காக, தங்களுடைய செல்



1987 ஏப்ரல் 20] [திரு. மா. சின்னராசு]

வாக்கு போய்விடும் என்று நினைத்து பல்வேறு நேரங்களில்
இதனைத் தடுப்பதால் தொழிலாளர்களுக்காக தொழில் ஒப்பந்தம்
கூட ஏற்பட வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. பல சந்தர்ப்
பங்களில் அச்சுறுத்தப்படுகின்ற நிலைமைகளும் இதனால் வந்து
விடுகின்றன. அதைத் தவிர்க்கின்ற வகையில் தொழிற்சட்டத்தில்
மாறுதல் செய்ய வேண்டும். தொழிலாளர் நல சட்டங்களினால்
பல இயக்கங்கள் வளர்ந்து வந்திருக்கின்றன என்பதோடு மட்டு
மல்லாமல் லட்சக்கணக்கானவர்கள் பயனடைந்தும் இருக்
கிறார்கள். இன்னும் இந்த நாட்டிலே இருப்பவர்களில் கோடிக்
கணக்கானவர்கள் ஒரு வேளை உண்ண உணவுக்காக வேலை
வாய்ப்பினைப் பெற்று வாழ்க்கையை நடத்த வேண்டியவர்களாக
இருக்கிறார்கள். அத்தகையவர்களின் நலனுக்காக மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்களால் போடப்படுகின்ற சட்டங்கள்
எல்லாம் அவர்களுக்கு பாதுகாப்பு தரக் கூடியனவாக, நாட்டு
மக்களுக்கு பயனுடையனவாக இருக்கின்றன என்று சொல்லி,
இங்கே வைக்கப்பட்டுள்ள அனைத்து மானியக் கோரிக்கை
களையும் வரவேற்று இத்துடன் என் பேச்சை முடித்துக்
கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள்
பேசும்போது மூடிக் கிடக்கிற பஞ்சாலைகளை எடுக்கக்கூடாது
என்பது மத்திய அரசின் இப்போதைய கொள்கை, ஆகவே,
எடுக்க வேண்டுமென்று நாம் நினைத்தால்கூட எடுக்க முடியாது
என்று இங்கே குறிப்பிட்டார்கள். மத்திய சர்க்கார் தேசியமய
மாக்கத் தயாராக இல்லையென்று சொல்கிறார்கள். தேசியமய
மாக்குவது என்பது மட்டுமல்லாமல், ஏற்கெனவே இந்த மாநிலத்
தில் இது சம்பந்தமாக நாம் ஒரு சட்டத்தை நிறைவேற்றியிருக்
கிறோம். ரிலீப் அண்டர்டேக்கிங் ஆக்ட் பிரகாரம் நிர்வாகத்தை
மட்டும் எடுத்து நடத்துவதற்கு மத்திய சர்க்காருடைய பணமோ
மற்ற சலுகைகளோ கேட்டால் அது நடக்காது. ஆனால் நாமே
எடுத்து நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்கலாம்.
தொழிலாளர்களுடைய ஒத்துழைப்பைக் கொண்டு நாமே
அப்படிச் செய்யலாம். அப்படி பல இடங்களில் ஏற்கெனவே
செய்யப்பட்டிருக்கிறது.

[1987 ஏப்ரல் 20

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைவர் அவர்களே, ரிலீப் அண்டர்டேக்கிங் ஆக்டின்கீழ் எடுப்ப தற்குக் கூட மத்திய சர்க்காருடைய அனுமதியைப் பெற்றுத்தான் எடுக்க வேண்டும். ரிலீப் அண்டர்டேக்கிங் ஆக்டின்கீழ் எடுப்பதற்கு முதலாளி தரப்பிலேயிருந்து முதலாளியே அதற்கு ஒப்புக்கொள்ள வேண்டும். ஒப்புக்கொள்ளவில்லையென்றால் சிக்கலாக இருக்கிறது. ஆகவே, சட்டத்தைத் திருத்தினால் அரசுக்கு உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். செங்காளியப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளின்மீது நான் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இன்று மூடப்பட்டுள்ள ஆலைகளைப் பற்றி எனக்கு முன்னால் பல எதிர்க் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர் களும் ஆளும் கட்சியைச் சார்ந்த திரு. சின்னராசு அவர்களும் நல்ல விளக்கங்களுடன், விவரமாக கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர் கள் கூறும்போது இதுபற்றி உருப்படியான திட்டங்களை தொழிற் சங்கத் தலைவர்கள் கூற வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். இதுகுறித்து கடந்த மூன்று ஆண்டுக் காலமாக, குறிப்பாக முன்னாள் தொழிலாளர் நல அமைச்சர் திரு. கிருஷ்ணசாமி அவர்கள் தொழிற்சங்கத் தலைவர்களை எல்லாம் அழைத்து கோயம்புத்தூரில் பேசினார்கள்: அப்போது நாங்கள் உருப்படி யான திட்டங்களை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆகவே, மத்திய அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்ற ஒரு கருத்தினைச் சொல்லி தப்பித்துக்கொள்ள வேண்டாம். இதுபற்றி சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது குறித்து நல்ல கருத்துக்களை ஒரு முறை அல்ல, பல முறை கூறியிருக்கிறோம். அதனை ஏற்றுக்கொண்டு டி.சி.எல். அவர்களும் சம்பந்தப்பட்ட லேபர் டிபார்ட்மென்ட் அதிகாரிகளும் உட்கார்ந்து பேசி உருப்படியான திட்டங்களை இரண்டு மூன்று பிரிவுகளாகப் போட்டு அதுபற்றி அனுப்பிய பைல் இன்றைக்கு செகரட்டேரியட்டில் இருக்கிறது. அமைச்சர் அவர்களால் சரியான முறையில் இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுதான் என் களுடைய குற்றச்சாட்டு.



1987 ஏப்ரல் 20] [திரு. ஆர். செங்காளியப்பன்]

(பிற்பகல் 1-00)

டிபார்ட்மென்ட் ஒழுங்கான முறையிலே, இந்தந்த வகைகளிலே இந்த ஆலைகளை எடுத்தால் நஷ்டமில்லாமல் ஓட்ட முடியும். ஸ்ரீஹரி மில் பாணியிலே எடுக்கலாம், தேசிய உடைமை ஆக்கினால் இன்னின்ன கஷ்டம் இருக்கிறது, சிரமங்கள் இருக்கின்றன என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்து அதை அரசாங்கத்திற்கும், அமைச் சரவர்களுக்கும், டி.சி.எல். அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். அந்தப் பிரச்சினை என்னவாயிற்று என்று தெரியவில்லை. அந்த பைல் அப்படியே தூங்கிக்கொண்டிருக்கிறது. சட்டசபையிலே நாங்கள் மூன்றாண்டு காலமாகப் பேசிக் கொண்டேயிருக்கிறோம். பேசிப் பேசி ஒரு பயனும் கிடைக்கவில்லை. நாங்கள் இதைக் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. தமிழகத்திலே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு யார் பொறுப்பு? மத்திய அரசாங்கத்தைக் காட்டித் தப்பித்துக்கொள்ள முடியுமா? நாங்கள் தமிழ்நாட்டிலே பிறந்தவர்கள்; தமிழ்நாட்டினுடைய பிரஜைகள். தமிழகத்திலே இருக்கின்ற ஆட்சியாளர்களிடத்திலேதான் நாங்கள் முறையிட வேண்டும். எங்கே சென்று சொல்வது? நீங்கள் வேண்டுமானால் மத்திய அரசோடு போராடுங்கள்; அதற்கு நாங்கள் அத்தனை பேரும் தயாராக இருக்கின்றோம். அதற்கு நாங்கள் பின் வாங்கவில்லை. இந்த நாட்டிலே பிறந்த அத்தனை மக்களுக்கும் வாழ்வளிப்பதற்குத்தான் இந்த அரசாங்கமே தவிர, ஏதோ நாங்கள் தப்பித்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக இல்லை. எவ்வளவு பேர்கள் இறந்து விட்டார்கள்? எப்படியாவது ஓட்ட வேண்டுமென்பதற்காக, தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலியாவது கிடைக்க வேண்டுமென்பதற்காக, நாங்கள் கூலியைக் கூட—சம்பளத்தைக்கூடக் குறைத்துக்கொண்டு ஒப்புக்கொள்ளத் தயாராக இருந்திருக்கிறோம்.

நாங்கள் ஐந்து ஆலைகளிலே சம்பளத்தைக் குறைத்துக் கொண்டு ஓட்டிக் கொண்டிருக்கிறோம். எதற்காக? உங்களோடு ஒத்துழைக்க வேண்டுமென்பதற்காகத்தான். நாங்கள் ஏதோ சட்டத்தை முன்னாலே வைத்து, அரசு முன்னிலே நிற்க வில்லை. நாங்கள் எப்படியாவது விட்டுக் கொடுத்தாவது, அர சாங்கத்திற்கும் சிரமம் இல்லாமல்—போராட்டமே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தொழிற் சங்கத்திலே என்ற

[திரு. ஆர். செங்காளியப்பன்] [1987 ஏப்ரல் 20

பெயரையும் நாங்கள் வாங்கிவிட்டோம்—அதற்காகவாவது அவர்களோடு ஒத்துழைத்து, போராட்டத்தையும் நாம் தடுத்து, இந்தத் தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்ற ஒரு நோக்கத்தோடு ஒத்துழைப்பைக் கொடுத்தோம். ஆனாலும் மற்ற மில்களுக்குச் செய்யவில்லையே? முதலமைச்சரவர்கள் மேட்டூருக்குச் சென்றார்கள். மேட்டூரிலே இருக்கின்ற தொழிலாளர்கள், குழந்தை குட்டிகளோடு, பெண்களும் வந்து காலிலே விழுந்து கெஞ்சி அழுதார்கள். பார்க்கட்டும், பார்க்கலாம் என்று சொன்னார்கள். என்ன [illegible] நிலைமை? ஒன்றுமே செய்யப்படவில்லை. ஆகவே, வேறு என்ன உங்களைக் கேட்கப் போகிறோம்? உழைக்கின்றோம், உழைப்பவர்க்கு ஏதோ குறைந்தபட்சக் கூலியாவது கொடுங்கள், எங்களுடைய வாழ்வு நடக்க வேண்டும், எங்களுடைய பிழைப்பு நடக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறோம். பட்டினியால் செத்துக் கொண்டிருக்கிறோம் என்றுதான் அவர்கள் சொல்கிறார்களே தவிர வேறொன்றுமில்லை. இதைப் பார்த்து நாங்கள் ஏதோ செய்து கொண்டிருக்கிறோம்.

நீங்கள் நல்ல காரியங்களைச் செய்கிறீர்கள். இல்லை என்று சொல்லவில்லை. பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய சம்பளம் வந்தது; பாராட்டுகிறோம். நல்ல சம்பளம்தான். உடனே நாங்கள் கோரிக்கை வைத்தவுடனேயே, நீங்கள் 10 (பி) என்ற சட்டத்தைப் போட்டு, அதன் மூலமாக இடைக்கால நிவாரணமாகக் கொடுத்து, நடுவர் தீர்ப்புக்கு விட்டீர்கள். அந்தத் தீர்ப்பின் மூலமாக எங்களுக்குச் சம்பள உயர்வு கிடைத்தது. அதை நான் குறைவாகச் சொல்லவில்லை. ஆனால் இதைச் சொல்லியே நீங்கள் பாதிக்கப்படுகின்ற தொழிலாளர்களுக்கு ஒன்றும் செய்யாமல் இந்தச் சாதனைகளையே சொல்லிக் கொண்டு இருப்பீர்களேயானால் 'இவர்களைக் கவனிப்பது யார்' என்றுதான் உங்களை நான் கேட்க விரும்புகிறேன். அந்த லேபர் டிபார்ட்மெண்டிலே இருக்கும் அதிகாரிகள் அனுப்புகின்ற பைல்களைத் [illegible] நீங்கள்—[illegible] தொழிலமைச்சராக [illegible] பொறுப்பை ஏற்று இருக்கிறீர்கள்—நீங்களாவது அந்த பைலைப் பாருங்கள். அதில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று பாருங்கள். பார்த்து ஏதாவது செய்யுங்கள் எங்களுக்கு. நாங்கள் உங்களோடு ஒத்துழைக்கத் தயார். போராட்டம் நடத்துவதற்கு நாங்கள் தயாராக இல்லை. தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பைக்



1987 ஏப்ரல் 20] [திரு. ஆர். செங்காளியப்பன்]

கொடுத்தால் போதும். ஆகவே, தயவுசெய்து அந்தப் ஃபைலை பார்க்க வேண்டும். அதிகாரிகள் அனுப்பியிருக்கிறார்கள் என்றால் அந்த ஃபைலைப் பார்ப்பதே கிடையாது. அதிகாரிகள் அனுப்பி வைக்கிறார்கள். இப்பொழுதாவது அதைப் பார்த்து தயவுசெய்து, எங்களையெல்லாம் கூப்பிட்டு, என்ன உதவி வேண்டும், என்ன ஒத்தாசை அரசாங்கத்திற்கு வேண்டும், எப்படிச் செய்ய வேண்டுமென்று நீங்கள் சொல்கிறீர்களோ அதைப் பொறுத்தவரைக்கும் நாங்கள் செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்திலே மற்றொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்குப் புதிதாக மாவட்டங்களெல்லாம் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அங்கேயெல்லாம் லேபர் டிபார்ட்மெண்டிலே ஏ.சி.எல். எல்லாம் இல்லை. அங்கே தொழில் நீதிமன்றங்களெல்லாம் இல்லை. அவைகள் இல்லாததால், காமராஜர் மாவட்டத்திலிருந்து, இராமநாதபுரம் மாவட்டத்திலேயிருந்து மதுரைக்குத்தான் போக வேண்டி இருக்கிறது. மாவட்டங்களைப் பிரித்து, நீங்கள் அனுமதித்தது, எல்லாம் செய்தாகிவிட்டது. ஆனால் இந்த லேபர் கோர்ட், ஏ.சி.எல். ஆபீஸ்கள், டி.சி.எல். ஆபீஸ்கள் எல்லாம் அந்த மாவட்டங்களிலேயும் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறைந்தபட்ச சம்பளமானது இப்பொழுது நிர்ணயம் செய்யப்பட்டாலும்கூட, அது அமுல் நடத்தப்படவில்லை. அண்மையிலே சில கமிட்டிகள்—ஈ.எஸ்.ஐ. கமிட்டி, குறைந்தபட்சக் கூலி கமிட்டியெல்லாம் நாம் நியமிக்கிறோம். ஆனால் அப்படி நியமிப்பதிலே காலதாமதம் ஏற்படுகிறது. அதையெல்லாம் நீங்கள் உடனடியாகப் பார்த்து, இந்தக் கமிட்டி மெம்பர்களைப் போட்டு நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ., பி.எஃப். போன்றவற்றில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. பல ஆலைகளில் தொழிலாளர்களிடமிருந்து பி.எஃப்.-க்கு பணம் வசூல் செய்து விடுகிறார்கள். ஆனால் ஆலை முதலாளிகள் அந்தப் பணத்தை [illegible] அரசாங்கத்தில் கட்டாமல் அவர்களே செலவழித்து விடுகி[illegible]னால் சில பிரச்சினைகளின் காரணமாக ஆலை [illegible] தொழிலாளர்கள் பி.எஃப். பணத்தைப் பெற முடியாமல் இருக்கிறார்கள்;

அவர்களுக்கு அது பயனுடையதாக இல்லாமல் போய் விடுகிறது. இதை எல்லாம் நீங்கள் கவனித்து, நல்ல முறையில் செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்க அரசாங்கத்தில் சட்டம் வருகிறது என்று சொல்கிறார்கள். இதற்கு முன்னால் சம்பள உயர்வு அளிக்கப்பட்டபோது வாடகையாக 63 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இதிலே பல பிரச்சினைகள் வருவதால், உடனடியாக சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தர்மபுரி, சேலம் மாவட்டங்களுக்கு தனியாக ஒரு டி.சி.எல். அலுவலகம் வைக்க வேண்டும். இப்போது கோயம்புத்தூரில் தனியாக இருக்கிறது. அங்கே பஞ்சாலைத் தொழிலாளர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள்; அது ஒரு தொழிலாளர் ஏரியா. அந்த அலுவலகம் இல்லாமல் தர்மபுரி, சேலம் மாவட்டங்களில் ஒரு வேலையும் பார்க்க முடியவில்லை; தொழிலாளர்கள் தங்களுடைய உரிமையைப் பெற முடியவில்லை. ஆகவே, சேலத்தில் ஒரு டி.சி.எல். ஆபீஸ் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் எனக்கு முன்னாலே பேசினார்கள். ஏ.சி.எல். போடாமல் காலதாமதம் ஏற்படுவதால் உரிமையைப் பெற முடியவில்லை; ஒன்றும் நடக்கவில்லை என்று அப்போது சொன்னார்கள். அதற்குக் காரணம் லேபர் டிபார்ட்மென்டிலிருந்து பிரமோஷன் கொடுப்பதில் காலம் கடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, நியாயமான முறையில் யார் யாருக்கு ப்ரமோஷன் கொடுக்கப்பட வேண்டுமோ அவர்களுக்கு உடனடியாக ப்ரமோஷன் கொடுக்க அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஃபாக்டரி இன்ஸ்பெக்டர்கள் சரியாகச் செயல்படவில்லை. அவர்கள் எல்லாம் லேபர் டிபார்ட்மென்ட் கன்ட்ரோலில் இருந்தாலும் சரியாகச் செயல்படவில்லை. இப்போது அவர்களைத் தனியாகப் பிரிக்கப் போவதாக நான் கேள்விப்படுகிறேன். அது எவ்வளவு சௌகரியம் என்று எனக்குத் தெரியவில்லை. தயவு செய்து அவர்களைத் தனியாகப் பிரித்து விடாதீர்கள். லேபர் டிபார்ட்மெண்டுக்கு





அவர்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை இன்னும் அதிகம் கொடுத்து பாக்டரி இன்ஸ்பெக்டர்களைக் கட்டுப்படுத்த வேண்டும்; கண்டிக்க வேண்டும். 7, 8 வருஷம் வேலை செய்தாலும் அந்தத் தொழிலாளர்கள் பெர்மனென்ட் செய்யப்படாமல் 5 ரூபாய், 10 ரூபாய் என்று மிகக் குறைந்த கூலியையே பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி தொழிற்சங்கங்கள் ஃபாக்டரி இன்ஸ்பெக்டர்களிடம் சொன்னால் போகிறார்கள், பார்க்கிறார்கள். ஆனால் ஒரு பதிலும் கிடைப்பதில்லை. அதனால் ஃபாக்டரி இன்ஸ்பெக்டர்கள் சரியான முறையில் செயல்படவில்லை. இப்படிப்பட்ட நிலைமைகளைக் கண்காணிப்பது மிக மிக தேவை; அவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும்; அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர்களுடைய பிரச்சினைகள் வரும்போது, சஸ்பென்ஷன், டிஸ்மிசல் போன்ற நேரங்களில், ரெபரன்ஸ் கிடைப்பது சிரமமாக இருக்கிறது. தொழிலாளர்கள் தவறு செய்தார்களா, முதலாளிகள் தவறு செய்தார்களா, யார் தவறு செய்தார்கள் என்பதை கோர்ட்டில் முடிவு செய்யட்டும். ரெபரன்ஸ் கிடைத்தால்தான் கோர்ட்டுக்குப் போக முடியும். கோர்ட்டுக்கு தொழிலாளியும் போகட்டும்; முதலாளியும் போகட்டும். யார் பக்கம் நியாயம் இருக்கிறது என்று நீதிபதி தீர்ப்பு சொல்லட்டும். இப்போது ரெபரன்ஸ் கிடைக்காததால் நாங்கள் ரிட் போட வேண்டியிருக்கிறது. ரிட் போட்டு, அதற்கு மேல் கேஸ் நடத்த வேண்டியிருக்கிறது. கூலித் தொழிலாளர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களுக்காக சங்கம் எவ்வளவு செலவு செய்ய முடியும். சுப்ரீம் கோர்ட்டில் போய் அவர்கள் ரிட் போட முடியாது. ஹைகோர்ட்டில் ரிட் போட வேண்டுமென்றாலும் 5,000 ரூபாய், 10,000 ரூபாய் செலவிட வேண்டியிருக்கிறது. அந்த அளவுக்கு வசதி இல்லை. ஆகவே நீங்கள் ரெபரன்ஸ் கொடுத்து விடுங்கள். கோர்ட்டுக்குப் போவோம். நீதிபதி தீர்ப்பு வழங்கட்டும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டு ஆண்டுகளில் 480 நாட்கள் வேலை செய்தால் எல்லோரையும் பெர்மனன்ட் செய்ய வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. ஆனால் அந்தச் சட்டத்தின்படி நடப்பதில்லை தென்

மாவட்டங்களில் பார்த்தால் மிகவும் மோசமாக இருக்கிறது. கோவையில் அப்படி இல்லை; ஓரளவுக்குப் பரவாயில்லை. தெற்கே போனால் ஒன்றும் நடைபெறவில்லை; 15 வருஷம் ஆனாலும் பெர்மனென்ட் செய்யப்படவில்லை. கோவையில் வேண்டுமானால் 60 ரூபாய் வாங்கிக்கொண்டு வேலை செய்யலாம். ஆனால் தென் மாவட்டங்களில் அப்படி ஒன்றும் நடைபெறவில்லை; அங்கே ஒன்றும் பண்ணவும் முடியவில்லை. ஏதாவது கேட்டால் தகராறு வருகிறது; உடனே டிஸ்மிசல்தான். இதை எல்லாம் கவனிக்க ஒரு கண்காணிப்புக் குழு போட வேண்டும். ஃபாக்டரி ஆக்ட் ஏன் அமல்படுத்தப்படவில்லை என்பதை அவர்கள் கவனிக்க வேண்டும். தொழிற்சாலை சட்டம், தொழிலாளர் நலச் சட்டம் சரியாக நடத்தப்படுகிறதா இல்லையா என்பதை கண்காணிப்புக் குழு கவனிக்க வேண்டும். தொழிலாளர்கள் பாதிக்கப்படக் கூடாது. அவர்கள் இல்லை என்றால் தேசத்தில் நூல் உற்பத்தி இல்லை; துணி உற்பத்தி இல்லை. ஆகவே, தமிழ்நாடு முழுவதும் தொழிலாளர்களுக்கு ஒரே சீரான சம்பளம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

இன்று தென் மாவட்டங்களில் எல்லாம் ரொம்பக் கொடுமை நடந்து கொண்டிருக்கிறது. அதை நீங்கள் கவனிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். கிராஜுவிட்டியைப் பொறுத்தவரையில் நிறைய இடங்களில் அந்தப் பணம் போய்விட்டது. தொழிலாளர்களால் அதை வாங்க முடியவில்லை. க்ளோஸ் ஆன நிறுவனங்களைப் பொறுத்தவரையில் கிராஜுவிட்டி கொடுக்க முடியவில்லை. எனவே தொழிலாளர்களால் அதை வாங்க முடியவில்லை. எனவே இதனையும் சர்க்காரே எடுத்துக்கொள்ள வேண்டும். எப்படி பி.எப்.-ஐப் பொறுத்தவரையில் ஒரு டிரஸ்ட் மாதிரி அரசு இருந்துகொண்டு செயல்படுகிறதோ அதேமாதிரி இதையும் அரசே எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த வகையில் அரசு எடுத்துக் கவனிக்கிற நிலைமையை ஏற்படுத்தினால் முதலாளிக்கும் சிரமம் இருக்காது; தொழிலாளர்களுக்கும் சிரமம் இருக்காது. அப்படிப்பட்ட நிலைமை இல்லை என்றால் பிறகு நாங்கள் அதுபற்றிய குறைகளைச் சொல்லி, அதுகுறித்து அரசு நடவடிக்கை எடுத்து அரஸ்ட் செய்தால் என்ன பயன்? அரஸ்ட் செய்யப்பட்டவர்களைப் பொறுத்தவரையில் 200 ரூபாய் அல்லது 300 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டு அனுப்பப்பட்டு



விடுவார்கள். அவ்வளவுதான், தீர்ந்துவிட்டது என்று அதிகாரிகள் சொல்லிவிடுவார்கள். இந்த அளவுக்குத்தான் சட்டம் இருக்கிறது. எனவே இதை எல்லாம் கூர்ந்து கவனித்து, மனதில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மூடப்பட்ட பஞ்சாலைகளைக் கண்ணாலேயே பார்க்க முடியவில்லை. மிகுந்த கொடுமையாக இருக்கிறது. நாங்கள் இங்கே சட்டசபைக்கு வந்தால்தான் கொஞ்சம் நிம்மதியாக இருக்கிறது. மீண்டும் ஊருக்குப் போனால் ரொம்ப ரொம்பக் கொடுமையாக இருக்கிறது. கண்ணாலே பார்க்கக் கூட முடியவில்லை. எனவே அந்தத் தொழிலாளர்களின் துயரங்களைப் போக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுகூர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களால் முன் வைக்கப்பட்டு இருக்கிற தமிழ்நாட்டில் தொழிலாளர் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை நான் முன் வைக்க விரும்புகிறேன். தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நலன் பற்றிய கொள்கை விளக்க குறிப்பு வந்தபோதே—இல்லாத ஒரு விஷயத்துக்கு ஒரு கொள்கை விளக்கக் குறிப்பு அவசியம் இல்லை என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்தாக இருந்தது.

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஆட்சிக்கு தொழிலாளர்களின் பால் ஒரு கொள்கையே இல்லாதபோது கொள்கை விளக்கக் குறிப்பு இருப்பது அவசியம்தானா என்பதை மாண்புமிகு அமைச்சரின் சிந்தனைக்கு விட்டுவிட்டு, ஏதோ ஆத்திரத்தில், அதிருப்தியில் சொல்லப்படுகின்ற சொல்லாக இல்லாமல் நடைமுறை அனுபவத்தில் தமிழ்நாட்டில் என்ன நிகழ்ந்துகொண்டு இருக்கிறது என்ற சம்பவங்களின் தொகுப்பின் அடிப்படையில்தான் இந்த விஷயத்தை நான் சொல்ல விரும்புகிறேன்.

முதலில் ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது: இதுவரையில் இருக்கிற சட்டங்களைத் தொகுத்துத் தந்திருக்கிறார்கள். இந்தச் சட்டங்களால் என்னென்ன நன்மை விளையும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சட்டங்களைத் தொகுத்துத் தருவதற்கும், அந்தச் சட்டங்களை நிறைவேற்றினால் என்னென்ன நன்மைகள் விளையும் என்றும் சொல்வதற்கு

[திரு. கே. சுப்பராயன்] [1987 ஏப்ரல் 20

ஒரு கொள்கை விளக்கக் குறிப்பு அவசியம் இல்லை. உண்மை என்னவென்றால் குழந்தை பிறந்ததா, இல்லையா என்பதல்ல கேள்வி. குழந்தை உயிரோடு பிறந்திருக்கிறதா என்பதுதான் இன்றைக்குக் கேள்வி. நீங்கள் சட்டம் போட்டீர்களா இல்லையா என்பதில் யாருக்கும் அக்கறை இல்லை. போட்ட சட்டங்கள் நிறைவேறுகிறதா என்பதுதான் பிரதானமான கேள்வி. நான் முக்கியமாகக் குறிப்பிட விரும்புவது சட்டங்களைப் போடுவதால்—அவற்றை பிரச்சாரத்திற்காக தேர்தல் நேரத்தில் நீங்கள் பயன்படுத்திக் கொள்கிற மகாபுத்திசாலிகள் என்பது தெரியும். அந்த அடிப்படையில் நீங்கள் பயன்படுத்திக்கொள்வதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால் போட்ட சட்டத்தை நிறைவேற்றாமல் இருக்கிறீர்களே, இதில் என்ன நியாயம் என்பதுதான் நான் முன் வைக்கிற கேள்வி. ஆகவே நான் குறிப்பாக இங்கே சுட்டிக்காட்ட விரும்புவது ஒன்றிரண்டு சம்பவங்கள்தான். கொடுக்கப்பட்டிருக்கிற மணித்துளிகள் மிக மிகக் குறைவு. எனவே சுருக்கமான முறையில் ஒருசில பிரச்சினைகளைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் பேசுகிற போதுகூட வருத்தத்தோடு குறிப்பிட்டார்கள். எந்தெந்தச் சட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை என்பதை எல்லாம் சொல்ல வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். நான் [illegible] விஷயங்களைக் குறிப்பாகக் குறிப்பிட விரும்புகிறேன். தொழிலாளர் நலத்துறையைப் பொறுத்தவரையிலே தொழிலாளர் சட்டங்களை நிறைவேற்றுவதற்கு என்று ஒரு துறை இன்றைக்கு இருப்பதாக சொல்லப்படுகிறது. அந்தத் துறை இருப்பதாகத்தான் [illegible] என்பது என்னுடைய கருத்து. தொழிலாளர்கள் [illegible] தொழிற்சாலை சட்டங்களை நிறைவேற்றுவதற்கு என்று துறையில் துறை தற்போது இயங்கிக் கொண்டு இருக்கிறது. ஒரு [illegible] [illegible] அது மூழ்கிப் போன கப்பல் அந்தத் துறை. தமிழ்நாட்டில் [illegible] தொழிற்சாலைத் துறை சட்டங்கள் நிறைவேற்றப்படுகிறதா என்பதைத்தான் நான் குறிப்பாக அமைச்சரைக் கேட்க விரும்புகிறேன். இந்தத் துறையில் [illegible] நிறைவேற்றிய சட்டங்கள் ஏன் அமல்படுத்தப்படவில்லை என்பதைச் சரியாகப் பரிசீலிக்க உண்மையிலேயே நீங்கள் போட்ட



1987 ஏப்ரல் 20] [திரு. கே. சுப்பராயன்]

சட்டங்களை தொழிலாளர்கள் நடைமுறையில் அனுபவிக்க வேண்டும் என்பது உங்களுடைய அடிமன உணர்வானால் இது ஏன் நிறைவேறவில்லை என்பதைப் பரிசீலிக்க எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.-க்கள் உள்ளடங்கிய ஒரு ஆய்வுக் குழுவை அமைக்க அரசு முன்வர வேண்டும் என்று நான் குறிப்பிட்டுத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு).

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் தலையிடுகிறார்கள். அந்தத் தலையீட்டிற்குப் பிறகு உரிய நேரம் எனக்கு ஒதுக்கப்படுமானால் நான் அதனை வரவேற்கிறேன்.

**திரு. மா. சின்னராசு :** துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் மீண்டும் அதைத்தான் சொல்கிறார். அந்தத் துறையே வேண்டியதில்லை. அது மூழ்கிப் போன கப்பல் என்று சொல்கிறார். எந்தச் சட்டத்தை எந்த விதியை அவர்கள் இவர் சொல்லியும் கூட, தொழிற்சங்கம் சொல்லியும் கூட நிறைவேற்றாமல் இருக்கிறார்கள் என்று சொன்னால் அதிலே ஏதாவது நிவாரணம் பெறுவதற்குக் கூட வாய்ப்பாக இருக்கும். அப்படியில்லாமல் அந்தத் துறையே தேவையில்லை, நிவாரணமே கிடையாது. எந்தப் பலனும் இல்லையென்று சொல்லிவிட்டால் தொழிலாளர் துறை பற்றி விவாதமே நாம் செய்ய வேண்டியதில்லை.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, மூழ்கிய கப்பல் என்றால் ஒன்றும் தவறல்ல. நீர் மூழ்கிக் கப்பல்கள் எல்லாம் இருக்கிற காலம் இது.

**திரு. கே. சுப்பராயன்:** துணைத் தலைவர் அவர்களே, நீரில் மூழ்கக் கூடாத, மிதக்க வேண்டிய இந்தக் கப்பல் மூழ்கியிருக்கிறது என்பதுதான் பிரச்சினையே தவிர, இது நீர்மூழ்கிக் கப்பல் அல்ல. நான் குறிப்பிட விரும்புவது, மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் மீண்டும் குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே தொழிலாளர்கள் நலனில் அக்கறையோடு குறிப்பிட்டதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தொழிலாளர் நலத் துறை என்பது மட்டுமல்ல, அந்தத் துறையில் இருக்கிற அதிகாரிகளையும் கூடச் சொல்வேன். தமிழ்நாட்டில் எந்தச் சட்டத்தையும் 'இன்ஸ்பெக்டர் ஆப் பாக்டரிஸ்' நிறைவேற்றுவதில்லை. முறையாகக் கண்காணிப்பதில்லை.

[திரு. கே. சுப்பராயன்] [1987 ஏப்ரல் 20

அவர்கள் என்ன நடைமுறையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அதிகமாக எடுத்துச் சொல்ல முடியும். ஆனால், காலம் போதாது என்பதால் நான் அந்த விவரங்களுக்குள் போக விரும்பவில்லை. சட்டங்கள் ஏன் நிறைவேறுவதில்லை என்பதைப் ...த்தால் முழு உண்மையும் கிடைக்கும். அத்தகைய ...னையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் ...ள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்காளியப்பன் அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். தமிழ் நாட்டில் எந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது? தொழிலாளி நின்றவுடன் கிராஜுவட்டி வழங்கப்பட்டிருக்கிறதா? இதே தமிழ்நாட்டில் பிராவிடண்ட் பண்ட், 'வைப்பு நிதி' கட்டாத நிறுவனங்கள் எத்தனை இருக்கின்றன? நடைமுறையில் முதலாளிகளால் சட்டங்கள் நிறைவேற்றப்படுவதில்லை. போராடுகிற தொழிலாளர்களுக்கு முன்னால் சட்டம் போடுவதைப் போல பாசாங்கு செய்யப்பட்டு, நடைமுறையில் சட்டங்களில் சந்து பொந்துகளை உருவாக்கி, தொழிலாளிகளை ஏய்க்கிற முதலாளிகளின் நலன்களைப் பாதுகாக்கிற வகையில்தான் சட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றனவென்பதுதான் நான் முன்வைக்கிற குற்றச்சாட்டாகும்.

அடுத்து, இன்னொரு விஷயம், தொழில் தகராறு. ஒரு பிரச்சினையில் தொழில் தகராறு என்று போனால் அந்த மாதிரி ஒரு ...வே கிடையாது. தொழில் தகராறு என்ற பிரச்சினைக்குப் போனால் தொழிற்சங்க இயக்கத்தின் மீது தொழிலாளர் வர்க்கத்திற்கு அவநம்பிக்கை ஏற்படுத்தி, தொழிலாளர்களை முதலாளிகளிடம் சரணடைய வைக்கும் நுட்பமான தந்திரமாக அசாதாரணமாக காலதாமதம் இந்தத் துறையில் கடைப்பிடிக்கப்படுகிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால் அந்த தொழிற் தகராறு சட்டமும் திருத்தப்பட வேண்டும். 90 நாட்களுக்குள் சமரச ...றிவு ரிப்போர்ட் வரவேண்டும். இதே மாநில அரசு 'ரெபரன்ஸ்' கொடுப்பதில்லை. அண்ணா அவர்களே தான் சொன்னார் என்று பல்முறை சொல்கிறோம். அண்ணாவின் தி.மு.க. என்று சொல்லிக் கொண்டேயிருக்கிறீர்கள். அண்ணா அவர்களே குறிப்பிட்டார்கள், "ஒரு தொழிலாளி வேலை நீக்கம் செய்யப்பட்டு விட்டால், வேலை நீக்கம் செய்யப்பட்டது சரியா, தவறா என்பதை கோர்ட்டிலே



1987 ஏப்ரல் 20] [திரு. கே. சுப்பராயன்]

சென்று வழக்காடுகிற ஒரு தொழிலாளியின் உரிமையை அரசு தடுக்கக்கூடாது. ஏனென்றால் அரசு ஒருபோதும் நீதிபதியாக மாறிவிட முடியாது" என்றார். நியாயம் வேண்டுமென்று லேபர் கோர்ட்டிற்குப் போவதை அரசு தடுக்கிறதா இல்லையா? ஆகவே அண்ணாவின் தி.மு.க. என்றால் அண்ணா சொன்ன அந்த அடிப்படையில் 'ரெபரன்ஸ்' கொடுப்பதை அரசு தடுக்கக் கூடாது. தடுக்காமல் இருப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல லேபர் கோர்ட்டிலே நடக்கிற * * உங்கள் ஆட்சியைப் போல வேறு எங்கும் நடப்பதில்லை. என்ன நடக்கிறது? நீங்கள் 'ரெபரன்ஸ்' கொடுக்கின்றபோது சொல்லப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** * * என்ற வார்த்தையைச் சொல்லக்கூடாது. அது அன்பார்லியமெண்டரி வார்த்தை. அதை நீக்கி விடுகிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** நான் ஒன்றும் சுவைக்காகச் சொல்லவில்லை. சென்னையிலே சீஃப் லேபர் கோர்ட்டிற்கு ஜட்ஜே கிடையாது. ஆறு மாதமாக ஜட்ஜ் இல்லை. நீங்கள் தொழில் தகராறில், 'ரெபரன்ஸ்' கொடுக்கிறபோது என்ன சொல்கிறீர்கள் என்றால், மூன்று மாதத்திற்குள் வழக்கை முடித்துவிட வேண்டுமென்று தெரிவித்து அனுப்புகிறீர்கள். அந்த லேபர் கோர்ட்டிற்கு ஆறு மாதமாக ஜட்ஜே போடாமல் இருப்பதை என்னவென்று சொல்வது? இது என்ன நடைமுறையென்று குறிப்பிடுவது? தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதுமட்டுமல்ல, லேபர் கோர்ட்டிற்கு கிராஜுவட்டிக்காகவோ அல்லது வேறு லேபர் கோர்ட் அவார்டைப் பெறுவதற்காகவோ, லேபர் கோர்ட்டின் தீர்ப்பு வந்திருந்தாலும் முதலாளிகள் அவற்றைப் பெற முடிவதில்லை. அப்படி அமலாகாத நிலையில், ரெவின்யூ ரெக்கவரிக்குப் போனால் என்ன நடக்கிறது? மேலேயிருந்து கீழே போனால் கடைசியில் இருக்கிற வில்லேஜ் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீசர் போய் சம்பந்தப்பட்ட நபர் இல்லை, இல்லையென்று திரும்பி வந்து கொண்டே இருக்கிறார்.

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. கே. சுப்பராயன்] [1987 ஏப்ரல் 20

(பிற்பகல் 1-20)

உங்கள் ஆட்சியில் சட்டச் சலுகைகள் தொழிலாளர்களுக்கு நீர் வெற்றுக் கானல் நீர் நிலைகள்தான் என்பது தமிழ்நாட்டு அனுபவம். அவர்களுக்கு நடைமுறையில் ஏதாவது கிடைக்க வேண்டாமா? அந்தத் தொழிலாளி சாவதற்கு முன்னராவது அவருக்குக் கிடைக்க வேண்டாமா? அதற்குரிய பொருத்தமான சட்டத் திருத்தம் வேண்டும் என்பதை இங்கே நான் குறிப்பாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, ஒரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புவது—மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் குறிப்பிட்டார்கள்—தமிழ்நாட்டில் மூடப்பட்டிருக்கிற ஆலைகளில் பெரும் பகுதிக்கு தொழிலாளர்கள் காரணம் இல்லை என்று. இந்த மாநில அரசும், மத்திய அரசும் போட்ட சட்டத்தை, நடைமுறையில் நிறைவேற்ற மாட்டோம் என்று பகிரங்கமாக சவால் விட்டு, தொழிற்சாலைகளை சட்ட விரோதமாக மூடியிருக்கிறார்களே. இந்த அரசு போட்ட சட்டத்தை நிறைவேற்ற மறுக்கிற நிர்வாகத்திற்கு எதிராக, என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? அரசு போட்ட சட்டத்தை நிறைவேற்றச் சொல்லி, தொழிலாளர்கள் போராடினால் உங்கள் போலீஸ் தடி யாருக்கு ஆதரவாக நிற்கிறது? தொழிலாளர்களுக்கு ஆதரவாக நிற்குமா? தொழிலாளர்கள் பிரச்சினையில் போலீஸ் நடைமுறைப் பற்றி இந்த மாநில அரசு ஒரு தெளிவான கொள்கையைப் பிரகடனம் செய்ய வேண்டாமா? சட்டத்தை மீறுகிற நிர்வாகத்தை ஜனநாயக பூர்வமாக நிர்பந்திக்க, சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு போராடுகிற தொழிலாளிகளுக்கு எதிராக போலீஸ் தலையிடாது என்று நீங்கள் அறிவிப்பீர்களேயானால் இந்த மாநிலத்தில் மூடிய தொழிற்சாலைகள் திறக்கப்பட்டு விடும். தொழிற் தகராறுகள் குறையும். இந்த மாநிலத்தில் தொழிற்சாலைகள் ஏன் மூடிக் கிடக்கின்றன? முதலாளிகளுக்குள்ளாக பார்ட்னர்ஷிப் தகராறு. இதே சென்னையில் இந்தியா போர்ஜ் மூடி எவ்வளவு நாள் ஆயிற்று? 26 பேர்களுக்கு மேலே செத்துப் போனார்களே. தற்கொலை செய்து கொண்டவர்கள் அதிலே பல பேர்கள் உண்டு. அவர்கள் உயிர் பலிக்கு யார் காரணம்? அந்த இந்தியா போர்ஜ் நிர்வாகம் காரணம். அவர்கள் தொழிற்சாலையை நிரந்தரமாக மூடிவிட்டார்களா? இல்லை. ஒரு இடத்தில்



1987 ஏப்ரல் 20] [திரு. கே. சுப்பராயன்]

மூடி விட்டுப் பல இடங்களில் புதிதாகத் தொழிற்சாலைகளை நடத்துகிறார்கள். ஒரு இடத்தில் தொழிற்சாலையை மூடிவிட்டு, வேறு பல இடங்களிலே நடத்துகிறார்களே, இது அநியாயம் அல்லவா? இதை எந்த வார்த்தையிலே சொல்வது? அந்த இடத்திலேயே, அவர்களைச் சுற்றி நின்று, இந்தப் பிரச்சினைக்கு தீர்வு சொல்கிற வரை உங்களை நாங்கள் செல்ல விடமாட்டோம் என்று, ஆயுதங்கள் இல்லாமல், எந்தவிதமான சட்ட விரோத நிர்பந்தமும் செய்யாமல், தொழிலாளிகள் கோருவதில் என்ன தவறு? நான் மீண்டும் இந்த மாநில அமைச்சரவைக்குத் தெரிவித்துக் கொள்வது, காவல்துறை தொழில் தகராறில் தலையிடாது என்பதை டிக்ளேர் செய்ய வேண்டும். செய்ய மாட்டீர்கள். ஆனால், செய்வதுதான் சரியானது. செய்ய வேண்டும். அதைச் செய்கிற துணிச்சலை நீங்கள் பெறுவீர்களா என்பதை இங்கே குறிப்பாகக் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, பிரச்சினை எப்படியெல்லாம் இருக்கிறது பாருங்கள். திருப்பூரிலே ஒரு மில் மூடிக் கிடக்கிறது. எஸ்.ஆர்.சி. மில் என்று பெயர். அந்த மில் மூடிக் கிடப்பதற்கு யார் காரணம்? தொழிலாளர்கள் காரணமே அல்ல. அந்த மில் 16—12—1936 முதல் மூடிக் கிடக்கிறது. 12 (3) அக்ரிமென்ட் போடப்பட்டு இருக்கிறது. ஆனால் அது நடைமுறையில் நிறைவேற்றப்படவில்லை. குறிப்பாக அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அவர்கள் சமயத்திலே கூட திருப்பூர் வரலாம். அப்படி அவர்கள் வருகிறபோது இதை கவனிக்க வேண்டும் என்பதற்காக சில விஷயங்களைக் குறிப்பாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 16—12—1986 முதல் எஸ்.ஆர்.சி. மில் மூடிக் கிடக்கிறது. அப்படி மூடிக் கிடப்பதில் என்ன கொடுமை தெரியுமா? லே-ஆப் காம்பென்சேஷன் கொடுக்க வேண்டும் என்று சட்டம் போட்டிருக்கிறீர்கள். லே-ஆப் விட்டால், சட்டப்படி அரைச் சம்பளம் தரவேண்டும். ஆனால் லே ஆப் விட்டு 1½ வருடங்கள் ஆகியும், அரைச் சம்பளம் கிடைக்கவில்லை. 12 (3) **Agreement before the Labour Officer.** போடப்பட்டது. அந்த அக்ரிமென்டை அவர்கள் 'ஹானர்' செய்தார்களா? செய்யவில்லை. என்ன சாலன்ஞ் பாருங்கள். சட்டத்தை மீறுகிறார்கள். அரசு அதிகாரிகளால் போடப்பட்ட ஒப்பந்தத்தை முதலாளிகள் மீறுகிறார்கள். என்ன காரணம் என்றால், நீங்கள் கண்டும் காணாமல் இருப்பீர்கள் என்பதால் தான், வேறு ஒன்றுமே காரணம் இல்லை. இந்த மாநில அரசு நான் அடிப்பதைப் போல அடிக்க

[திரு. கே. சுப்பராயன்] [1987 ஏப்ரல் 20

கிறேன், நீங்கள் அழுவதைப் போல் அழுங்கள் என்று சொல்கிற அற்புதமான ஆட்சி என்று உணர்ந்துதான், தெரிந்துதான், அதை அவர்கள் செய்கிறார்களே தவிர, வேறு காரணம் இல்லை. நீங்கள் ஒன்றும் நழுவி ஓடாதீர்கள். பதில் சொல்லி தப்பித்து ஓடாதீர்கள். நீங்கள் கையிலே அதிகாரத்தை வைத்திருக்கிறீர்கள். ஏன் செய்யவில்லை?

இன்னும் ஒரு கொடுமையிலும் கொடுமை என்ன தெரியுமா? தனிப்பட்ட முதலாளிகள் செய்ததைக் கூட நான் தவறு என்று சொல்லவில்லை. அது அவர்கள் இயல்பு. ஆனால் இந்த அரசு மாடல் எம்ப்ளாயராக இருக்க வேண்டாமா? எப்படி இருக்கிறது தெரியுமா? சட்டத்தை நிறைவேற்றாமல் தொழிலாளர்களை ஏய்ப்பது எப்படி என்பதில் இந்த அரசு மாடல் எம்ப்ளாயராக இருந்து இந்த மாநிலத்தில் தொழிற் தகராறு தோன்றவும், தொழில் அமைதி கெடவும் இந்த மாநில ஆட்சி காரணமாக இருக்கிறது.

நான் குறிப்பிடுகிறேன். மாதவரம் பால் பண்ணை. 1,500 தொழிலாளர்கள் டிஸ்மிஸ். பிரச்சினை அடுக்குமா? நியாயம், தர்மம் என்று இருந்தால், அடுக்குமா? சட்டத்தை நீங்கள் நிறை வேற்றியது உண்மையா? ஒற்றை நாள், ஒரே ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்ததற்கு 1,500 தொழிலாளர்களும் டிஸ்மிசா? என்ன ஆட்சி இது. என்ன நெறிமுறை இது? என்ன அடிப்படை இது? ரெஸ்பான்ஸ் கூட கிடைக்கவில்லை. ஹைகோர்ட்டிலே போய்த் தான் ரெஸ்பான்ஸ் வாங்க வேண்டுமா? இப்படி ஆட்சி நடத்தலாமா? நான் இப்போது கேட்கிறேன். பார்வையில் அன்பை கனிவாக வெளிப்படுத்துகிற நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த விஷயத் தில் கவனம் செலுத்த வேண்டும். மனு கொடுக்கப்பட்டு இருக் கிறது. 2 மாதங்களுக்கு முன்பு மனு கொடுக்கப்பட்டு இருக் கிறது. 'அவுட் ஆப் கோர்ட்டிலே' போய் பேசி முடித்துக் கொள் ளலாம் அதற்குத் தயார் என்று தொழிற்சங்கம் சொல்லிவிட்டது அல்லவா? ஏன் பேசக்கூடாது? பேசுகிற தேதியை அறிவிப்பீர் களா என்பதை இங்கே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது). மணி அடித்தால் பிரச்சினைகளை முழுமையாகச் சொல்ல முடியுமா? இன்னும் இரண்டு மூன்று பிரச்சினைகளைப்பற்றி சொல்லி முடித்து விடுகிறேன். அதிலும் எஸ்.ஆர்.சி. யில் பற்றி நான் குறிப்பிட விரும்புவது, சட்ட விரோதம் நடைபெற்றிருக்கிறது என்பது மட்டுமல்ல. அவர்கள் 9—12—1983-லே ஒரு 12 (3) அக்ரிமென்ட், எஸ்.ஆர்.சி. நிர்வாகம்



1987 ஏப்ரல் 20] [திரு. கே. சுப்பராயன்]

போட்டது. எஸ்.ஆர்.சி. நிர்வாகம் போட்ட அந்த 12 (3) ஒப் பந்த அடிப்படையில் 1987 ஜனவரி முதல் 12 மாத தவணையில் 1½ வருடமாக கொடுக்கப்பட்ட லே-ஆப் காம்பன்சேஷனை கொடுப் பது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. 1984 பிப்ரவரி முதல் 4 மாத கால தவணையில் ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு பணிக் கொடை வழங்கி விடுவது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. 12 (3)-ஐ தொழிற்சங்கம் நிறைவேற்றவில்லை என்றால் சும்மா விட்டு விடுவீர்களா? 12 (3) அக்ரிமென்டை தொழிலாளர்கள் நிறை வேற்றவில்லையென்றால் சும்மா விட்டுவிடுவீர்களா? ஆனால், முதலாளி நிறைவேற்றவில்லை என்றால், கேள்வியே இல்லை. இதற்கு என்ன காரணம் என்பதையும், இந்த நடவடிக்கைக்கு என்ன தீர்வு செய்யப் போகிறீர்கள் என்பதையும் நான் குறிப்பாகச் சுட்டிக் காட்டுவதோடு, பணிக்கொடை வழங்காதவர் களுக்கு வழங்க வைக்க என்ன வழி? பலபேர் செத்துப் போய் விட்டார்கள். ரிடையர்ட் ஆகிறபோது அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய கிராஜுவிடியை வாங்காமலேயே செத்துப் போய்விட்டார் களே, அந்தப் பாவமெல்லாம் உங்களைச் சூழக்கூடாது அல்லவா? இத்தகைய நிலைமை ஏற்படக்கூடாது அல்லவா? அதனால்தான் சொல்கிறேன், அதற்காக ஏதாவது வழிமுறையை நீங்கள் செய்ய வேண்டுமென்பதை இங்கே குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

அடுத்து நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிற மிக முக்கியமான விஷயம், ஒப்பந்தத் தொழிலாளர்களுடைய பிரச்சினை. அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, ஒப்பந்த முறை என்பது நடைமுறையில் ஒழிக்கப் பட வேண்டிய ஒரு முறை. அதிலும் ஒரே ஒரு உதாரணத்தைக் குறித்துக் கொள்ளச் சொல்கிறேன். ஓசூரில் ஒரு பாக்டரி— எக்செல் பவுண்ட்ரி—என்று ஒன்று இருக்கிறது. ஓசூரில் இருக்கக் கூடிய எக்செல் பவுண்ட்ரி என்ற பாக்டரியில் ஸ்ட்ரைக் நடைபெறுகிறது. ஸ்ட்ரைக் நடைபெறுகின்ற தொழிற் சாலையில் ஸ்ட்ரைக்கை உடைப்பதற்காக சீப் இன்ஸ்பெக்டர் ஆப் பாக்டரிஸ் என்ன செய்து இருக்கிறார்? மேலும் ஒருவருக்கு காண்டிராக்ட் கொடுத்து அந்த ஸ்ட்ரைக்கை உடைக்கப் பயன்படுத்தி இருக்கிறார். யாரை நீங்கள் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்காக நியமித் தீர்களோ அந்த அதிகாரி, அந்த சீப் இன்ஸ்பெக்டர் ஆப்

பாக்டரியில் என்ன செய்கிறார்? அப்பட்டமாக முதலாளிகளுக்கு, ஸ்ட்ரைக்கை உடைக்கிற கைக்கருவியாக, அரசின் சம்பளத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறார். இந்த நடைமுறை எக்செல் பவுண்டரியிலே நடைபெற்றிருக்கிறது. அங்கே பல மாதங்களாக ஸ்ட்ரைக் நடக்கிறது. அந்த ஸ்ட்ரைக்கை உடைக்கிறார். லேபர் செக்ரட்டரி சொல்லியும்கூட, அவர் கேட்பதில்லை. இந்த நடைமுறை ஐ.எல்.ஓ. பிராக்டிசுக்கு ஒப்புக்கொள்ள முடியாத ஒன்று. ஐ.எல்.ஓ. என்ன சொல்கிறது? ஸ்ட்ரைக் நடக்கிற பாக்டரியில் எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் மூலமும்கூட 'கால் பார்' பண்ணி ஆட்களைச் சேர்க்கக் கூடாது என்று சொல்கிறது. ஆனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரி மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை நான் குறிப்பிடுவதோடு இந்தத் துறையைப் பொறுத்தவரையிலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்காளியப்பன் அவர்கள் குறிப்பிட்டதை போல தயவுசெய்து அந்தத் துறையை லேபர் துறையிலிருந்து பிரித்து விடாதீர்கள். பிரித்து விட்டீர்களேயானால், முடிந்தது கதை. அவ்வளவு நிலைமை மோசமாகி விடும். லேபர் விங்கில் நெருக்கி, இறுக்கிப் பிடித்து, செய்ய வேண்டிய ஒன்றை நீங்கள் விடுவித்து விடுவீர்களேயானால், அது சரியல்ல. அதிலும் ஐ.எ.எஸ். ஆபீசர் என்ற முறையில், லேபர் கமிஷனரின் கீழ் தற்போது இயங்கி வருகிற அந்த நடைமுறை தொடரப்பட வேண்டுமே தவிர, விடுவித்துவிடுகிற நடைமுறை, முயற்சி, புரபோசல்ஸ் எங்கிருந்தாவது வந்திருந்தால் தயவு செய்து அதை ட்ராப் செய்ய வேண்டுமென்பதையும் இங்கே நான் குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து பஞ்சாலைகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். பஞ்சாலைத் தொழிற்சாலையில் ஒரு பிரம்மாண்டமான ஒப்பந்தம் ஏற்பட்டது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அதிலே ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த முதலாளிகளை அரசு புரிந்திருக்கிறதோ இல்லையோ, புரியவில்லையென்றாலும், புரிந்து கொள்ள வேண்டும். அதிலே ஒரு ஆர்கியூமெண்ட் வைத்தார்கள். சையின்டிபிக் ஒர்க்லோட் வேண்டுமாம். விஞ்ஞானப் பூர்வமான வேலைப்பளுவை நிர்ணயிக்க வேண்டுமாம். மேலோட்டமாகப் பார்த்தால், ஆமாம், விஞ்ஞான பூர்வமாகத்தான் வேலைப்பளுவை நிர்ணயிக்க வேண்டுமென்று சொல்வது சரி, விஞ்ஞானபூர்வமான





விஷயத்தை எதிர்க்கலாமா? கூடாது ஆனால் விஞ்ஞானம் என்பது ஒன் வே டிராபிக்கா? விஞ்ஞானபூர்வமாக இன்றைக்கு ஏறுகின்ற விலையேற்றத்தை, விஞ்ஞானபூர்வமாக அவர்கள் வாழ்வதற்கு எவ்வளவு பணம் தேவையோ அவ்வளவை சம்பளமாக நிர்ணயிக்கலாம் என்பதற்கு மட்டும் தயாரில்லை. குதிரை கொள்ளுக்கு என்றால் வாயைத் திறக்கிறது; கடிவாளத்திற்கு என்றால் மூடிக் கொள்கிறதே, என்ன நியாயம்? முதலாளிகள் சொல்கிறார்கள்; விஞ்ஞான பூர்வமான ஒர்க் லோட் செய்ய வேண்டுமாம். ஆனால் இன்றைய விலைவாசி ஏற்றத்தை ஈடு கட்டுவதற்குப் பொருத்தமான சம்பளத்தை நிர்ணயிக்க வரமாட்டார்களாம். இதற்குப் பச்சைக் கொடி; இந்த மாநில ஆட்சி பச்சைக்கொடி காட்டுவது தொழிலாளர் வர்க்கத்தின் நலன்களுக்கு எதிராகத் தான் இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பாகச் சுட்டிக் காட்டி, இறுதியாக, ஒரேஒரு விஷயத்தை மட்டும் நான் சொல்லி முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-30)

மாநில தொழில் நிலைமைபற்றி இங்கே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார். மாநில தொழில் உறவு அமைப்பு, தொழில் உறவில் எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. தொழில் உறவு அவசியம்தான். தேசிய உற்பத்தியை அடைய வேண்டும். உற்பத்தி இலக்கை எல்லாம் அடைய வேண்டும். ஆகவே நல்ல தொழில் உறவு அவசியம்தான். ஆனால் தொழில் உறவு எந்த அடிப்படையில் என்றால் முதலாளிகளின் நலன்களைப் பாதுகாக்க அல்ல.. அது தொழிலாளர்களின் நலன்களையும் பாதுகாக்க வேண்டும். அடிக்கடி நீங்கள் பரிவு உணர்ச்சியின் பிரதிபிம்பம் போல காட்சி அளிக்கிறீர்களே; யாருக்கு பரிவு காட்ட வேண்டும்? வீக்கர் செக்ஷனுக்கு பரிவு காட்ட வேண்டும். பாதிக்கப்பட்டு இருப்பது தொழிலாளர் வர்க்கம்தான். அந்த தொழிலாளர் வர்க்கத்தின் மேல் உங்கள் பரிவு இருப்பது உண்மையானால் தொழில் அமைதியில் நான் முன்பு சொன்னதுபோல் சட்டங்களை நடைமுறையில் நிறைவேற்ற அவர்கள் போராடுகிறபோது ஏன் போலீஸ் தலையிடக் கூடாது. இரண்டாவது இன்றைய தேவைகளுக்கு ஈடு கட்டுகிற சம்பளத்தை அவர்களுக்கு நிர்ணயிக்காமல், அதற்கு உறுதி தராமல் நடைமுறையில் தொழில் அமைதி நிலவாது என்று

[திரு. கே. சுப்பராயன்] [1987 ஏப்ரல் 20

சொல்லி, இன்றைய மாநிலத்தை ஆளுகிற இந்த மாநில அரசுக்கு
தமிழ்நாட்டில் நிலவுகிற தொழிலாளர்கள் பிரச்சினைகளில் ஒரு
தெளிந்த கண்ணோட்டம் இல்லை என்பதோடு தொழிலாளர்
மீதான முதலாளிகளின் தாக்குதலை கண்டும் காணாமல் இருந்து
கொண்டு இருக்கிறீர்கள் என்பதோடு அவர்களைப் பாதுகாக்கவும்
பல இடங்களில் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறீர்கள் என்பதற்கு
கத்தை கத்தையாக ஆதாரங்கள் சொல்லலாம், அதற்குரிய காலம்
அனுமதிக்கவில்லை என்பதாலே அது குறிப்பில் ஏறவில்லை என்ப
தாலே நீங்கள் அவைகளை எல்லாம் செய்யவில்லை என்பது அல்ல.
அவற்றிற்கு உரிய பல விஷயங்கள் இருக்கின்றன என்று சொல்லி
இவற்றை கவனத்தில் கொண்டு உங்கள் நடைமுறைகளை மாற்றிக்
கொள்ளவேண்டும் என்று கேட்டு முடித்துக் கொள்கிறேன். நன்றி,
வணக்கம்.

* திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்
என்ற மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்து இருக்கிற
காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல
விரும்புகிறேன்.

பொருள்கள் உற்பத்திக்கு தொழில் அமைதி அவசியம்.
தொழில் அமைதிக்கு தொழில் உறவு மிகவும் அவசியம். அந்த
உறவு எவ்வாறு இருக்கிறது என்பதை நாம் சற்று கவனிப்போம்.
நம்முடைய தொழிலாளர் கொள்கை அறிக்கையில் மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள், சென்ற ஆண்டு
வேலை நிறுத்தங்கள்—கதவடைப்புகள் 263 என்றும், வீணான
உழைப்பு நாட்கள் 34, 53, 124 என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள்.
இது சென்ற ஆண்டைக் காட்டிலும் குறைவு என்று சொல்லியிருக்
கிறார்கள். உண்மையாக இருக்கலாம். ஆனால் இந்தியாவிலேயே
அதிகமான வேலை நாட்கள் வெஸ்ட் பெங்காலில் இருக்கிறது.
அதற்கு அடுத்தபடியாகத்தான் நம்முடைய தமிழ்நாட்டில் இருக்
கிறது. ஆகவே 2-வது இடத்தை நாம் பெற்று இருக்கிறோம்.
இது சரிதானா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
பார்க்க வேண்டும். முதலாவது மேன்டேஸ் வேஸ்ட் என்பதுதான்
மிக எங்கியம். அதிலே நாம் 2-வது இடத்தை வகிக்கிறோம்.
இதைக் குறைக்க என்ன ஆக்ஷன் எடுத்து இருக்கிறார்கள்
என்பதைப் பார்க்க வேண்டும்.



1987 ஏப்ரல் 20] [திரு. ஆர். ரெங்கசாமி]

உதாரணமாக அரசு தோட்டத் தொழில் கார்ப்பரேஷன் ஒன்று
இருக்கிறது. அந்த நிர்வாகம் ஐ.என்.டி.யு.சி.-யோடு பேச
மறுக்கிறது. ஐ.என்.டி.யூ.சி. தான் அங்கே மெஜாரிட்டி யூனியன்.
இருந்தபோதுகூட அந்த அரசு கார்ப்பரேஷன் பேச மறுக்கிறது.
லேபர் டிபார்ட்மெண்டு கூட அதை ஒன்றும் செய்வது இல்லை.
அமைச்சரிடம் கூட இதுபற்றி சொல்லியிருக்கிறேன். ஆகவே
இந்த மாதிரி அரசு நிர்வாகமே பேச மறுத்தால் அது என்ன
நிலைமையில் கொண்டு போய் விடும் என்பதைப் பார்க்க
வேண்டும். இதுதான் உதாரணம். இந்த மாதிரி நடந்தால்
தொழில் அமைதி கெட்டுவிடும், மேனேஜ்மெண்டு அட்டகாசம்
அதிகமாகிவிடும். ஒரு ஸ்டிரைக்கை செய்வதற்கு முன்பாகவே
அதைப்பற்றி பேசி முடிவு செய்யவேண்டும். உதாரணமாக
டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் அமைச்சரே பேசி முடிவு செய்கி
றார், அதே மாதிரி மின்சார வாரியத் தலைவரே பேசி முடிவு
செய்கிறார்; அதேமாதிரி பாக்கி இருக்கிற அரசு நிறுவனங்களிலும்
செய்தால் என்ன? அப்படி செய்வது இல்லை. எனவே அர
சாங்கம் முதலில் அதை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ள
பிரியப்படுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக தொழில் நீதிமன்றங்கள். தீர்ப்புக்கு அனுப்
பப்பட்ட ரெபர் செய்யப்பட்ட கேஸ்கள் 102. அவார்டு 77,
மீதி நிலுவையில் இருக்கிறது. அதேமாதிரி லேபர் கோர்ட்டுக்கு
ரெப்பர் செய்யப்பட்ட கேஸ்கள் 1067, அதில் அவார்டு வாங்கினது
927 கேஸ்கள். மீதி 140 கேஸ்கள் இருக்கின்றன. இது எதைக்
காட்டுகிறது? ஆகவே வருடா வருடம் இந்த மாதிரி பேலன்ஸ்
கேஸ்கள் நிறைய இருக்கின்றன. எனவே அரசாங்கம் அந்த
லேபர் கோர்ட்டினுடைய ஸ்ட்ரென்த்தை அதிகமாக்க வேண்டும்.
ஆகவே ஒரே டிரிபுனல்தான் இந்த ஸ்டேட்டில் இப்போது இருக்
கிறது. அதை 2 ஆக உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ள
பிரியப்படுகிறேன். அதேமாதிரி ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு
லேபர் கோர்ட் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ள
பிரியப்படுகிறேன். மேற்கொண்டு இந்த லேபர் கோர்ட்டிற்கு
ஜட்ஜஸ் கிடையாது. கோயம்புத்தூரில், மதுரையில் கிடையாது.

[illegible] வருகிறோம்—நாட்டில் வேலையில்லாமல் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள பிரியப்படுகிறேன்.

அதன்படியாக பஞ்சாலைகளுக்கு நியமித்த வேஜ் போர்டு நடைமுறை ஜட்ஜ் திரு. வரதராஜன் அவர்கள் அந்த ரிப்போர்ட்டில் தீர்ப்பை வழங்கி இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் இதை கவனிக்க வேண்டும். இந்தத் தீர்ப்பு என்ஃபோர்சிபிள் ஃபிரம் 18 ஏப்ரல் தொழில் கோர்ட்டிற்கு அவார்டு கீழே சொல்லியிருக்கிறார்கள். விஞ்ஞான ரீதியான வேலைப் பளுவிற்கும் வேஜிற்கும் கொஞ்சம்கூட சம்பந்தமே கிடையாது. That is entirely different. They should not link it to wages. எனவே பல முதலாளிகள் சொல்லியிருக்கிறார்கள். வேலைப் பளு ஒப்பந்தம் வந்தவுடன் அதற்குப் பிறகுதான் அமல்படுத்தமுடியு மென்று. எனவே இந்தத் தொழில் கோர்ட்டு தீர்ப்பை அவசர மாக அமல்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்ள பிரியப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல. அந்த ஜட்ஜ்களே கூறியிருக்கிறார்கள். அதாவது சம்பளத்தில் வேற்றுமை இருக்கிறது. மில்லுக்கு மில், பிராந்தியத்திற்கு பிராந்தியம் வேற்றுமை இருக்கிறது. ஆகவே இதை முறைப்படுத்த, ஒரு வேஜ் கமிட்டி அமைக்கவேண்டுமென்று அரசுக்கு சிபாரிசு செய்துள்ளார்கள். அந்த மாதிரி, ஒரு வேஜ் கமிட்டியை அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ப்ராசசிங் யூனிட்ஸ் பொறுத்தவரையில், டையிங், ப்ளீச்சிங், பினிசிங் போன்ற யூனிட்டுகள் பஞ்சாலையில் சேராது. அதற்கென்று தனியாக ஒரு கோர்ட்டு ஏற்படுத்தும் படியாக சிபார்சு செய்துள்ளார்கள். அந்தக் கோர்ட்டு லா-படி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள பிரியப்படுகிறேன். அதே நீதிமன்றம் ஹைச்.ஆர்.ஏ. சட்டம் கொண்டுவர சிபார்சு செய்துள்ளது. அரசாங்கமும் சொல்லியிருக்கிறார்கள். பலமுறை அறிவித்து இருக்கிறார்கள். ஆனால் அரசு இதுவரை வீட்டு வாடகை சட்டம் கொண்டுவருவதே கிடையாது. எனவே கோர்ட்டு சிபாரிசுபடி வேஜ் கமிட்டி, புரோசசிங் ரெபரன்ஸ், ஹைச்.ஆர்.ஏ. சட்டம் கொண்டு வரும்படி கேட்டுக்கொள்ள பிரியப்படுகிறேன்.



அதன்படியாக தொழில் கோர்ட்டிற்கு விடுவது சம்பந்தமாக அரசாங்கத்துடைய ஒரு கொள்கை கிடையாது என்பதை வருத்தத் துடன் சொல்லப் பிரியப்படுகிறேன். அரசுக்கு இஷ்டமிருந்தால் கோர்ட்டு உண்டு. இல்லையென்றால் கிடையாது. இது என்ன கொள்கை? இதை கொள்கை ரீதியாக அரசாங்கம் நிர்ணயிக்க வேண்டும். ஐ.என்.டி.யூ.சி.யானது இந்த அரசாங்கத்திற்கு நிறைய ஒத்துழைப்பு அளித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் ஐ.என்.டி.யூ.சி.க்கு கோர்ட்டுகளுக்கு ரெபரன்ஸ் கொடுப்பதில்லை. இதில் கொள்கை என்பதும் கிடையாது. எனவே அரசாங்க மானது ஐ.என்.டி.யூ.சி.யைப் பொறுத்தவரையில் நியாயமாகப் போகவேண்டும். அதற்கு ஏன் கோர்ட்டு ரெபரன்ஸ் கொடுக்கக் கூடாது? இதை அரசாங்கம் பரிசீலனை செய்து அவர்களுக் கெல்லாம் கோர்ட்டிற்கு ரெபரன்ஸ் கொடுக்கவேண்டும்.

உதாரணமாக, மதுராந்தகம் கோ-ஆப்பரேடிவ் சுகர் மில்லுக்குக் கொடுக்கப்படவில்லை. சேலம் கோ-ஆப்பரேடிவ் சுகர் மில்லிற்குக் கொடுக்கப்படவில்லை. அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைக்குக் கொடுக்கப்படவில்லை. ஃபௌண்டரி இன்ஜினீயரிங் சர்வீஸ், கிண்டிக்குக் கொடுக்கப்படவில்லை. அதுபோன்று பல கோ-ஆப்ப ரேடிவ் சுகர் மில்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அதுமாதிரி மாஞ்சோலை எஸ்டேட், பச்சமலை எஸ்டேட், ஆனைமலை எஸ் டேட், நீலகிரி எஸ்டேட் போன்ற பல இடங்களில் அரசாங்கம் இதுவரையில் கோர்ட்டிற்கு ரெபரென்ஸ் கொடுக்கவில்லை. அதற்குக் காரணம் புரியவில்லை. ஐ.என்.டி.யூ.சி. போன்ற ஸ்தா பனங்கள் நியாயமான ஸ்தாபனங்கள். அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதுராந்தகம் சுகர் மில் லிற்கு டிரைவர்கள் 8 மணி நேரம் வேலை விஷயமாக ரெப்ரன்ஸ் கொடுக்கவில்லை. சட்டம் கிடையாது என்று சொல்கி றார்கள். இது நியாயம் தானா என்று கேட்க ஆசைப்படுகிறேன். அதுமாதிரி டபிள்யூ.எஸ். இன்சுலேட்டர்ஸ்-ல் 1200 பேர் வேலை செய்கிறார்கள். ஐ.என்.டி.யூ.சி.-யில் 1000 பேர்கள், ஏ.டி.எம்.கே. 200 பேர்கள் வேலை செய்கிறார்கள். ஏ.டி.எம்.கே. அக்ரிமெண்ட் போட்டார்கள். அதனால் ரெபரன்ஸ் கிடையாது என்று சொல்கிறார்கள்.

[திரு. ஆர். ரெங்கசாமி] [1987 ஏப்ரல் 20

(பிற்பகல் 1-40)

தமிழ்நாட்டிலேயே மோசமான சூழ்நிலை அங்குதான். சம்பள உயர்வு அளித்து 20 வருடங்கள் ஆயிற்று. டி.எ. ரொம்ப குறைவு. அந்த மாதிரி ஒரு மோசமான சூழ்நிலையில் ஐ.என்.டி.யு.சி. இதை கோர்ட்டுக்கு ரெஃபர் செய்ய வேண்டும் என்று கேட்டால் அரசாங்கத்தில் முடியாது என்று சொல்கிறார்கள். அப்பீல் போட்டிருக்கிறோம். மந்திரிக்கும் சொல்லியிருக்கிறோம். நியாயமான கேஸ்களையாவது அரசாங்கம் கோர்ட்டுக்கு அனுப்ப முன்வரவேண்டும். அதற்கு மாறாக சென்னையிலே இந்தியன் ஆக்சிஜன் கம்பெனி இருக்கிறது. அங்கே ஒரு அன்ஸ்கில்டு வொர்க்கர் 3,000 ரூபாய் வாங்குகிறார். அது I.N.T.U.C. செட்டில்மெண்டிற்கு மாறாக கோர்ட்டுக்கு அனுப்பியிருக்கிறீர்கள். இது என்ன நியாயம் என்று தெரியவில்லை. சம்பளம் கம்மியாக இருந்தால் கோர்ட்டுக்கு அனுப்ப மறுக்கிறீர்கள். சம்பளம் அதிகமாக இருந்தால் கோர்ட்டுக்கு அனுப்புகிறீர்கள். ஆகவே அரசாங்கத்திற்கு ஒரு கொள்கை வேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மணியடிக்கப்பெற்றது). எனவே கோர்ட்டுக்கு அனுப்புவதிலே அரசாங்கமானது தன்னுடைய கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டும். அடுத்தபடியாக மூடப்பட்ட ஆலைகள், கோவையிலே 6 மில்கள். மேட்டூரில் 2 மில்கள். புதுக்கோட்டையில் 2 மில்கள். இவையெல்லாம் மூடியிருக்கின்றன. ஒரு ஸ்கீம் கொடுங்கள் அதைத் திறப்பதற்கு என்று கூறுகிறீர்கள். நீங்கள் ஆளப்பிறந்தவன் படத்தை பார்த்திருக்கிறீர்களா? ஆர்டர் போடுவார்கள் அந்தப் படத்தில். அந்தமாதிரியாவது செய்யுங்கள். ஈசியாக மில் ஓடும். மகாலட்சுமி மில் ஸ்டிரைக் பண்ணுகிறார்கள். அரசாங்கம் சின்சியராக முயற்சி செய்தால் இம்மாதிரி மூடப்பட்ட மில்கள் எல்லாம், ஓடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. பின்னி என்ஜினியரிங் மூடி 14 மாதங்கள் ஆயிற்று. சங்கத்தைச் சேர்ந்தவர்கள் திறந்துவிடுகிறோம் என்கிறார்கள். ஆனால் திறக்கவில்லை. எங்களுடைய முயற்சிக்கும் அரசாங்கத்தின் சப்போர்ட் இல்லை. ஒன்று கவர்ன்மெண்ட்டாவது திறந்து ஓட்ட வேண்டும். அல்லது சங்கமாவது திறந்து ஓட்ட வேண்டும். இல்லாவிடில் I.N.T.U.C. முயற்சி செய்து திறக்க உதவவேண்டும்.



1987 ஏப்ரல் 20] [திரு. ஆர். ரெங்கசாமி]

மேட்டூர் மில்லுக்கு சி.எம். போய் இருக்கிறார். அங்கே போய் மக்களுக்கு உறுதிமொழி கொடுத்திருக்கிறார். அது நடக்கவில்லை. ஆகவே முதலமைச்சருடைய அறிவிப்புப்படி மீண்டும் அந்த மில்லை திறந்து ஓட்ட வேண்டும். அடுத்தபடியாக சர்க்கரை ஆலை. இதற்கு அகில இந்திய அளவில் ஒரு வேஜ் போர்டைப் போட்டிருக்கிறார்கள். அது டிலே ஆகிறது. அம்மாதிரி டிலே ஆவதால் வழக்கம்போல் தமிழ்நாடு அரசாங்கம் மேனேஜ்மெண்டார் தொழிற் சங்கங்களைக் கூட்டி பேச்சு வார்த்தை நடத்தி முடிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் அவர்களே கூட்டலாம். அடுத்தபடியாக இடைக்கால நிவாரணமாக ஒரு அட்-ஹாக் நிவாரணம் கொடுத்தார்கள். தனியார் மில்களில் இண்டரிம் அலவன்ஸ்க்கு ரீடெயினிங் அலவன்ஸ் கொடுக்கவில்லை. கோ-ஆப்பரேட்டிவ் மில்லிலே தான் கொடுத்திருக்கிறார்கள். லேபர் கமிஷனர் உத்திரவு போட்டிருக்கிறார். உத்திரவு போட்டும் கூட தனியார் மில்லிலே ரீடெயினிங் அலவன்ஸ் கொடுக்கவில்லை. இதை உடனடியாக கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு மில்லிலே வருடா வருடம் போனஸ்ஸுக்கு மேலே எக்ஸ் கிரேஷியா என்று ஒன்று கொடுப்பார்கள். அது இந்த ஆண்டு கொடுக்கவில்லை. இதற்கு முந்தி லாபம் குறைவாக இருந்தபோது கொடுத்தார்கள். லாபம் ஜாஸ்தியாக இருந்தும் இப்பொழுது கொடுக்கவில்லை. ஆகவே அரசாங்கம் தலையிட்டுப் பேசி, கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு அடுத்து சீப் இன்ஸ்பெக்டர் ஆப் பாய்லர்ஸ் அவருடைய போஸ்ட் இரண்டு ஆண்டுகளாக வேகண்ட்டாக இருக்கிறது. இதனால் பல பேர் பாய்லர் அட்டெண்டன்ட்ஸ் டெஸ்ட் எழுதமுடியாமல் இருக்கிறது. பாய்லர் அட்டெண்டன்ட்ஸ் வேலை நிறைய காலியாக இருக்கிறது. ஆகவே இந்த சீப் இன்ஸ்பெக்டர் ஆப் பாய்லர்ஸ் பதவியை வெகு விரைவில் நிரப்ப வேண்டும்.

அடுத்தபடியாக என்ஜினியரிங் தொழிற்சாலை. இண்டி. அப்பக்கார் போன்ற இடங்களில் சம்பளம் மிகவும் குறைவாக இருக்கிறது. 5, 6 ரூபாய் தருகிறார்கள். ஆனால் திருச்சி சிட்கோ மீட்டரில் சில ஆண்டுகளுக்கு முன்பு 12 ரூபாய் சம்பளம் கொடுக்க போது அதையே முதலமைச்சர் குறைவு என்று சொல்லி மாற்றவேண்டும் என்று சொல்லி மாற்றியமைத்தார்கள்.

"அந்த வரவேற்கிறேன். அதைப்போல கிண்டி, அம்பத்தூர், பாக்கி இடங்களில் ரூ. 6 தருகிறார்கள். அது நியாயமா? அதை மாற்றியமைக்க வேண்டாமா? அதற்காக என்ஜினியரிங் வேஜ் போர்டு ஒன்றைப் போடலாம். பெங்கால் மாதிரி வேஜ் போர்டு போடலாம். கன்னியாகுமரி எஸ்டேட்டில் அரசு ரப்பர் கழகமாக மாற்றப்பட்ட பிறகு பழைய பிராவிடண்டு பண்டு பாக்கி கட்டவில்லை. அதைக் கட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து காண்ட்ராக்ட் லேபர். காண்ட்ராக்டர்களைப் பொறுத்தமட்டில், மின்சார வாரியத்தில் கிட்டத்தட்ட 20,000 பேர்கள் இருக்கிறார்கள். இப்போது ஐ.டி.ஐ. படித்தவர்களை வேலைக்கு எடுப்பதாகக் கேள்விப்படுகிறேன். இதுசம்பந்தமாக நான் பல்வேறு யோசனைகளைச் சொல்லியும் அவை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆகவே, இந்த காண்ட்ராக்ட் லேபர் முறையை முதன் முதலில் அரசாங்கத்தில் ஒழிக்க வேண்டும். அதற்கு பிறகு தனியார் துறையிலும் அதைப் போக்குவதற்கு முயற்சிகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ள பிரியப்படுகிறேன்.

அது மாதிரி சி. எல்.—டெம்பாவரி ஒர்க்கர்ஸ் இருக்கிறார்கள். 480 நாட்கள் ஒர்க் பண்ணினால் பெர்மனன்ட் ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள பிரியப்படுகிறேன்.

மெட்ரோ வாட்டர் போர்ட்டிலே எல்.டி.சி. தருவதில்லை. அவர்கள் கவர்ன்மெண்ட் எம்ப்ளாயீஸ் என்று சொன்னால், அது தரவேண்டும். கவர்ன்மென்ட் எம்ப்ளாயீஸ் இல்லையென்று சொன்னால் போனசாவது தரவேண்டும். ஒன்றும் கிடையாது. கவர்ன்மென்ட் எம்ப்ளாயீஸ் என்றும் இல்லாமல், பிரைவேட் எம்ப்ளாயீஸ் என்றும் இல்லாமல் வைத்து இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு எல்.டி.சி. தரவேண்டும், போனஸ் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மெடிக்கல் ஃபெஸிலிட்டிஸ் (மணியடிக்கப்பெற்றது) கொடுக்கப்பட வேண்டும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** போதும். 15 நிமிடம் பேசி விட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லவேண்டும். (குறுக்கீடு)

**திரு. ஆர். ரெங்கசாமி :** இ.எஸ்.ஐ.-யைப் பொறுத்தவரையிலும் அங்கே மருந்தே கிடையாது. டிஸ்பென்சரியிலே மருந்தே கிடையாது. டாக்டர் கிடையாது. 50 சதவிகிதம் டாக்டர்கள் போஸ்ட் வேக்கன்ட்டாக இருக்கிறது. கோயம்புத்தூரிலே பாதி டாக்டர் கிடையாது. கோயில்பட்டியிலே 4 டாக்டர்கள் இருந்து, ஒரு டாக்டர்தான் இப்போது இருக்கிறார். வருஷக்கணக்காக இப்படி இருந்து கொண்டிருக்கிறது. எனவே, டாக்டர்களை உடனே போடும்படிக் கேட்டுக் கொள்கிறேன். மருந்தும் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த ஸ்கீமை விஸ்தரிக்கவே இல்லை. அப்படியே இருந்துகொண்டிருக்கிறது. எனவே, அதை விஸ்தரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப் பிரியப்படுகிறேன். அதேமாதிரி இ.எஸ்.ஐ., பி.எஃப். பாக்கி நிறைய இருக்கிறது. அதை வசூல் பண்ணும்படி கேட்டுக்கொள்கிறேன். தொழில் வரி போடுகிறார்கள். தொழில் வரியை ரத்துச் செய்யும்படிக் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால் அது அநியாயம்.

குழந்தைகள் காப்பகத்தைப் பொறுத்தவரையில், எங்கேயுமே கிடையாது. அது ஃபேக்டரி டிப்பார்ட்மென்ட்டிலே வருகிறது. எந்த ஃபேக்டரியிலே பெண்கள் இருக்கிறார்களோ, அங்கே இந்த 'கிரெச்' கிடையாது. அங்கே வந்து பார்ப்பார்களா? எத்தனை கார்மென்ட் பேக்டரியிலே பெண்கள் ஒர்க் பண்ணுகிறார்கள்? எங்கேயுமே கிரெச் கிடையாது. ஏன் பண்ணவில்லை? சொன்னால் கோபப்படுகிறார்கள், அவர்கள். ஆகவே, பேக்டரி டிபார்ட்மெண்ட் செக் பண்ணி, செய்யவேண்டும்.

தோல் பதனிடும் தொழிலாளர்கள் மத்தியில் சம்பளம் கம்மியாக இருக்கிறது. கான்ட்ராக்ட்டிற்கு, லீசுக்கு விட்டு விடுகிறார்கள். கான்ட்ராக்ட்டுக்கு, லீசுக்கு, விட்டதற்குப் பிறகு, அவர்கள் 5 ரூபாய், 6 ரூபாய் கூலி தருகிறார்கள். அதை மாற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மேட்ச் இன்டஸ்ட்ரியைப் பொறுத்தவரையில் அரசாங்கமானது ஒரு ஸ்கீம்—இன்சூரன்ஸ் ஸ்கீம் கொண்டுவந்திருக்கிறது. அதை வரவேற்கிறேன். அந்த ஸ்கீம் சிவகாசியிலே மட்டும்தான் இருக்கிறது. அதுமாதிரி, கோயில்பட்டி, மற்றும் எல்லாப் பகுதிகளுக்கும், தமிழ்நாடு பூராவும் கொண்டு வரும்படி கேட்டுக்கொள்ளப் பிரியப்படுகிறேன். ஆகவே, பொதுவாக தொழிலாளர்கள் மத்தியிலே அரசாங்கமானது. . . (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மற்றவற்றை எழுதிக் கொடுத்து விடுங்கள். நேரம் ஆகிவிட்டது. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று முன்மொழியப்பட்ட மானியக் கோரிக்கைகளின் மீது பல்வேறு தரப்பினரும் ஆலோசனைகள் வழங்கியதற்கு என் உளமார்ந்த நன்றி. முதலாவதாக, எழுது பொருள் அச்சுத்துறையைப் பொறுத்தவரையில் தரப்படுகிற காகிதங்கள் தரமானவையாக இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார். தரமா, இல்லையா என்பது அவரவர்களுடைய எண்ணத்தைப் பொறுத்தது என்றாலும்கூட, நல்ல காகிதங்களாகத் தரப்படும் என்பதை நான் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அச்சகத் துறையில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் பற்றிப் பேசுவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அந்தத் தொழிலாளர்களைப் பற்றிய எண்ணம் ஒரு உயர்ந்த எண்ணமாக எல்லோருக்கும் ஏற்பட்டு விட்ட காரணத்தாலோ என்னவோ அந்தத் துறை சரியாகக் கவனிக்கப்படவில்லை. இருந்தாலும் அச்சக ஊழியர்களைப் பொறுத்தவரையில், அலுவலாளர்கள் என்று ஒரு பிரிவு, தொழிலாளர்கள் என்று ஒரு பிரிவும்





உள்ளனர். தொழிலாளர்கள் என்ற அந்தப் பிரிவினர்—அவர்களுக்குரிய விடுமுறைகளில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன.

குறிப்பாக, அச்சகத்தில் பணியாற்றுகின்ற அலுவலர்கள் வாரத்திற்கு 5 நாள் வந்தால் போதும். தொழிலாளர்கள் வாரத்திற்கு 6 நாள் வரவேண்டும். அதோடு மட்டுமல்ல; 5 நாள் என்று வாரத்திற்கு போடப்பட்டபோது, 20 நாட்கள் என்று இருந்த சிறு விடுப்பு, 12 நாட்கள் என்று குறைக்கப்பட்டது. வாரத்திற்கு 5 நாள் கிடைக்காமல் 6 நாள் என்று பணியாற்றுகின்ற இவர்களுக்கும் அந்தக் குறைப்பு மட்டும் வந்துவிட்டது. ஆகவே, அவர்களுக்கு என்று தனிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன. அரசு என்கிறபோது, அலுவலகங்களில் பணியாற்றுகின்றவர்கள், அரசு நேரடியாக நடத்துகின்ற தொழிலிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் என இரு வகையினர் இருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-50)

ஆகவே இந்தத் துறையைச் சார்ந்த—அச்சகத்துறையைச் சார்ந்த தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஆற்றுகின்ற பணிக்கு வரையறை செய்யப்பட்டு, அதற்கு மேலும் அவர்கள் பணியாற்றுவார்களானால் அதற்கு ஒரு ஊக்க போனஸ் திட்டம் என்கிற வகையில் அரசு ஒன்றை உருவாக்க இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை"

என்றார் திருவள்ளுவர். நமது மரபே ஊக்கத்தைத்தான் நாம் செல்வமாகக் கருதுகிறோம். ஆகையினால் ஊக்கம் உள்ளவர்களும் ஊக்கம் இல்லாதவர்களும் ஓரே ஊதியத்தைப் பெறுகிற நிலை இருக்கக்கூடாது. இது இன்றைக்கு எல்லா அரசுகளிலும் இருக்கிற நிலைமை. ஆகவே ஊக்கம் உள்ளவர்களுக்குக் கொஞ்சம் அதிகமாக ஊதியம் தர வேண்டும் என்ற முறையில் அரசு அச்சகத்தில் பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு—அவர்களுக்கு ஏற்கெனவே விடுமுறையும் குறைக்கப்பட்டதாலும்—வேலை நேரமும் அப்படியே இருக்கிற காரணத்தாலும்—மருத்துவ

விடுப்பும் குறைக்கப்பட்டிருப்பதாலும்—அவர்களுக்கு ஒரு தனித் திட்டம் உருவாக்கப்பட்டு அவர்களுக்கு ஊக்க ஊதியம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து வேலைவாய்ப்புத் துறையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவார்கள் என்று கருதினேன். அதிலும் வேலை பெற்றவர்களைப்பற்றித்தான எல்லோரும் அக்கறை எடுத்துக் கொண்டு பேசினார்களே தவிர, வேலை அற்றவர்களைப்பற்றி போதுமான அக்கறையுடன் பேசவில்லை—ஒரு வேளை நேரமில்லாத காரணத்தால் பேசவில்லையோ என்று கருதுகிறேன். வேலை பெற்றவர்களைவிட வேலை அற்றவர்களைப்பற்றி எண்ணிய இதயமே மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களின் இதயம்தான் என்பதை நான் இங்கே மனநிறைவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவில் இன்றைக்குப் படித்து பட்டம் பெற்று அந்தச் சூழலிலிருந்து வேறு இடங்களுக்குச் சென்று வேலையும் கிடைக்காமல் ஏழைகளின் வீட்டிலே பல பட்டதாரிகள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் களை வெட்டியோ, ஏர் உழுதோ அல்லது நீர் பாய்ச்சியோதான் காலத்தைக் கழிக்க வேண்டும் என்ற நிலை இருப்பதை உணர்ந்து அத்தகையோருக்கெல்லாம் உதவித் தொகை வழங்க வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு அருமையான திட்டத்தைக் கொண்டு வந்தார்கள், வேலை வாய்ப்பு அற்றவர்களுக்கு உதவித் தொகை திட்டம் என்று அதை அறிவித்தார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களைப் பார்த்து கேட்க விரும்புகிறேன். இந்த அரசு முதலாளிகள் பக்கம் இருக்கக் கூடிய அரசு, தொழிலாளர்கள் பக்கம் நீங்கள் இல்லை என்று கூறினாரே, நான் அவரைப் பார்த்துக் கேட்கிறேன்—வேலை அற்றவர்களுக்கு உதவித் தொகை வழங்கிக் கொண்டிருக்கிறோமே அவர்கள் எல்லாம் என்ன முதலாளிகளா என்று தயவு செய்து அவர்கள் நெஞ்சத்தில் ஒரு கை வைத்துச் சொல்ல வேண்டாம்—நினைத்துப் பார்க்கட்டும் என்று மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.



இதுவரை அந்தத் திட்டத்தின் கீழ் 1,21,539 பேர் படித்த இளைஞர்கள்—சுமார் ரூ. 15.68 கோடியை இந்த அரசிடத்திலிருந்து நேராக, 'உதவித் தொகையாக—ஏழை எளிய பட்டதாரிகள்' என்ற முறையில்—பெற்றிருக்கிறார்கள் என்ற செய்தியை இந்த மன்றத்திற்கு நான் மிகக மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வேலை அற்றவர்களுக்கு உதவித் தொகை தந்தால் மட்டும் போதுமா? வறுமை போக வேலைவாய்ப்புதான் முக்கியம். உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் ஆகிய இந்த மூன்றையும் நேராகத் தருவதற்குப் பதிலாக அவர்களுக்கு உரிய வேலையைத் தந்தால் அதன் மூலமாக அவர்களே அதைப் பெறறுக் கொள்ள முடியும். ஆகவே வேலை வாய்ப்பு பெருக வேண்டும் என்பதில் இரண்டு விதமான கருத்துக்களுக்கு இடம் இருக்க முடியாது. அந்த வகையில் பார்க்கிற போதும்—எவ்வளவோ வறட்சி—எவ்வளவோ சிக்கல்கள்—எவ்வளவோ பற்றாக்குறை என்ற இந்த நிலையில் இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தவரையில் இங்கே இருக்கிற 24 மாநிலங்களில் வேலை இல்லை என்று வேலை வாய்ப்பகங்களில் பதிவு பெற்றவர்களில் அதிகமான பேர்களுக்குத் தமிழகத்தில் நாம் வேலைவாய்ப்பு அளித்திருக்கிறோம். இந்தியா முழுவதுமாகச் சராசரியாகப் பார்க்கிறபோது அப்படிப் பதிவு பெற்றவர்களில் 6.7 சதவீதத்தினரே வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தைப் பொறுத்த வரையில் அதைவிடக் கூடுதலாக 10.4 சதவீதம் என்கிற அளவுக்கு நாம் வேலை அற்றவர்களுக்கு வேலை தேடித் தந்திருக்கிறோம் என்று சொல்கிறபோது இந்த அரசுக்கு மட்டுமல்ல, இந்த அரசுக்கு ஆலோசனை கூறும் உங்களுக்கும் சேர்த்துத்தான் இந்தப் பெருமை என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவில் இருக்கக்கூடிய 24 மாநிலங்களில் முதலாவதாக ராஜஸ்தான் மாநிலம் 10.7 சதவீதம் என்ற வகையிலும் அடுத்த படியாக நாம் 10.4 சதவீதம் என்ற வகையிலும் வேலைவாய்ப்பை அளித்திருக்கிறோம்.

ஆகவே என்னைப் பொறுத்த அளவைப் பொறுத்த வரையில இன்னும் எந்த அளவிற்கு நிர்வாகத்தை திறம்பட நடத்த முடியுமோ அந்த அளவிற்கு இந்த அரசு வழிவகை செய்யும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து எதிர்க் கட்சியினர் நம்முடைய ஆட்சியைப் பொறுத்த வரையில், 'கொள்கையே இல்லை, கொள்கைக் குறிப்பு எதற்கு?' என்று கேட்டார். எனக்கு உடனே நினைவுக்கு வந்தது—கடவுளே இல்லை என்று சொல்லுகிறார்கள், கடவுளைப் பற்றிதான் ஏராளமான காவியங்கள் உலகத்திலே எழுதப்படுகின்றன என்று. கொள்கை இல்லாமல் இல்லை. கொள்கை என்றால் என்ன பொருள்? எதை ஏற்றுக்கொள்கிறோமோ அதுதான் கொள்கை. எங்களைப் பொறுத்த வரையில் தெளிவாகச் சொல்லுகிறேன். புரட்சித் தலைவர் அவர்கள் போகிற இடம் எல்லாம் நீட்டுகிற கை புத்தகத்தில் எதை எழுதி கையெழுத்து இடுவார் என்றால், "உழைப்பவரே உயர்ந்தவர்" என்று எழுதி அதன்கீழ்தான் புரட்சித் தலைவருடைய கையெழுத்து இருக்கும். "உழைப்பவரே உயர்ந்தவர்" என்பது எங்கள் கொள்கை. உழைப்பவரே உயர்ந்தவர் என்பது புரட்சித் தலைவரிடம் உள்ள சம நீதி. உழைப்பவரே தாழ்ந்தவர் என்பது மனுநீதி. மனு நீதியை மாற்றி சமநீதியைக் கொண்டு வருகிற அரசாக புரட்சித் தலைவர் அரசு இருக்கிறது. உழைப்பவரே உயர்ந்தவர் என்ற கொள்கையை நிச்சயமாக இங்கேயுள்ள அனைத்துக் கட்சியினரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். எந்தத் திட்டத்தை மேற்கொண்டாலும் அது உழைக்கும் மக்களுக்கு ஊக்கம் தருவதாக, அவர்களுடைய முயற்சிக்கு ஆக்கம் தருவதாக அமையுமே தவிர அந்த மக்களுக்கு எதிராக நிச்சயமாக அமையாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலை நீக்கத்தைப் பற்றிப் பேசுகின்றபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதைச் சொன்னார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் அழகாகச் சொன்னார்கள். ஏனென்றால் வேலை நீக்கம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் சொன்னார். அவருக்கு தெளிவாகச் சொல்ல வேண்டும் என்பதற்காக சொல்லுகிறேன். வேலை நீக்கம் என்பது வளருகிற நாடுகளில் ஒருவிதம், வளர்ந்த நாடுகளில் ஒரு விதம். வளர்ந்த





நாடுகளில் ஒருவர் வேலை நீக்கம் செய்யப்படுகிறார் என்றால் அவர் இன்னொரு தொழிற்சாலையில் வேலை பெற முடியும். வளருகின்ற நாடுகளில் ஒருவர் வேலை நீக்கம் செய்யப்படுகிறார் என்று சொல்லுகிறபோது அவருடைய குடும்பமே வீதியில் நிற்க வேண்டியிருக்கிறது. ஆகவே இந்த அரசைப் பொறுத்த வரையில் வேலை நீக்கம் என்று வருகிறபோது அது எந்த அளவிற்கு தவிர்க்கப்பட வேண்டுமோ அந்த அளவிற்கு தவிர்க்கப்பட்டாக வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் பேசுகின்றபோது, இந்தத் துறைக்கு நான் வந்து சில நாட்கள்தான் ஆகின்றன என்று சொன்னார்கள். ஓர் உண்மையை அவருக்குச் சொல்ல விரும்புகிறேன். எனக்கு இந்தத் துறை வந்ததிலிருந்து ஓயாமல் ஒரு வகையான கோப்புகளில் கை வலிக்க கையெழுத்திடுகிறேன் என்றால் அது இந்த செஃபோன்ஸ் கோப்புதான். வேலை நீக்கியதற்காக வந்த வழக்குகளுக்கான கோப்புகள். அத்தனையும் நீதிமன்றத்திற்கு அனுப்புகிற கோப்புகள். அவற்றில் ஏராளமாக கையெழுத்திடும் வாய்ப்பைப் பெற்றேன். புரட்சித் தலைவர் அரசைப் பொறுத்தவரையில் வேலையை பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கையானது மேற்கொள்ளப்படும். இந்த நேரத்தில் தொழிலதிபர்களுக்கும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நஷ்டம் என்பது ஏற்படுவது இயற்கை. லாபம் என்பது ஏற்படுவது இயற்கை. தொழிலை நடத்துகிற தொழில் நிறுவனங்கள் எக்காரணத்தைக் கொண்டும் வேலை நீக்கம் என்ற ஆயுதத்தை கையில் எடுத்து பிரயோகிக்க வேண்டாம் என்று இந்த மன்றத்தின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் ஒருவரை வேலையிலிருந்து நீக்குவது என்பது அந்தக் குடும்பத்திற்கு நாம் செய்கின்ற மிகப் பெரிய பாதகம் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். அதிலே பாவம் என்று நான் கருதவில்லை. ஏனென்றால் பாவத்திலும், புண்ணியத்திலும் நிச்சயமாக எனக்கு நம்பிக்கை இல்லை. நண்பர் சுப்பராயன் அவர்களுக்குக்கூட நம்பிக்கை இருக்காது என்று எனக்கு நன்கு தெரியும்.

நலிந்த ஆலைகளைப் பற்றிச் சொன்னார்கள். நலிந்த ஆலைகளைப் பொறுத்த வரையில் இரண்டு வகையாக நாம் வகுக்கலாம். ஒன்று, நிர்வாகம் நன்றாக நடந்து, அந்தத் தொழிலுக்கு அப்பாற்பட்ட சக்திகளால், அந்தத் தொழில் நிறுவனம் மூடப்படுவது. சான்றாக, இந்தியத் திருநாட்டில் ஒரு தொழிற்சாலை

நன்றாக நடத்தப்பட்டும் வெளிநாட்டு வர்த்தகத்தின் காரணமாக, வெளிநாட்டுப் பொருள் இங்கே குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்படுவது போன்ற அந்த நிறுவனத்திற்கு அப்பாற்பட்ட காரணங்கள் மூலமாக அந்தத் தொழிலும் நசிந்து போகலாம். இது முதல் வகை.

இரண்டாவது வகை, இந்த நிறுவனத்தை நடத்துகிறவர்கள் கோளாறு காரணமாக, பங்குதாரர்கள் மற்ற வகையினர்கள் ஆகியவர்களுடைய தவறான போக்கு காரணமாக அந்தத் தொழில் நசிந்து போவது. இது இரண்டாவது வகை.

மூன்றாவது வகை—தொழில் தகராறுகள் ஏற்பட்டு தொடர்ந்து வேலை நிறுத்தமோ, கதவடைப்போ ஏற்படுகிற போது அதனாலே அந்தத் தொழிற்சாலைகள் மூடப்படுவது மூன்றாவது வகை.

(பிற்பகல் 2-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** நான் தொழிலாளர் நலத் துறையைப் பொறுத்தவரையில் சொல்வது, இந்த மூன்றையும் போட்டுக் குழப்பி, இதில் தெளிவான கொள்கையில்லை என்று தொழிலாளர் நலத் துறையைக் குறை சொல்வதில் நிச்சயமாகப் பலனில்லை. தொழிலாளர் நலத் துறையைப் பொறுத்த வரையில், தொழிற் தகராறு காரணமாக மூடப்பட்டு, தொழிற் தகராறு தீர்ந்தால் உடனே நடத்தக்கூடிய தொழிற்சாலையாக இருக்குமானால், உடனடியாகப் பிரச்சினையைத் தீர்க்க எல்லா முயற்சிகளையும் தொழிலாளர் நலத் துறை மேற்கொள்ளும். நிர்வாகத்தின் கோளாறு காரணமாக ஒரு தொழில் பாதிக்கப் பட்டிருக்குமானால். அதற்கு முதலாளி காரணமா, பங்குதாரர் கள் காரணமா என்பவற்றைப் பற்றியெல்லாம் சிந்திக்க வேண்டிய கடமை, எண்ண வேண்டிய கடமை அரசுக்கு நிச்சயமாக உண்டு. இல்லை என்று மறுக்கவில்லை. தொழிற் துறை, நிதித் துறை



எல்லாம் சேர்ந்து அந்தத் தொழிற்சாலையை ஏற்று நடத்த வாய்ப்பு இருக்கிறதா என்று பார்த்து, அவர்களை செய்ய வேண்டும். சக்திக்கு மீறிய காரணத்தால், தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்குமானால், அவற்றுக்குப் பாதுகாப்புத் தர வேண்டியது மாநில அரசின் கடமை, மத்திய அரசின் கடமை. அந்த வகையிலே எண்ணிப் பார்த்து, செயல்பட வேண்டும்.

இங்கே, மூடிய ஆலைகளைத் திறக்க நாங்கள் ஒத்துக் கொள்ளவே மாட்டோம் என்று இந்திய அரசு தெரிவித்திருப் பதைச் சொன்னார்கள். அது சரியல்ல. எந்தக் காரணத்தாலே ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்த்துத்தான் முடிவுக்கு வர வேண்டுமே தவிர, ஒட்டுமொத்தமாக மூடிய ஆலை களைத் திறக்க நாங்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள மாட்டோம் என்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு சொல்வது நியாயமாக ஆகாது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் அத்தகைய அணுகுமுறையைத்தான் மேற்கொள்ளும். இன்னும் குறிப்பாக நான் சொன்னேனே, இரண்டாவது வகை—அதாவது, ஒரு முதலாளி மோசடி செய்த காரணத்தாலே ஒரு தொழிற்சாலை சீர்குலைந்து இருக்குமானால், அந்த முதலாளி எந்தத் தொழிற்சாலை நடத்தினாலும், அதற்கு நாம் அனுமதி கொடுக்கக் கூடாது. அவர்கள் வங்கிகளிலிருந்து பணம் பெறுவதற்கும் வாய்ப்பைத் தேடித் தரக்கூடாது. இன்னும் சொல்லப்போனால் எப்படி ஒப்பந்தக்காரர்களை பிளாக்-லிஸ்ட் பண்ணுகிறோமோ, அதைப்போல அத்தகைய முதலாளிகளையும் மத்திய அரசும், மாநில அரசுகளும் பிளாக்-லிஸ்ட் பண்ணுவது தான் அந்தத் தொழிலுக்குப் பாதுகாப்பு என்பதை நாங்கள் நிச்சயமாக வரவேற்கிறோம்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் பேசும் போதும், திரு. செங்ஞானியப்பன் அவர்கள் பேசும்போதும் திட்டங்கள் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். கோவையிலே இருக்கிற பஞ்சாலையைப் பற்றிச் சொன்னார்கள். அந்தக் கோப்புகளைப் பார்க்க வேண்டுமென்று அவர்கள் பரிவோடு கேட்டுக்கொண்டார்கள். என்னிடத்தில் வந்த கோப்பு களை எல்லாம் பார்த்துவிட்டேன். இதுவரையில் அது வர வில்லை. அப்படி இருக்குமானால் அது நிச்சயம் பார்க்கப்படும். ஆனால் ஒன்று மட்டும் சொல்கிறேன். இந்த முறையிலேதான்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 20

இந்த அரசு அணுகுகிறது. தொழிற் தகராறு தீர்ந்த உடனே ஒரு ஆலை நடக்குமென்றால் உடனடியாக நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம். ஆனால் நிர்வாகக் கோளாறு அல்லது முதலாளியின் கோளாறு என்றால் கட்டாயம் அதைப் பரிசீலிக்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். ஏனென்றால் மக்களின் பணத்தைத் தான் நாம் முதலீடு செய்கிறோம். மேற்கு வங்கத்தினுடைய முதலமைச்சர் திரு. ஜோதி பாசு அவர்கள் இதைப் பற்றிச் சொல்லும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். "மத்திய சர்க்கார் எடுக்க மாட்டோம் என்கிறது, நீங்கள் ஏன் குஜராத் பேட்டர்னில் எடுக்கக்கூடாது" என்ற கேள்வியை அவரிடத்திலே கேட்டபோது, "அது முடியாது; முடியாது என்றால் தொழிலாளர்களிடத்திலே அக்கறை இல்லாத காரணத்தாலே அல்ல. மாநில அரசிடத்திலே இருக்கக்கூடிய நிதிவசதிகளை வைத்து அதை எடுத்து நடத்துவது என்பது முடியாது. மத்திய அரசு குஜராத் பேட்டர்னில் கடன் கொடுக்கிறது. அதற்கு வட்டி கட்ட வேண்டும். எத்தனை தவணைகளில் திருப்பித் தர வேண்டுமோ அந்தத் தவணைகளில் திருப்பித் தர வேண்டும். அதை மாநில அரசு தாங்காது. ஆகையால் எங்களால் இயலாது" என்று சொன்னார்கள். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் இவற்றை ஒட்டுமொத்தமாக எண்ணிப் பார்த்து, அந்த வகையிலே பிரச்சினைகளைப் போட்டு குழப்பிக்கொள்ளாமல் தெளிவான சிந்தனையோடு இந்த அரசு அணுகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் தொழிலாளர் இயக்கங்களில் அல்லது தொழில் தகராறுகளில் வன்முறை வருவதை நிச்சயமாக அனுமதிக்காது. வன்முறை என்பது பல காரணங்களாலே வருகிறது. தொழிற் சங்கங்களுக்கிடையே ஏற்படுகிற போட்டி, பகை இவை காரணமாக தொழிற் சங்கத் தலைவர்கள் தாக்கப்படுகிறார்கள். சில நேரங்களில் முதலாளிகளின் வெறித்தனமான போக்கு காரணமாக தொழிலாளர்கள் தாக்கப்படுகிறார்கள். இப்படித் தொழில் உறவுகளில் வன்முறை வருவதை நிச்சயமாகப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. காவல் துறையைக் கட்டிப் போட்டுவிட வேண்டுமென்றால், அப்படி வரும் வன்முறைகளிலிருந்து மக்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? எது சரி என்று பார்த்து, காவல் துறை செயல்பட வேண்டுமே தவிர, காவல் துறை அறவே தொழில் தகராறுகளிலோ அல்லது தொழிற் சங்கங்களில் ஏற்படும் வன்முறைச் சம்பவங்களிலோ ஈடு



1987 ஏப்ரல் 20] [திரு. ச. இராமச்சந்திரன்]

படுத்தப்படக்கூடாது என்பதை வலுத்தவன் சொல்வது எல்லாம் நடக்கும், இளைத்தவன் சொல்வது எல்லாம் போய்விடும் என்ற அந்தச் சூழ்நிலையை எந்த ஒரு சமதர்ம அரசும் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. காவல் துறை என்றாலே அவர்கள் முதலாளிகள் பக்கம்தான் இருப்பார்கள் என்று கருதத் தேவையில்லை. காவல் துறை பற்றி மானியம் வருகிறது. நீங்களும் பேசுவதற்கு வாய்ப்பைப் பெற்றிருக்கிறீர்கள். ஆகவே வன்முறை, பலாத்காரம் இவைகள், நிச்சயமாக இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், எந்தப் பக்கத்திலேயிருந்து வந்தாலும், அந்த வன்முறை அனுமதிக்கப்பட மாட்டாது என்கின்ற உறுதியை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பேரூர் நடராசன் அவர்களும், எங்கள் பக்கத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் கடந்த காலத்தில் நடந்த வன்முறைகளை, ஒன்றிரண்டு உதாரணங்களை, இப்போதும் எடுத்துச் சொன்னார்கள். வன்முறைகள் சில நேரங்களிலே வருகின்றன. அரசு அதை எப்படி அணுகுகிறது என்பதைப் பொறுத்துத்தான் இருக்கின்றது. தொழிற்சங்கத் தலைவர்களுக்கு இந்த அரசு முழுப் பாதுகாப்புத் தரும். தொழிற்சங்கத் தலைவர்களை ஒழித்துக்கட்ட வேண்டுமென்றோ அல்லது போட்டி தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஈடுபடுகின்ற வன்முறைகளை அனுமதிக்கவேண்டும் என்றோ நிச்சயமாக இந்த அரசு கருதாது. அதிலும் குறிப்பாக தமிழக முதல்வர் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்களைப் பொறுத்த வரையிலே தொழிற்சங்கங்களிலே இருக்கின்றவர்களை, தொழிலாளர்களைப் பிரித்துத்தான் எங்களுக்கு ஆள் சேர்க்கவேண்டும் என்ற அவல நிலை நிச்சயமாக இல்லை. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இல்லை. இன்னும் சொல்லப்போனால், இருக்கின்றவர்களை அரவணைத்துச் செல்வதே எங்களுக்கு மிகப் பெரிய காரியம். அந்த இழி நிலைக்கு இந்த அரசு செல்லாது என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

குறைந்தபட்ச கூலியைப் பற்றிச் சொன்னார்கள். குறைந்தபட்சக் கூலி பற்றிய சட்டங்களைச் செயல்படுத்த முடியவில்லை என்று சொன்னார்கள். நான் பணிவோடு தெரிவித்துக்கொள்வது, இங்கே இன்றைக்கு அனைத்துக் கட்சிகளிலேயிருந்து பேசியவர்கள் எல்லாம் தொழிற் சங்கத் தலைவர்கள். சட்டம் என்பது ஒரு கருவி. சட்டமே எல்லாம்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 20

செய்துவிடும் என்று தொழிற்சங்கம் நடத்துகின்றவர்கள் ஒரு முடிவுக்கு வந்துவிடக்கூடாது. ஏனென்றால், நானும் ஒரு காலத்திலே தொழிற்சங்கம் நடத்தியவன் என்ற முறையிலே சொல்கிறேன். நம்முடைய உரிமைகளுக்கு ஒரு வாய்ப்பு. அந்த வாய்ப்பை பெறவேண்டிய கடமை யாரிடத்திலே இருக்கிறது என்றால், தொழிற்சங்கங்களை நடத்திக் கொண்டிருப்பவர்கள் இடத்திலே இருக்கிறது. உங்களுடைய பொறுப்பிலே இருக்கிறது. தொழிற்சங்கத் தலைவர்கள் செய்ய வேண்டிய காரியம், தொழிலாளர்கள் இயக்கம் பெற்றுத் தரவேண்டிய காரியம் இருக்கிறது. அது ஒரு ஜனநாயகக் கடமை. அரசாங்கத்தின் தலையிலேயே போட்டுவிட்டு, நீங்கள் சட்டம் போட்டீர்களே, நீங்கள் செய்து கொடுங்கள் என்றால் அவ்வளவு சுலபமாக அதெல்லாம் ஆகாது. அதிலே நம் சமுதாய அமைப்பைப் பார்க்கவேண்டும். இன்றைய சமுதாய அமைப்பு நிலப்பெருவுடைமை சமுதாய அமைப்பு. ஆகவே இந்த அடிப்படையிலே ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இதிலே சாதாரண மக்கள் தங்களுடைய உரிமையைப் போராடித்தான் பெற வேண்டும். அதற்கு ஒரு அரசு சாதகம் செய்யலாம். போகின்ற பாதையை நல்ல பாதையாக அமைத்துத் தரலாம். தார்ச் சாலையாகப் போட்டுத் தரலாம். பயணத்தையும் நாங்களே முடித்துத் தரவேண்டும் என்று நிச்சயமாக தொழிற்சங்கங்களைச் சார்ந்தவர்கள், தொழிலாளர்கள் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் கோரக்கூடாது. நாங்களே முடித்துத் தந்தால், அப்புறம் உங்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவது எங்களுக்குப் பெரும் கஷ்டமாகிவிடும். ஆக அந்தச் சூழ்நிலைக்கு எங்கள் அரசு ஆளாகக்கூடாது. அது குறைந்தபட்ச கூலிச் சட்டமாக இருந்தாலும் சரி, பீடித் தொழிலாளர்கள் சட்டமாக இருந்தாலும் சரி, மற்ற மற்ற சட்டங்களாக இருந்தாலும் சரி, அவைகள் நமக்கு ஒரு வாய்ப்பு. அதைப் பயன்படுத்தி எந்த அளவுக்கு அந்தச் சலுகைகளை தொழிலாளர்களுக்குப் பெற்றுத் தருகிறோமோ அதிலேதான் தொழிலாளர்கள் தலைவர்களுடைய, தொழிலாளர்கள் இயக்கத்தை சார்ந்தவர்களுடைய சாமர்த்தியம் இருக்கிறதே தவிர, ஒரு இடத்திலே அரசாங்க அதிகாரிகளைப் போட்டு குறைந்தபட்ச கூலி வாங்கித் தர முடியுமா?



1987 ஏப்ரல் 20] [திரு. ச. இராமச்சந்திரன்]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அரசாங்கத்தின் சார்பிலே பணியாற்றுகின்ற ஊழியர்கள் எத்தனை பேர்கள் இந்த உணர்வோடு இருக்க முடியும்? அவர்களும் சமுதாயத்தின் பிரதிபலிப்புத்தானே? ஒருவர் மீது ஊழல் குற்றச்சாட்டு அல்லது லஞ்சம் வாங்குகிறார் என்று சொல்வது சுலபம். ஆனால் எல்லாவற்றிலும் நல்லது கெட்டது உண்டு. தொழிலாளர்கள் இயக்கத்தில் இல்லையா? முதலாளிகள் இடத்திலே இல்லையா? நிர்வாகத்திலே மட்டும்தானா? அங்கும் இங்கும் என்று இருக்கிறதே. Corruption is a social evil. ஆகையினால் நல்லவர்கள் கெட்டவர்கள் எல்லாவற்றிலுமே உண்டு. அதை வைத்துக்கொண்டு ஒரு தரப்பாரை இன்னொரு தரப்பார் குறை சொல்வது நிச்சயமாக சரி ஆகாது. ஆகவே அரசு போட்டிருக்கின்ற சட்டதிட்டங்கள் ஒரு வாய்ப்பை உருவாக்கித் தருகின்றன. அதைப் பெற்றுத் தருகின்ற பெரும் பணியில் அந்த இயக்கத்தை நடத்துபவர்கள்தான் ஈடுபடவேண்டுமே தவிர அரசே எல்லாவற்றையும் செய்வது நடக்கக்கூடிய காரியம் அல்ல. அந்த வகையிலே. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் கடைசியில் கேட்டுக்கொள்ளலாமே. . .

(பிற்பகல் 2-10)

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்ச கூலி நிர்ணயச் சட்டத்தை அமுல்படுத்துவதுபற்றி நான் பேசும்போது தொழில் சங்கங்கள் பலமாக இருக்கிற இடத்தில் மட்டும் தான் நீங்கள் போடுகிற அத்தகைய சட்டங்கள் அமுலுக்கு வருகின்றன என்று சொன்னேன். அதுதான் உண்மையும் கூட. அந்த சட்டத்தின்படி இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை அல்லது 50 புள்ளி உயர்ந்தால், தொழிற் சங்கங்களே உடனே திருத்தி மாற்றியமைக்க முடியாது. அதைத்தான் நான் இங்கே சொன்னேன். எங்களுடைய பொறுப்பை நாங்கள் நூற்றுக்கு நூறு செய்யத் தயார். ஆனால் நீங்கள் எங்களுக்கு ஒத்துழைப்பு கொடுப்பது இல்லை என்பதுதான் இன்றைக்கு இருக்கிற பிரச்சினை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதற்காக ஒன்றைச் சொல்கிறேன். ஏற்கெனவே நீங்கள் போட்டு...

கின்ற தொழிலாளர் நலச் சட்டங்கள் எல்லாம் தொழிலாளர்கள் அனுபவித்த பிறகுதான் சட்ட அந்தஸ்தை பெற்று சட்டங்களாக வந்திருக்கின்றன என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, சட்டங்கள் கொண்டு வந்த பிறகுதான் தொழிலாளர்கள் அவற்றை அனுபவிக்கிறார்கள் என்பது சரியல்ல என்பதுதான் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில நடந்துள்ள கடந்த கால வரலாறு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி என்றால் உறுப்பினர் அவர்கள் ஏன் சட்டத்தைப் பற்றி கவலைப்படுகிறார்கள்?

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இவர்கள் எந்த அளவுக்கு மனச்சாட்சியோடு சட்டங்களைப் போட்டிருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்வதற்காகத் தான் நான் அப்படிக் கேட்டேன். தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் அனுபவித்த பிறகுதான் சட்ட அந்தஸ்துகள் வந்திருக்கின்றன என்பதுதான் கடந்த கால வரலாறு.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் போட்டு யாருடைய இதயத்திலே இடம் பெற வேண்டுமென்று எண்ணி சட்டம் கொண்டு வந்தோமோ அவர்களுடைய மனதில்—என்னையோ அல்லது நண்பர் சுப்பராயன் அவர்களையோ சொல்லவில்லை—இன்றைக்கு நாட்டிலேயுள்ள ஏழையெளிய மக்களுடைய இதயங்களிலே தன்னிகரற்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கிறார்கள் என்பது தான் உண்மை. நம்பிக்கையை ஏழைகள் தான் வைக்க வேண்டும். ஆகவே, எதிர்க்கட்சிகள் நம்பிக்கை வைக்க வேண்டுமென்று நாங்கள் நிச்சயமாக எதிர்பார்க்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, அரசு நடத்துகின்ற பொது நிறுவனங்களில் ஒரு மாடல் எம்பிளாயராக இருக்க வேண்டுமென்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். இங்கே அது பற்றி பிரச்சினைகளை எல்லாம் சொல்லி, எப்படி எப்படி அவை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்றும் சொன்னார்கள். அவற்றைச் சொல்ல வேண்டியது எதிர்க் கட்சிகளின் கடமைதான் என்பதை நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக் கொள்





கிறேன். அரசு நடத்துகின்ற துறைகளைப் பொறுத்தவரை பெரும்பாலானவை எசன்சியல் சர்வீஸ். இன்றைக்கு மின்சாரம், போக்குவரத்து, உணவுத் துறை, பால் வளம் இப்படி பல்வேறு துறைகளை எடுத்துக் கொண்டால் இவைகள் எல்லாம் எசன்சியல் சர்வீசில் தான் வருகின்றன. மக்களுக்குத் தேவைப்படும் இன்றியமையாதவை என்று பொருள். அப்படி என்றால் அரசு நினைத்தாலேயே கூட அந்தத் தொழில்களை மூட முடியாது. எந்த நேரமும் அதனை மூட முடியாது, ஏனென்றால் அவை நாட்டு மக்களுக்கு இன்றியமையாத் தேவையானவை. Right to lock out does not exist. ஆகவே கூடுமானவரை தொழிலாளர் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் அவற்றிலே வேலை நிறுத்தம் செய்வதும், அவற்றை மூட வைப்பதும் தவறு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கூடுமானவரை தவிர்க்க வேண்டும். மக்களின் நலன் கருதி மின்சாரம், குடிநீர் வசதி, உணவுத் துறை இன்னும் இதுபோன்ற மற்ற மற்ற இன்றியமையா தேவையுள்ள துறைகளில் இப்படிப்பட்ட நிலைமைகளை தவிர்க்க வேண்டும்.

When there is no right to lock out it is the responsibility of the Trade Union Movement and Trade Union Leaders to see that they do not resort to strike. நான் கேட்கின்றேன், மாடல் எம்பிளாயர் பற்றிப் பேசுகிறோமே, மாடல் எம்பிளாயரை நாம் உருவாக்குகிறோமா? ஆகவே, நாம் சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய கடமையோடு பணியாற்றுகின்றபோது அதிலே தொழிற் சங்கத் தகராறுகள் அல்லது தொழிலாளர்கள் தகராறுகள் என்று வருகின்றபோது, பிரச்சினைகளை அணுகுகின்றபோது மாதவாரம் பிரச்சினை நிச்சயமாக மற்ற இடங்களில் வராது. அனைவரும் சேர்ந்து மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்ற உணர்வோடு, இன்றியமையாத பணியில் ஈடுபட்டிருக்கிறோம் என்பதை இதயத்தில் ஏற்றுக் கொண்டு பணியாற்ற வேண்டுமே தவிர எதற்கு எடுத்தாலும் வேலை நிறுத்தம் மூலம்தான் காரியங்களைச் சாதிக்க வேண்டுமென்ற கருத்தை மாற்ற வேண்டும். அந்தக் கருத்து நிச்சயமாக நாட்டுக்கும் நல்லதல்ல. நமக்கும் நல்லதல்ல. நாம் ஏற்றிருக்கின்ற பொதுவுடைமை கருத்துக்கும் ஏற்றதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில், மாண்புமிகு புரட்சித்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 20

தலைவர் அவர்கள் எது சரி என்று படுகிறதோ அதைச் செய்யுங்கள் என்று சொன்னார்கள். தந்தை பெரியார் அவர்களும் எங்களுக்கு அதைத்தான் சொல்லித் தந்தார்கள்.

> "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்ற குறளுக்கேற்ப பணியாற்றுகிறோமேயல்லாமல் இன்னது என்று ஒரு முடிவுக்கு வந்து விட்டு காரியங்களை ஆற்றுவது என்பது எங்களுக்கு வழக்கமல்ல, அது பண்பும் அல்ல என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இருக்கின்ற நிலைமைகளை யார், சமுதாயக் கண்ணோட்டத்தோடு, சமதர்மக் கண்ணோட்டத்தோடு, எது சரி என்று படுகிறதோ, எது உகந்தது என்று கூட அல்ல. What is right is different from What is the best தான் What is the best என்று கூடச் சொல்லவில்லை. What is right எது சரி என்று படுகிறதோ அதைச் செய்வதற்காகத்தான், அந்த நோக்கத்தோடுதான் இந்த அரசு தொழிலாளர் நலத் துறையானாலும், மற்றத் துறைகளானாலும் அந்த இலட்சியத்தோடு தான் செயல்படுகிறது என்கின்ற காரணத்தினாலே மாண்புமிகு உறுப்பினர்கள், குறிப்பாக எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எந்தவிதமான சந்தேகமோ, எந்தவிதமான குழப்பமோ நிச்சயமாகக் கொள்ளத் தேவையில்லை. இந்த அணுகு முறையை வைத்துப் பார்த்தால் நாங்கள் எந்த அடிச்சுவட்டின் வழியே செல்கிறோம் என்பது நிச்சயமாக எல்லோருக்கும் புலனாகும் என்று தெரிவித்து, இந்தப் பல்வேறு துறைகளிலே நான் கேட்டிருக்கின்ற மானியத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் நிச்சயமாகத் தொழிலாளர்களுக்குத் தரப்படுகிற மானியத்தில் வெட்டு வேண்டுமென்று நீங்கள் வற்புறுத்த மாட்டார்கள் என்று எனக்குத் தெரியும். ஆகையினாலே, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்றுத் தாராளமாக கேட்ட நிதியை வழங்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொண்டு அமைகின்றேன், வணக்கம்.

*திரு. கே. சுப்பராயன்* : தலைவரவர்களே. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. சுப்பராயன் அவர்களுக்கு முதலிலேயே ஒரு வாய்ப்பு கொடுத்தேன்.



1987 ஏப்ரல் 20]

*திரு. கே. சுப்பராயன்* : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு சிறு விளக்கம் மட்டும் கேட்க விரும்புகிறேன். மிக முக்கியமான ஒரு விஷயத்தில் மாநில அரசினுடைய கொள்கை நிலை என்ன என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான், நான் இங்கே தலையிட வேண்டிய அவசியம் இருக்கிறது. மத்திய அரசாங்கம் நடப்புக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவர இருக்கிற புதிய தொழில் உறவு மசோதாவின் மீது மாநில அரசின் கொள்கை நிலை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : தலைவர் அவர்களே, விவாதத்தின்பொழுது பேசுவார்கள் என்று எதிர் பார்த்துத் தயாராகத்தான் வந்தேன். ஆனால் விளக்கம் சொல்ல நேரமில்லை; யாரும் பேசவும் இல்லை. திடீரென்று புதிதாக அவர் எழுப்புவதால் அதில் விளக்கம் சொல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அது எந்த மாதிரி சட்ட முன்வடிவு வருகிறது என்று பார்த்து—ஏனென்றால் மாநிலத்தின் உரிமைகளைப் பறிக்குமோ என்கின்ற ஒரு ஐயம் இருக்கிறது—அது எல்லாம் வந்த பிறகு அதைப் பற்றி ஆலோசித்து அரசு முடிவு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.**

திருவாளர்கள் ஆர். செங்காளியப்பன், கே. சுப்பராயன், பி. கே. எம். முத்துராமலிங்கம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 29,63,16,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, **நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.**

## கோரிக்கை எண். 44—எழுதுபொருள் அச்சுத் துறை.

திரு. மு. இராசாங்கம் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண். 44—எழுதுபொருள்-அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 19,31,51,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (21—4—1987) காலை 10.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.18 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

I. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்—எதுவுமில்லை

## இணைப்பு. I

(73ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### தமிழ்நாட்டில் தொழிலாளர் நலன்.

### அத்தியாயம் 1.

### பொது.

தமிழ்நாட்டில் தொழில் உறவு பொதுவாக சுமூகமான நிலையில் இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக 1986 ஆம் ஆண்டு தொழில் அதிபர்களும் தொழிலாளர்களும் தொடர்ந்து அளித்த ஒத்துழைப்புக்கு இவ்வரசு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது. மேலும் தொழிலாளர் நலனைப் பாதுகாக்கவும் சமுதாயத்தின் நலத்தை காப்பதையே முக்கிய நோக்கமாக மனதில் கொண்டு பொது வாழ்வுக்குரிய கொள்கைகளை இவ்வரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. விழாக் காலங்களில் கூடுதலாக ஊதியக் கொடை வழங்க வேண்டுமென்பது தொடர்பாக தொழிலாளர்கள் அளிக்கும் கோரிக்கையின் காரணமாகத் தகராறுகள் ஏற்படுவது சாதாரண நிகழ்ச்சியே என்பது அனைவரும் அறிந்ததாகும். ஆனால் ஆய்வு ஆண்டில் அத்தகைய நிகழ்ச்சிகள் எவையும் நடைபெறவில்லை. மாநில தொழில் உறவு அமைப்பு தொழில் உறவு தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகளைத் திறம்பட சமாளித்ததன் மூலம் இக்காலத்தில் பெரிய அளவிலான தொழில் வேலை நிறுத்தங்கள் எவையும் ஏற்படாமல் தடுத்ததற்காக மேற்சொன்ன அமைப்புபாராட்டுக்குரியதாகும். தோல் பதனிடும் தொழிற்சாலைகள், பீடி போககுவரத்து போன்ற பெருந்தொழில்களில் இந்த ஆண்டில் உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டுள்ளன.

தொழில் உறவில் சுமூகமான நிலையைத் தொடர்ந்து வைத்து வருவதுடன் தொழிற்சாலைப் பணியாளர்களுக்குப் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் அனைத்து நாடுகள் தொழிலாளர்கள் நல நிறுவனத்தின் ( ILO ) உடனுழைப்புடன் கருத்தரங்குகளை நடத்துவதன் மூலம் இவ்வரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டது. அனைத்து நாடுகள் தொழிலாளர் நல நிறுவனம் அண்மையில் மேற்கொண்ட ஆய்வின் முடிவிலிருந்து உலக அளவில் ஏற்படக்கூடிய இப்பிரச்சினையின் தன்மைபற்றி தெரியவருகிறது. அவ்வாய்விலிருந்து 'உயிர் வாழ்வதற்காக' மேற்கொள்ளப்படும் பணியின் போது ஏற்படும் விபத்துக்களால் தொழிலாளர்கள் விலைமதிப்பில்லா தங்களுடைய உயிரையும், உறுப்புக்களையும் ஆரோக்கியத்தையும் இழக்கின்றனர் என்று தெளிவாகியுள்ளது. கடந்த ஆண்டில் சுமார் (90,00,000) 9 மில்லியன் தொழிலாளர்கள் தொழில் விபத்துக்களால் காயமுற்றனர்.

1984 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் போபாலில் நடைபெற்ற கோரமான விபத்திற்குப் பின்னர் இப்பிரச்சினைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு தொழிலாளர்கள் மேற்கொண்டுள்ள பணியின் காரணமாக ஏற்படும் ஆரோக்கியக் குறைவு தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கை ஆகியவையும் தொழில் வளர்ச்சியுடன் இணைந்து கருதிப் பார்க்கப்பட வேண்டியதாயிற்று. இத்தகைய தொழில் இடையூறுகளுக்கு நிரந்தர தீர்வு காண்பதற்காக இவ்வரசு வல்லுநர் குழு ஒன்றை நியமித்துள்ளது. இக்குழு தனது அறிக்கையை அளித்துள்ளது. அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதைத் தவிர பெரும் எண்ணிக்கையில் விபத்துக்கள் நடைபெறுவதாக அறியப்படும் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு ஆய்வுப் பணியை மேற்கொள்ளவும், அத்தகைய தொழிற்சாலைகளில் தொடர்ந்து ஏற்படும் விபத்துக்களைக் கணக்கிடுவதற்காகவும் முக்கியத் தொழில் மையங்களில் பாதுகாப்பு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தற்பொழுது இன்றியமையாததாகக் கருதப்படும் உற்பத்தித் திறனைப் பெருக்கும் எண்ணத்தை தொழிற்சாலை பணியாளர்களுக்கிடையே ஏற்படுத்த வேண்டும் என்பதே மற்றொரு பிரச்சினையாகும். இது குறித்து அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

தொழிலாளர்களின் சமூகபொருளாதாரத்தைமேம்படுத்துவதே தொழில் அமைதியை ஏற்படுத்துவதற்கு முக்கியமானதாகும். தொழில் அமைதி தேசீய உற்பத்தி திறனை உயர்த்துவதற்கு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். உற்பத்தித் திறனைப் பெருக்க வேண்டும் என்ற உணர்வை தொழிற்சாலைப் பணியாளர்களிடையே ஏற்படுத்தும் நோக்குடன் தொழிற்சாலை தலைமை இணை ஆய்வாளர் பதவித் தரத்தில் தனி அமைப்பு ஒன்றை இவ்வரசு ஏற்படுத்தியுள்ளது. இவ்வதிகாரி மேற்சொன்ன நோக்கத்தினை எய்துவதற்காகக் கருத்தரங்குகள் ஏனைய அறிவுறுத்தும் விளக்கத் திட்டங்கள் (Educative Programmes) ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்வதில் தீவிரமாக பணியாற்றி வருகிறார். தொழிற்சாலைப் பணியாளர்களிடையே உற்பத்தித் திறனைப் பெருக்க வேண்டுமென்ற உணர்வை ஊட்டுவதற்காக மேற்சொன்ன திட்டங்களின் பயன் குறித்து இத்துறை ஆர்வத்துடன் கண்காணித்து வருகிறது.





தொழிலாளர் நலத்துறையின் அலுவல்கள் பின் வரும் தலைப்புகளின் கீழ் ஆராயப்படுகின்றன.

1. தொழில் உறவுகள்.
2. தொழிற்சாலைகள் நிருவாகம்.
3. தொழிலாளர் நிருவாகம்.
4. ஊதியங்கள் சட்டம்.
5. சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள்.
6. தொழிலாளர் நலப் பாதுகாப்பு நடவடிக்கைகள்.
7. பயிற்சி.
8. எடைகள், அளவைகள்.

## அத்தியாயம் 2.

## தொழில் உறவுகள்.

### 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம்.

இந்த ஆய்வு ஆண்டில் தகராறுகள் சம்பந்தப்பட்ட மொத்தம் 10,041 வழக்குகளில் 8,112 வழக்குகள் குறித்து இணக்க அதிகாரி தீர்ப்பு வழங்கியுள்ளார். (இதன் விவரங்கள் இணைப்பு-1-ல் காண்க).

### வேலை நிறுத்தங்கள்.

1986ஆம் ஆண்டில் ஏற்பட்ட 263 வேலை நிறுத்தங்கள், கதவடைப்புக்கள் ஆகியவற்றின் காரணமாக வீணான உழைப்பு நாட்கள் 34,53,124 ஆகும். இவ்வாண்டில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள் கதவடைப்புக்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை முந்தைய ஆண்டுடன் ஒப்பிட்டு இணைப்பு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

வேலை நிறுத்தம் கதவடைப்புக்கள் எண்ணிக்கை அதிகரித்திருந்த போதிலும் வீணான உழைப்பு நாட்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டைவிட குறைவாக உள்ளது.

1986 ஆம் ஆண்டில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள், கதவடைப்புக்கள் ஆகியவை குறித்து துறை அலுவலர்களால் தீர்வு காணப்பட்ட விவரங்களை இணைப்பு 3-ல் காணலாம்.

1985-86-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள், கதவடைப்புக்கள் பற்றிய தொழில் வாரியான விவரங்கள் இணைப்பு 4 -ல் கொடுக்கப்பட்டுள்ளன.

இம்மாநிலத்திலுள்ள தொழில் நடுவர் மன்றத்திற்கு தொழிலாளர் நீதி மன்றங்களுக்குத் தீர்ப்புக்காக அனுப்பப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 33-சி(2) பிரிவின் கீழ் தொழிலாளர் நீதிமன்றங்கள் முடிவு செய்த வழக்குகளின் எண்ணிக்கை ஆகியவை பற்றிய விவரங்களைக் காட்டும் அறிக்கை இணைப்பு 4-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு ஆண்டில் தீர்வு காணப்பட்ட முக்கிய விவகாரங்கள்.

துறை அலுவலர்களின் முயற்சியால் 8,112 தொழில் தகராறுகள் தீர்த்து வைக்கப்பட்டன. இதுபற்றிய விவரங்களை இணைப்பு 1-ல் காணலாம். மேற்கொண்ட முயற்சியின் பயனாக பின்வரும் தொழில் தகராறுகள் தீர்த்து வைக்கப்பட்டன.

1. டெக்கான் சுகர்—புகளூர்.

2. தி என்பீல்ட் இந்தியா லிமிடெட்—ஆனைக்காரைபட்டி.

3. தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனம்—புகளூர்.

4. ஆரோபுட் பிரைவேட் லிமிடெட்—ஆரோவில்.

5. அசோக் லேலண்ட் லிமிடெட்—சென்னை.

6. இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட் பவுண்டரி டிவிசன்—சென்னை—89.

7. பவானி மில்ஸ்.

8. மதுரா கோட்ஸ் லிமிடெட், மதுரை, அம்பாசமுத்திரம், தூத்துக்குடி.

9. ஸ்ரீ ஹரி மில்ஸ்.

10. செட்டிநாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்—புலியூர்.

11. தமிழ்நாடு உருக்காலை நிறுவனம்—அரக்கோணம்.

12. லட்சுமி மிஷின் ஒர்க்ஸ் யூனிட் 1—பெரியநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்.



13. லிப்டன் இந்தியா லிமிடெட்—சென்னை.

14. மீனாட்சி குரூப் ஆப் மில்ஸ்—மதுரை, பரவை (மதுரை மாவட்டம்), மணப்பாறை (திருச்சி மாவட்டம்).

15. தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலை ஏ அண்டு பி ஆலைகள், திருநெல்வேலி.

16. தோல் பதனிடும் தொழிற்சாலைகள்.

17. பீடி தயாரிப்பு நிறுவனங்கள்.

18. அரசு போக்குவரத்துக் கழகங்கள்.

துணி ஆலைத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் தொடர்பாக ஏற்பட்ட தகராறுகள் குறித்து தொழிற்சாலைகள் சிறப்பு நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பு :—

தமிழ்நாட்டிலுள்ள 559 துணி ஆலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு, அகவிலைப்படி, பணிச்சுமை போன்றவை தொடர்பாக நிருவாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட தொழில் தகராறுகள் குறித்து தீர்ப்பளிக்கப்படுவதற்கான வழக்குகள் தமிழ்நாடு அரசு தொழிற்சாலைகளின் சிறப்பு நடுவர் மன்றத்திற்கு 1985-ஆம் ஆண்டில் அனுப்பியது. இத் தொழிற்சாலைகள் சிறப்பு நடுவர் மன்றத்திற்கு திரு. கே. இ. வரதன் நடுவராக நியமிக்கப்பட்டார். அவர் அளித்துள்ள தீர்ப்புகளை 23—2—1987 அன்று அரசுக்கு அனுப்பி வைத்தார்.

வழக்குத் தொடருதல் :—

1986ஆம் ஆண்டில் பின்வரும் இனங்களில் வழக்குகள் தொடர அரசு அனுமதியளித்தது.

1. திருவாளர் வாசுதேவன், புளு மெட்டல்ஸ், சென்னை 12 (3) உடன்படிக்கையை செயல்படுத்தாமை.

2. திருவாளர் சி. எம். காசன் அண்டு கம்பெனி, சென்னை, தீர்ப்பை செயல் படுத்தாமை.

3. திருவாளர் ஸ்வீட் புட்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 12(3) உடன்படிக்கையை செயல்படுத்தாமை.

4. வி. பி. எஸ். தியேட்டர், சேலம்-6, தீர்ப்பை செயல் படுத்தாமை.

[1987 ஏப்ரல் 20

5. சுஜாதா பஸ் சர்வீஸ், மாரந்தஹள்ளி, தீர்ப்பை செயல் படுத்தாமை.

6. தேசீய நெடுஞ்சாலைகள்—சென்னை, தீர்ப்பை செயல் படுத்தாமை.

7. கேரளா அப்பளம் டிப்போ, திண்டுக்கல், தீர்ப்பை செயல்படுத்தாமை.

8. இநதியன் பிரிண்டிங் வொர்க்ஸ், சென்னை-4. தீர்ப்பை செயல்படுத்தாமை.

9. ஸ்ரீ டையிங் பேக்டரி, குகை, சேலம், தீர்ப்பை செயல் படுத்தாமை (4 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன).

10. வைஷ்ணவி ஸ்பின்னர்ஸ்—திண்டுக்கல், 10-பி ஆணையை செயல்படுத்தாமை.

11. அங்கையற்கண்ணி மில்ஸ், மதுரை—10-பி ஆணையை செயற்படுத்தாமை.

12. கோபு பிரதர்ஸ், திட்டக்குடி, 12(3) உடன்படிக் கையை செயற்படுத்தாமை.

முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி :

பிவன்ரும் நிறுவனங்களைப் பொறுத்த மட்டில் 1986 ஆம் ஆண்டில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு அனுமதித்துள்ளது.

| நிறுவனத்தின் பெயர். | அரசு ஆணை எண் நாள். | தொழிலா ளர்களின் எண் ணிக்கை. | அனுமதிக் கப்பட்ட தொகை ரூபாய். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | ரூ. |
| 1. இந்தியா போர்ஜ் அண்ட் டிராப் ஸ்டாம்பிங் லிமி டெட், அம்பத் தூர், சென்னை. | 6, 3—1—86 | 498 | 99,600 |
| 2. வசந்தா மில்ஸ் லிமிடெட், கோயம் புத்தூர். | 564, 12—3—86 | 1,351 | 2,70,200 |
| 3. இராமகிருஷ்ணா இண்டஸ்டிரியல் பிரைவேட் லிமி டெட், கோயம் புத்தூர். | 565, 12—3—86 | 400 | 80,000 |



1937 ஏப்ரல் 20]

மூடப்பட்ட தொழில் பிரிவுகளை மீண்டும் திறப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் :—

மூடப்பட்ட தொழில் பிரிவுகளின் தொழிலாளர்களுக்கு ரொக்க நிவாரணம் வழங்குவதைத் தவிர இம்மாநிலத்தில் மூடப்பட்ட துணி ஆலைப் பிரிவுகளையும், ஏனைய தொழில் பிரிவுகளையும் மீண்டும் திறப்பதற்கு அரசு நடவடிக்கைகள் எடுக்கிறது.

மூடப்பட்ட துணி ஆலைகள் பற்றிய விவரம் வருமாறு :—

| தொடர் எண்ணும் ஆலைகளின் பெயரும். | பணி யாளர்களின் எண்ணிக்கை. | பணி நிறுத்தப்பட்ட நாள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. பத்மா மில்ஸ் லிமிடெட், கலப்பட்டி, கோயம்புத்தூர். | 150 | 25—2—1981 |
| 2. தமிழ்நாடு நூற்பாலை நிறுவனம், ஆனைபுதூர், கோயம்புத்தூர். | 250 | 8—6—1981 |
| 3. ஸ்ரீ ஜனார்த்தனா மில்ஸ் லிமிடெட், கோயமுத்தூர். | 659 | 7—8—1983 |
| 4. வசந்தா மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர். | 1,351 | 13—11—1984 |
| 5. மேட்டூர் டெக்ஸ்டைல் இண்டஸ்டிரீஸ் லிமிடெட் மேட்டூர் அணை. | 2,500 | 16—7—1985 |
| 6. அலெக்ஸ் ஸாண்டர் திரட் டிவிஷன், மேட்டூர் அணை. | 260 | 1—7—1984 |
| 7. தி அக்ஷயா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், கோயமுத்தூர். | 580 | 31—3—1986 |
| 8. இராதாகிருஷ்ணா மில்ஸ் லிமிடெட், கோயமுத்தூர். | 1,100 | 10—8—1986 |
| 9. இலட்சுமி சண்முகா ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட், நமன சமுத்திரம், புதுக்கோட்டை மாவட்டம், | 600 | 23—7—1986 |

[1987 ஏப்ரல் 20

மேற்சொன்ன ஆலைகளில் தி அக்ஷயா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், கோயமுத்தூர் இராதாகிருஷ்ணா மில்ஸ் லிமிடெட், கோயமுத்தூர், ஆகியவை வேலை நிறுத்தம்/கதவடைப்பு செய்யப்பட்ட இனங்களாகும். ஆனால் நிருவாகத்தினர் மேற்சொன்ன ஆலைகளை நடத்துவதற்கு நிதி உதவி அளிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

கோயமுத்தூர் ஜனார்த்தனா மில்ஸ் லிமிடெட்டைப் பொறுத்தமட்டில், சென்னை, தொழிலாளர் நல இணை ஆணையாளர் (நிருவாகம்) தற்போது பேச்சுவார்த்தைகள் நடத்தி வருகிறார். இப்பிரிவு தனித்து செயல்படக் கூடியதா என்ற சாத்தியக் கூறுகள் குறித்து ஆராயும் பணியை கைத்தறித் துணிகள் கதர்த்துறை மேற்கொண்டுள்ளது.

மூடப்பட்டுள்ள ஆலைகளை மீண்டும் திறப்பதைப் பொறுத்தமட்டில் நிருவாகத்தினரின் பிரதிநிதிகள், தொழிலாளர்களின் பிரதிநிதிகள், வங்கிகள், ஏனைய நிதி நிறுவனங்கள் ஆகியோருடன் அமைச்சர்கள் நிலை உட்பட பல்வேறு நிலைகளில் அவ்வப்போது பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. மேற்சொன்ன முயற்சிகளின் பயனாக முறையே 8–4–1984லும், 17–9–1985லும் மூடப்பட்ட ஸ்ரீஹரி மில்ஸ் லிமிடெட், பவானி மில்ஸ் லிமிடெட் ஆகியவை, சென்னை தொழிலாளர் இணை ஆணையாளர் (நிருவாகம்) முன்னிலையில் செய்து கொண்ட ஒப்பந்த ஏற்பாட்டின் காரணமாக முறையே 31–10–1986, 16–10–1986 ஆம் நாட்களில் மீண்டும் திறக்கப்பட்டன.

காவேரி ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் லிமிடெட், புதுக்கோட்டை (தொழிலாளர்களின் எண்ணிக்கை 830).

பெரும் இழப்பு ஏற்பட்டதன் விளைவாக ஏற்பட்ட கடனை அடைப்பதற்காகத் தங்களுடைய ஆலையை ஏலத்தில் விற்பனை செய்வதற்காக புதுக்கோட்டை காவேரி ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் லிமிடெட்டின் நிருவாகத்தினர் உயர்நீதிமன்றத்தை அணுகினர். நிருவாகத்தினர் மேற்கொண்ட ஏல விற்பனை முயற்சியைத் தடுத்து நிறுத்துவதற்காகத் தொழிற்சங்கங்களும் உயர்நீதி மன்றத்தை அணுகின. அதன் பயனாக ஆலையை நடத்தும் பணியை 30–6–1986 முதல் மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு துணித் தொழில் கழகத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. மேற்சொன்ன ஏற்பாடு உயர்நீதிமன்றம் அவ்வப்போது பிறப்பித்த கால நீட்டிப்பு ஆணைகளால் தொடர்ந்து இருந்து வந்தது. மேற்கொண்டு 8 வார காலத்திற்கு ஆலையைத் தொடர்ந்து நடத்துவதற்காக கால நீட்டிப்பு ஆணை அண்மையில் 13–11–1986 அன்று பிறப்பிக்கப்பட்டது. போதிய அளவு



1987 ஏப்ரல் 20]

பருத்தி கிடைக்காததால் இந்த ஆலை செயல்படவில்லை. இதில் மேற்கொண்டு, ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மூடப்பட்டுள்ள துணி ஆலைகள் பொருளாதாரவகையில் தனித்து இயங்கக் கூடியவையா என்பது பற்றியும், அவற்றின் தொழில்நுட்ப சாத்தியக் கூறுகள் பற்றியும், விரிவான ஆய்வு செய்யவும், மீண்டும் அத்துணி ஆலைகளைத் திறப்பதற்கான நடவடிக்கை எடுப்பது பற்றியும் அவை தனித்து இயங்கும் அடிப்படையில் அவற்றை பணியாற்றச் செய்வது பற்றியும் பரிந்துரைக்க பின்வருபவர்களைக் கொண்ட நிலைக் குழு ஒன்றை சென்னை, கைத்தறி துணிக் கூடுதல் இயக்குநர் அமைத்துள்ளார்:—

1. திரு. கே. அரங்கநாதன், துணை இயக்குநர், தென் இந்திய துணி ஆராய்ச்சி சங்கம், கோயம்புத்தூர். — தலைவர்.

2. திரு. ஜி. இராமலிங்கம், தொழில் நுட்ப அலுவலர், கைத்தறி-துணி ஆலை இயக்குனர் அலுவலகம், சென்னை. — அமைப்பாளர்.

3. திரு. எச். சிதம்பரம், பட்டயக் கணக்கர். — உறுப்பினர்.

4. அந்தந்த வட்டாரத்தின் தொழிலாளர் இணை / துணை ஆணையாளர். — உறுப்பினர்.

இக்குழு மூடப்பட்ட துணி ஆலைகளின் பிரச்சனைகள் பற்றி நன்கு அறிந்திருப்பதால் அதுபற்றி ஆய்ந்தறியும் கருத்துக்களை எதிர்பார்க்கலாம்.

[1987 ஏப்ரல் 20

**1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் V-B அத்தியாயத்தின் கீழ் மனுக்கள்.**

1986 ஆம் ஆண்டில் தீர்ப்பு வழங்கப்பட்ட மனுக்கள் பற்றிய விவரங்கள்.

| மனுக்களின் தன்மை. | 1–1–86 ஆம் நாள் நிலவரப்படி நிலுவையாகவுள்ள மனுக்களின் எண்ணிக்கை. | இந்த ஆண்டில் வரப்பெற்ற மனுக்களின் எண்ணிக்கை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. 25 (M) பிரிவின் கீழ் உற்பத்தியின்மை காரணமாக தற்காலிக வேலை நிறுத்தத்திற்கு அனுமதி கோரி செய்து கொள்ளப்படும் மனு. | 2 | 14 | 16 |
| 2. 25 (N) பிரிவின் கீழ் ஆட்குறைப்பு செய்ய அனுமதியைப் பெறுவதற்கான மனு. | இல்லை. | 6 | 6 |
| 3. 25 (O) பிரிவின் கீழ் தொழிற்சாலைகளை மூடிவிடுவதற்கு அனுமதியைப் பெறுவதற்கான மனு. | 1 | 1 | 2 |

| | இந்த ஆண்டில் தீர்ப்பு வழங்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை. | 31–12–1980-ம் நாள் நிலவரப்படி நிலுவையாகவுள்ள மனுக்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1 | 5 | 6 |
| | 13+1* | 2 (7–1–1987, 9–2–87 ஆம் நாட்களன்று தீர்வு செய்யப்பட்டன). |
| 2 | 4+1* | 1 |
| 3 | 2 | இல்லை |

* மனு திரும்பப் பெறப்பட்டது.



1987 ஏப்ரல் 20]

**தொழிற் சங்கங்கள் :**

ஆயிரத்தி தொள்ளாயிரத்து எண்பத்தாறாம் வருடம், சனவரி திங்கள், 1ஆம் நாள் நிலவரப்படி 4,329 பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கங்கள் இருந்தன. இந்த ஆண்டில் 491 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. 437 சங்கங்களின் பதிவு ரத்து செய்யப்பட்டது. 6 தொழிற்சங்கங்களின் பதிவு ரத்து செய்யப்பட்டு மீண்டும் ஏற்கப்பட்டது. மூன்று தொழிற் சங்கங்கள் ஒருங்கிணைக்கப்பட்டன. 1986 ஆம் ஆண்டு இறுதியில் பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கங்கள் 4,386 ஆகும்.

**தொழில் நல்லுறவு பரிசுத் திட்டம் :**

தொழில் நிறுவன நிர்வாகிகளுக்கும் அவர்களால் தொழிலில் அமர்த்தப்படும் தொழிலாளர்களுக்குமிடையே தொழில் அமைதியைப் பேணி, அவர்களுக்கிடையே தொழில் நல்லுறவு வளர்ப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு, ''தொழில் நல்லுறவு பரிசுத் திட்டத்தை'' அரசு கொண்டுவந்துள்ளது. பரிசு வழங்கும் ஒவ்வொரு ஆண்டிற்கும் இத்திட்டத்தின் கீழ் பரிசு பெறத் தகுதியுடையோரைத் தெரிந்தெடுப்பதற்கு தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் பிரதிநிதிகளைக் கொண்டு, உயர்நீதிமன்றத்தில் ஓய்வு பெற்ற நீதிபதியின் தலைமையின் கீழ் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. குழுவின் பரிந்துரைகளின்பேரில், பரிசு பெறத் தகுதியுடையோருக்கு முதல் பரிசாக சுழற்கோப்பை நிலையான கேடயமும், இரண்டாம் பரிசாக தகுதிச் சான்றிதழும் வழங்கப்படுகிறது.

1983,1984 ஆம் ஆண்டுகளுக்குரிய பரிசுகள் 6–3–1987 ஆம் நாளன்று வழங்கப்பட்டன.

## அத்தியாயம் 3.

**தொழிற்சாலை நிர்வாகம்.**

1986 ஆம் ஆண்டு தொடக்கத்தில், 1948 ஆம் ஆண்டுத் தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் 13,011 தொழிற்சாலைகள் இருந்தன. 1986 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதியில், கூடுதலாக 936 தொழிற்சாலைகள் சேர்க்கப்பட்டு 451 தொழிற்சாலைகள் நீக்கப்பட்டு, மொத்தம் 13,496 தொழிற்சாலைகள் இருந்தன. 31—12—1986 ஆம் நாள் நிலவரப்படி, தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் வரும் தொழிலாளர்கள் 8,11,936 பேர் ஆவர்,

[1987 ஏப்ரல் 20

இச்சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணங்கள், மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் முதலியவை பற்றிய விவரங்கள் 5, 6, 7 ஆம் இணைப்புகளிலுள்ள அறிக்கைகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

விபத்துக்கள் :

தொழிற்சாலைகளில் நடந்த விபத்துக்கள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :

| ஆண்டு. | உயிரிழப்பு ஏற்பட்ட விபத்துக்கள். | உயிரிழப்பு ஏற்படாத விபத்துக்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1984 .. .. | 46 | 15,638 |
| 1985 .. .. | 30 | 18,226 |
| 1986 .. .. | 57 | 18,444 |

அனைத்து நாட்டு தொழிலாளர் நல நிறுவனம், பணி நிலைமை—சூழ்நிலையை மேம்படுத்துவதற்கான அனைத்து நாட்டுத் திட்டம் (PIACT).

உற்பத்தி திறனின் பணி நிலைமைகளை மேம்படுத்துதல், சிறிய நடுத்தர தொழில்களுக்குப் பாதுகாப்பு ஆகியவற்றில் தொழில் முனைவோர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு அனைத்து நாட்டு தொழிலாளர் நல அமைப்பின் உதவியுடனும் தமிழ்நாடு அரசு தொழிலாளர் துறையின் உடனுழைப்புடனும், சென்னை மாநகரில் முன்னோடித் திட்டம் ஒன்றை மத்திய அரசுத் தொழிலாளர் அமைச்சகம் தொடங்கியுள்ளது.

இத்திட்டம் 4—10—1985 அன்று தொடங்கப்பட்டு, இதன் தொடர்ச்சியாக 24, 25—12—1986 ஆம் நாட்களன்று பணிக் களரிகள் அமைக்கப்பட்டன. இதில் 93 தொழிற்சாலைகள் கலந்து கொண்டன.

தொடக்கத்தில் இரு திட்டங்கள் நடத்தப்பட்டன :

(1) முனைப்புத் திட்டம்.

(2) சென்னையில் குறுகியகால பயிற்சி வகுப்பு திட்டம்.



1987 ஏப்ரல் 20]

சென்னையில் 25—9—1985 ஆம் நாளிலிருந்து 17—10—85 ஆம் நாள் வரையிலான கால அளவில், அம்பத்தூர், கிண்டி, திருவான்மியூர் தொழில் பேட்டைகளிலிருந்து 24 தொழிற்சாலைகள் கலந்து கொள்ளும் முனைப்புப் பயிற்சித் திட்டம் நடத்தப் பட்டது.

மாநிலம் முழுவதிலிருந்தும் 45 தொழிற்சாலைகள் கலந்து கொள்ளும் குறுகிய கால பயிற்சி வகுப்புத் திட்டமானது 15—10—1985-லிருந்து 17—10—1985 ஆம் நாள் வரையில் நடத்தப்பட்டது. முனைப்புப் பயிற்சித் திட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு அளிக்கப்பட்டது போலவே இவர்களுக்கும் உரையாற்றப்பட்டது.

இத்திட்டங்களின் மூலம் சுமார் 287 தொழில் முனைவோர்கள் பயனடைந்தனர். இதில் கலந்து கொண்ட அனைவரும் பணி நிலைமைகளை மேம்படுத்துவதில் ஆழ்ந்த அக்கறை செலுத்தினர். மேற்கொண்டும் வரையறுக்கப்படுகின்றன.

ஐக்கிய நாட்டு மேம்பாட்டுத் திட்டம் :

மத்திய அரசின் ஐக்கிய நாட்டு மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் தொழில் பிரிவுகளில் பொதுவாக பணி நிலைமைகளை மேம்படுத்தவும், குறிப்பாகப் பாதுகாப்புச் சுகாதார வசதிகளை மேம்படுத்தவும், தொழிற்சாலை சுகாதாரத்தில் வசதிகளை அவர்களே செய்து கொள்ளுமாறு ஊக்குவிக்கவும் கருதப்படுகிறது.

வளங்கள் கேடுறுவதை அறியவும், கண்காணிக்க வேண்டிய வகையிலான கருவிகளைக் கண்காணிக்கவும், கேடுறுவதை மதிப்பிடுவதற்குத் தேவையான தொழில் நுட்பங்களை அறிந்து அதன்படி கண்காணிக்கவும் நிருவாகிகளுக்கு வகை செய்யும் பொருட்டு அவர்களுக்கு அதுகுறித்து அறிவுறுத்தக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள நவீனக் கருவிகளைக் கொண்டு இது பற்றிய இத்திட்டத்தின் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தை மேற்கொள்வதற்காக, இத்துறையைச் சேர்ந்த இரு முதுநிலை அதிகாரிகளுக்கு வெளிநாட்டில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பயிற்சி கால அளவு 2½ ஆண்டுகளாகும். பம்பாய், மத்திய தொழிலாளர் நல நிறுவனத்தின் வழிகாட்டிக் குறிப்புகளைக் கொண்டு, இந்த ஆய்வு அலுவலகத்தில் தற்போது இயங்கிவரும் தொழில் சுகாதாரப் பிரிவு பயன்படுத்தப்படும்.

ஐக்கிய தேசிய மேம்பாட்டுத் திட்டம் சுற்றுப்புற தூய்மைக் கேடினை அறியவும், தொழிலாளர்களின் சுகாதாரத்தைக் கண்காணிக்கவும், நவீன சாதனங்களை வழங்கியுள்ளது. சோதனைக்

கூடத்தில் இக்கருவியின் உதவியால், தொழிலாளர்கள் பணி புரியும் சுற்றுச் சூழலில் உள்ள புழுதி அளவு, ஒலி அளவு தற்போது சுகாதாரக் கேடு விளைவிக்கும் வாயுக்களின் அளவு ஆகியவற்றை ஆராய்ந்து அறியலாம்.

மாநில பாதுகாப்புப் பரிசுகள், ஷ்ரம்வீர் பரிசுகள் :

நிருவாகிகள், தொழிலாளர்கள் ஆகிய இருதரப்பினரின் நலனையும் பேணிவரும் வகையில் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு வசதிகள் சிறந்த முறையில் இருப்பதை பாராட்டுவதற்காக 1966 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட மாநிலப் பாதுகாப்புப் பரிசு வழங்கும் முறை அண்மையில் சிறிது மாற்றியமைக்கப்பட்டு உள்ளது. இதுதவிர, தொழிற்சாலையில் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் உற்பத்தித் திறனையும், திறமையையும் அதிகரிப்பதற்கும், புதிய கண்டுபிடிப்புகளும், பணிமுறைகளை மேம்படுத்தவும், கழிவுப் பொருட்களைக் குறைத்தல் முதலியவை குறித்தும் கருத்துத் தெரிவிக்கும் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்குப் பாதுகாப்புப் பரிசுகளும் ஷ்ரம்வீர் பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

1983 ஆம் ஆண்டில் பரிசுகளைப் பெறத் தகுதியுடைய 82 நிருவாகிகளுக்கு, மாநிலப் பாதுகாப்பு பரிசுகள் வழங்கப்பட்டன.

1983ஆம் ஆண்டில் பரிசுகளைப் பெறத் தகுதியுடைய 24 தொழிலாளர்களுக்கு ஷ்ரம்வீர் பரிசுகள் வழங்கப்பட்டன.

பாதுகாப்புப் பிரிவுகளின் பணிகள் :

முனைப்பான பாதுகாப்புப் பயிற்சியை வழங்கும் பொருட்டும் திறமையான வகையில் விபத்துக்களை குறைக்கவும், தொழிலாளர்களுக்கு பாதுகாப்பினை அறிவுறுத்தும் பயிற்சி வகுப்புகளை நடத்தவும் கோயம்புத்தூர், மதுரை, சென்னை, சேலம், திருச்சிராப்பள்ளி ஆகியவிடங்களில் ஐந்து பாதுகாப்புப் பிரிவுகள் பணியாற்றி வருகின்றன. இந்தப் பாதுகாப்புப் பிரிவுகள் அனைத்தும், தொழிற்சாலைகளின் (சுகாதாரம்—பாதுகாப்பு) தலைமை ஆய்வாளரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன.

பாதுகாப்புப் பிரிவுகள் தொழிற்சாலைப் பாதுகாப்பு குறித்து செய்திப் படங்களை திரையிடுவது தவிர பாதுகாப்பு ஆய்வுகள், கருத்தரங்கு கலந்தாராய்வு ஆகியவற்றையும் நடத்துகின்றன. இந்த ஆண்டில் 199 பாதுகாப்பு வகுப்புகள் நடத்தப்பட்டன. இதனால், 5,279 தொழிலாளர்கள் பயனடைந்தனர். அதிக விபத்துக்கள் தொழிற்சாலைகளில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட இந்த ஆண்டில் 19 பாதுகாப்பு ஆய்வுகள் நடத்தப்பட்டு முடிவுகள் நிர்வாகத்தினர் அதன்படி நடப்பதற்காக அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன. பாதுகாப்புப் பற்றிய 8 செய்தி வெளியீடுகளும் 2 பாதுகாப்புச் சுவரொட்டிகளும் வெளியிடப்பட்டன.





தொழிற்சாலை பாதுகாப்பு குறித்த காலாண்டு பத்திரிகையைப் பாதுகாப்புப் பிரிவுகள் வெளியிட்டு வருகின்றன. தொழிலாளர்களுக்கும், நிருவாகத்தினருக்கும் பாதுகாப்புப் பற்றி எடுத்தியம்பும் பொருட்டு இப்பத்திரிகைகளில் பாதுகாப்பு, விபத்து பற்றிய விரிவான கட்டுரைகள் கருத்துப் படங்கள் ஆகியவை இடம் பெறுகின்றன.

உற்பத்தித் திறன் குழுவை அமைத்தல் :

உற்பத்தித் திறன் 20 அம்சத் திட்டத்தின் கீழ் வரும் ஒரு முக்கிய அம்சமாக இருப்பதால் நாட்டில் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதில் இந்திய அரசு மிகுந்த கவனம் செலுத்துகிறது.

இத்திட்டத்தைத் திறம்படச் செயற்படுத்துவதற்காகத் தொழிற்சாலைகள் தலைமை இணை ஆய்வாளர் (உற்பத்தித் திறன் குழு) பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆலோசனை நல்கும் அமைப்பான உற்பத்தித் திறன் குழு (இது தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் (நிருவாகம்-ஆய்வு) அலுவலகத்தில் செயல்படுகிறது) உற்பத்தித் திறனை மேம்படுத்தல், அதிக ஆதாரங்களை பயன்படுத்துதல், வீணாவதை நீக்குதல் கால ஆய்வு/இயக்க ஆய்வு நடத்துவதன் மூலம் பணி கோட்பாடுகளை வரையறுத்தல், வேலை பகுப்பாய்வு, வேலை பாதுகாப்பு பகுப்பாய்வு நடத்துதல், பரிசு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வருதல், தொழிலாளர்களுக்கும் மேற்பார்வையாளர்களுக்கும் முறையாகப் பயிற்சி அளித்தல் போன்ற பணிகளைப் புரியும். உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதற்காக தொழில்களுக்கிடையே ஆரோக்கியமான போட்டியை ஊக்குவிக்கும் பொருட்டு ஆண்டொன்றுக்கு 30 ஆயிரம் ரூபாய் செலவில் பரிசு வழங்கும் திட்டமொன்றை உருவாக்கும் செயற்குறிப்பு ஒன்று உள்ளது. இப்பரிசு வழங்கும் திட்டத்தில் பெரிய தொழில்கள்-சிறிய தொழில்களுக்கான ஒவ்வொன்றிற்கும் 10 முதற் பரிசுகள் வழங்குவதற்காக 25,000 ரூபாய் மதிப்புள்ள வெள்ளிக் கோப்பைகள் வாங்கும் செயற்குறிப்பும் உள்ளது. இப்பரிசுகள் வழங்குவதற்கான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யும் பொருட்டு 5,000 ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அழுத்தக் கருவிகளைச் சோதிக்கும் பிரிவு :

தமிழ்நாட்டில் சுமார் 8,926 அழுத்தக் கருவிகள் உள்ளன. தொழிற்சாலைகளில் நிறுவப்பட்டுள்ள அழுத்தக் கருவிகள், கலன்கள் ஒவ்வொன்றும் தகுதிவாய்ந்த அதிகாரிகளால் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை முழுவதுமாக சோதனை செய்யப்பட்டு அவை செயல்படுத்துவதற்குத்குகந்த முறையில் நல்ல நிலையில் இருப்பதாக சான்றிதழ் வழங்கவேண்டுமென்று 1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டமும் தமிழ்நாடு 1950ஆம் ஆண்டு தொழிற்சாலை விதிகளும் வரையறுக்கின்றன. இதற்கு முன்னர்

[1987 ஏப்ரல் 20

இந்த ஆய்வுகளையும் சோதனைகளையும் தொழிற்சாலைகள், தலைமை ஆய்வாளரால் (சுகாதாரம்-பாதுகாப்பு) ஒப்புதலளிக்கப்பட்ட தகுதிவாய்ந்த நபர்களால் துறை மேற்பார்வையின் கீழ் இந்தியத் தரக்கட்டுப்பாட்டு நிர்ணயப்படி அழுத்தக் கருவிகளை சோதனை செய்யும் பணியை மேற்கொள்ள தகுதியான பொறியாளர்களைப் பெறும் பொருட்டு சென்னை (வடக்கு, தெற்கு) மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் அழுத்தக் கருவிகள் சோதிக்கும் பிரிவுகளை அரசு ஏற்படுத்தி, இப்பிரிவுகளை நிருவகிக்க தொழிற்சாலை தலைமை துணை ஆய்வாளர் நால்வரை நியமித்துள்ளது. தொழிற்சாலை சட்டம்-விதிகளின் படி அழுத்தக் கருவிகளையும் கலன்களையும் ஆய்வு செய்து சோதனையிடும் பணியும் தொழிற்சாலை நிருவாகத்திற்குத் தேவையான சான்றிதழ்களை வழங்கும் பணியும் அவர்களிடம் ஒப்புடைக்கப்பட்டுள்ளது.

1986 ஆம் ஆண்டில் சோதனை செய்யப்பட்ட கலன்களின் எண்ணிக்கை வருமாறு :

| | | |
|---|---|---|
| வெளியார் கலன்கள் | .. | 8,275 |
| துறை கலன்கள் | .. | 73 |
| நீர்மத்தின் அழுத்த ஆற்றல் | | 2,426 |
| மொத்தம் | .. | 10,774 |

இதற்காக வசூலிக்கப்பட்ட கட்டணம் 13,59,145.00 ரூபாய் ஆகும்.

தூக்கு பொறிகள், மின் தூக்கிகளின் கயிறு கம்பிகள், பாரந் தூக்கிகள் முதலியவற்றைச் சோதனையிடுதல்.

தொழிற்சாலைத் தலைமை ஆய்வாளர் ஒப்புதலளித்த தகுதிவாய்ந்த நபர்கள் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை பாரந் தூக்கிகள், மின் தூக்கிகள், தூக்கு கருவிகள், கம்பி கயிறுகள், தூக்கு பொறிகள் முதலியவற்றைச் சோதனை செய்வதற்கான நடைமுறையை தொழிற்சாலைகள் சட்டம் வரையறுக்கிறது. இம்மாநிலத்தில், சுமார் 12,000 தூக்கு கருவிகளும் 3,000 பாரந் தூக்கிகளும், 1,000 மின் தூக்கிகளும் உள்ளன. துறையே சோதனை செய்யும் பொறுப்பை மேற்கொள்ள அரசு கருதியிருப்பதால், சென்னையில் தொழிற்சாலைகள் தலைமை இணை ஆய்வாளர் (சோதனை—பாதுகாப்பு பிரிவுகள்) பதவி ஒன்றுக்கும், துணைப் பணியாளர் பதவிகளுக்கும் தற்போதுள்ள பாதுகாப்புப் பிரிவுகளிலுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இப்பணி ஆய்வாளர் அலுவலகத்தால் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை.



1987 ஏப்ரல் 20]

தொழிற்சாலை துப்புரவு (சோதனைக் கூடம்) :

வந்த நோயைத் தீர்ப்பதில் நல்ல தரமான சிகிச்சை அளிப்பதைக் காட்டிலும், தொழில் காரணமாக வருகின்ற நோய்களை வராமல் தடுப்பதற்கு முக்கியத்துவம் அளிப்பதே தொழிலாளர்களின் உடல் நலத்தைப் பேணுவதில் தற்போது ஏற்பட்டுள்ள முன்னேற்றமாகும். பல இரசாயன, இயற்கை செயற்கை முறைகளைப் பயன்படுத்தி மிக நவீன முறைகளையும் உபகரணங்களையும் தொழிற்சாலைகள் பயன்படுத்தி வருகின்றன. தொழில் காரணமாகப் பல்வேறு நோய்கள் உண்டாவது பற்றியும், பணி நடக்கும் சுற்றுப்புறச் சூழல்களில் அந்நோய் பரவுவதைக் குறைப்பது பற்றியும் போதிய தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் மருத்துவ ரீதியிலான கட்டுப்பாடு தவிர பொறியியல் ரீதியான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மிகப் பரவலாக மேம்பாடடைந்துள்ளன.

தொழிற்சாலை துப்புரவு சோதனைக் கூடம் மருத்துவ தலைமை அதிகாரியின் (தொழிற் சாலைகள்) கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. இந்த சோதனைக் கூடத்தில் டணியாற்றும் வேதியல் வல்லுநர்களும் சோதனைக் கூட தொழில்நுட்ப வல்லுநர்களும் சுற்றுப்புற சூழல் குறித்து அதாவது சத்தம், தூசு, இரசாயனப் பொருள்கள் ஆகியவற்றால் ஏற்படும் இடையூறுகள் குறித்து ஆய்வு செய்ய பயிற்சி பெற்றுள்ளனர். அபாயகரமான பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் 87 ஆம் பிரிவின் கீழ் உயிரியல் சோதனை செய்யவும் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் சுகாதார நலனிற்கான மருத்துவப் பிரிவு :

மதுரையில் இயங்கும் மருத்துவப் பிரிவு தொழிலாளர்கள் செறிந்துள்ள பகுதிகளான பசுமலையில் ஒன்றும், செல்லூரில் ஒன்றும் என இரு சிறு மருந்தகங்களைக் கொண்டுள்ளது. இவை அமைப்பு ரீதியின் கீழ் வராத தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதிகள் அளித்து வருகின்றன. இந்த மருத்துவ அதிகாரிக்கு (சுகாதார நலப் பிரிவு) சுகாதார நலப் பிரிவுடன் மருத்துவ அதிகாரியாக (தொழிற்சாலைகள்) கூடுதல் அதிகார வரம்பும் அளிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ அதிகாரிகள் (தொழிற்சாலைகள்) :

சான்றிதழ் வழங்கும் 7 அறுவை சிகிச்சை மருத்துவர்கள் பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை சென்னை தலைமை மருத்துவ அதிகாரியின் (தொழிற்சாலைகள்) கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. இந்த அதிகாரிகள் தொழிற்சாலைகளில் பணிபுரிய இளைஞர்களுக்குத் தகுதிச் சான்றிதழ்களை வழங்குவதற்

குறிப்பிட்ட சில அபாயம் நிறைந்த பணிகள், பணி முறைகள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்களைச் சட்டத்தில் கோரப்பட்டுள்ளவாறு குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை மருத்துவப் பரிசோதனை செய்து சான்றிதழ் வழங்குவதற்கும் சென்னை, வேலூர், சேலம், மதுரை, சிவகாசி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தொழிற்சாலைகளிலுள்ள மருத்துவ அதிகாரிகள், முனைப்பாக தங்களுடைய பணிகளை ஆற்ற ஏதுவான வகையில் அவர்களை தொழிற்சாலைகளின் கூடுதல் ஆய்வாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் இம்மருத்துவ அதிகாரிகள் 17,843 தொழிலாளர்களை பரிசோதித்துள்ளனர். வசூலிக்கப்பட்ட கட்டணங்கள் 1,90,025.00 ரூபாய் ஆகும்.

மருத்துவ அதிகாரிகள் 38 உடல் நல பரிசோதனை முகாம்களையும் (Health Surveys) நடத்தியுள்ளனர்.

**இரசாயனத் தொழிற்சாலைகள் குறித்த பணிக்குழு :**

போபாலில் நடைபெற்ற பெரு விபத்திற்குப் பின்னர் மாநிலத் தொழிலாளர் நலச் செயலாளர்கள் சந்தித்து அபாயம் விளைவிக்கிற தொழில் பிரிவுகளைக் கண்டறியவும், தற்போதுள்ள பாதுகாப்பு நிலைகள் குறித்து உறுதி செய்யவும் தொழில் அளவிலும், பகுதி அளவிலும், அரசு அளவிலும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கருத்து தெரிவிக்கவும் ஒவ்வொரு மாநிலத்திலும் பணிக் குழு ஒன்றை நியமிக்கவும் முடிவு செய்தனர். இம் முடிவின்படி தொழில் முறையிலான சுகாதார கேடுகள் நிறைந்த தொழில்கள் குறித்தும் இரசாயனத் தொழிற்சாலைகளிலுள்ள பாதுகாப்பு விதித் துறைகளை செயல்படுத்தவும் அபாயம் விளைவிக்கும் ஏனைய தொழில்கள் அதிக அளவில் நச்சுப் பொருள் அடங்கிய பணி முறைகள் குறித்தும், நாளது வரையிலான தகவல்களை அளிக்கும் பொருட்டு, தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளரை (நிருவாகம்—ஆய்வுகள்) உறுப்பினர்-செயலாளராகவும் கொண்டு சென்னை பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் டாக்டர் சாந்தப்பா அவர்கள் தலைமையின்கீழ் பணிக்குழு (உயர் அதிகாரக்குழு) ஒன்றை மாநில அரசு அமைத்தது. இக்குழு சென்னையில் மணலி, எண்ணூர், இராணிப்பேட்டை, கடலூர், நெய்வேலி, மேட்டூர், தூத்துக்குடி, மேட்டுப்பாளையம், உதகமண்டலம் ஆகிய இடங்கள் போன்ற இரசாயன தொழிற்சாலைகள் நிறைந்த பல்வேறு வட்டாரங்களிலுள்ள 29 இரசாயன தொழிற்சாலைகளைப் பார்வையிட்டு 24—4—1986 அன்று





தனது இறுதி அறிக்கையை அரசுக்கு அளித்தது. இக்குழு வின் அனைத்துப் பரிந்துரைகள் மீதும் அரசு நடவடிக்கை எடுக்கத் தொடங்கியுள்ளது. இக்குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில் தனி அதிகாரிகளை நியமிப்பதற்காக முக்கிய இரசாயனத் தொழிற்சாலைகளுக்கு உத்தரவுகள் பிறப் பிக்கப்பட்டுள்ளன. இவ்வுத்தரவுகளை செயல்படுத்த உட னடி நடவடிக்கை எடுக்குமாறு துறை அதிகாரிகளுக்கும் உத் தரவிடப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 4.

## தொழிலாளர் நல நிருவாகம்.

பயன்தரும் ஏனைய தொழிலாளர் நலச் சட்டங்களைச் செயல்படுத்துவது குறித்த விவரங்கள் இந்த அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள்—நிறுவனங்கள் சட்டம் :**

1986 ஆம் ஆண்டில் இச்சட்டத்தின் கீழ் செயல்பட்ட கடைகள்—நிறுவனங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை, அவற்றில் பணியமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

இச்சட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்கள்—2,81,339.

பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை—2,79,522.

**நிரந்தர, தற்காலிக விதிவிலக்குகள் :**

இந்த ஆண்டில், தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள்-நிறுவனங்கள் சட்டம் செயல்படுவதிலிருந்து, ஓர் இனத்திற்கு நிரந்தரமாகவும்., 4 இனங்களுக்கு தற்காலிகமாகவும் (பொருட்காட்சிகள், திருவிழாக்கள் தவிர ஏனையவை) அரசு விதி விலக்கு அளித்துள்ளது. தொழிலாளர் துறை ஆணையாளர் பொருட்காட்சிகள், திருவிழாக்கள் உட்பட 30 தற்காலிக விதி விலக்குகளை அளித்துள்ளார்.

தொழிலாளர் துணை ஆணையாளர் 69 இனங்களில் தற்காலிக விலக்களிப்பு அளித்ததுடன், 3 இனங்களில் இச்சட்டம் செயல்படுவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கவும் அனுமதி வழங்கியுள்ளார்,

[1987 ஏப்ரல் 20

இச்சட்டத்தின் 51 ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்று ஆண்டின் தொடக்கத்தில் நிலுவையாக இருந்தது. இந்த ஆண்டில் 3 விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டன. ஓர் இனத்தில் தொழிலாளர் துறை ஆணையாளர் ஆணைகளைப் பிறப்பித்துள்ளார். ஆண்டு இறுதியில் 3 விண்ணப்பங்கள் நிலுவையாகவுள்ளன.

இந்த ஆண்டில், இச்சட்டத்தின் விதித் துறைகள் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆர்.எஸ். மங்கலம், மண்டபம், சாயல்குடி பேரூராட்சிகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளன.

இச்சட்டத்தின் 41 ஆம் பிரிவின்கீழ் நடத்தப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள், முடித்து வைக்கப்பட்ட இனங்கள் குறித்த விவரங்கள் முறையே 5, 7, 8 ஆம் எண்ணுள்ள இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டம் :

இச்சட்டத்தின் கீழ் 1986 ஆம் ஆண்டில் 27,325 நிறுவனங்கள் இருந்தன. அவற்றில் 87,156 தொழிலாளர்கள் பணி புரிந்தனர். ஆய்வு ஆண்டில் பதிவுக் கட்டணம்/புதுப்பித்தலுக்குரிய கட்டணம்/கூடுதல் கட்டணம் என்ற வகையில் 4,04,295 ரூபாய் கிடைத்தது.

இவ்வாண்டில் இச்சட்டத்தின் விதித்துறைகள் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆர்.எஸ். மங்கலம், மண்டபம், சாயல்குடி ஆகிய பேரூராட்சிகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளன.

திருத்தம் :

தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு உணவகங்கள் விதிகளின் 3 ஆம் விதியைச் சேர்ந்த (2) துணை விதியின் கீழ்வரும் அட்டவணையைத் திருத்துவதன் மூலம் அரசு பத்திரப்பதிவுக் கட்டணத்தை உயர்த்தியுள்ளது.

1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம், மற்றும் தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு பீடி சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகள் :

இம்மாநிலத்தில் பீடி, சுருட்டு தயாரிக்கும் தொழில் வளாகங்கள் 1,341 உள்ளன. இவற்றில் சுமார் 9,354 தொழிலாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். வணிகக் குறி உரிமையாளர்கள் 236 பேர் உள்ளனர். பீடித் தொழிலில் வீட்டில் தங்கி பணி புரியும் சுமார் 2,00,000 தொழிலாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.



1987 ஏப்ரல் 20]

மேற்கூறிய இக்கால அளவில் உரிமக் கட்டணமாக 60,160 ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின்கீழ் ஆய்வாளர்களால் நடத்தப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவை குறித்த விவரங்கள் 5, 7 ஆம் இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

பீடித் தொழிலாளர் நலன் :

பீடித் தொழிலாளர்கள் நலனுக்காக மத்திய அரசு செஸ் வரி வசூலிக்கிறது. மேலும், நல நடவடிக்கைகளுக்காக அமைப்பு ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த அமைப்பு இத்துறை அதிகாரிகளின் உதவியுடனும், ஒத்துழைப்புடனும் இவ்வாண்டில் தமிழ்நாட்டில் கீழ்க்காணும் நல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

வீட்டு வசதி :

திருச்சிராப்பள்ளி மாவட்டம், நாவல்பட்டிலும், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் முக்கூடல், மேலப்பாளையம் ஆகிய இடங்களிலும், பெரியார் மாவட்டம் ஈரோட்டிலும் பீடித் தொழிலாளர்களுக்காக 150 வீடுகளைக் கட்டுவதற்குரிய செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன. இது குறித்து வருவாய் துறை அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் சுத்தமல்லிக்கு அருகில் கொண்டமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் 'சொந்த வீடு கட்டும் திட்டத்தின்கீழ். அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மனைகளில் வீடுகள் கட்டுவதற்கு வட்டி இல்லாக் கடனுடன் உதவித் தொகையைப் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின்படி ஈரோடு சங்குமார்க் பீடி நிறுவனத்தைச் சேர்ந்த பீடித் தொழிலாளரான திரு. ஜாபர் அலிகானுக்கும், குறிப்பங்குளம் சையது பீடி நிறுவனத்தைச் சேர்ந்த திரு. வி. பொன்னுதுரை என்பவருக்கும் 1,000 ரூபாய் உதவித் தொகையும், 4,000 ரூபாய் வட்டியில்லாக் கடனும் வழங்கப்பட்டுள்ளது.

சுகாதாரம் :

சென்னை, குடியாத்தம் ஆகிய இடங்களிலுள்ள நிலையான மருந்தகங்களை இயங்கும் நிலையான மருந்தகங்களாக மாற்றுவது குறித்த செயற்குறிப்புகள் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளன. அடையாள அட்டைகளைக் காண்பிப்பதன் மூலம், வீட்டில் தங்கி பணிபுரியும் தொழிலாளர்கள் அவர்களைச் சார்ந்தவர்கள் உட்பட பீடித் தொழிலாளர்களுக்கு இலவச மருத்துவ உதவி அளிக்க மேல் விஷாரத்தில் இயங்கும் நிலையான மருந்தகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதைத் தவிர இம்மாநிலத்தில் தற்போதுள்ள அனைத்து மருத்துவ நிலையங்களிலும் பீடித் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் தொடர்ந்து மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

விரிவான சுகாதார பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் தமிழ் நாடு அரசு நிறுவியுள்ள மருத்துவ நிலையங்களும், பீடித் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் தொடர்ந்து மருத்துவ சிகிச்சை அளித்து வருகின்றன.

சென்னையில் நடைபெற்ற பீடித் தொழிலாளர்கள் பற்றிய மாநில ஆலோசனைக் குழுவின் 9 ஆம் கூட்டத்தின் பரிந்துரைகளையொட்டி, திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் 50 படுக்கை வசதி கொண்ட மருத்துவ மனைகளைக் கட்டும் பணியை மேற்கொள்ளுமாறு ஹைதராபாத் தொழிலாளர் நல ஆணையாளர் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார். 1985–86 ஆம் ஆண்டில் காசநோயால் பாதிக்கப்பட்ட பீடித் தொழிலாளர்கள் 22 பேர் பெருந்துறை காச நோய் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். சிகிச்சை பெறும் கால அளவில் பீடித் தொழிலாளர்கள் எழுவருக்கு வாழ்க்கைப் படி வழங்கப்பட்டது. தொழிலாளர் நல அமைப்பு வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூர் மாவட்ட மருத்துவ அதிகாரியின் உதவியுடன் இலவச கண் கிசிச்சை முகாமை ஏற்படுத்தியது. 7—3—1986 அன்று சுமார் 110 தொழிலாளர்கள் இலவச கண் சிகிச்சை பெற்றனர். ஏனைய பகுதிகளிலும் இது போன்ற முகாம்கள் அமைக்கப்படுகின்றன.

படிப்புதவித் தொகைகள் :

இந்த ஆண்டில் தமிழ்நாட்டில் பீடித் தொழிலாளர்களின் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு படிப்புதவித் தொகை கள் வழங்கிய வகையில் 4,49,408.40 ரூபாயும் அவர்களுக்கு சீருடைகள் வழங்குவதற்காக 50,000 ரூபாயும் செலவிடப் பட்டுள்ளது.

1976 ஆம் ஆண்டு பீடித் தொழிலாளர்கள் நல நிதிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் தமிழ்நாடு மாநிலத்திற்காக மத்திய அரசு அமைத்த ஆலோசனைக் குழு, சென்னையில் 11—8—1986 ஆம் நாளன்று கூடி இம்மாநிலத்திலுள்ள பீடித் தொழிலாளர்களுக்குரிய நல நடவடிக்கைகளை அதிகரிப்பதற்குரிய பல்வேறு நடவடிக்கைகள் பற்றி விவாதித்தது.



1955ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிக்கையாளர்கள்—பிறசெய்தித்தாள் பணியாளர்கள் (பணி நிலைமைகள்-பல்வேறு விதித் துறைகள்) சட்டம் :

இச்சட்டம், வெளியூர்களில் தொழிலாளர் ஆய்வாளர்களாலும், சென்னை மாநகரில் தொழிலாளர் துறை ஆணையாளர் அலுவலகத்திலுள்ள மக்கள் தொடர்பு அதிகாரியாலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இச்சட்டத்தின்கீழ் ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வுகளின் எண்ணிக்கை 7 ஆம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

பலேகர் தீர்ப்பு :

இம்மாநிலத்திலுள்ள 129 செய்தித்தாள் நிறுவனங்களில் 116 செய்தித்தாள் நிறுவனங்கள் பலேகர் தீர்ப்பை முழு அளவிலும், 6 செய்தித்தாள் நிறுவனங்கள் ஓரளவிற்கும் செயல்படுத்தியுள்ளன. இதனைச் செயல்படுத்தாத எஞ்சிய ஏழு நிறுவனங்கள் மீது வழக்கு தொடருமாறு ஆய்வாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இம்மாநிலத்திலுள்ள 129 செய்தித்தாள் நிறுவனங்களில், 97 செய்தித்தாள் நிறுவனங்கள் புதுடில்லியிலுள்ள தொழிலாளர் அமைச்சகத்தின் S. O. 312 (இ) மற்றும் 313 (இ) அறிவிக்கையின்படி 1—6—1986-லிருந்து இடைக்கால நிவாரணம் வழங்க ஒப்புக் கொண்டுள்ளது. இரு நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. ஏனைய 30 நிறுவனங்களை ஆய்வு செய்து அவர்களுடைய தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான உத்தரவுகளைப் பிறப்பிக்குமாறு ஆய்வாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். உழைக்கும் பத்திரிகையாளர்கள்-பிற செய்தித்தாள் பணியாளர்களுக்கான ஊதியக் குழு, வாய்மொழி விசாரணைக்காக 1987 ஏப்ரல் திங்களில் சென்னையில் கூடியது.

1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம் :

1961 ஆம் ஆண்டு மோட்டார் ஊர்திப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின் விதித்துறைகளும் இச்சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட விதிகளும் இத்துறை அதிகாரிகளால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

[1987 ஏப்ரல் 20

ஆய்வு ஆண்டில் 1,565 மோட்டார் ஊர்திப் போக்குவரத்து நிறுவனங்கள் உள்ளன. இவற்றில் 73,811 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இந்த ஆய்வு ஆண்டில் 1,01,209.85 ரூபாய் பதிவுக் கட்டணமாக வசூலிக்கப் பட்டது.

ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வுகள், விதித்துறைகளை மீறியவர்கள் மீது ஆய்வாளர்கள் தொடுத்த வழக்குகள் ஆகியவை பற்றிய விவரங்கள் 5, 7 ஆம் இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

விதிவிலக்கு :

மாநில அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்களுக்கு மோட்டார் ஊர்திப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின் 44-ஏ விதித் துறைகள், இச்சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட விதிகள் ஆகியவற்றிலிருந்து இந்த அறிக்கை ஆண்டில் விலக்களிக்கப்பட்டுள்ளது.

புகார்கள் :

ஆண்டின் தொடக்கத்தில் புகார் எதுவும் தீர்க்கப்படாமல் இல்லை. இந்த ஆண்டில், 20 புகார்கள் வரப்பெற்றன. 16 புகார்கள் தீர்த்து வைக்கப்பட்டன. ஆண்டின் இறுதியில் 4 புகார்கள் தீர்க்கப்படாமல் இருந்தன.

1976 ஆம் ஆண்டு விற்பனை வளர்ச்சிப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம் :

மருந்தாக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்குப் பொருந்துமாறு செய்யப்பட்ட இச்சட்டம், சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்களால் தொடர்ந்து செயல் படுத்தப்பட்டு வருகிறது.

1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டம் :

இந்த ஆண்டின் தொடக்கத்தில் 485 தோட்டங்கள் இருந்தன. இவற்றில் சுமார் 92,752 தொழிலாளர்கள் பணி புரிந்தனர். இவ்வாண்டில் 18 தோட்டங்கள் பதிவு செய்யப் பட்டன. இவற்றில் 296 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். 60 தொழிலாளர்கள் பணிபுரியும் தோட்டம் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டது. இவ்வாண்டின் இறுதியில் 502 தோட்டங்கள் பட்டியலில் இடம் பெற்றிருந்தன. 31-12-1986 ஆம் நாள் நிலவரப்படி தோட்டத் தொழிலாளர்களின் தோராயமான எண்ணிக்கை 92,988 ஆகும்.



1987 ஏப்ரல் 20]

சென்னை தொழிலாளர் இணை ஆணையாளர் (நிருவாகம்) தோட்டங்களின் தலைமை ஆய்வாளராவார். இச்சட்டத்தின் விதித்துறைகளைச் செயல்படுத்துவதில் இவருக்கு உதவி புரிய தோட்ட ஆய்வாளர்கள் 7 பேர் உள்ளனர். அவர்களின் தலைமையிடங்கள் உதகமண்டலம், குன்னூர், கூடலூர், வால்பாறை, ஏர்க்காடு, திண்டுக்கல், நாகர்கோயில் ஆகிய இடங்களில் உள்ளன. இவர்களைத் தவிர நாகர்கோயில், உதகமண்டலம் ஆகிய இரு இடங்களிலும் பணிபுரியும் மருத்துவர் இருவர், இச் சட்டத்தின்கீழ் மருத்துவ வசதி அளிப்பதோடு தோட்டப் பகுதிகளிலுள்ள மருத்துவமனைகள், மருந்தகங்கள் ஆகியவற்றையும் ஆய்வு செய்கின்றனர். இவ்வாண்டில் இம் மருத்துவ அதிகாரிகள் 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்தின் தொடர்புடைய விதித்துறைகளின்கீழ் 465 வழக்கமான ஆய்வுகளையும் 2 தனி ஆய்வுகளையும் 15 திடீர் ஆய்வுகளையும் மேற்கொண்டனர்.

இச்சட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட ஆய்வுகள், தொடரப் பட்ட வழக்குகள் ஆகியவை குறித்த விவரங்கள் 5, 7 ஆம் இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றம், தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்கள் விதிகளில் விதி 51(2)-ன் கீழ் தொடுக்கப்பட்ட முப்பது மனுக்களை முடித்து வைத்தது.

தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதி ஆலோசனைக் குழு :

தோட்டத் தொழிலாளர்கள் வீட்டுவசதி ஆலோசனைக் குழு 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் 16 (c) பிரிவின் கீழும் 1955 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் விதிகளின் 53 ஆம் விதியின் கீழும் தனிச்சட்டப்படி அமைக்கப் பட்ட ஒரு குழுவாகும். தோட்ட தொழிலாளர்கள் வீட்டு வசதி ஆலோசனைக் குழுவில் தொழிலதிபர்களும், தொழிலாளர் பிரதிநிதிகளும் உள்ளனர். சென்னை தொழிலாளர் துறையின் அரசு செயலாளர் இக்குழுவின் தலைவராக உள்ளார்.

வீட்டு வசதி தொடர்பான விஷயங்கள் குறித்து விவாதிப்பதும், வீட்டுவசதி தொடர்பாக தொழிலாளர் நலச் சட்டத்தின் விதித்துறைகளையும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளையும் முறையாக செயற்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்து கருத்து தெரிவிப்பதும் இக்குழுவின் முக்கிய பணிகளாகும்.

1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தல், நீக்குதல்) சட்டம் :

இச்சட்டம், இம்மாநிலத்தில் தொழிலாளர் துறை தொழிற்சாலைகள் ஆய்வாளர்களால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1986–ஆம் ஆண்டில் இச்சட்டத்தின் கீழ், பதிவு செய்யும் அதிகாரிகள் 151 பேர்களை முதன்மைத் தொழிலதிபர்கள் என்று பதிவு செய்துள்ளனர். உரிமம் வழங்கும் அதிகாரிகள் 1,046 ஒப்பந்தக்காரர்களுக்கு உரிமங்களை வழங்கியுள்ளனர்.

இக்கால அளவில் 4,161.40 ரூபாய் பதிவுக் கட்டணமாகவும் 13,996.95 ரூபாய் உரிமக் கட்டணமாகவும் வசூலிக்கப்பட்டுள்ளன.

செய்யப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள், முடிவு செய்யப்பட்ட வழக்குகள் ஆகியவை குறித்த விவரங்கள் 5, 7 ஆம் இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆலோசனைக் குழு :

1977 ஆம் ஆண்டு முதல், ஒப்பந்தத்தொழிலாளர் நல மாநில ஆலோசனைக் குழு செயல்பட்டு வருகிறது, இக்குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் பல்வேறு தொழில்களில் உள்ள ஒப்பந்தத் தொழிலாளரை முறைப்படுத்த-நீக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த ஆய்வாண்டில் இக்குழு 1986 மார்ச்சு 25, 1986 ஜூலை, 25 ஆகிய நாட்களில் கூடியது.

1946 ஆம் ஆண்டு தொழிற்சாலை வேலைவாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டம் :

1986 ஆம் ஆண்டில், சான்றிதழ் வழங்கும் அதிகாரிகள் 127 நிறுவனங்களின் நிலை ஆணைகளுக்குச் சான்றிதழ் வழங்கினர். 11 இனங்களில், நிலை ஆணைகளின் திருத்தங்களுக்குச் சான்றிதழ் வழங்கினர். இவ்வாண்டில் மேல்முறையீட்டு அதிகார மன்றம் என்ற முறையில் தொழிலாளர் நீதிமன்றம் இச்சட்டத்தின் 6-ம் பிரிவின் கீழ் 2 மேல்முறையீடுகள் மீது தீர்ப்பு வழங்கியது. இச்சட்டத்தின் 13-A எனும் பிரிவின் கீழ் வரப்பெற்ற 12 மனுக்களின் மீது இந்நீதிமன்றங்கள் தீர்ப்பளித்தன.

ஐம்பது தொழிலாளர்களுக்குக் குறைவாகவும் இருபது தொழிலாளர்களுக்குக் குறையாமலும் பணிபுரியும் தொழில் நிறுவனங்கள் அனைத்திற்கும் இச்சட்டத்தின் விதித்துறைகளை அரசு நீட்டித்துள்ளது.



தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டம் :

இவ்வாண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள், ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வுகள் ஆகியவை குறித்த விவரம் 5, 7 ஆகிய இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளது. இச்சட்டம், இத்துறையின் மூலம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக் குழு தெரிவித்தபடி தேர்தல் நாட்கள் அனைத்தையும் தேசிய விடுமுறை நாட்களாகச் சேர்க்க அரசு இச்சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவர இருக்கிறது.

தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான அந்தஸ்து வழங்கல்) சட்டம் :

இச்சட்டம், 24 திங்கள்களில், 480 நாட்கள் தொழிலாளர்கள் தொடர்ந்து பணியாற்றியிருந்தால் அவர்களுக்கு நிலையான அந்தஸ்து அளிக்க வகை செய்கிறது. இச்சட்டம் இம்மாநிலத் தில் தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகத்தாலும், தொழிற் சாலை ஆய்வாளர் அலுவலகத்தாலும் 1982 ஜனவரி, 1 ஆம் நாளி லிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழில் நிறுவன அதிபர்கள் சிலர் இச்சட்டத்தின் விதித்துறைகளை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தனர். மேற் சொன்ன சட்டத்தின் செயல் திறனைச் சரி என்று கூறி உயர்நீதி மன்றம் அந்த ரிட் மனுக்களுக்குத் தீர்ப்பளித்தது, அவ்வாறு தீர்ப்பளித்தபோது—

(அ) தொழிற் பயிற்சி பெறுபவர்கள்/பதிலிகள் (Badlies) ஆகியோருக்கு இச்சட்டம் பொருந்தாது என்றும்,

(ஆ) இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் வரம்பு நிபந்தனை செயல் திறனற்றது என்றும் தெரிவித்தது.

இத்தீர்ப்புக்கெதிராக உச்சநீதிமன்றத்தில் அரசு மேல் முறையீடு செய்துள்ளது. இது இன்னும் முடிவுறாமல் உள்ளது. உயர்நீதி மன்றம் 5918/82 ஆம் எண் ரிட் மனுவில் அளித்த தீர்ப்பினால் ஏற்பட்ட சில இடையூறுகளை நீக்கவும், தொழிலாளர்களுக்குப் பயனளிக்கவும் இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவை அரசு இவ்வாண்டில் திருத்தியுள்ளது.

5. அங்காடிகள், சந்தைகள்; அவை போன்ற ஏனைய இடங்களில் சரக்குகளை ஏற்றி இறக்கும் தொழிலில் வேலை.

6. காப்பி பதப்படுத்தும் தொழிலில் வேலை.

7. கம்பளி விரிப்புகள், சால்வை நெய்தலில் வேலை.

8. புகையிலை உற்பத்தித் (பீடி தயாரிக்கும்) தொழிலில் வேலை.

9. முந்திரித் தொழிலில் வேலை.

10. ஓட்டல்களில்/உணவகங்களில் வேலை.

11. கைத்தறி நெய்தல் தொழிலில் வேலை.

12. தங்கநகை தயாரிப்புத் தொழிலில் வேலை.

13. விசைத்தறித் தொழிலில் வேலை.

14. வெட்டுமரத் தொழிலில் வேலை.

15. சாலை போடுதலில் அல்லது பராமரித்தல் அல்லது கட்டிடப் பணியில் அல்லது கல் உடைத்தலில் அல்லது கல்லைப் பொடியாக்குதலில் வேலை.

அரசு பின்வரும் புதிய வேலைகளை 1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் விவர அட்டவணையில் சேர்ப்பதற்காக தொடக்க அறிவிக்கைகளை அண்மையில் வெளியிட்டுள்ளது;

1. தேங்காய் நார் உரிக்கும் தொழிலில் வேலை.

2. பட்டுநூல் முறுக்கேற்றும் தொழிலில் வேலை.

பின்வரும் வேலைகளை குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் விவர அட்டவணையில் சேர்ப்பதற்கான செயற்குறிப்புகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன :—

1. தனியார் பயிற்சிப் பள்ளிகள் (பாலர் பள்ளிகள், தனிப் பயிற்சிக் கல்லூரிகள், வணிக முறையில் அமைந்த தொழில் பயிற்சி நிறுவனங்கள் உட்பட).

2. காகிதம், காகிதப் பொருள் தயாரிப்புத் தொழிலில் வேலை.

3. கைத்திறத் தொழிலில் வேலை.

4. உணவுப் பொருள் செய்முறைப்படுத்தும் தொழிலில் வேலை.

5. தச்சு, கருமார், தொழிலில் வேலை.

6. மின்னணுவியல் பணியாளரமைப்பில் வேலை.



குறைந்தளவு ஊதியங்கள் (மாநில) ஆலோசனை வாரியம் :

குறைந்தளவு ஊதியங்கள் (மாநில) ஆலோசனை வாரியம் 1986 ஜூன் 27 ஆம் நாளன்று கூடியது.

தொழிலாளர் நல நீதிமன்றங்களின் நீதிபதிகள் 1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் படியான அதிகாரிகள் ஆவர். அவர்கள் 1986 ஆம் ஆண்டில் குறைந்தளவு ஊதியம் வழங்கவேண்டுமென்று கோரி, வரப்பெற்ற 54 கோரிக்கை மனுக்களை விசாரணை செய்து முடிவு செய்தனர்.

1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்குதல் சட்டம் :

தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் தொழிற்சாலை ஆய்வகமும், ஏனைய தொழில் நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் தொழிலாளர் ஆய்வகமும் இச்சட்டத்தைச் செயற்படுத்துகின்றன.

செய்யப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவை பற்றிய விவரங்கள் இணைப்புகள் 5, 7-இல் கொடுக்கப் பட்டுள்ளன.

திருத்தம்.

1986 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம், 1986 மே, 3 ஆம் நாளன்று குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற்றுள்ளது. இத்திருத்தச் சட்டத்தின் மூலம், 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் 14 ஆம் பிரிவு தமிழ்நாட்டிற்குப் பொருந்தும் வகையில் திருத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் திருத்த விதிந்துறைகள், இச்சட்டத்தின் கீழ் ஆணையிடப்பட்ட பாக்கித் தொகைகளை நிலவரி பாக்கி போல வசூலிப்பதற்கு உரிய சான்றிதழ்களைத் தயார் செய்து வெளியிட்டு அவற்றை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்புவதற்கு, ஊதியம் வழங்கல் அதிகாரிகளுக்கு (அதாவது தொழிலாளர் துணை ஆணையாளர்களுக்கு) அதிகாரமளிக்கிறது.

தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் சட்டம் :

தொழிலாளர்கள் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப் பட்டிருக்கும்போது அவர்களுக்கு வாழ்க்கைப்படி வழங்குவது தொழிற்சாலை நிருவாகத்தினரின் கட்டுப்பாடு ஆகும் என இச் சட்டம் கூறுகிறது.

வாழ்க்கைப்படி வழங்கல் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்படி இவ்வாண்டுத் தொடக்கத்தில், வாழ்க்கைப்படி வழங்கக்கோரி, 143 கோரிக்கை மனுக்கள் முடிவு செய்யப்படாமல் இருந்தன. இவ்வாண்டில் அத்தகைய 476 கோரிக்கை மனுக்கள் துறை அதிகாரிகளுக்கு வந்தன. இவற்றில் 415 மனுக்கள் இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்டன. இவ்வாண்டு இறுதியில் 204 கோரிக்கை மனுக்கள் முடிவு செய்யப்படாமலிருந்தன.

## அத்தியாயம் 6.

### சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள்.

**1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி பல்வகை விதித்துறைகள் சட்டம்.**

இச்சட்டத்தின் விதித்துறைகள், 1986 டிசம்பர், 31 ஆம் நாளில் உள்ளபடி 173 தொழிலகங்களுக்கு குறிப்பிட்ட வகை தொழில் நிறுவனங்களுக்குப் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளன. 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பல்வகை விதித்துறைகள் சட்டத்தின் கீழ், மூன்று திட்டங்கள், அதாவது, 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம், 1971 ஆம் ஆண்டு குடும்பநல ஓய்வூதியத் திட்டம், 1976 ஆம் ஆண்டு தொழிலாளர் வைப்பீட்டுத் தொகையுடன் இணைந்த காப்புறுதித் திட்டம் ஆகியவற்றின் கீழ், தொழிலாளர்களுக்கு, முறையே வருங்கால வைப்புநிதி, குடும்பநல ஓய்வூதியம், காப்புறுதி ஆகியவை வழங்கும் திட்டங்கள் செயலில் உள்ளன.

ஆய்வின் கீழ் உள்ள இவ்வாண்டில் புதிய தொழில்கள்/குறிப்பிட்ட வகை தொழில் நிறுவனங்கள் எதுவும் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படவில்லை.

**நிறுவனங்களையும்/சந்தாதாரர்களையும் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வருதல் :—**

1986 டிசம்பர், 31 ஆம் தேதியில் உள்ளவாறு இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட நிறுவனங்கள், சந்தாதாரர்கள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| (1) | விலக்களிக்கப் பட்டவை. (2) | விலக்களிக்கப் படாதவை. (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|
| நிறுவனங்களின் எண்ணிக்கை | 418 | 17,070 | 17,488 |
| சந்தாதாரர்களின் எண்ணிக்கை (தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி). | 3,52,359 | 12,53,629 | 16,05,988 |

**1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்பநல ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வரும் சந்தாதாரர்கள் :**

1986 டிசம்பர் 31 ஆம் நாளின் முடிவில் இத்திட்டத்தின் கீழ் வந்துள்ள சந்தாதாரர்களின் எண்ணிக்கை 12,00,000 ஆகும்.



**1976 ஆம் ஆண்டு தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டத்தின் கீழ் உறுப்பினராதல் :**

1976 ஆம் ஆண்டு தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டம், அனைத்து தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அங்கத்தினர்கள் அனைவருக்கும் பொருந்தும். தொழிலதிபர் தாம் வேலைக்கமர்த்தியுள்ள இத்திட்டத்தில் அங்கத்தினராக உள்ள ஒவ்வொரு தொழிலாளருக்கும் அவருடைய அடிப்படை ஊதியம், அகவிலைப்படி, பணி தொடர்நிலைப்படி (Retaining Allowance) ஏதேனும் இருப்பின் ஆகியவற்றில் 0.5 சதவீதத்தை சந்தாத் தொகையாகச் செலுத்த வேண்டும். தொழிலாளர்கள் இந்த நிதி தொடர்பாக எதுவும் செலுத்தத் தேவையில்லை.

எனினும், ஒரு நிறுவனத்தின் தொழிலாளர்கள தனியாக யாதொரு சந்தாத் தொகை அல்லது பிரிமியத் தொகை (Premium) செலுத்தாமல், இயல்பாக ஆயுள் காப்புறுதி சலுகைகளை அனுபவிக்கும் நிலையில் இருந்து, அச்சலுகைகள், இத்திட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்கு அனுமதிக்கத்தக்க சலுகைகளை விட அதிக சாதகமானதாக இருந்தால், அத்தகைய நிறுவனங்களுக்குத் தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டத்தில் சேருவதிலிருந்து, மேற்சொன்ன சட்டத்தின் 17(2ஏ) பிரிவின்படி விதிவிலக்களிக்கப்படுகிறது. இதுவரையிலும் 1,75,715 தொழிலாளர்களை, பணியிலமர்த்தியுள்ள 225 நிறுவனங்களுக்கு இப்பிரிவின் கீழ் விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.

**கேட்பு, வசூல், நிலுவை :**

மேற்சொன்ன மூன்று திட்டங்களின் கீழ் 1986 ஆம் ஆண்டிற்கான கேட்பு, வசூல், நிலுவை விவரம் பின்வருமாறு :—

| (1) | தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி. (2) | தொழிலாளர் குடும்ப ஓய்வூதியம். (3) | தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதி. (4) |
|---|---|---|---|
| | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| கேட்பு .. .. | 8,392.55 | 1,593.88 | 279.06 |
| வசூல் .. .. | 7,866.85 | 1,562.00 | 268.99 |
| நிலுவை .. | 525.70 | 31.88 | 10.07 |

1986 டிசம்பர் 31-ல் உள்ளபடி, வருங்கால வைப்பு நிதி நிலுவைகளை வசூலிக்கத் தவறிய தொழிலதிபர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட தண்ட/சட்ட நடவடிக்கை விவரங்களும், நிலுவைகளின் விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| தொழிலாளர் வருங்கால வைப்புநிதி சந்தாத் தொகைகள் (கணக்கு எண். 1) .. .. | 525.70 |
| தொழிலாளர் குடும்ப ஓய்வூதியச் சந்தாத் தொகைகள் (கணக்கு எண். 10) .. .. .. | 31.88 |
| தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதி சந்தாத் தொகைகள் (கணக்கு எண். 21) | 10.07 |

மேற்சொன்ன ரூ. 525.70 இலட்சம் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிலுவையில், ரூ. 319.24 இலட்சம் பின்வரும் வகைப்பட்ட நிறுவனங்களில் முடங்கிக் கிடக்கின்றன :—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| (i) தேசிய துணி ஆலை நிறுவனம் நிருவாகம் மேற்கொண்ட நலிந்த துணி ஆலைகள் .. | 59.13 |
| (ii) உயர்நீதிமன்றத்தில் ரிட் மனுக்களைத் தாக்கல் செய்து, தடையாணை பெற்றுள்ள நிறுவனங்கள் .. .. .. .. | 65.08 |
| (iii) கலைக்கப்படும் நிறுவனங்கள் .. .. | 98.15 |
| (iv) மூடப்படும் நிறுவனங்கள் .. .. .. | 96.88 |
| மொத்தம் .. .. | 319.24 |

தேசிய துணி ஆலை நிறுவனத்தின் ஆலைகள் தொடர்பாக, அவை நாட்டுடைமை ஆவதற்கு முந்தைய கால அளவிற்கான தொழிலாளர் வருங்கால வைப்புநிதி நிலுவைகள் வசூலிப்பது தொடர்பான பிரச்சனை இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

தொழிலாளர் வருங்கால வைப்புநிதி கணக்கு 1-ல் உள்ள நிலுவைத் தொகை ரூ. 206.46 இலட்சத்தையும், வரவேண்டிய ஏனைய நிலுவைகளையும் வசூலிப்பதற்காக, இச்சட்டத்தின் 7-ஏ ஆம் பிரிவில் கூறியுள்ளபடி, கடமை தவறிய தொழிலதிபர்களுக்கு மூன்று திங்களுக்கு ஒரு முறை அழைப்பு அனுப்புவது என்று இருந்ததற்குப் பதிலாக, இப்போது வட்டார வருங்கால வைப்பு நிதி ஆணையாளர் அவர்களுக்கு ஒவ்வொரு திங்களும் அழைப்பு அனுப்பியதன் மூலம் பயனுள்ள நடவடிக்கைகள் எடுத்துள்ளார்





**பணியாளர்கள் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை முடித்து தொகை கொடுத்துத் தீர்த்தல்.**

1986 ஆம் ஆண்டில் 63,483 இனங்களைப் பொறுத்தமட்டில், வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை இறுதியாக்கித் தொகை வழங்கித் தீர்ப்பது தொடர்பாக ரூ. 4,086.97 இலட்சம் வழங்கப்பட்டது.

1986 ஆம் ஆண்டில் டிசம்பர், 31 ஆம் தேதியில் உள்ளபடி வரப்பெற்ற உரிமைக் கோரிக்கைகள், தொழிலாளர் வருங்கால வைப்புநிதி தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்டவை, திருப்பி அனுப்பப்பட்டவை, தொகை கொடுத்துத் தீர்க்கப்படாமலுள்ள உரிமை கோரிக்கைகள் ஆகியவற்றின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் பின் வருமாறு :—

| | |
|---|---|
| (அ) 1986 ஜனவரி 1 ஆம் நாள் நிலவரப்படி தொகை கொடுத்துத் தீர்க்கப்படாமல் நிலுவையில் இருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை .. .. .. .. .. | 4,765 |
| (ஆ) 1986 ஆம் ஆண்டில் வரப்பெற்ற உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை .. .. | 82,027 |
| (இ) தொகை கொடுத்துத் தீர்க்கப்பட வேண்டியிருந்த உரிமைக் கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கை .. .. .. .. | 86,792 |
| (ஈ) 1986 ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட உரிமை கோரிக்கைகளின் எண்ணிக்கை .. .. .. .. | 63,483 |
| (உ) குறைபாடுகளைச் சரி செய்வதற்காகத் திருப்பி அனுப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை .. .. .. .. | 17,886 |
| (ஊ) 1986 டிசம்பர் 31 ஆம் நாள் நிலவரப்படி தீர்க்கப்படாமல் நிலுவையாக இருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை .. | 5,423 |

1986 ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் பற்றிய பகுப்பாய்வு :—

| | எண்ணிக்கை. |
|---|---|
| (அ) இறப்பு | 2,929 |
| (ஆ) வயது முதிர்வு பெற்றமை | 7,970 |
| (இ) நிரந்தரமாக இயலாமையுற்றது | 286 |
| (ஈ) பதவியை விட்டு விலகியது | 44,980 |
| (உ) ஆட்குறைப்புச் செய்யப்பட்டது | 6,418 |
| (ஊ) பல்வகை | 900 |
| மொத்தம் | 63,483 |

1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்பநல ஓய்வூதிய திட்டத்தின் கீழ் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்டவை :—

| | இனங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (அ) 1986 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் நாள் நிலவரப்படி முடிக்கப் பெறாமலிருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை | 5,074 |
| (ஆ) 1986 ஆம் ஆண்டு வரப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை | 79,760 |
| (இ) தொகை கொடுத்துத் தீர்க்கப்பட உள்ள மொத்தக் கோரிக்கைகளின் எண்ணிக்கை | 85,464 |
| (ஈ) 1986 ஆம் ஆண்டு தொகை கொடுத்துத் தீர்க்கப் பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை | 56,321 |
| (உ) குறைபாடுகளைச் சரி செய்து அனுப்பி வைக்குமாறு கூறி, திருப்பி அனுப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை | 23,310 |
| (ஊ) 1986 டிசம்பர், 31 ஆம் நாள் நிலவரப்படி முடிவுறாமல் நிலுவையாக இருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை | 5,833 |



1986-ஆம் ஆண்டில் 56,321 இனங்கள் தொடர்பாக குடும்ப ஓய்வூதியத் தொகை கொடுத்துத் தீர்ப்பது தொடர்பாக வழங்கப்பட்ட தொகை ரூ. 233.60 இலட்சமாகும்.

1986 டிசம்பர், 31-ம் நாளில் உள்ளபடி, ஓய்வூதியம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை 5.482.

1976-ம் ஆண்டு தொழிலாளர்கள் வைப்பீட்டுத் தொகை இணைந்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் தொகை கொடுத்து தீர்க்கப்பட்டவை :—

| | இனங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (அ) 1986 ஜனவரி, 1-ம் நாள் நிலவரப்படி முடிக்கப் படாமல் நிலுவையாக இருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை | 561 |
| (ஆ) 1986 ஆம் ஆண்டில் வரப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை | 4,803 |
| (இ) தொகை கொடுத்து தீர்க்கப்பட உள்ள மொத்தக் கோரிக்கைகளின் எண்ணிக்கை | 5,364 |
| (ஈ) 1986 ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை | 2,518 |
| (உ) குறைகளைச் சரி செய்வதற்காகத் திருப்பி அனுப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை | 2,289 |
| (ஊ) 1986 ஆம் ஆண்டு டிசம்பர் 31-ம் நாள் நிலவரப்படி நடவடிக்கை எடுக்காமல் நிலுவையாக இருந்த உரிமைக் கோரிக்கை மனுக்களின் எண்ணிக்கை | 557 |

1986 ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட 2,518 கோரிக்கைகள் தொடர்பாக ரூ. 146.36 இலட்சம் வழங்கப்பட்டது.

முன்பணங்கள் :

1,11,882 இனங்களைப் பொறுத்தமட்டில், சந்தாதாரர்களுக்கு மொத்தம் ரூ. 19.35 கோடி முன் பணமாக வழங்கப்பட்டது.

[1987 ஏப்ரல் 20

1986 ஆம் ஆண்டில் சந்தாதாரர்களுக்கு வழங்கப்பட்ட முன் பணங்கள் பற்றிய விவரங்கள் அட்டவணை 9-ல் கொடுக்கப் பட்டுள்ளது.

1986 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் நாளன்று உள்ளபடி, பொதுத் துறை நிறுவனங்களில் 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம்—பல்வகை விதித் துறைகள் சட்டத்தைச் செயல்படுத்துதல்/செயல்படுத்தாமல் இருத்தலின் நிலையைக் காட்டும் விவரம் இணைப்பு 10-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில், 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பல்வகை விதித் துறைகள் சட்டத்தின் விதித் துறை களின் கீழ் 440 பொதுத் துறை நிறுவனங்கள்/துறை நிறுவனங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. அவற்றில் 109 நிறுவனங்கள், இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள சட்டப்படியான திட்டங்களின் விதித் துறைகளைப் பின்பற்றத் தவறி விட்டன.

சட்டப்படியான திட்டங்களைப் பின்பற்றும் நிலைமையினை ஆய்வு செய்வதற்காக, தொழிலாளர் நலத் துறையின் அரசு ஆணையாளர்-செயலாளர் 28 ஜூலை 1986-ல் துறை நிறுவனங் களின் தலைவர்களுடன் நடத்திய கூட்டத்தைத் தொடர்ந்து இச் சட்டத்தின் விதித் துறைகளைப் பின்பற்றுவதில் முன்னேற் றம் ஏற்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

மாநிலத் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம்.

இம்மாநிலத்தில் தொழிலாளர் நல காப்புறுதித் திட்டம் 1955 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மின் சக்தியைப் பயன்படுத்துகின்ற 10 பேரும் அதற்கு மேற்பட்டும் தொழி லாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் மின் சக்தி யைப் பயன்படுத்தாத 20 பேர் அல்லது அதற்கு மேல் தொழி லாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் இத்திட்டம் பொருந்தும். புதிய துறைகளில் 20-ம் அதற்கு மேலும் தொழி லாளர்கள் உள்ள கடைகள், ஓட்டல்கள், உணவகங்கள், பத் திரிக்கை நிறுவனங்கள், திரையரங்குகள் உள்பட திரைப்பட நிறுவனங்கள். தனியார் மோட்டார் போக்கு வரத்து நிறு வனங்கள் ஆகியவையும் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப் பட்டுள்ளன. முதலில் 1,000 ரூபாய்க்கு மேற்படாமல் மாத ஊதியம் பெறும் காப்புறுதி செய்து கொண்ட தொழிலாளர்கள் தொழிலாளர் நலக் காப்புறுதிச் சட்டத்தின்கீழ் பயன் பெற்று வந்தனர். பின்னர், இந்த ஊதிய உச்சவரம்பு, 27—1—1985 முதல் ரூ. 1,600 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.



1987 ஏப்ரல் 20]

இத்திட்டம், தமிழ்நாடு மாநிலத்தின் அனைத்து மாவட்டங் களுக்கும் நீட்டிக்கப்பட்டு, பின்வரும் பயன்களுக்கு வகை செய்கிறது;—

(1) மருத்துவ உதவி—மருத்துவப் பொருட்களாக வழங் கப்படுகிறது.

(2) உடல் நலமின்மைக்கான உதவி.
(3) தற்காலிகமாக ஏலாமையுற் றோருக்கு உதவி.
(4) நீடித்த உடல் நலமின்மைக்கான உதவி.
(5) பேறுகால உதவி.
(6) இறுதிச் சடங்குக்குரிய செலவுத் தொகை.
(7) நிரந்தரமாக ஏலாமையுற்றோருக்கு உதவி.
(8) நீடித்த உடல் நலமின்மைக்கான உதவி (குடும்பக் கட்டுப்பாடு),
(9) சார்ந்துள்ளவர்கள் நல உதவி.

} (2) முதல் (9) வரை பணமாக அளிக்கப் படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் காப்புறுதி செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை தொடர்பான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள் ளன:—

| | |
|---|---|
| (அ) இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட் டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை | 5,90,000 |
| (ஆ) காப்புறுதி செய்து கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை. .. .. | 6,50,000 |
| (இ) இதில் அடங்கிய குடும்பங்களின் (காப் புறுதி செய்து கொண்ட தொழிலாளர் கள்) எண்ணிக்கை. .. .. | 6,50,000 |

(ஈ) பயனடைவோரின் மொத்த எண்ணிக்கை 25,22,000 மருத்துவ வசதிக்காகச் செலவிடப்படும் மொத்த தொகையை மாநில அரசும் தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகமும் 1 : 7 என்று ஒத்துக் கொள்ளப்பட்ட வீதத்தில் பகிர்ந்து கொள்ளு கின்றன. இக் கழகம் மருத்துவச் செலவிற்காக செலவிடப்படும் மொத்தத் தொகைக்கு உச்ச வரம்பு நிர்ணயித்துள்ளது. 1—4—1986 முதற்கொண்டு தற்போதுள்ள உச்ச வரம்பு, தொழிலாளரின் குடும்பம் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 160 ஆகும். (காப்புறுதி செய்து கொண்டவர்களுக்கும், அவர் களுடைய குடும்பத்தினருக்கும் முழு மருத்துவ வசதி).

[1987 ஏப்ரல் 20

1—4—1986 முதற் கொண்டு மேற்சொன்ன உச்ச வரம்பிற்கு மேல், ஒவ்வொரு தொழிலாளருக்கும் ஆண்டொன்றுக்கு மருந்துகள், மருத்துவப் பொருட்கள் செலவிற்காக ரூ. 25-க்கு மேற்பட்டு, ஆனால் ரூ. 65—க்கு மேற்படாமல் தொகை அனுமதிக்கப் படுகிறது.

தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் அயன்புரம் (சென்னை), கே. கே. நகர் (சென்னை), மதுரை, கோயம்புத்தூர், வேலூர் (வட ஆற்காடு மாவட்டம்) ஆகிய இடங்களில் ஒவ்வொன்று வீதம் தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனைகளும், 130 நிலையான மருந்தகங்களும், நடமாடும் மருந்தகங்களும், 2 பயன்பாட்டு மருந்தகங்களும், 1 பகுதி நேர மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. மேற்கூறிய ஐந்து தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனைகளில் உள்ள படுக்கைக்ளின் எண்ணிக்கை வருமாறு.—

| | படுக்கைகள். |
|---|---|
| 1. தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனை, அயன்புரம், சென்னை. | 616 |
| 2. தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனை, கே. கே. நகர், சென்னை. | 234 |
| 3. தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனை, மதுரை. | 209 |
| 4. தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனை, கோயம்புத்தூர் | 540 |
| 5. தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனை, வேலூர், (வட ஆற்காடு மாவட்டம்) | 50 |

ஐம்பது படுக்கைகளுடன் கூடிய தொழிலாளர் நல காப்புறுதி மருத்துவ மனை ஒன்றை சிவகாசியிலும், மற்றொன்றை சேலத்திலும் கட்டுவதற்கு, தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகம் இசைவளித்துள்ளது. இம் மருத்துவமனைகள் கட்டிமுடியும் தருவாயிலுள்ளன. கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் தேவையான பணியாளர்களுக்கும், சாதனங்களுக்கும் ஒப்புதலளிக்கப்படும்.



1987 ஏப்ரல் 20]

*1923ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் :*

1923-ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் பின்வரும் நேர்வுகளில் இழப்பீடு வழங்க வகை செய்கிறது;—

(அ) தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது ஏற்படும் தொழிலக விபத்துக்கள்.

(ஆ) சிலவகைத் தொழிலக நோய்கள் ஏற்பட்டு மரணமடைதல் அல்லது ஏலாமையுறுதல். இச்சட்டம் தொழிற்சாலைகள், சுரங்கங்கள், மலைத் தோட்டங்கள், போக்குவரத்து நிறுவனங்கள், கட்டிடப் பணியாளர்கள், இரயில்வே பணியாளர்கள், உடல் நலத்துக்கு ஊறு விளைவிக்கும் குறிப்பிட்ட சில வகைத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குப் (தொழிலதிபர்களின் வர்த்தக அல்லது வணிகக் காரியங்களுக்காக அன்றி வேறு காரியங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள நாட் கூலி பெறும் தொழிலாளர்கள் நீங்கலாக) பொருந்தும்.

தொழிலாளர் இழப்பீட்டுத் தொகை வழங்குதல் தொடர்பாக ஆணையாளரால் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் விவரம் இணைப்பு 8 (ஆ)-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

*தொழிலாளர் விபத்துத் துயர் தணிப்பு நிதி :*

கல் உடைத்தல், வெடி வைத்து தகர்த்தல், கிணறு தோண்டுதல் அல்லது ஏனைய தொழில்களில் பணிபுரியும்போது விபத்தினால் நிரந்தரமாக ஏலாமையுறும் தொழிலாளர்கள், அல்லது இறந்து போகும் தொழிலாளர்களைச் சார்ந்தவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக ரூ. 15,000 தொடர் மானியத்துடன் இந்த நிதியை அரசு ஏற்படுத்தியுள்ளது. 1923ஆம் ஆண்டு தொழிலாளர்கள் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இழப்பீடு வழங்குவதற்குத் தொழிலதிபர்களிடம் நிதி வசதி இல்லாதிருந்தால், அல்லது வேறு காரணங்களை முன்னிட்டு தொழிலாளர்கள் அல்லது அவர்களைச் சார்ந்துள்ளோர் இச்சட்டத்தின் கீழ் இழப்பீட்டுத் தொகை பெற இயலாது போனால் இந் நிதியிலிருந்து உதவித் தொகை அளிக்கப்படும். இழப்பீடு வழங்கப் போதுமான நிதி வசதி இல்லாத சிறிய ஒப்பந்தக்காரர்களிடம் பணி புரியும் தொழிலாளர்கள் விபத்தில் மரணமடைந்தால் அல்லது காயமடைந்தால் அவர்கள் இந்நிதியிலிருந்து உதவித் தொகை பெறுவர். இவ்வாண்டில் இந்நிதியிலிருந்து ஒரு இனம் தொடர்பாக ரூ. 500 தொகை வழங்க சென்னை தொழிலாளர் நல ஆணையாளர் அனுமதித்துள்ளார்.

**1972-ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் சட்டம் :**

இச்சட்டம் 1972 செப்டம்பரிலிருந்து இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர் நல வட்டாரத்துணை ஆணையாளர்கள் அலுவலகத்தைச் சேர்ந்த உதவி ஆணையாளர்களும், தொழிலாளர் நல வட்டாரத் துணை ஆணையாளர்களும் அவரவர் அதிகார வரம்புப் பகுதியில் இச்சட்டத்தின் கீழ் முறையே கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும், மேல் முறையீட்டு அதிகாரிகளாகவும் . அறிவிக்கப்பட்டுள்ளனர். இந்த அதிகாரிகள் இச்சட்டத்தின் கீழ் 1986-ஆம் ஆண்டில் பெற்று தீர்த்து வைத்த வழக்குகளின் விவரங்கள் 8ஆம் இணைப்பில் உள்ள விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

**அமைப்பு முறையின் கீழ் வராத தொழிலாளர்களுக்கான தொகுப்புப் பணிக் கொடை நிதித் திட்டம் :**

விரிவான ஆய்வுப் பணியை மேற்கொண்ட பின்னர், வறிய நிலையிலுள்ள மக்களுக்குப் பாதுகாப்பும் உதவியும் அளிக்கும் நோக்குடன் தொகுப்புப் பணிக் கொடைத் திட்டம் ஒன்றை அமைப்பு முறையின் கீழ் வராத தொழிலாளர்களின் நலனுக்காக ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. தொழிலாளர் நல உதவி ஆணையாளர் தலைமையில் ஐந்து தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள் அடங்கிய தனிப்பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொழிலாளர் தொழில் நிறுவனங்கள் பற்றி ஆய்வுப் பணி நடைபெற்று வருகிறது.

**சிவகாசிப் பகுதியில் குழந்தைத் தொழிலாளர் தேசியத் திட்டம் :**

சிவகாசிப் பகுதியில் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள குழந்தைகளின் பணி நிலைகளை மேம்படுத்தும் பொருட்டும் அவர்களை சுரண்டலிலிருந்து பாதுகாப்பதற்கும், அவர்களுக்குச் சத்துணவும், குறைந்தளவு கல்வியும் வழங்கவும், சுகாதாரப் பாதுகாப்பு அளிக்கவும் குழந்தைத் தொழிலாளர் முறை தோன்றவும், தொடரவும் காரணமாகவும் நிலைக்களனாகவும் அமைந்த சூழ்நிலையை அறவே மாற்றியமைக்கக் கூடிய வகையில், நடவடிக்கை எடுப்பதின் மூலம் படிப்படியாக குழந்தைத் தொழிலாளர் முறையை நீக்குவதற்கு, மத்திய அரசு ரூ. 13.89 கோடி மதிப்பீட்டுச் செலவில் 1986-87ஆம் ஆண்டிலிருந்து மூன்றாண்டுகளில் செயற்படுத்துவதற்காக முன்னோடித் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. 20—4—1986 அன்று சிவகாசியில் தொழிலாளர் நல



இணை அமைச்சரால் தொடங்கப்பட்ட சிவகாசிப் பகுதிக்கான குழந்தை தொழிலாளர் தேசிய திட்டத்தில் பின்வரும் முக்கிய கூறுகள் அடங்கியுள்ளன;—

(1) வருமானம், வேலைவாய்ப்பு பெருக்குத் திட்டம் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம், தேசிய கிராம வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற திட்டங்களின் மூலமாகப் பணி புரியும் சிறார் குடும்பங்களின் வருமான நிலையை உயர்த்துதல்.

(2) பணிபுரியும் குழந்தைகளுக்கு முறைசாராக் கல்வி, முதியோர் கல்வி, தொடக்கக் கல்வியில் கொண்டுவர இருக்கிற புதுமைக்கு ஆதரவு.

(3) உடல் நலம்.

2. தற்போதுள்ள முறைசாரா கல்வியை ஓரளவுக்கு வலுப்
படுத்துவதே மாநில அரசின் பொறுப்பாகும். மக்கள் நல்
வாழ்வுப் பணி குறித்த செலவை, தொழிலாளர் நல ஈட்டுறுதிக்
கழகம் ஏற்கிறது. மாநில அரசு கொள்கை அளவில் முன்னோடித்
திட்டத்தை ஏற்றுக் கொள்ளும், துணைப் பணியாளர்களுடன்
திட்ட இயக்குநரை நியமிப்பதற்கு ஒப்புதலளித்தும், காமராஜர்
மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையின் கீழ் பதிவு
செய்யப்பட்ட திட்ட சங்கம் அமைப்பதற்கு அனுமதி அளித்தும்
ஆணை பிறப்பித்துள்ளது. வேலை செய்யும் குழந்தைகள்,
அவர்களுடைய குடும்பத்தின் நிலையை ஆய்வு செய்யவும்
ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான செலவை
மத்திய அரசு ஏற்கிறது.

3. வேலை செய்யும் குழந்தைகளின் குடும்பங்களைச் சேர்ந்த 75 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கும், உடல் ஊனமுற்ற 75 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கும் சிவகாசியில் அச்சகம் ஒன்றை அமைப்பதற்கான பணி தொடங்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 7.

### தொழிலாளர் நலப் பணிகள்.

தொழிற்சாலைத் தொழிலாளர் மலிவு விலை வீட்டுவசதித் திட்டம் தனியார் துறை தொழிலதிபர் திட்டம் :

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் 2 (1) பிரிவின் கீழ் வரும் தொழிலாளர்களின் பயனுக்காக வீடுகள் கட்ட தனியார் தொழிலதிபர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

1982 ஆம் ஆண்டில் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கான ஒருங்கிணைந்த மலிவு விலை வீட்டு வசதித் திட்டம் நிறுத்தப் பட்டது.

எனினும் முன்னாள் திட்டத்தின் கீழ் தனியார் துறை தொழிலதிபர்களுக்கு, 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் 2 (1) பிரிவின் கீழ் வரும் அவர்களின் தொழிற் சாலை தொழிலாளர்களின் நலனுக்காக வீடுகள் கட்டுவதற்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 1,394 வீடுகள் தனியார் தொழிலதிபர்களால் கட்டப்பட்டுள்ளன. இது வரை யிலும் பயன்படுத்தப்பட்ட நிதியுதவி ரூ. 56.15 இலட்சமாகும்.

மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதி திட்டம் :

குடியிருப்பு ஒன்றுக்கு 4,000 ரூபாய் என்ற உச்சவரம்புச் செலவு அடிப்படையில், தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்ட மலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு நிதி உதவி அளிக்க இத் திட்டம் வகை செய்கிறது. இத்தொகையில் 50 சதவீதம் கடனாகவும் 37.50 சதவீதம் உதவித் தொகையாகவும் வழங் கப்படுகிறது.

மலைத் தோட்ட உரிமையாளர்கள், குறிப்பாக சிறு மலைத் தோட்ட உரிமையாளர்களின் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி வழங்கும் அவர்களின் சட்டப்படியான கடமையை நிறைவேற்றுவதற்கு உதவுவதற்காக இத்திட்டம் தொடங் கப்பட்டது.

இத்திட்டத்தை மத்திய அரசு துறையில் சேர்க்க இந்திய அரசு தீர்மானித்துள்ளது.

முந்தைய திட்டத்தின் கீழ், இத்திட்டம் தொடங்கப் பட்ட நாளிலிருந்து மலைத் தோட்ட உரிமையாளர்களால் கட்டப்பட்ட வீடுகளின் மொத்த எண்ணிக்கை 1,115 ஆகும். இது வரையிலும் பயன்படுத்தப்பட்ட மத்திய நிதியுதவி ரூ. 28.35 இலட்சமாகும்.





தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்—

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் தொழிலாளர்களின் நன்மைக்காக நல்வாழ்வு வசதிகள் செய்து கொடுக்கும் தொடர்ச்சியான பல பணிகளை மேற்கொண்டுள்ளது. தொழிற்சாலைத் தொழிலாளர்களுக் கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் மேலும் நலம் பயக்கும் பல திட்டங்களையும் அண்மையில் நிறைவேற்றவும் கருதியுள்ளது.

1986 ஆம் ஆண்டில் பின்வரும் நிலையங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன:

கள்ளக்குறிச்சி (தென் ஆற்காடு மாவட்டம்), ஒண்டிப் புதூர் (கோயம்புத்தூர் மாவட்டம்), எண்ணூர் அனல் மின் நிலையம் (சென்னை), அருப்புக்கோட்டை (காமராசர் மாவட்டம்) ஆகிய இடங்களில் 4 தொழிலாளர் நல நிலை யங்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கீழ்கோதையாற்றில் ஒரு தையல் பயிற்சி நிலையம்.

ஒண்டிப்புதூர் (கோயம்புத்தூர் மாவட்டம்) அரிய மங்கலம், (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) ஆகிய இடங்களில் இரண்டு படிப்பகங்கள், இவ்வாரியம் செயல்படுத்திய நலத் திட்டங்கள் அவற்றின் மூலம் பயனடைந்தோர் எண்ணிக்கை ஆகியவற்றின் விவரம் வருமாறு :—

தொழிலாளர் நல நிலையங்கள் :

| | 1985–86. | 1986–87. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| தையல் பயிற்சி நிலையங்கள் : | | |
| (1) நிலையங்களின் மொத்த எண்ணிக்கை .. .. | 47 | 51 |
| (2) பயிற்சி பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை .. | 1,572 | 1,466 |
| 2. பாலர் பள்ளிகள் : | | |
| (1) நிலையங்களின் மொத்த எண்ணிக்கை .. .. | 39 | 43 |
| (2) பயனடைந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை .. | 1,601 | 1,274 |
| 3. குழந்தைக் காப்பகங்கள் : | | |
| (1) குழந்தைக் காப்பகங்களின் மொத்த எண்ணிக்கை .. | 5† | 3† |
| (2) பயனடைந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை .. | 287 | 103 |
| 4. படிப்பகங்கள் : | | |
| (1) படிப்பகங்களின் மொத்த எண்ணிக்கை .. .. | 11 | 13 |
| (2) பயன்பெறும் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை | 61,167 | 80,000 |

† ஒரு நிலையம் மகளிர் மன்றங்களால் நடத்தப்பட்டு வருகிறது.



5. ஏனைய திட்டங்கள் :—

| | பயனடைந்தோர் எண்ணிக்கை. | | தொகை ரூபாய். | |
|---|---|---|---|---|
| | 1985–86 | 1986–87 | 1985–86 | 1986–87 |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (அ) தொழிலாளர்களுக்கு மூக்கு கண்ணாடிக்கான செலவுத் தொகையைத் திருப்பிக் கொடுத்தல். | 826 | 2,138 | 48,140.00 | 1,25,891.00 |
| (ஆ) தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு தட்டச்சு/சுருக்கெழுத்து படிப்பு கட்டணங்கள். | 2,059 | 887 | 2,41,938.00 | 1,00,053.00 |
| (இ) புத்தக வங்கி .. | 41,765 | 27,662 | 11,57,859.60 | 9,84,868.85 |
| (ஈ) ஈமச் சடங்கிற்குரிய செலவுகள். | 653 | 854 | 1,30,600.00 | 1,70,800.00 |

6. படிப்புதவித் தொகை :

பின்வரும் படிப்புக்களுக்காக வாரியம் நிதியுதவியும் அனுமதித்துள்ளது :—

| (1) | பயனடைந்தோரின் எண்ணிக்கை 1985–86 (2) | 1986–87 (3) | தொகை ரூபாய் 1985–86 (4) | 1986–87 (5) |
|---|---|---|---|---|
| (அ) சட்டத்தில் பட்டப்படிப்பு | 6 | 3 | 6,000.00 | 3,000.00 |
| (ஆ) பொறியியலில் பட்டப் படிப்பு. | 89 | 34 | 89,200.00 | 34,000.00 |
| (இ) பொறியியலில் பட்டயப் படிப்பு. | 254 | 253 | 1,52,200.00 | 1,51,800.00 |
| (ஈ) மருத்துவக் கல்வியில் பட்டப் படிப்பு. | 22 | 49 | 22,000.00 | 49,000.00 |
| (உ) மருத்துவக் கல்வியில் பட்டயப் படிப்பு. | 4 | 1 | 2,400.00 | 600.00 |
| (ஊ) தொழிற்பயிற்சி நிலையங்கள். | 66 | 121 | 19,800.00 | 36,300.00 |
| (எ) மேல் நிலைப்பள்ளி கல்வி | 46 | 74 | 23,000.00 | 37,060.00 |



விடுமுறை இல்லம் :

தொழிற்சாலைத் தொழிலாளர்கள், அவர்களுடைய குடும்பத்தினர் ஆகியோரின் பயனுக்காக, விடுமுறை இல்லம் (Holiday Home) ஒன்று திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் குற்றாலத்தில் கட்டப்பட்டுள்ளது. ஒரே சமயத்தில் 58 பேர் இதில் தங்கலாம். இதற்கு மிகக் குறைந்த வாடகையே விதிக்கப்படுகிறது.

தொழிலாளர்களுக்காக மற்றொரு விடுமுறை இல்லம் மாமல்லபுரத்தில் விரைவில் திறக்கப்பட உள்ளது. உதகமண்டலம், கொடைக்கானல், இராமேஸ்வரம், ஓகேனக்கல் ஆகிய இடங்களிலும் விடுமுறை இல்லங்கள் கட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வார்டு :

சென்னையை அடுத்த தாம்பரத்தில், காசநோய் நலம்பேண் மருத்துவ மனையில் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கென்று 1978 ஆம் ஆண்டில் ரூ. 3.64 இலட்சம் செலவில் 26 படுக்கை வசதிகளுடன் கூடிய காசநோய் தனி வார்டு ஒன்று கட்டப்பட்டது.

ஓய்வு இல்லம் :

திருப்பூர், பென்னாத்தூர் அரசு பொது மருத்துவ மனைகளிலும், ஆச்சாரி பள்ளத்திலும் காச நோய் நலப் பிரிவு கட்டும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. வால் பாறையில் தொழிலாளர்களுக்காக ஓய்வு இல்லம் ஒன்று வாடகைக் கட்டிடத்தில் நடத்தப்பட்டு வருகிறது. ஒரே சமயத்தில் 15 பேர் வரை இதில் தங்கலாம். பெயரளவு வாடகையே வசூலிக்கப்படுகிறது.

தொழிற் சங்கத் தலைவர்களுக்கான ஓய்வு இல்லம் :

தொழிற் சங்கத் தலைவர்கள் தங்குவதற்காக சென்னை-6, தேனாம்பேட்டையில் ரூ. 10 இலட்சம் செலவில் ஓய்வு இல்லம் (ஜீவா இல்லம்) ஒன்றை வாரியம் கட்டியுள்ளது.

போட்டி விளையாட்டுக்கள் :

தொழிலாளர்களையும், அவர்களைச் சார்ந்துள்ளோரையும் ஊக்கப்படுத்துவதற்காக, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் ஒவ்வோராண்டும் மாவட்ட, மண்டல, மாநில அளவில் ஆண்டுப்போட்டி விளையாட்டுக்களை நடத்தி வருகிறது. 1985–86 ஆம் ஆண்டு ஏழாம் ஆண்டுப்போட்டி விளையாட்டுகள் 1–5–1986-ல் மதுரையில் நடைபெற்றது. 1987 ஆம் ஆண்டின் மாநில அளவிலான ஆண்டுப்போட்டி விளையாட்டுகள் விரைவில் நடைபெற உள்ளன.

[1987 எப்ரல் 20

**ஏலாமையுற்றத் தொழிலாளர்களுக்குச் செயற்கை உறுப்புகள் வழங்குதல் :**

ஏலாமையுற்றத் தொழிலாளர்கள் 8 பேர்களுக்கு இவ்வாண் டில் ரூ. 11,257.50 செலவில் மூன்று சக்கர வண்டிகள் உட்பட செயற்கை உறுப்புகளை வாரியம் வழங்கியுள்ளது.

**காது கேட்கும் கருவிகள் :**

தேவைப்படும் தொழிலாளர்களுக்கு காது கேட்பதற்குரிய கருவிகளையும் வாரியம் வழங்கி வருகிறது.

| விபரம். (1) | பயனடைந்தோர் எண்ணிக்கை. (2) | தொகை ரூபாய். (3) |
| --- | --- | --- |
| மூன்று சக்கர வண்டிகள் | 8 | 12,817.50 |
| காது கேட்பதற்குரிய கருவிகள் | 7 | 4,250.00 |

**வாரியம் செயல்படுத்தவிருக்கும் புதிய திட்டங்கள் :**

(1) பின்வரும் இடங்களில் தொழிலாளர் நல நிலையங்களைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது:—

பெரம்பூர், தண்டையார்பேட்டை (சென்னை), ஈரோடு, ஓசூர் (தருமபுரி மாவட்டம்), குமாரபாளையம் (சேலம் மாவட் டம்), பந்தலூர், தேவர் ஷோலா (நீலகிரி மாவட்டம்).

(2) தொழிலாளர்களுக்கான காசநோய் சிகிச்சை வார்டு களை வேலூர், ஆண்டிப்பட்டி (மதுரை) ஆகிய இடங்களில் உள்ள காசநோய் நல மருத்துவமனையிலும், ஈரோடு (பெரியார் மாவட்டம்) அரசினர் மருத்துவமனையிலும் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

**சட்ட உதவி :**

உயர்நீதி மன்றத்தில் வழக்குகள் தொடர்பாக, தொழிற் சங்கங்களுக்கு ஆகும் சட்டச் செலவுகளுக்காக, சில நிபந்தனை களுக்குட்பட்டு ரிட் மனு ஒன்றுக்கு அல்லது ரிட் மேல் முறையீடு ஒன்றுக்கு ரூ. 150 என்ற வீதத்தில் நிதியுதவி அளிப்பதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. சட்ட உதவிக்கு அனுமதி வழங்க, தொழிலாளர் நல ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் இழப்பீட்டுத் தொகைச் சட்டத்தின் கீழ் இழப்பீடு கோரும் ஏழ்மை நிலையிலுள்ள தகுதி வாய்ந்த தொழி லாளர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்தவர்களுக்கு மாநில அரசுச் செலவில் சட்ட உதவி அளிப்பதற்காக அரசு ஆண்டொன் றுக்கு ரூ. 1,000 ஒதுக்குகிறது. காயம் அடைந்த தொழிலாளர் களுக்கு இழப்பீட்டுத் தொகைக் கூடுதல் ஆணையாளர்கள்



1987 ஏப்ரல் 20]

பிறப்பித்த ஆணைகளை எதிர்த்து நிர்வாகத்தினர் உயர் நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்து கொள்ளும்போது சம்பந் தப்பட்ட தொழிலாளர்கள் உயர்நீதிமன்றத்தில் தங்கள் தரப் பில் எடுத்துரைத்து . வழக்காட சட்ட உதவி பெறத் தகுதி யுடையராவார். இவ்வாறான உதவி, இழப்பீட்டுத் தொகைக் கூடுதல் ஆணையாளர்களின் முன்னிலையல் நடைபெற்ற சட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

**தொழிலாளர் நலச் சட்ட ஆலோசனைக் குழுக்கள்:**

சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் மூன்று சட்ட ஆலேசானைக் குழுக்கள் செயல்பட்டு வருக்கின்றன. ஓய்வு பெற்ற நீதிபதிகளும், ஓய்வு பெற்ற தொழிலாளர் நல அதிகாரிகளும் இவற்றை நிருவகித்து வருகின்றனர். ஏழ்மை நிலையிலுள்ள மக்களுக்குச் சட்ட உதவி அளிப்பது குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட தனி நபர் குழு அளித்த பரிந் துரைக்கிணங்க, அரசு இச்சட்ட ஆலோசனைக் குழுக்களை அமைத்துள்ளது. இக்குழுக்கள் தொழிலாளர்களிடமிருந்து வரும் மனுக்களைக் கருணை உணர்வோடு பரிசிலனை செய்து, அவர் களுடைய குறைகளை நீக்குவதற்காக அவர்களுக்கு உரிய நீதி கிடைக்கும் வகையில் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள், தொழிலாளர் நலன் தொடர்புடைய ஏனைய நடைமுறைகள் ஆகியவற்றின்கீழ் அவர்கள் அனுகவேண்டியவர்களைப் பற்றி யும், அவர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளைப் பற்றியும் ஆலோசனை வழங்குகிறது. இக்குழுக்கள் இவ்வாண்டில் 313 முறையீடுகளை முடித்து வைத்துள்ளன.

**கிராமப்புறத் தொழிலாளர்களை ஒருங்கு திரட்டுவதற்குரிய பணித்திட்டம் :**

கிராமப்புறத் தொழிலாளர்கள் குடிமக்கள் என்ற வகையில் அவர்களுடைய உரிமைகளையும், கடப்பாடுகளையும் அவர்கள் அறிந்துகொள்ள செய்யவேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டு தொழிற்சங்கம், கூட்டுறவுகள் ஆகிய வடிவில் அவர்கள் ஒருங்கு திரள்வதற்கு அவர்களுக்குச் செயல் நோக்கமளிக்கும் பொருட்டு, தொழிலாளர், குத்தகை உரிமை, சமூக நலம் ஆகியவை குறித்த சட்டங்களை அவர்கள் அறிய்ச் செய்ய மத்திய அரசு, ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக, வளர்ச்சி வட்டார அளவில் (ஒரு வளர்ச்சி வட்டாரத்திற்கு ஒருவர் என்ற வீதத் தில்) கிராமப்புற கௌரவ அமைப்பாளர்களை நியமிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இவற்றை அவர்கள் அறியச் செய்வதோடு. கிராமப்புற கௌரவ அமைப்பாளர்கள், அரசின் பல்வேறு திட்டங்களுடன் சம்பந்தப்பட்ட அமைப்பு ரீதியில் வரும் கிராமப்புறத் தொழிலாளர்களின் வேறுபட்ட வகைகளையும் நன்கு அறிவர். அத்திட்டங்கள் வருமாறு; கிராமப்

[1987 ஏப்ரல் 20

பகுதி ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் (IRDP), கிராமப்
பகுதி தேசிய வேலை வாய்ப்புத் திட்டம் (NREP), சுய வேலை
வாய்ப்புக்காக கிராம இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்
டம் (TRYSEM), இருபது அம்சத் திட்டம், ஆதி திராவிடர்,
பழங்குடியினருக்கான சிறப்புக் கூட்டுத் திட்டம், துணைத் திட்
டம் முதலியவையாகும். இந்நோக்கத்திற்காக 1984–85 ஆம்
ஆண்டில் தமிழ் நாட்டில் 75 வளர்ச்சி வட்டாரங்கள் தெரிந்
தெடுக்கப்பட்டன. 1985 சனவரியில் தெரிந்தெடுக்கப்பட்ட,
கிராமப்புற கௌரவ அமைப்பாளர்களுக்கு சென்னை தொழிற்
சங்கக் கல்வி ஆராய்ச்சிக்கான எஸ்.பி. ஓ.ஏ. நிலையத்தில் தொழி
லாளர் கல்வி மத்திய வாரியத்தின் வட்டார இயக்ககத்தால் 2
திங்கள் பயிற்சி அளிக்கப்பட்டது. ஒவ்வொரு கிராமப்புற கௌரவ
அமைப்பாளர்களுக்கும் மாநில அரசு தொடக்கத்தில் வழங்
கும் திங்களொன்றுக்கான நிர்ணயிக்கப்பட்ட பயணப்படி 50
ரூபாயும், மதிப்பூதியம் 200 ரூபாயும் பின்னர் அரையாண்டிற்
கொருமுறை மத்திய அரசிடமிருந்து பெறப்படும். கிராமப்புற
கௌரவ அமைப்பாளர்களை 1985 – 86, 1986–87 ஆம் ஆண்டு
களிலும் தொடர்ந்து பணியில் ஈடுபடுத்த மாநில அரசு ஆணை
யிட்டுள்ளது. இந்த அமைப்பாளர்களை 1987–88ஆம் ஆண்டி
லும் தொடர்ந்து பணியில் ஈடுபடுத்துவதற்கான இசைவை
மத்திய அரசு அளித்துள்ளது.

**பெண் தொழிலாளர்களுக்கான நலத் திட்டத்தைச் செயல் படுத்து வதற்கான தனிப் பணியாளரமைப்பு :**

நமது நாட்டில், அரசு வேலை வாய்ப்பில் பெண்களுக்குள்ள
உரிமை அரசியலமைப்புச் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
குடும்ப வரவு-செலவுக்கு பெண்கள் தங்கள் சம்பாதியத்தின்
மூலம் துணைபுரிய அவர்கள் வேலை பார்ப்பது என்பது தவிர்க்க
முடியாத ஒன்றாகும். இந்தியாவில் ஆண் தொழிலாளர்களின்
எண்ணிக்கை 180 மில்லியன். பெண் தொழிலாளர்களின் எண்
ணிக்கை 66 மில்லியன் ஆகும். ஆண் தொழிலாளர்களை விட,
பெண் தொழிலாளர்களுக்கு அதிகப் பாதுகாப்புத் தேவைப்படுவ
துடன், குறிப்பாக அமைப்பு ரீதியில் வராத துறைகளில் பணியாற்
றும் பெண் தொழிலாளர்களின் பணி நிலைகளை மேம்படுத்த
அரசு தனிக்கவனம் செலுத்துவது அவசியமாகும். திட்டப் பணி
களைச் செயல்படுத்தும் தொழிலாளர் நலத் திட்டங்களைச்
செயல்படுத்தத் தற்போதுள்ள பணியாளரமைப்பு அத்தொழி
லாளர்களின் சிறப்புத் தேவைகளை நிறைவு செய்யப் போது
மானதாக இல்லை; மற்றும் இத் தொழிலாளர்கள் பயனுள்ள
தொழிற் சங்கங்கள் மூலம் அமைப்பு ரீதியாகவும் இல்லை. பெண்
தொழிலாளர்கள், தங்களுடைய சட்டப்படிக்கான சமூக உரிமை
களையும் சிறப்புரிமைகளையும் பெறுவதற்குரிய வழிவகைகள்
குறித்து அவர்களுக்கு அறிவுறுத்தத் தனிப் பணியாளரமைப்பு



1987 ஏப்ரல் 20]

இருக்க வேண்டும். பெண் தொழிலாளர்களின் தனித் தன்மை
யைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு நல வசதிகளை அளிக்கும்
வகையில் வெவ்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ்
சட்ட நடவடிக்கைகள் உள்ளன. இச் சட்ட நடவடிக்கைகளைச்
செயல்படுத்துவதற்காக, பெண் தொழிலாளர்களுக்குப் பயன
ளிக்கும் சட்டங்களைச் செயல் படுத்துவதற்கென்றே பெண்
அதிகாரிகளைக் கொண்ட தனிப்பணியாளரமைப்பு ஒன்றை
ஏற்படுத்துவது அவசியம் என்று கருதப்பட்டது. அதற்கிணங்க,
1985 செப்டம்பரில், உரிய பணியாளர்களுடன் தொழிலாளர்
துறை ஆய்வாளர் (பெண்கள்) பதவிகள் இரண்டு ஏற்படுத்த
அரசு அனுமதி அளித்துள்ளது. தொழிலாளர் துறை ஆய்வாளர்
கள் (பெண்கள்) இருவர் சிவகாசியிலும், கோயம்புத்தூரிலும் தற்
போது பணியாற்றுகின்றனர்.

## அத்தியாயம் 8.

## பயிற்சி.

**தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தின் பணிகள் :**

தமிழ்நாடு அரசால் 1973ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையந்தான் தென்னிந்தியாவில் முதன் முதலில் ஏற்படுத்தப்பட்ட தொழிலாளர் கல்வி நிலையமாகும். மாநில அரசு இக்கல்வி நிலையத்தின் பயனுள்ள பணியைப் பாராட்டி இந்நிலையத்தை 1978 ஆம் ஆண்டில் முதல் நிலை நிலையமாகத் தரம் உயர்த்தியது. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:—

(1) நல்ல தொழிற் சங்கங்களை ஏற்படுத்தல், (2) தொழிலாளர்களுக்கும் நிருவாகத்தினருக்குமிடையே சுமூகமான உறவை ஏற்படுத்துதல், (3) தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளின் திறமையினை வளர்த்தல், (4) வெளியீடுகள் மூலம் கல்வி அறிவைப் பரப்புதல்.

**நடவடிக்கைகள் :**

தொழில் துறையில் உள்ள (i) தொழிலாளர்கள்; (ii) மேற்பார்வை—நிருவாகப் பணியாளர்கள்; (iii) தொழிலாளர் நலத் துறையிலும் ஏனைய துறைகளிலும் உள்ள அதிகாரிகள் ஆகியோரின் தேவைகளுக்கேற்ப, இக்கல்வி நிறுவனம், பயிற்சி வகுப்புகளையும் கருத்தரங்குகளையும் நடத்தி வருகிறது.

[1987 ஏப்ரல் 20

## 1. பயிற்சி வகுப்புகள்.

**1. புத்தறிவு பயிற்சி வகுப்புகள் :**

கூட்டுறவுத் துறை, உள்ளாட்சி மன்றங்கள், போக்குவரத்துக் கழகங்கள், மின்வாரியம், அரசின் ஏனைய பொதுத் துறை நிறுவனங்கள் ஆகிய துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு இந்தப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தொழிலாளர்களுக்குச் செயல் நோக்கங்களைக் கற்பிக்கவும், அவர்களிடையே ஒழுங்கு முதலியவற்றை வளர்க்கவும் தொழிலாளர் நலச் சட்டங்கள் மற்றும் சட்ட நுணுக்கங்கள் ஆகியவற்றை நிருவாக அதிகாரிகள் அறிந்து கொள்ளச் செய்ய இந்தப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இப்பயிற்சியின் கால அளவு 10 நாட்களாகும்.

**2. நினைவுகூர் பயிற்சி வகுப்புகள் :**

இப்பயிற்சி வகுப்புகள், தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள், தொழிலாளர் நலச் சட்டங்களையும், தீர்ப்பு வழிச் சட்டங்களையும், நாளது வரையில் தெரிந்து கொள்ளச் செய்வதோடு மட்டுமல்லாது, தொழில் உளவியல், பொதுமக்கள் தொடர்புகள், தொழிலிணக்கம் முதலியவற்றில் அவர்களுக்கு நுண்ணறிவுத் திறம் அளிக்கவும் உதவியாக அமைகின்றன. அவர்கள், தொழில் மேம்பாட்டில் ஆர்வம் கொள்ளவும், தாங்கள் செயல்படும் பகுதிகளில் வெற்றிகரமான சாதனைகளை எய்தவும் இப்பயிற்சி வகுப்புகள் அவர்களுக்கு உதவுகின்றன.

**3. ''வணிக நிறுவனங்கள்—தொழிலாளர் நலச் சட்டங்கள்'' குறித்த கருத்தரங்கு :**

கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள், உணவகங்கள் மற்றும் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் முதலியவற்றின் உரிமையாளர்களுக்குப் பயிற்சி வகுப்புகளை நடத்துவதன் மூலம் இந் நிறுவனம் புதிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. கடைகள், உணவகங்கள், வணிக நிறுவனங்கள் ஆகியவற்றின் உரிமையாளர்கள், சட்டக்கடப்பாடுகள் மற்றும் அவர்கள்வைத்துவரவேண்டிய பல்வேறு படிவங்கள், பதிவேடுகள் ஆகியவற்றை அறியவும் இக்கருத்தரங்குகள் உதவி புரிகின்றன.

**4. தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் வைத்துவர வேண்டிய பதிவேடுகள்—அறிவிப்புகள் குறித்த பயிற்சித் திட்டம்:**

தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ்ப் பதிவேடுகளையும் அறிவிப்புகளையும் வைத்து வருபவர்களுக்கு இப்பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறது.



1987 ஏப்ரல் 20]

**5. கருத்தரங்குகள்:**

''முரண்பாடான தீர்மானம்'', ''தொழில் தகராறுகள் திருத்தச் சட்டம்'', ''உற்பத்திக்கான செயல் நோக்க அணுகு முறை'', ''தொழில் உறவுகளில் காணப்பெறும் போக்கு'', ''கூட்டு சமரசப் பேச்சு''—ஒழுங்கு நடவடிக்கை வழக்குகளைக் கையாளுதல் முதலியவை குறித்து, தொழிற்சங்க அலுவலக நிருவாகிகள் மற்றும் நிருவாகப் பணியாளர்களுக்குக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

**6. அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் :**

இக்கல்வி நிறுவனம், தொழில் தகராறுகள் திருத்தச் சட்டம், தொழில் உறவுகளில் காணப் பெறும் பிரச்சினைகள், சிறுதொழில்கள், தொழிலாளர் நலம் மற்றும் உற்பத்தியில் உள்ள பிரச்சினை போன்ற பொருள்கள் குறித்து அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் பற்றிய கருத்தரங்குகளை இலவசமாக நடத்தியுள்ளது. இக்கருத்தரங்கில் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி வி. ஆர். கிருஷ்ண அய்யர், நீதிபதி பாஸ்கரன் ஆகியோர், தொழிலாளர் நலச் சட்டங்கள் குறித்தும் தொழில் உறவுகள் குறித்தும் சிறப்பு சொற்பொழிவு ஆற்றினர்.

**7. துறைப் பயிற்சித் திட்டம் :**

பொதுத் துறை நிறுவனங்கள் சிலவற்றின் வேண்டுகோளுக்கிணங்க, அந்நிறுவனங்களின் வளாகங்களில் அவற்றின் பணியாளர்களுக்கென்றே பயிற்சித் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன; அவற்றின் விவரங்கள் வருமாறு :—

(i) தமிழ்நாடு மின்வாரியம்.—தொழிற் சங்க அலுவலக நிருவாகிகளுக்கும், நிருவாகப் பணியாளர்களுக்கும் தொழில் உறவுகள் குறித்த பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இவ்வாண்டில் அவ்வாறான 3 வகுப்புகள் நடத்தப்பட்டன.

(ii) சேலம் உருக்காலை.—''முரண்பாடான தீர்மானம்'' ( Conflict Resolution ) குறித்து 3 பயிற்சி வகுப்புகளும், ''பங்கு கொள்ளும் நிருவாகம்'' (Participative management ) குறித்து ஒரு பயிற்சி வகுப்பும் நடத்தப்பட்டன. இதனால் பயனடைந்தவர்கள் தொழிலாளர்களும் நிருவாகிகளும் ஆவர்.

(iii) பாரத் கனரக எலக்ட்ரிக்கல்ஸ் லிமிடேட்.—''பங்கு கொள்ளும் நிருவாகம்'' குறித்த பயிற்சி வகுப்பு, தொழிலாளர்கள் மற்றும் நிருவாகிகள் அடங்கிய ஷாப்-கவுன்சில் ( Shop Council ) உறுப்பினர்களுக்காக நடத்தப்பட்டது.

(iv) கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்.—1986-ஆம் ஆண்டில் கிளை மேலாளர்களுக்காக, ''துறை விசாரணை'' மற்றும் தொழிலாளர் நலச் சட்டங்கள் குறித்த பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

(v) பாரத் கனரக எலக்ட்ரிக்கல்ஸ் லிமிடெட் (எம்.எச்.டி.)—''தொழில் உறவுகள்'' குறித்த பயிற்சி வகுப்புகள் நிருவாகிகளுக்காக நடத்தப்பட்டன.

(vi) தமிழ்நாடு தொழில் வெடி பொருள்கள் தயாரிப்பு நிறுவனம்.—இவ்வாண்டில் பணியாளர் நிருவாகம் குறித்த பயிற்சி வகுப்பு ஒன்று நிருவாகிகளுக்காக நடத்தப்பட்டது.

(vii) சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்.—1986-ல் நிருவாகிகளுக்கு ''முரண்பாடான தீர்மானம்'' (Conflict Resolution) குறித்த பயிற்சி வகுப்பு ஒன்று நடத்தப்பட்டது.

(viii) சர்க்கரை இயக்ககம்.—சர்க்கரை இயக்குநரின் கட்டுப்பாட்டில் வரும் சக்கரை ஆலைகளில் உள்ள நிருவாகிகளுக்கு ''முரண்பாடான தீர்மானம்'' (Conflict Resolution) குறித்த பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது.

மேற்கூறிய பயிற்சி வகுப்புகளைத் தவிர, தொழிலாளர் நலச் சட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, இக்கல்வி நிலையத்தில் இரண்டு புதிய பயிற்சி வகுப்புகளை நடத்த அரசு தற்போது அனுமதியளித்துள்ளது; அப்பயிற்சி வகுப்புகள் வருமாறு :—

(1) தொழிலாளர் நலச் சட்டங்களை செயல்படுத்தும் அதிகாரிகளுக்கான நினைவுகூர் பயிற்சி.

(2) தொழிலாளர் உதவி ஆணையாளர்களுக்கும், துணை ஆணையாளர்களுக்கும் நினைவுகூர் பயிற்சி.

மேற்கூறிய பயிற்சி வகுப்புகள் தொடர்ந்து நடத்தப்படக்கூடியவையாகும். அனுமதிக்கப்பட்ட செலவுக்குள் இரண்டு ஆண்டு காலத்திற்கு மேற்படி பயிற்சி வகுப்புகளை நடத்துமாறும், இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அவசியமாயின், அதிகச் செலவு குறித்து அரசை அணுகுமாறும் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.



II. தொழிலாளர் நல நிருவாகத்தில் பட்டய மேற்படிப்பு :

இது தொழிலாளர் நல நிருவாகத்தில் பட்ட மேற்படிப்புப் பட்டயம் வழங்குவதற்கான ஓராண்டு பகுதி நேரப் பயிற்சித் திட்டமாகும். இதில் 10 பாடங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன. அவர்கள், திட்டப் பணியை மேற்கொண்டு, அறிக்கை ஒன்றை அனுப்பி வைக்கவேண்டும்.

இப்பயிற்சி வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான தகுதி அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றிருக்க வேண்டும் என்பதாகும். இக்கல்வி நிலையம் நடத்தும் எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெறுவதன் அடிப்படையில் பயிற்சி வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுகிறது.

III. ''உழைப்பவர் உலகம்'' :

இந் நிறுவனம், தீர்ப்பு வழிச்சட்டங்கள், தொழிலாளர் நலச் சட்டங்கள் ஆகியவை குறித்துத் தொழிலாளர்களுக்கு அறிவுறுத்தும் வகையில் ''உழைப்பவர் உலகம்'' என்ற மாதாந்திர தமிழ்ப் பத்திரிக்கை ஒன்றை வெளியிட்டு வருகிறது. இந்த பத்திரிக்கையின் ஒரு பகுதியான ''வினா-விடை'' பகுதியை மக்கள் விரும்பிப் படிக்கின்றனர்.

## அத்தியாயம் 9.

### எடைகள்-அளவைகள்.

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு எடைகள்-அளவைகள் (செயற்படுத்தல்) சட்டம்.

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு எடைகள்-அளவைகள் (செயற்படுத்தல்) சட்டம், தரமான எடை போடுதல்-அளவையிடுதல் சட்டம் ஆகியவற்றின் விதித் துறைகள், எடைகள்-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரியின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ்ச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன; இவர் தொழிலாளர் துணை ஆணையாளரும் (ஆய்வு) ஆவார். இவருக்கு உதவியாக இம்மாநிலத்திலுள்ள தொழிலாளர் ஆய்வாளர்கள், தொழிலாளர் துணை ஆய்வாளர்கள், தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள் மற்றும் சென்னை மாநகர், செங்கற்பட்டு, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள எடைகள்-அளவைகளில் முத்திரையிடும் ஆய்வாளர்கள் (Stamping Inspectors) சென்னை, செங்கற்பட்டு

கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் மூன்று தொழிலாளர் துணை ஆய்வாளர்கள் (சோதனைப்படை பிரிவு) ஆகியோர் இவருக்கு உதவியாகப் பணியாற்றுகின்றனர்.

எடைகள்-அளவைகள் குறைவாகப் போடப்படுதல், தவறான எடைகள்-அளவைகள் ஆகியவற்றைப் பயன்படுத்துதல் ஆகியவற்றைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க அடிக்கடி ஆய்வுகள் நடத்துதல், திடீர் சோதனை நடத்துதல், கிராமங்களில் ஆய்வுகள் நடத்துதல் ஆகியவை உட்பட, கூட்டாக அடிக்கடி சோதனையிடுதல், குற்றமிழைப்பவர்கள் மீது தமிழ்நாடு எடைகள்-அளவைகள் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற தீவிர நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டுள்ளது.

1986 ஆம் ஆண்டில் எடைகள்-அளவைகள் சட்டத்தின் விதித்துறைகள், விதிகள் ஆகியவற்றை மீறியதற்காக 18,854 வழக்குகள் போடப்பட்டன. அந்த ஆண்டில் போடப்பட்டு தீர்ப்பளிக்கப்படாமலிருந்த வழக்குகள் உட்பட இதுவரையில் 17,717 வழக்குகளிலும் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ரூ. 14,53,660.00 அபராதத் தொகை விதிக்கப்பட்டது. எடைகள்-அளவைகளில் முத்திரையிடுவதற்குரிய கட்டணமாக 1986 ஆம் ஆண்டில் ரூ. 65,59,722.25 வசூலிக்கப்பட்டது.

1985–86 ஆம் ஆண்டுகளில் இச்சட்டத்தின் கீழ் எடைகள்-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரி, எடைகள்-அளவைகள் உதவிக் கட்டுப்பாட்டு அதிகாரி ஆகியோர், பழுதுபார்ப்பவர்கள், விற்பனையாளர்கள், தயாரிப்பாளர்கள் ஆகியோருக்கு வழங்கிய உரிமங்கள் (புதிய, புதுப்பித்தல்) மற்றும் அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணம் ஆகியவை பற்றிய விவரம் வருமாறு :—

| ஆண்டு. | பழுது பார்ப்பவர்கள். | விற்பனை யாளர் கள். | தயாரிப் பாளர் கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1985 .. .. .. | 310 | 655 | 156 |
| 1986 .. .. .. | 327 | 641 | 160 |

விற்பனையாளர்கள், தயாரிப்பாளர், பழுதுபார்ப்பவர் ஆகியோரிடமிருந்து 1986 ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணம் ரூ. 1,70,879.50 ஆகும்.





எடைகள்-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரி, மாவட்டங்களிலுள்ள சார்பு அதிகாரிகள் கூட்டத்தை அவ்வப்போது கூட்டி, மேற்சொன்ன சட்டத்தின் விதித் துறைகள், விதிகள் ஆகியவற்றைச் செயற்படுத்தும் பணித் தொடர்பாக மறு ஆய்வு செய்கிறார். தவறிழைக்கும் வணிகர்களைத் திருத்துவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு, அவர் கூட்டாகத் திடீர் சோதனைகள் நடத்துகிறார்.

1986 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதிலும் உள்ள வணிகர்களைச் சோதனையிடும் பொருட்டு, இத்துறை 3,53,797 ஆய்வுகளை மேற்கொண்டது. எடைகள்-அளவைகள் சட்டம் விதிகள் ஆகியவற்றைக் கிராமப் . பகுதிகளில் தீவிரமாகச் செயற்படுத்தும் பொருட்டு, சார்நிலை அதிகாரிகள், கிராமங்களில் முறையான வாலாயமான ஆய்வுகளை மேற்கொள்கின்றனர். 1986 ஆம் ஆண்டில் 18,648 கிராம ஆய்வுகளில் சுமார் 82,624 வணிகர்களை சார்நிலை அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

1986ஆம் ஆண்டில் சிவில், கூட்டுறவுக் கடைகள், பெட்ரோல் பங்க்குகள், சர்க்கரை, சிமிட்டித் தொழிற்சாலைகள், சந்தைகள், அங்காடிகள் பலசரக்குக் கடைகள், ஏனைய கடைகள் அனைத்திலும ஆய்வாளர்களைக் கொண்டு மாநில அளவில் தனி, திடீர் சோதனையை, எடைகள்-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரி ஏற்பாடு செய்தார். சட்டத்தை மீறிய சம்பந்தப்பட்ட வணிகர்கள் மீது வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

எடைகள்-அளவைகளின் தரம் (சிப்பம் கட்டப்பட்ட பொருட்கள் குறித்த விதிகள் :

தமிழ்நாடு எடைகள்-அளவைகள் (செயற்படுத்தல்) சட்டத்தைச் செயற்படுத்துவதன் மூலம், பொருட்களின் அளவு குறையாமலிருக்க உறுதிப்படுத்துவதால், நுகர்வோரின் நலன் பாதுகாக்கப்படுகிறது. மேலும், 1977 ஆம் ஆண்டு எடைகள்-அளவைகளின் தரம் (சிப்பம் கட்டப்பட்ட பொருட்கள்) குறித்த விதிகள் பொருட்களின் அளவு, பொருட்கள் சிப்பம் செய்யப்பட்ட நாள், உற்பத்தியாளரின் பெயர், விற்பனை விலை முதலியவற்றை அறிவிப்பதன் மூலம் பொருட்களை சிப்பம் கட்டி விற்பனை செய்வதற்கு வகை செய்கிறது. இம்மாநிலத்தில் தொழிலாளர் துறையின் மூலமும் இவ்விதிகள் செயற்படுத்தப்படுகின்றன.

[1987 ஏப்ரல் 20

சிப்பம் கட்டப்பட்ட பொருட்கள் ஒவ்வொன்றையும்
பொறுத்த வரையில் அப்பொருளின் பெயர், அப்பொருளின்
நிகர அளவு, அது உற்பத்தி செய்யப்பட்ட ஆண்டும்
திங்களும், உற்பத்தியாளரின் பெயரும் முகவரியும், அதன்
விற்பனை விலை முதலியவற்றை அறிவிப்பது ஒவ்வொரு
உற்பத்தியாளரின்/சிப்பம் கட்டுபவரின் கடப்பாடாகும். அப்
பொருளின் சிப்பத்தில் குறிப்பிட்டுள்ள சில்லறை விற்பனை
விலைக்கு மேற்படாமல் மேற்கூறிய அறிவிப்புடன் கூடிய
சிப்பம் செய்யப்பட்ட பொருளை விற்பனை செய்வது ஒவ்
வொரு வணிகரின் கடப்பாடாகும்.

1977 ஆம் ஆண்டு எடைகள்-அளவைகள் தரம் (சிப்பம்
கட்டப்பட்ட பொருட்கள்). குறித்த விதிகளைச் சேர்ந்த
விதித் துறைகளை 19 தொழிலாளர் ஆய்வாளர்கள், 44
தொழிலாளர் துணை ஆய்வாளர்கள் அகியோரின் உதவியுடன்
எடைகள்-அளவைகள் கட்டுப்பாட்டாளரும் நிருவாக அதிகாரி
யும் (எடைகள்-அளவைகள்) செயற்படுத்தி வருகின்றனர்.
நிருவாக அதிகாரி (எடைகள்-அளவைகள்) தொழிலாளர்
ஆய்வாளர்கள், தொழிலாளர் துணை ஆய்வாளர்கள் ஆகியோர்
எடைகள்-அளவைகள் உதவி கட்டுப்பாடு அதிகாரிகளாகச்
செயல்பட அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு, எடை
கள்-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரிகளின் அனைத்து
அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

1986 ஆம் ஆண்டில், 3,901 சில்லறை விற்பனையாளர்
16 ன் வளாகங்களும், உற்பத்தியாளர்கள்/சிப்பம் கட்டுபவர்களின்
களி வளாகங்களும் ஆய்வு செய்யப்பட்டன. அவ்வாண்டில்,
39 குற்ற வழக்குகள் தொடரப்பட்டன. இவற்றில் 27
வழக்குகளில் தீர்ப்பளிக்கப்பட்டு ரூ. 8,430 அபராதம் விதிக்கப்
பட்டது. எஞ்சியுள்ள 12 வழக்குகளில் நீதிமன்றம் தீர்ப்பு
வழங்காமல் உள்ளது.

ஆயுள் ஈட்டுறுதி-பணி ஓய்வு காலப் பயன்கள் சிறப்புத்
திட்டம் :

சிறுதளவு, ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்கள்,
உழவுத் தொழிலாளர்கள், கிராமக் கைவினைஞர்கள், கட்டிடத்
தொழிலாளர்கள், சுமை ஏற்றி இறக்கும் தொழிலாளர்கள்,
கைவண்டி இழுப்பவர்கள், துணி வெளுப்பவர்கள், முடி
திருத்துபவர்கள் ஆகியோரை இவர்களுக்கென்று தொடங்கப்
பட்ட சிறப்புத் திட்டத்தில் சேர்த்து, அவர்களிடமிருந்து
திங்கள் தோறும் சிறு சந்தாத் தொகையை வசூலிப்பதன்
மூலம் அவர்களுக்கு ஆயுள் ஈட்டுறுதியும் பணி ஓய்வுகாலப்
பயன்களும் கிடைக்கச்செய்யும் திட்டம், மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் 1984 ஆம் ஆண்டு சுதந்திரத் தினக்



1987 ஏப்ரல் 20]

கொண்டாட்டத்தின்போது அறிவித்த மக்கள் நலத் திட்டங்கள் பலவற்றுள் ஒன்றாகும். இதன்படி, ஆயுள் ஈட்டுறுதி-பணி ஓய்வுகாலப் பயன்கள் சிறப்புத் திட்டத்தை அரசு அனுமதித்தது.

2. அம்மாநிலத்தில் 18 வயது முதல் 58 வயது வரையுள்ள உழவுத் தொழிலாளர்கள், சிறிதளவு-ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்கள், கிராமக் கைவினைஞர்கள், சுமை ஏற்றியிறக்கும் தொழிலாளர்கள், கைவண்டி இழுப்பவர்கள், துணி வெளுப்பவர்கள், முடி திருத்துபவர்கள், லாரி ஓட்டுநர்கள், லாரி துடைப்பவர்கள், டாக்சி ஓட்டுபவர்கள், ஆட்டோ ஓட்டுபவர்கள், சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவர்கள், காய்-கறிகள், பழங்கள், உப்பு முதலியவற்றை விற்பவர்கள் ஆகியோர் இத்திட்டத்தின் மூலம் பயனடைவர்.

3. இத்திட்டத்தில் சேர விரும்புவோர் திங்கள் தோறும் ரூபாய் 10 வீதம் அவர்கள் 58 வயதடையும் வரை செலுத்த வேண்டும். இத்திட்டம் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் உடனுழைப்புடன் செயற்படுத்தப்படுகிறது. ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திற்குச் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகை காலாண்டு அடிப்படையில் செலுத்தப்படும். உறுப்பினர் ஒவ்வொருவரும் ஆண்டொன்றுக்கு பிரீமியத் தொகையாக 45 ரூபாயை ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடம் செலுத்துவர். ஒருவர் இறக்க நேர்ந்தால், அத் தொழிலாளரின் நேமகதாரருக்கு ஆயுள் ஈட்டுறுதி கழகம் 5,000 ரூபாய் வழங்கும், அதனுடன் அவ்வுறுப்பினர் செலுத்திய தொகையைப் பொறுத்து அரசு 8 சதவீதக் கூட்டு வட்டியுடன் ஒரு தொகையை வழங்கும்.

4. 58 வயது முடிவடைந்தவுடன், அவர் தொகை செலத்தியகால அளவிற்கேற்ப, பணி ஓய்வுப் பயனாக அவ்வுறுப்பினருக்கு ஒட்டு மொத்தத் தொகை வழங்கப்படும். 10 ஆண்டுகள் தொகை செலுத்திய உறுப்பினர் 1,200 ரூபாயும், 20 ஆண்டுகளுக்குத் தொகை செலுத்திய உறுப்பினர் 4,300.00 ரூபாயும், 25 ஆண்டுகளுக்கு தொகை செலத்திய உறுப்பினர் 7,400 ரூபாயும், 30 ஆண்டுகளுக்கு தொகை செலுத்திய உறுப்பினர் 12,400 ரூபாயும், 35 ஆண்டுகளுக்குத் தொகை செலத்திய உறுப்பினர் 20,400 ரூபாயும், 40 ஆண்டுகளுக்குத் தொகை செலுத்திய உறுப்பினர் 33,500 ரூபாயும் பெறுவார்.

5. இதுவரை 2,000 பேர்களுக்கு இந்திய ஆயுள் ஈட்டுறுதிக்கழகம் தொகை வழங்கியுள்ளது. எஞ்சியுள்ள 3,208 இனங்களைப் பொறுத்த வரையில் தொகை வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

தொழிலாளர் விபத்து ஆயுள் ஈட்டுறுதி தொகுதித் திட்டம் :

1—7—1986லிருந்து காமராசர் மாவட்டத்திலுள்ள தீப்பெட்டி-பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் பயன் கருதி, தமிழக அரசு தொழிலாளர் விபத்து ஆயுள் ஈட்டுறுதி தொகுதித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம், ஈட்டுறுதி செய்யப்பட்டவர்களுக்குப் பார்வை அல்லது கை, கால்கள் இழப்பு அல்லது இறப்பு ஏற்பட்டால் நிவாரணம் அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. ஈட்டுறுதி செய்யப்பட்டவர்கள் உண்மையில் வேலை செய்து கொண்டிருக்கையில் விபத்து ஏற்பட்டவர்களுக்கு மட்டும் என்று வரையறுக்காமல் 24 மணி நேரத்திற்குள் என்ற அடிப்படையில் விபத்துக்கான ஈட்டுறுதித் தொகை வழங்கப்படும். இத்திட்டத்தால், 14 வயது முதல் 65 வயது வரையிலான வயதுடைய, தீப்பெட்டி-பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டு உள்ள தொழிலாளர்கள் பயனடைவர். ஆண்டுதோறும் ரூ. 7.00 வீதம் பிரீமியத் தொகை வசூலிக்கப்படுகிறது. தொழிலாளர்கள் தொடர்பாக, தொழிலதிபர் பிரீமியத் தொகை செலுத்த வேண்டும். பின்னர், தொழிலாளர்களின் ஊதியங்களிலிருந்து அத்தொகையைப் பிடித்துக் கொள்ளவேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் வரும் விபத்துக்களும் அவற்றிற்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையும் வருமாறு :—

| | | ரூ. |
|---|---|---|
| (a) | இறப்பு .. .. .. .. | 16,000.00 |
| (b) | உடல் உறுப்புகள் மீண்டும் பயன்படுத்த இயலாத வகையில் அல்லது முற்றிலும் இழத்தல் (i) இரு கைகள் (ii) இரு கால்கள் அல்லது (iii) ஒரு கை அல்லது ஒரு கால் (iv) இரு கண்கள் மீண்டும் பார்வை திரும்பாத நிலையில் அல்லது முற்றிலும் பார்வை இழத்தல். | 16,000.00 |
| (c) | உடல் உறுப்புகள் மீண்டும் பயன்படுத்த இயலாத வகையில் அல்லது முற்றிலும் இழத்தல் (i) ஒரு கை அல்லது ஒரு கால் அல்லது ஒரு கண் மீண்டும் பார்வை திரும்பாத நிலையில் அல்லது முற்றிலும் பார்வை இழத்தல். | 8,000.00 |
| (d) | மேற்கூறியவை அல்லாத ஏனைய வகையில் காயங்களால் நிரந்தரமாக/முற்றிலுமாக ஊனம் ஏற்படுதல். | 16,000.00 |

இத்திட்டம், தேசிய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனத்தின் உதவியுடன் செயற்படுத்தப்படுகிறது. காமராசர் மாவட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் 27,297 தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். காமராசர் மாவட்டத்தில் இத்திட்டத்தில் சேரும் தொழிலாளர்களின் எண்ணிக்கை இத்திட்டத்திற்கு ஊக்கமளிப்பதாக உள்ளதால், தமிழ்நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள தீப்பெட்டி-பட்டாசுத் தொழிலாளர்களுக்கும் இத் திட்டத்தை அரசு நீட்டித்துள்ளது.





வேலூர் பகுதியில் இத்திட்டத்தின் கீழ் இதுவரை 200 தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோன்று, திருநெல்வேலி பகுதியிலும், இத்திட்டத்தின் கீழ் 2,641 தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

விபத்து நிவாரணத் திட்டம் :

இத்திட்டம், ''உழவுத் தொழிலாளர்கள், சிறு அளவு-ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்கள், கிராமக் கைவினைஞர்கள் ஆகியோருக்கான விபத்து நிவாரணத் திட்டம்'' எனப் பெயர் பெறும். நிலமற்ற உழவுத் தொழிலாளர்கள், 2.5 ஏக்கருக்கும் குறைவாக நிலம் வைத்திருக்கும் சிறு அளவு ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்கள், கிராமக் கைவினைஞர்கள் ஆகியோர் தங்கள் தொழிலில் ஈடுபட்டிருக்கையில் விபத்து காரணமாக உயிரையோ அல்லது கை கால்களையோ இழக்க நேரிட்டால் நிவாரணம் அளிக்கும் வகையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. வெள்ளம், வறட்சி, ஏனைய இயற்கைச் சீற்றங்கள் ஆகியவற்றின் காரணமாக உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதன் மூலம் நிவாரணம் அளிப்பதுடன், தொழிலாளர் வேலை செய்து கொண்டிருக்கையில் இறந்து விட்டால், அவருடைய குடும்பத்திற்கு அல்லது தொழிலாளர் வேலை செய்து கொண்டிருக்கையில், விபத்தில் சிக்க நேர்ந்தால் அத்தொழிலாளர்க்கு காயத்தின் தன்மையைப்பொறுத்து 5,000 ரூபாய் முதல் 10,000 ரூபாய் வரை தொகை வழங்கப்படும். இத்திட்டம் தமிழ்நாடு மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயற்படுத்தப்படும். இத்திட்டம், அறிஞர் அண்ணா பிறந்த நாளான 15—9—1984 அன்று செயலுக்குக் கொண்டு வரப்பட்டது.

2. இத்திட்டத்தின் கீழ் வரும் விபத்துக்களும், அவற்றிற்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையும் வருமாறு :—

| | | ரூபாய் |
|---|---|---|
| (a) | தொழிலாளர் வேலை செய்து கொண்டிருக்கையில் விபத்து காரணமாக இறத்தல். | 10,000 |
| (b) | தொழிலாளர் வேலை செய்து கொண்டிருக்கையில் விபத்து காரணமாக கை, கால்கள் இரண்டையும் அல்லது இரு கண்களை அல்லது கை, கால்களில் ஒன்றையும் கண் ஒன்றையும் இழத்தல். | 10,000 |

(c) தொழிலாளர் வேலை செய்துகொண்டிருக்கையில் விபத்து காரணமாக கை, கால்களில் ஒன்றை அல்லது ஒரு கண்ணை இழத்தல். 5,000

இத்திட்டத்தின்கீழ், அரசு முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து இதுவரை 206 குடும்பங்களுக்கு ரூ. 16,42,000 அனுமதியளித்துள்ளது.

தொழிலாளர் விபத்து சமூகப் பாதுகாப்புத் திட்டம்:

ஏழை குடும்பங்களுக்காக. மத்திய அரசு, விபத்து ஈட்டுறுதிச் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை 1985–86 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் அறிவித்தது. ஆயுள் ஈட்டுறுதி திட்ட உறுப்பினர் ஒருவர் விபத்தில் இறந்துவிடின், அவருடைய குடும்பத்திற்கு ஈட்டுறுதி நிறுவனம் 3,000 ரூபாய் வழங்கும். பிரீமியத் தொகையை மத்திய அரசு செலுத்தும்.

2. இத்திட்டதின் மூலம் நிலமற்ற உழவுத் தொழிலாளர்கள் சிறு அளவு-ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்கள், பரம்பரைக் கைவினைஞர்கள் ஆகியோர் பயன் பெறுவர்.

3. இத்திட்டம், இம்மாநிலத்தில் பதின்மூன்று மாவட்டங்களில் செயற்படுத்தப்படும். அவை தருமபுரி, கன்னியாகுமரி, மதுரை, வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம், அண்ணா, சேலம், தென் ஆற்காடு, நீலகிரி ஆகிய மாவட்டங்களாகும்.

4. தெரிந்தெடுக்கப்பட்ட பதின்மூன்று மாவட்டங்களில், இத்திட்டத்தை செயற்படுத்தி இவ்வரசு மத்திய அரசுக்குத் தங்கள் இசைவைத் தெரிவித்து உள்ளது. மத்திய அரசின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது. முதற்கண் அரசு 10,000 ரூபாயை அனுமதிக்கும். பொது ஈட்டுறுதி நிறுவனம் பெயர் குறிப்பிடப்படுகிற ஈட்டுறுதி நிறுவனத்திடமிருந்து 3,000 ரூபாய் பின்னர் திரும்பப் பெறப்படும்.





## இணைப்பு—1

### தொழில் தகராறுகள் :

| விவரம். | 1985 (1985 ஜனவரி முதல் நாளிலிருந்து 1985 டிசம்பர் 31ஆம் நாள் வரை), | 1986 (1986 ஜனவரி முதல் நாளிலிருந்து 1986 டிசம்பர் 31ஆம் நாள் வரை). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (அ) ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த புகார்கள் மற்றும் தகராறுகளின் எண்ணிக்கை. | 1,900 | 1,965 |
| (ஆ) இந்த ஆண்டில் வரப்பெற்ற புகார்கள் / எழுந்த தகராறுகளின் எண்ணிக்கை. | 7,469 | 8,076 |
| (இ) முந்தைய ஆண்டுகளில் முடிவுறாதிருந்த புகார்கள், தகராறுகள் உட்பட புலன் விசாரணை செய்யப்பட்ட புகார்கள் தகராறுகளின் எண்ணிக்கை. | 9,369 | 10,041 |
| (ஈ) சமரச அலுவலர்களின் உதவியுடன் தீர்வு காணப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 7,404 | 8,112 |
| (உ) தொழிலாளர்கள் நீதி மன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் நீதி மன்ற தீர்ப்பிற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 1,655 | 1,169 |
| (ஊ) நடுவர் நீதிமன்றத் தீர்ப்பிற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 2 | 3 |
| (எ) ஆண்டு இறுதியில் முடிவுறாமல் இருந்த தகராறுகளின் எண்ணிக்கை. | 1,965 | 1,929 |

## இணைப்பு—2

1986 ஆம் ஆண்டில் நடந்த வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும்; :

| விவரம். | 1985 (1985ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் நாளிலிருந்து 1985ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் நாளன்று முடிய.) | 1986 (1986ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் நாளிலிருந்து 1986ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாளன்று முடிய.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை. | 212 | 263 |
| 2. வீணான உழைப்பு நாட்கள் .. | 35,05,226 | 34,53,12[illegible] |



## இணைப்பு— 3.

1986 ஆம் ஆண்டில் நடந்த வேலைநிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவை குறித்துத் தீர்வு காணப்பட்ட வழிமுறைகள் :—

| | | |
|---|---|---|
| (1) | நேரடிப் பேச்சு வார்த்தை மூலமாக தீர்வு காணப்பட்டவை. .. | 50 |
| (2) | தாங்களாகவே முன்வந்து வேலை தொடங்கியவை. .. | 18 |
| (3) | தொழிலாளர் நலத் துறை அலுவலர்களாலும் அரசாலும் தீர்த்து வைக்கப்பட்டவை. .. | 167 |
| (4) | மூடப்பட்டவை .. .. .. | 8 |
| (5) | தீர்ப்பு வழங்கப்பட்டது .. .. | 1 |
| (6) | ஆண்டு இறுதியில் பேச்சு வார்த்தையில் இருந்தவை. .. | 19 |

## இணைப்பு—4

( ) தொழில்வாரியாக ஏற்பட்ட வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்த விவரங்கள் :

| தொடர் எண்ணும் தொழிலும். | வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் எண்ணிக்கை. | | ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை. | | இழந்த உழைப்பு நாட்கள். | |
|---|---|---|---|---|---|---|
| | 1985 | 1986 | 1985 | 1986 | 1985 | 1986 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 துணி நெசவு .. .. | 85 | 143 | 2,19,353 | 1,17,608 | 26,70,879 | 19,14,066 |
| 2 பொறியியல் .. | 84 | 77 | 12,840 | 23,017 | 4,92,574 | 11,93,277 |
| 3 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் .. | 1 | 3 | 55 | 350 | 715 | 4,450 |
| 4 புகையிலை, பீடித்தொழில் | 1 | 1 | 650 | 53 | 52,000 | 604 |
| 5 மலைத் தோட்டங்கள் | 12 | 7 | 2,111 | 1,536 | 67,620 | 19,516 |
| 6 ஏனையவை .. .. | 29 | 32 | 11,875 | 15,096 | 2,21,438 | 3,21,211 |
| மொத்தம் .. | 212 | 263 | 2,46,884 | 1,57,660 | 35,05,226 | 34,53,124 |



(ii) தீர்ப்பு வழங்குதல் :

| (1) | தீர்ப்புக்கு அனுப்பப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | | தீர்ப்புகள் வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|
| | 1985 | 1986 | 1985 | 1986 |
| | (2) | (3) | (4) | (5) |
| (அ) சென்னை தொழில் நடுவர் மன்றம் .. | 97 | 102 | 45 | 77 |
| (ஆ) தொழிலாளர் நீதிமன்றங்கள் .. .. | 1,558 | 1,067 | 123 | 927 |
| (இ) நடுவர் தீர்ப்புக்கு அனுப்பப்பட்டவை .. | 2 | 3 | .. | 3 |
| (ஈ) தொழிலாளர் நீதிமன்றங்கள், முன்பு 33-சி (2) ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்களின் முடிவு செய்யப்பட்டவை | 3,260 | 2,360 | 2,291 | 1,344 |

(iii) தொழில் தகராறுகள் சட்டத்தின் 33-சி (1) ஆம் பிரிவின்கீழ் பாக்கித் தொகைகளை வசூலிப்பதற்கான அரசு ஆணை பிறப்பித்த விவரங்கள் :—

| ஆண்டு. | இனங்களின் எண்ணிக்கை. | தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ.பை. |
| 1985 .. .. .. .. .. | 20 | 7,12,279.24 |
| 1986 .. .. .. .. .. | [illegible] | 21,70,520.18 |

## இணைப்பு—5.

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழ் தொடரப்பட்ட வழக்குகள், முடிக்கப்பட்ட வழக்குகள் குறித்த விவரங்கள்;

| வரிசை எண்ணும் சட்டத்தின் பெயரும். | ஆண்டு தொடக்கத்தில் முடிவு பெறாமல் இருந்தவை. | இந்த ஆண்டில் அனுமதிக்கப் பட்டவை. | முடிக்கப் பட்டவை. | தண்டனை அளிக்கப் பட்டவை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (1) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் | 3,483 | 2,274 | 2,453 | 2,275 |
| (2) தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் .. .. | 8,018 | 33,025 | 29,221 | 29,002 |
| (3) தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டம் .. .. .. .. .. | 1,537 | 3,376 | 3,328 | 3,275 |
| (4) 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம் .. .. | 179 | 274 | 298 | 279 |
| (5) 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்குதலும்) சட்டம் | 83 | 106 | 129 | ... |
| (6) 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம் .. .. .. .. | 2,400 | 6,520 | 6,158 | 6,090 |



| | | | | |
|---|---|---|---|---|
| (7) 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம் .. .. | 90 | 120 | 139 | 128 |
| (8) 1936 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம் .. .. .. .. .. | 621 | 1,516 | 1,422 | 1,385 |
| (9) 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம் .. .. .. .. | 1,021 | 3,284 | 2,800 | 2,753 |
| (10) 1961 ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம். | 34 | 108 | 76 | 75 |
| (11) 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் .. .. | 1 | .. | .. | .. |
| (12) 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர் (பணி நிலைமை) சட்டம் .. .. | 87 | 264 | 256 | 256 |
| (13) 1938 ஆம் ஆண்டு சிறுவர்களை வேலைக்கு வைத்துக்கொள்ளுதல் சட்டம் .. .. | 1 | 31 | 25 | 25 |
| (14) 1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர்கள் ஏனைய செய்தித்தாள் தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள், பல்வகை விதித் துறைகள்) சட்டம் .. .. .. | | .. | .. | .. |
| (15) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப் படி வழங்குதல் சட்டம் .. .. .. | 1 | 1 | 1 | 1 |

இணைப்பு 5—தொடர்ச்சி.

| வரிசை எண்ணும் சட்டத்தின் பெயரும். (1) | விடுதலை பெறப் பட்டவை. (6) | தண் டிக்கப் பட்டவை. (7) | திரும்பப் பெறப் பட்டவை. (8) | தள்ளி விடப் பட்டவை. (9) | முடி வுறாமல் உள்ளவை. (10) | பெறப்பட்ட அபராதத் தொகை. (11) ரூ. பை. |
|---|---|---|---|---|---|---|
| (1) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் .. | 12 | 10 | 88 | 68 | 2,304 | 6,07,317.00 |
| (2) தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் .. .. | 41 | 123 | 55 | .. | 11,822 | 12,51,765.00 |
| (3) தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டம் .. | 26 | 10 | 17 | .. | 1,585 | 2,07,690.00 |
| (4) 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம் .. .. | 4 | 8 | 7 | .. | 155 | 56,520.00 |
| (5) 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்குதலும்) சட்டம் | .. | .. | .. | .. | 60 | 31,830.00 |
| (6) தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம் .. | 17 | 37 | 11 | 3 | 2,762 | 2,09,340.00 |
| (7) 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம் .. .. .. | 5 | 6 | .. | .. | 71 | 25,375.00 |
| (8) 1936 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம். | 15 | 12 | 10 | .. | 715 | 87,930.00 |
| (9) 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம். | 9 | 19 | 19 | .. | 1,505 | 2,47,575.00 |
| (10) 1961 ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம் .. | .. | .. | 1 | .. | 66 | 5,380.00 |
| (11) 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் .. .. | .. | .. | .. | .. | 1 | .. |
| (12) 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர் (பணி நிலைமை) சட்டம் .. | .. | .. | .. | .. | 95 | [illegible]36,780.00 |
| (13) 1938 ஆம் ஆண்டு சிறுவர்களை வேலைக்கு வைத்துக் கொள்ளுதல் சட்டம் .. | .. | .. | .. | .. | 7 | 13,200.00 |
| (14) 1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர்கள் ஏனைய செய்தித்தாள் தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள் பல்வகை விதித்துறைகள்) சட்டம் .. | .. | .. | .. | .. | 1 | .. |
| (15) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கும் சட்டம் .. .. | .. | .. | .. | .. | 1 | 1,000.00 |

## இணைப்பு—6

**தொழிலாளர் நல சட்டத்தின்கீழ் வரும் நிறுவனங்கள், தொழிலாளர்கள், வசூலிக்கப்பட்ட உரிமத் தொகை ஆகியவை பற்றிய விவரம் :—**

| ஆண்டு. | நிறுவனங்களின் எண்ணிக்கை. | அமர்த்திக்கொள்ளப் பட்ட பணியாளர் களின் எண்ணிக்கை. | வசூலிக்கப் பட்ட உரிம பதிவுத் தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| **(அ)** அமைப்பு ரீதியான தொழில்கள் ,— | | | |
| 1. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம்— | | | ரூ. பை. |
| 1985 .. .. .. | 13,011 | 8,02,749 | 1,01,05,413.00 |
| 1986 .. .. .. | 13,496 | 8,11,936 | 1,07,92,355.00 |
| 2. 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம்— | | | |
| 1985 .. .. .. | 485 | 92,752 | இதற்கு அவசிய மில்லை. |
| 1986 .. .. .. | 502 | 92,988 | |
| 3. 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம்— | | | |
| 1985 .. .. .. | 1,551 | 68,764 | 98,085.38 |
| 1986 .. .. .. | 1,565 | 73,811 | 1,00,209.85 |



| ஆண்டு. | நிறுவனங்களின் எண்ணிக்கை. | அமர்த்திக்கொள்ளப் பட்ட பணியாளர் களின் எண்ணிக்கை. | வசூலிக்கப் பட்ட உரிம பதிவுத் தொகை. |
|---|---|---|---|
| **(ஆ)** அமைப்பு ரீதியில்லாத தொழில்கள்— | | | |
| 1. 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம்— | | | |
| 1985 .. .. .. | 1,313 | 12,791 (†வீட்டிலிருந்து பணி புரிவோர் 2 இலட்சம்). | 37,680.00 |
| 1986 .. .. .. | 1,341 | 9,354 (†வீட்டிலிருந்து பணி புரிவோர் 2 இலட்சம்). | 60,160.00 |
| 2. தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள் நிறுவனங்கள் சட்டம்— | | | |
| 1985 .. .. .. | 2,77,370 | 2,74,000 | இதற்கு அவசிய மில்லை. |
| 1986 .. .. .. | 2,81,339 | 2,79,522 | |
| 3. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவு நிறுவனங்கள் சட்டம்— | | | |
| 1985 .. .. .. | 26,133 | 74,926 | 3,18,625.55 |
| 1986 .. .. .. | 27,325 | 87,156 | 4,04,295.00 |

## இணைப்பு—7.

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் ஆய்வாளர்கள் ஆய்வு செய்த விவரம் :—

| சட்டத்தின் பெயர். | முறையான ஆய்வு. | விடுமுறை ஆய்வு. | சிறப்பு ஆய்வு. | திடீர் ஆய்வு. | இரவுநேர ஆய்வு. | சோதனை ஆய்வு. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் (U.R.F. ஆய்வு). | 33,854<br>5,502 | 1,770<br>.. | 3,040<br>.. | 765<br>.. | 1,613<br>.. | 3,552<br>.. |
| 2. தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள் நிறுவனங்கள் சட்டம். | 3,77,044 | 46,770 | 9,412 | 15,330 | 17,464 | .. |
| 3. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம். | 45,148 | 778 | 845 | 680 | 183 | .. |
| 4. 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம். | 3,646 | 53 | 201 | 113 | .. | 231 |
| 5. 1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர்கள், பத்திரிகைத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள் பல்வகை விதித்துறைகள்) சட்டம். | 59 | .. | 2 | .. | .. | .. |
| 6. 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தல் நீக்குதல் சட்டம்) | 1,343 | .. | .. | .. | .. | .. |
| 7. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டம். | 1,69,562 | 1,453 | 1,491 | 595 | .. | .. |
| 8. 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம். | 1,306 | 405 | 71 | 149 | .. | .. |
| 9. 1938 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம். | 56,156 | 126 | 185 | 124 | .. | . |
| 10. 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டம். | 76,957 | 436 | 216 | 1,757 | .. | .. |
| 11. 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம். | 2,407 | 124 | 102 | 73 | .. | .. |
| 12. 1938 ஆம் ஆண்டு சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் சட்டம். | 646 | .. | 2 | 7 | .. | . |
| 13. 1961 ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம் | 14,218 | 85 | 53 | 294 | .. | .. |
| 14. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களை நிரந்தரப் படுத்துதல்) சட்டம். | 8,009 | 85 | 20 | 96 | .. | .. |
| 15. 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம் .. | 13,556 | 85 | 21 | 296 | .. | .. |
| 16. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி சட்டம். | 18,098 | .. | .. | .. | .. | .. |

இணைப்பு 8.

(அ) பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் துறை அலுவலர்களால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள்.

| தொடர் எண்ணும் விவரங்களும். | தமிழ்நாடு உணவகங்கள் சட்டம். | | தமிழ்நாடு கடைகள், நிறுவனங்கள் சட்டம். | | பணிக்கொடை வழங்கல் சட்டம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1985. | 1986. | 1985. | 1986. | 1985. | 1986. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகள். | 9 | 9 | 171 | 120 | 348 | 1,361 |
| 2. இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை. | 106 | 45 | 180 | 198 | 2,239 | 2,205 |
| 3. வழக்குகளின் மொத்த எண்ணிக்கை .. | 115 | 54 | 351 | 318 | 2,587 | 3,566 |
| 4. நடப்பாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 106 | 33 | 231 | 195 | 1,226 | 2,768 |
| 5. ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 9 | 21 | 120 | 123 | 1,361 | 797 |



இணைப்பு 8—தொடர்ச்சி

(ஆ) தொழிலாளர் துணை ஆணையாளர்களால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள்.

| விவரங்கள். | தொழிலாளர் இழப்பீட்டு சட்டம். | | ஊதியம் வழங்கல் சட்டம். | | பணிக்கொடை வழங்கல் சட்டம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1985 | 1986 | 1985 | 1986 | 1985 | 1986 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 413 | 420 | 497 | 863 | 120 | 107 |
| 2. இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை. | 825 | 966 | 1,016 | 655 | 177 | 156 |
| 3. மொத்தம் .. .. .. .. .. | 1,258 | 1,386 | 1,513 | 1,518 | 297 | 263 |
| 4. இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 838 | 988 | 650 | 1,193 | 190 | 212 |
| 5. ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 420 | 398 | 863 | 322 | 107 | 51 |

டி. 2 எ 58—32

## இணைப்பு 9.

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டத்தின் கீழ் சந்தாதாரர்களுக்கு 1986-ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட முன்பணம் பற்றிய விவரங்கள் .—

| நோக்கம். | அனுமதிக்கப் பட்ட இனங்களின் எண்ணிக்கை. | வழங்கப் பட்ட முன்பணம் |
| --- | --- | --- |
| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில்). |
| (அ) ஆயுள் ஈட்டுறுதி கழகத்தின் பாலிசிகளுக்குத் தொகை கொடுக்க (P 62) . . . . | 9.100 | 16.16 |
| (ஆ) குடியிருப்பு மனை அல்லது வீடு வாங்க அல்லது கட்ட அல்லது சிறப்பு இனங்களில் கடன்களைத் திருப்பிச் செலுத்த (P 68B and 68BB). | 10,473 | 93,994 |
| (இ) 15 நாட்களுக்கு மேல் கதவடைப்பு செய்யப்பட்ட அல்லது மூடப்பட்ட நிறுவனங்களில் பணியாளர்களுக்கு (தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி சந்தாதாரர்களுக்கு) வழங்கப் பட்ட முன் பணம் (P 68 M). | 6,860 | 92,11 |
| (ஈ) உறுப்பினர்களுக்கு அவருடைய குடும்பத்தில் உள்ளவர்களுக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டு அவர்களை மருத்துவமனையில் அனுமதித்து மருத்துவ சிகிச்சைக்கான செலவிற்காக. | 294 | 7.92 |
| (உ) உறுப்பினர்களின் திருமணத்திற்கு உறுப்பினரின் மகள்கள், மகன்கள், சகோதரிகள், சகோதரர்கள் திருமணத்திற்கு, உறுப்பினரின் மகன், மகள், ஆகியோரின் உயர் கல்விக்கு ( P 68 K). | 21,505 | 573.90 |
| (ஊ) புயல், வெள்ளம், நில நடுக்கம் ஆகிய இயற்கைச் சீற்றங்களினால் சந்தாதாரர்களின் அசையும்-அசையா சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படும்போது எதிர்பாராமல் செய்யப் படும் செலவிற்காக (P 68 L)—ன்படி வழங்கப்பட்ட முன் பணம். | | |
| (எ) மின்வெட்டு, காரணமாகத் தொழிற்சாலைகளில் தொழிலைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்போது ஊதியத்தில் குறைவு ஏற்பட்டு அவதியுறும் தொழிலாளர்களுக்கு (P 68 M ). | 63,650 | 305.79 |
| (ஏ) உடல் ஊனமுற்றவராக உள்ள சந்தாதாரர்கள் இடர்ப்பாட்டைக் குறைக்க கருவிகள் வாங்குவதற்கு (P 68 N). | | |



## இணைப்பு 10.

31—12—1986ஆம் நாள் நிலவரப்படி, அரசுத் துறை நிறுவனங்கள், 1952-ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பல்வகை விதித்துறைகள் சட்டத்தைச் செயல்படுத்துவதில் தற்போதைய நிலையைக் காட்டும் விவர அட்டவணை

| தொடர் எண்ணும், நிறுவனங் களின் வகை. | இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை. | | | இத்திட்டத்தைச் செயற் படுத்தும் நிறுவனங்களின் எண்ணிக்கை. | | | இத்திட்டத்தைச்செயற் படுத்தாத நிறுவனங் களின் எண்ணிக்கை. | | |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| | விலக்களிக்கப் பட்டது. | விலக்களிக்கப் படாதது. | மொத்தம். | விலக்களிக்கப் பட்டது. | விலக்களிக்கப் படாதது. | மொத்தம். | விலக்களிக்கப் பட்டது. | விலக்களிக்கப் படாதது. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1. மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பொது நிறுவனங்கள்/கழகங்கள். | 64 | 10 | 74 | 64 | 7 | 71 | .. | 3 | 3 |
| 2. மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பொது நிறுவனங்கள்/கழகங்கள். | 115 | 83 | 198 | 115 | 83 | 198 | .. | .. | .. |
| 3. மாநில அரசுத் துறை வகையில் நடத்தும் நிறுவனங்கள். | 67 | 85 | 152 | 24 | 22 | 46 | 43 | 63 | 106 |
| 4. நகராட்சி/மாநகராட்சிகளின் கீழ் வரும் உள்ளாட்சி மன்ற அமைப்புகள். | 5 | 11 | 16 | 5 | 11 | 16 | .. | .. | .. |
| மொத்தம் .. | 251 | 189 | 440 | 208 | 123 | 331 | 43 | 66 | 109 |

## இணைப்பு 11

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் விவர அட்டவணையில் இதுவரையிலும் பின்வரும் தொழில்களில்—தொழிலகங்களில் வேலைகள் சேர்க்கப்பட்டுள்ளன :—

1. கம்பளி விரிப்பு தயாரிக்கும் அல்லது சால்வை நெய்யும் நிறுவனங்களில் வேலைகள்.
2. அரிசி ஆலை, மாவு ஆலை அல்லது பருப்பு ஆலை.
3. புகையிலை தயாரிப்பு, பீடி தயாரித்தல் உட்பட :—
   (அ) பீடி சுற்றுபவர்கள்.
   (ஆ) பீடி சுற்றுப்வர்கள் நீங்கலாக ஏனைய தொழிலாளர்கள்.
   (இ) வாசனைப் புகையிலை, சுவைக்கும் புகையிலை.
   (ஈ) மூக்குப்பொடி தயாரிப்பு.
4. மலைத் தோட்டங்கள்.
5. எண்ணெய் ஆலை.
6. உள்ளாட்சி அதிகார மன்றம்.
7. சாலைகள் அமைத்தல் அல்லது பராமரித்தல் அல்லது கட்டடம் கட்டுமானப் பணிகள்.
8. கல் உடைத்தல் அல்லது கற்களைப் பொடியாக்குதல்.
9. அரக்கு தயாரித்தல்.
10. மைக்கா (சுரங்கம்) தொழில்.
11. பொதுமக்கள் பயன் மோட்டார் போக்குவரத்துத் தொழில்.
12. தோல் பதனிடுதலும், தோல் தயாரிப்பும்.
13. பருத்தியிலிருந்து கொட்டை நீக்குதல் பஞ்சு அழுத்துதல்.
14. பருத்திக் கழிவு.
15. கயிறு தயாரித்தல்.



16. தீப்பெட்டி-வானவெடிகள் தயாரிப்பு.
17. பனியன் தயாரிப்பு.
18. செங்கற்கள்-ஓடுகள் தயாரிப்பு.
19. உப்பளங்கள்.
20. சலவையகங்களும் துணிகள் வெளுத்தலும் (கம்பளி பட்டு உட்பட).
21. வெட்டுமரத் தொழில்.
22. சவ்வரிசித் தொழில்.
23. மோட்டார் வண்டிகள் பட்டறைகள்.
24. விசைத்தறி தொழில்.
25. முந்திரித் தொழில்.
26. தங்க நகைகள் செய்தல்.
27. கைத்தறி நெசவுத் தொழில்.
28. கைத்தறிப் பட்டு நெசவுத் தொழில்.
29. சிறு துறைமுகங்களில் படகு விடுதல். (குழுவின் பரிந்துரையின்படி குறைந்த அளவு ஊதியங்கள் வரையறுப்பதற்கான செயற்குறிப்பு விட்டு விடப்பட்டது).
30. ஹோட்டல்களும் உணவகங்களும்.
31. அச்சகங்கள்.
32. கடைகள்-வணிக நிறுவனங்கள்.
33. திரையரங்குகள்.
34. மீன் பிடித் தொழில் (குழு பரிந்துரைத்தபடி குறைந்த அளவு ஊதியங்கள் வரையறுப்பது விட்டுவிடப்பட்டது)
35. [திரைப்படத் தொழில் (தயாரிப்பு, விற்பனை, விளம்பரம் உட்பட).

36. செயற்கை வைரக்கற்கள் பட்டை தீட்டுதல்.

37. அங்காடிகளிலும், சந்தைகளிலும் சரக்குகளை ஏற்றி (சந்தைகள், அங்காடி மையங்கள், அவை போன்ற பிற இடங்கள்) இறக்கும் வேலைகள்.

38. தேயிலையை விலைக்கு வாங்கிப் பதப்படுத்தும் தொழிற் சாலைகள்.

39. பாத்திரம் (வீட்டுப் பயனுக்காக கலங்கள்) செய்தல்.

40. வெளுத்தல், சாயம் தோய்த்தல்.

41. தையல் வேலைகள்.

42. மருத்துவ மனைகள், தனியார் மருத்துவ மனைகள் (தொழிலாளர் காப்புறுதி மருத்துவமனை, அரசு மருத்துவ மனைகள், மருந்தகங்கள் நீங்கலாக ஏனையவை.)

43. காப்பி பதனிடும் பணிகள்.

44. சோப்பு தயாரிப்பு.

45. டாக்சிகள், ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓட்டுதல்.

46. பொதுப் பொறியியல், கட்டுமானப் பொருத்து பணி.

47. தகரப் பாத்திரம் தயாரிப்பு.

48. கழிவு பருத்தி ஆலைகள்.

49. கள் இறக்குதல், பதனீர் இறக்குதல்.

50. கடல் உணவுத் தொழில்.

51. சோடா பானம் தயாரிப்பு, பானங்கள் தயாரிப்பு.

52. காலணி தயாரிப்புத் தொழில்.

53. தோல் பொருட்கள் தயாரிப்பு.

54. பாலிதின் தயாரிப்பு, நுரை ரப்பர் இனங்கள் செய்முறை பிளாஸ்டிக் தயாரிப்பு.



55. வேளாண்மையும், வேளாண்மை துணைப் பணிகளும்.

56. காடு வளர்ப்பு.

57. இரசாயனம்-வடிசாலைத் தொழில்.

58. ரொட்டி, பிஸ்கோத்து தயாரிப்பு.

59. வானொலிப்பெட்டி பாகங்களை ஒன்றுசேர்க்கும் வேலை உட்பட வானொலிப் பெட்டி தயாரிப்பு.

60. கோணித் தொழில்.

[1987 ஏப்ரல் 20

அத்தியாயம் 1.

தேசிய வேலைவாய்ப்புப் பணி :

1.1. வேலைவாய்ப்புக்கள் :

தமிழ்நாட்டில் 43 வேலை வாய்ப்பகங்கள் இயங்கி வருகின்றன. அதுற்றில் 6 துணை வேலைவாய்ப்பு அலுவலகங்கள், 7 சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகங்கள் (5 தொழில் நுட்பப் பிரிவு அலுவலகங்கள், உடல் ஊனமுற்றோருக்கு ஒரு அலுவலகம் மற்றும் தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம்) சென்னை, மதுரை, அண்ணாமலை நகர் ஆகிய இடங்களில் செயற்படும் 3 பல்கலைக் கழக வேலைவாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் ஆகியவையும் அடங்கும்.

வேலைக்காக பதிவு செய்துள்ள மனுதாரர்கள், வேலை அளிக்கப்பட்டவர்கள், வேலைக்காக வேலைவாய்ப்பகங்களில் செல்லுப்படிப் பதிவேட்டில் (Live Register) காத்திருப்பவர்கள், அறிவிக்கப்பட்ட வேலைக் காலியிடங்களின் எண்ணிக்கை, வேலை வாய்ப்பகங்களை பயன்படுத்திக் கொண்ட அரசுத்துறை, தனியார் துறையைச் சார்ந்த தொழிலதிபர்களின் எண்ணிக்கை விவரங் களும் மற்றும் இதே காலத்தில் சென்ற ஆண்டிற்கான நிகரான விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| விவரங்கள். (1) | 1-1-1985 முதல் 31-12-1985 (2) | 1-1-1986 முதல் 31-12-1986 (3) |
|---|---|---|
| 1 தமிழ்நாட்டிலுள்ள வேலைவாய்ப் பகங்களில் பதிவு செய்யப்பட்டவர் களின் எண்ணிக்கை. | 5,32,721 | 4,94,280 |
| 2 அறிவிக்கப்பட்ட காலியிடங்களின் எண்ணிக்கை. | 74,673 | 67,946 |
| 3 வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 52,390 | 51,103 |
| 4 வேலைவாய்ப்பு அலுவலகங்களை உபயோகித்த வேலை அளிப்பவர் களின் எண்ணிக்கை. | 19,495 | 20,556 |
| 5 டிசம்பர் 31ஆம் நாளின் நிலவரப்படி வேலை வாய்ப்பகப் பதிவேட்டில் உள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை. | 20,81,257 | 24,50,593 |



1987 ஏப்ரல் 20]

1.2. தொழில் மற்றும் நிர்வாக வேலைவாய்ப்பு அலுவலகம்.

இந்த அலுவலகம் உயர்ந்த தொழில் அனுபவம் அறிவியல், பொறியியல், மற்றும் நிர்வாக மேற்பார்வை பணிக் கல்வித் தகுதி யுடையவர்களின் தேவைகளை கவனிக்கிறது. அரசுத் துறை தனியார் துறையைச் சேர்ந்த முதன்மையான தொழில் அதிபர் களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, தகுதியுள்ள விண்ணப்ப தாரர்களைத் தகுந்த வேலையில் அமர்த்த, இந்த அலுவலகம், நடவடிக்கை எடுத்து வருகிறது. 1—1—1986 முதல் 31—12—1986 வரையான கால்த்தில் இந்த அலுவலகம் ஆற்றிய பணிகளின் புள்ளி விவரங்கள் சென்ற ஆண்டிற்கான இதே விவரங்களுடன் ஒப்பிட்டு, கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1-1-1985 முதல் 31-12-1985 | 1-1-1986 முதல் 31-12-1986 |
|---|---|---|
| பதிவு செய்தவர்கள் .. .. | 15,891 | 16,472 |
| வேலையில் அமர்த்தப்பட்டவர்கள் .. | 2,196 | 2,158 |
| 31 டிசம்பர் முடிய செல்லுபடிப் பதி வேட்டில் உள்ளவர்கள். | 49,572 | 63,923 |

1.3. உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம்.

உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்து அவர்களை வேலையில் அமர்த்தும் நோக்குடன் சென்னையில் சிறப்பு வேலைவாய்ப்பகம் ஒன்றும், மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், தஞ்சாவூர், மற்றும் நாகர்கோவில் ஆகிய மாவட் டங்களில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் ஊனமுற் றோருக்காக 6 தனி பிரிவுகளும் இயங்கி வருகின்றன. இவ் வலுவலகங்கள் அரசுத் துறை, தனியார் துறையைச் சேர்ந்த தொழில் அதிபர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு எல்லா வித உடல் ஊனமுற்றோருக்கும் வேலைவாய்ப்பு அளித்து

வருகின்றன. 1—1—1986 முதல் 31—12—1986 வரையிலான காலத்தில் பதிவு செய்த மனுதாரர்கள் வேலையில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆகியவை சென்ற ஆண்டிற்கான விவரங்களுடன் ஒப்பிட்டுக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | 1—1—1985 முதல் 31—12—1985 வரை. | | | 1—1—1986 முதல் 31—12—1986 வரை. | | |
|---|---|---|---|---|---|---|
| | பதிவு செய்தவர்கள். | வேலையில் அமர்த்தப் பட்டவர்கள். | செல்லுபடி பதிவேட்டில் உள்ளவர்கள். | பதிவு செய்தவர்கள். | வேலையில் அமர்த்தப் பட்டவர்கள். | செல்லுபடி பதிவேட்டில் உள்ளவர்கள். |
| பார்வையற்றோர் | 230 | 62 | 1,509 | 387 | 30 | 1,849 |
| காது கேளாதோர் | 194 | 48 | 1,153 | 256 | 68 | 1,341 |
| கை, கால் ஊனமுற்றோர் | 3,926 | 1,072 | 19,083 | 4,591 | 1,236 | 22,359 |
| மொத்தம் | 4,350 | 1,18[illegible] | 21,745 | 5,234 | 1,334 | 25,549 |



1.4. தொழில் நுட்ப மனுதாரர்களுக்காக ஐந்து வேலை வாய்ப்பகங்கள் சென்னை, திருச்சி, மதுரை, கோயமுத்தூர், மற்றும் வேலூரில் இயங்கி வருகின்றன. இவ்வலுவலகங்கள் தொழில் நுட்பத் தகுதி பெற்றோரையும் தொழிற் பயிற்சிப் பள்ளி (ஐ.டி.ஐ.)யில் பயிற்சிப் பெற்ற கைவினைஞர்களையும் பதிவு செய்து பொதுத் துறையிலும், தனியார் துறையிலும் அவர்களைத் தகுந்த பணியில் அமர்த்தும் பணியினை செய்து வருகின்றன.

## 2.1. வேலை நிலவரத் தகவல் திட்டம் : (Employment Market Information Programme)

இத்திட்டத்தின்கீழ் 25 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் உள்ள (வேளாண்மை நீங்கலாக) எல்லா தனியார் துறை நிறுவனங்களிலிருந்தும், அனைத்துப் பொதுத் துறை நிறுவனங்களிலிருந்தும், காலாண்டுக்கொருமுறை வேலை நிலவரத் தகவல் சட்ட ரீதியாக திரட்டப்படுகிறது. 10 முதல் 24 பணியாளர்கள் பணியாற்றும் தனியார் துறையைச் சேர்ந்த நிறுவனங்களிலிருந்தும் இத்தகவல் தாங்களாகவே முன்வந்து அளிக்கும் வேலையளிப்போரிடம் இருந்து திரட்டப்படுகிறது. இவ்வாறு தகவல் திரட்டும் பணி அமைப்பு ரீதியான தொழில் துறைகளில் மட்டும் (Organised Sector only) மேற்கொள்ளப் படுகிறது. 31—3—1986 மற்றும் 30—6—1986 ஆகிய தேதிகளுடன் முடியும் இரண்டு காலாண்டுகளில் தகவல் கேட்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை, பொதுத் துறை, தனியார் துறையைச் சேர்ந்த நிறுவனங்களில் வேலையிலிருப்பவர்களின் எண்ணிக்கை ஆகிய புள்ளிவிவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வரிசை எண்ணும் காலாண்டும். | நிறுவனங்களின் எண்ணிக்கை. | | நிறுவனங்களில் வேலையில் உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|
| | பொது நிறுவனம். | தனியார் நிறுவனம். | பொது நிறுவனம். | தனியார் நிறுவனம். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (1) 31–3–1986 | 9,973 | 12,215 | 14,46,868 | 6,95,145 |
| (2) 30–6–1986 | 10,015 | 12,224 | 14,47,953 | 6,96,576 |

[1987 ஏப்ரல் 20

.2 சுய வேலைவாய்ப்புத் திட்டம்

இத்துறையால் செயல்படுத்தப்படும் கிராமப் புற சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பல தொழில் பிரிவுகளில் பயிற்சி பெற்றவர்களுக்கு கடனுதவி பெற்றுத் தரப்படுகிறது. இதுவரை அதாவது 30—11—1986 வரை 3,422 நபர்களுக்கு ரூ. 1.39 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

வாழ்க்கைத் தொழிலுக்கு வழிகாட்டுதலும், வேலை வாய்ப்பு ஆலோசனை அளித்தலும்.

3.1. தமிழ்நாட்டில் 19 மாவட்டங்களில், மாவட்டத்திற்கு ஒன்றாக 19 வாழ்க்கைத் தொழில் வழிகாட்டும் பிரிவுகள் செயற்பட்டு வருகின்றன. இப்பிரிவுகள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள வேலை தேடுவோருக்கு தொழில், வேலைவாய்ப்பு, பயிற்சி/தொழில் பழகு வசதிகள் குறித்த விவரங்களை அளிக்கின்றன. மாணவர்கள் / வேலைத் தேடுவோரின் பயனுக்காக, காலாண்டுதோறும், வழிகாட்டிச் செய்தி அறிக்கைகளைத் தயாரிக்கின்றன. வாழ்க்கைத் தொழில் வழிகாட்டும் கண்காட்சிகள் குறிப்பிட்ட கால இடைவெளியில் வாழ்க்கைத் தொழில் நெறிகளைப் பரப்புவதற்காக நடத்தப்பட்டு வருகின்றன.

3.2. மேலும் 3 பல்கலைக் கழக வேலைவாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்களும், பல்கலைக் கழக மாணவர்களுக்கு தொழில் நெறி வழிகாட்டும் பொருட்டு செயல்படுகின்றன.

சென்னை/மதுரை/அண்ணாமலை நகர் பல்கலைக் கழகத் தகவல் வழிகாட்டும் நிலையங்கள், சேலம், தஞ்சாவூர், கடலூர் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மற்றும் உதகமண்டலத்திலுள்ள பழங்குடியினருக்கான சிறப்பு வழிகாட்டும் நிலையம் ஆகியவை தொழில் தகவல் கண்காட்சிகளை நடத்தியுள்ளன.

3.3. பழங்குடி இனத்தவருக்கு தொழில் நெறி வழிகாட்டும் ஆலோசனைகளை வழங்கவும், தகுதியுள்ள-பழங்குடி இனத்தவரை வேலையில் அமர்த்துவதற்குத் தகுந்த வேலைவாய்ப்புகளைக் கண்டறிவதற்கும் உதகமண்டலத்தில் பழங்குடியினருக்கான தொழில் நெறி வழிகாட்டும் சிறப்பு அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.



1987 ஏப்ரல் 20]

வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் திட்டம் :

4.1. 1980—81 இல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத்திட்டம் 15—9—1984 முதல் பள்ளியிறுதி வகுப்பு / மேல்நிலை வகுப்பு தேறிய நபர்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. புகுமுக வகுப்பு / மேல்நிலை வகுப்புத் தேறியோருக்கு ரூ. 75-ம், பள்ளியிறுதி வகுப்புத் தேறியோருக்கு ரூ. 50—ம் பட்டப்படிப்பு தேறியோருக்கு ரூ. 100-ம் நிவாரணமாக வழங்கப்படுகிறது.

4.2. நிவாரணம் வழங்குவதற்கென ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை, ஒப்பளிக்கப்பட்ட நிவாரணத் தொகை ஆகியவை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | | 1—1—1985 முதல் 31—12—1985 வரை. | 1—1—1986 முதல் 31—12—1986 வரை. |
|---|---|---|---|
| 1. | நிவாரணத்திற்கென ஒப்பளிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை. | 70,334 | 1,35,038 |
| 2. | ஒப்பளிக்கப்பட்ட நிவாரணத் தொகை. | ரூ. 5.61 (கோடி) | ரூ. 7.69 (கோடி) |

குடும்பத்திற்கு ஒருவர் வேலைத் திட்டம் :

5.1. தமிழக அரசு, தற்போது பொது பிரச்சனையாக உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை சமாளிக்கும் பொருட்டு, "குடும்பத்தில் ஒருவருக்கு வேலை அளிக்கும் திட்டத்தை" கொள்கையாக ஏற்றுக்கொண்டு முனைப்புடன் செயலாற்றி வருகிறது.

5.2. ஒரு மின்சாரப் பணியாளர், தச்சுப் பணியாளர் மற்றும் ஒரு குழாய் பணியாளர் ஆகியோரால் நிர்வகிக்கப்படும் வீட்டுச்சேவை மையங்கள் சென்னையில் 7 முக்கியமான இடங்களில், அப்பகுதிகளில் வசிக்கும் மக்களின் அன்றாட வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அமைக்கப்பட்டது. இது போன்ற மையங்கள் மேலும் 12 கோயம்புத்தூர், சேலம், மதுரை, திருச்சி மற்றும் வேலூர் ஆகிய மாவட்ட நகரங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

5.3. பூவிருந்தவல்லியைச் சுற்றியுள்ள இடங்களில் வாழும் வேலையில்லாத குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் நோக்கத்துடன் பூவிருந்தவல்லிக்கு அருகில் உள்ள குடப்பாக்கம் என்ற இடத்தில் கிராமப்புற வேலை வோய்ப்பு அபிவிருத்தி சங்கம் நிறுவப்பட்டுள்ளது. வறுமைக் கோட்டிற்கு கீழ் இருப்பவர்களுக்கு

[1987 எப்ரல் 20

பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத பிரிவுகளில் பயிற்சி கொடுத்து அவர்களை இச்சங்கத்திலேயே பணியமர்த்திக்கொண் டுள்ளது. இதற்காக இச்சங்கத்திற்கு அரசு ரூ. 30 இலட்சங்கள் மூலதன தொகையாக வழங்கியுள்ளது.

உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு மத்திய மாநில அரசு துறைகளிடமிருந்து தேவைக்கான ஆர்டர்கள் தற்போது அதிகமாக பெறப்படுவதால் மேலும் ரூ. 25 இலட்சங்கள் இச் சங் கத்திற்கு கடனாக வழங்க ஒரு கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

5.4. இந்த சங்கம் கீழ்க்கண்ட தொழில் பிரிவுகளில் பயிற்சி மற்றும் உற்பத்தி பிரிவாகும் :—

1. தையல் வேலை.
2. தொழிற்சாலைக்குத் தேவையான கையுறைகள் தயா ரித்தல்.
3. தச்சு வேலை.
4. செங்கல் தயாரிப்பு.
5. கட்டிடம் கட்டுதல்.
6. இரும்புத் தகடுகளை பற்றவைத்து சாமான்கள் செய்தல்.
7. பேக்கரி மற்றும் உணவுத் தயாரிப்புகள்.
8. பிளாஸ்டிக் சாமான்கள்.
9. இரசாயனப் பொருட்கள் தயாரித்தல்.
10. இயந்திரங்கள் பழுதுபார்க்கும் நிலையம்.
11. மின் இயக்கச் சாதனங்கள் தயாரித்தல்.

5.5. ''ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு வேலை'' திட்டத்தின்கீழ் வட ஆற்காடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் சுயவேலை வாய்ப்புத் திட்டத்திற்காக ரூ. 52 இலட்சம் ஊக்க ஆதரவு தொகை (Subsidy) யாக அளிக்குமாறு மத்திய திட்டக் குழுவை இந்த அரசு அணுகியுள்ளது. பின் தங்கிய மாவட்டங்களாகிய இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம் மற்றும் தர்ம புரியில் அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று சுய வேலையில் ஈடுபடுத்தப்படுவதற்கு ஊக்க ஆதரவுத் தொகை அளிக்க ஒரு கருத்துரு பரிசீலனையில் உள்ளது.



1987 எப்ரல் 20]

அத்தியாயம் 2.

கை வினைஞர் பயிற்சி.

6.1. நமது சமூக அமைப்பின் நிலைக்கு சவாலாக மாபெரும் ரச்சனையாக இருப்பது வேலையின்மை; அதுவும் படித்தவர் ளிடையே வேலையின்மை என்பது குறிப்பிடத்தக்க ஒன்று. ன்றைய நிலையில் எத்தகைய கல்வி தகுதி பெற்றிருந்தவர்களா லும் தொழில் நுட்ப திறமையற்ற எவருக்கும் உடனடியாக வலை கிடைப்பதில்லை என்பது கண்டறிய வருகிறது. ஆனால், ள்ளி இறுதி வகுப்புத் தகுதி அல்லது அதற்கு மேல் கல்வி குதியுடன் தொழிற் பயிற்சி நிலையங்களில் கைவினைஞர் பயிற்சி பற்றவர்கள் பயிற்சி முடிவிற்குப்பின் அதிக எண்ணிக்கையில் வலையில் அமருகின்றனர் என்பது அனுபவபூர்வமாக கண்டறி ப்படுகிறது.

6.2. தற்போது மகளிர்க்கென தனியாக 5 தொழிற் பயிற்சி லையங்கள் உள்பட 42 தொழிற்பயிற்சி நிலையங்கள் மாநில ரசால் நடத்தப்பட்டு வருகிறது. இவைகளில் பொறிப்பகுதி பாருத்துபவர். கடைசல்பிடிப்பவர், இயந்திர வேலையாள், ம்மியர். வானொலி மற்றும் தொலைக்காட்சி மின்னணுவியல் போன்ற 42 பல்வேறு தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படு கிறது. 1986–87 ஆம் ஆண்டில் தென்னாற்காடு மாவட்டம் சங்கராபுரத்தில் மலைவாழ் மக்களுக்காக மட்டும் ஒரு சிறு தொழிற் பயிற்சி நிலையமும் துவங்கப்பட்டுள்ளது. 42 தொழிற் பயிற்சி நிலையங்களை நடத்துவதற்கு தொடரினச் செலவாக ஆண்டுக்கு ரூ. 7 கோடியே 66 இலட்சத்து 44 ஆயிரம் செலவாகி கிறது. மூலதனச் செலவாக கட்டிடம், இயந்திரம் மற்றும் கருவி களுக்காக 59 இலட்சத்து 58 ஆயிரம் 1986–87-ல் மட்டுப் செலவு செய்யப்பட்டுள்ளது.

6.3. 1987–88 நடப்பு நிதி ஆண்டில் மேலும் ஒரு புதிய தொழிற் பயிற்சி நிலையம் துவங்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு எதிர்பார்க்கப்படும் மொத்த செலவு ரூ. 36 இலட்சத்து 32 ஆயிரத்தில், நடப்பு நிதி ஆண்டில் மட்டும் 5 இலட்சத்து 7 ஆயிரம் செலவு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6.4 பல்வேறு தொழிற் பிரிவுகளில் தற்போது சுமார் 14,600 மாணவர்களும் 832 மாணவியர்களும் பயிற்சிபெற்று வருகின்றனர். 1975 முதல் 1986 வரையிலான காலத்தில் 96,755 மாணவ, மாணவியர்கள் அகில இந்திய தொழிற் தேர்வில் பங்கு பெற்றதில் 82,092 மாணவ, மாணவியர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

6.5. அம்பத்தூர் மற்றும் கோயம்புத்தூர் தொழிற் பயிற்சி நிலையங்களில் தற்சமயம் அமைந்துள்ள "வாழ்வியல் மேம்பாட்டுத் திட்டத்தில் தொழிலாளர்கள் மாறிவரும் தொழில்நுட்ப சூழ்நிலைக்கேற்றவாறு மிக அரிய புதிய தொழில் நுட்ப இயந்திரங்களை கையாள, இதுவரையிலும் 3,212 நபர்களுக்கு உதவி அளித்துள்ளது. தொழிற் பழகுநர் சட்டப் 1961-ன்படி 1,585 தொழில் நிறுவனங்கள் இச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டமையால் அரசினால் இதுவரையிலும் 68,000 நபர்களுக்கு தொழிற் பழுகுநர் பயிற்சி அளிக்க முடிந்துள்ளது. தற்பொழுது 11,590 தொழிற் பழகுநர்கள் பயிற்சியில் உள்ளனர்.

6.6. ஊரக இளைஞர் சுயவேலை வாய்ப்பு பயிற்சி திட்டம் 29 தொழிற் பயிற்சி நிலையங்களில் அமுல்படுத்தப்பட்டதால் சுய வேலைவாய்ப்புக்குரிய 20 தொழிற் பிரிவுகளில் 17,900 ஊரக இளைஞர்கள் இதுவரையிலும் பயனடைந்துள்ளார்கள். தற்பொழுது 923 ஊரக இளைஞர்கள் இப்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

6.7. தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களில் கருத்தியியல் பாடம் அறியாத நிலையில் உள்ளவர்களுக்கு அதனை கற்பிக்க, தொழிற்பயிற்சி நிலையங்களில் தொழிலாளர்களுக்கென மாலை நேர வகுப்புகள் நடத்தும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. அம்பத்தூர், கிண்டி, வட சென்னை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மேட்டூர் அணை போன்ற தொழிற்சாலைகள் அமைந்துள்ள இடங்களில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் மாலை நேர வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. 1975 முதல் 1986 வரையிலான காலத்தில் 6,736 தொழிலாளர்கள் மாலை நேர வகுப்புகளின் மூலம் பயனடைந்துளளனர். நடப்பு நிதியாண்டில் ஓசூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்பு ரூ. 9,000 (ஒன்பதாயிரம்) செலவில் தொடங்க அரசு உத்தேசித்துள்ளது. அதனால் ஓசூர் மற்றும் சுற்று வட்டாரத்தில் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மிக அதிக அளவில் பயன் பெறுவார்கள.

6.8. நடப்ப நிதியாண்டில் பின்வரும் திட்டங்களை அமுலாக்க அரசு உத்தேசித்துள்ளது.

1. நாகர்கோவில் மகளிர் தொழிற் பயிற்சி நிலையம் :

இந்நிலையம் மிகவும் பழமையான ஒன்று. 1982-ம் ஆண்டில் அரசு இதனை இதர நிலையங்களுக்கு ஈடாக தகுதியாக உயர்த்தி புதிய தொழிற் பிரிவுகளை ஏற்படுத்தியது. இங்குள்ள தொழிற் பிரிவுகளுக்கு தேவையான விடுபட்டுள்ள கருவிகள் இயந்திரங்கள் வாங்கவும் இதேபோன்று ஏனைய தொழில் நிலையங்களுக்கும் கருவிகள் இயந்திரங்கள் வாங்கவும் ரூ. 7.25 லட்சம் நடப்பு நிதியாண்டில் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.





2. வகுப்பறை மரச்சாமான்கள் :

ஏராளமான தொழிற்பயிற்சி நிலையங்களில் போதுமான அளவில் மேசை, நாற்காலி போன்ற வகுப்பறை மரச்சாமான்கள் இல்லை. நடப்பு நிதியாண்டில் ரூ. 50 ஆயிரம் மேற்கண்ட தேவையை பூர்த்தி செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. சேலம் தொழிற் பயிற்சி நிலையத்தில் மின்சாரம் விநியோகம் :

மூன்றாம் பணிமுறை பயிற்சி திட்டம் அமுலில் உள்ள ஐந்து தொழிற் பயிற்சி நிலையங்களுக்கும் ரூ. 2.50 இலட்சம் மொத்த செலவில் 10 கே.வி.ஏ. மின்மாற்றி சாதனம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதற்கண் 1987–88 ஆம் ஆண்டில் சேலம் தொழிற்பயிற்சி நிலையத்தில் ரூ. 50 ஆயிரம் செலவில் இச் சாதனம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. திண்டுக்கல் தொழிற்பயிற்சி நிலையத்தில் சிறுபான்மையினரின் நலனுக்காக புதிய தொழிற்பிரிவு தொடங்குதல் :

சிறுபான்மையினரின் நன்மைக்காக தொழிற்பயிற்சி நிலையங்களிலும் புதிய தொழிற்பிரிவுகள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் திண்டுக்கல் தொழிற் பயிற்சி நிலையத்தில் தோல்பொருள் உற்பத்தி தொடர்பான தொழிற்பிரிவுகள் ரூ. 3.28 இலட்சம் செலவில் துவங்க அரசு முடிவு எடுத்துள்ளது. இதற்காக 1987–88ஆம் ஆண்டில் ரூ. 2.08 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. தொழிற்பயிற்சி நிலையங்களிலுள்ள பழமையான இயந்திரங்கள் மற்றும் கருவிகளை மாற்றியமைத்தல் :

அதிக எண்ணிக்கையிலான தொழிற்பயிற்சி நிலையங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பாக துவங்கப்பட்டதால் அங்குள்ள பெரும்பாலான இயந்திரங்கள் தற்போது மாற்றியமைக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இதன் தொடர்பாக கிண்டியிலுள்ள முன்னோடி பயிற்சி நிலைய இயக்குநரை தமிழ்நாட்டிலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் சிலவற்றை தேர்ந்தெடுத்து ஆய்வு செய்யுமாறு அரசு கேட்டுக்கொண்டது. மிகவும் பழமையானதும், பழுது பார்ப்பதற்கு தகுதியில்லாத பயன்படுத்த லாயக்கற்றவையாக கருதப்படுகிற இயந்திரங்களை மாற்றியமைப்பதற்காக ஏற்படும் மொத்தச் செலவு எவ்வளவாகும் என்பதை கண்டறிவது

[1987 ஏப்ரல் 20

இந்த ஆய்வின் ஒரு முக்கிய நோக்கமாகும். சென்னை முன் னோடி பயிற்சி நிலையத்தின் குழு மிக பழமை வாய்ந்த எட்டு தொழிற்பயிற்சி நிலையங்களில் ஆய்வு நடத்தியதில் அவை களிலுள்ள இயந்திரங்களை நவீனப்படுத்த ரூ. 232 இலட்சம் செலவாகும் என கருத்துத் தெரிவித்தது. இதன் அடிப்படையில் நடப்பு நிதியாண்டில் மத்திய அரசின் மானியத்தை கணக்கில் கொண்டு ரூ. 2 கோடி இதற்காக செலவு மேற்கொள்ள அரசு உத்தேசித்துள்ளது.

6. தொழிற்பயிற்சி நிலையங்களில் புதிய தொழிற் பிரிவுகள் :

நவீன தொழில் முறையில் கால மாறுபாட்டிற்கேற்ப தொழிற் பயிற்சி நிலையங்களிலுள்ள தொழிற் பிரிவுகளை மாற்றியமைக்க வேண்டிய அத்தியாவசியம் ஏற்பட்டுள்ளது. இதன்படி தூத்துக் குடி தொழிற்பயிற்சி நிலையத்தில் 1987–88 ஆம் ஆண்டில் கம்மியர் குளிர்பதன மற்றும் தட்ப வெப்ப பிரிவு தொடங்க உத் தேசிக்கப்பட்டு இப்புதிய தொழிற் பிரிவுக்காக 1.48 இலட்சம் ரூபாய் செலவு மேற்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

6.9. இது தவிர மதுரை தொழிற்பயிற்சி நிலையத்தில் மில் ரைட் மெக்கானிக் என்கிற ஒரு புதிய தொழிற்பிரிவையும் ரூ. 1.52 இலட்சம் செலவில் நடப்பு ஆண்டில் துவங்க அரசு உத் தேசித்துள்ளது.

6.10. தொழிற் பயிற்சி நிலையங்களில் சுமார் 750 தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ள இளநிலை பயிற்சி அலுவலர்கள் தொழில் பயிற்சி நிலையங்களிலுள்ள பல்வேறு தொழிற் பிரிவுகளில் பயிற்சி யாளர்களுக்கு பயிற்சி அளிக்கத்தக்க வகையில் உள்ளனர். இவர்கள்தான் தொழிற்பயிற்சி நிலையங்களில் புதிதாக சேர்க் கப்படுகிற மாணவர்களுக்கு பல்வேறு தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கவல்ல முதல்நிலை ஆசிரியர்கள். ஆனால் இவர்களின் தொழில் நுட்ப அறிவு அவ்வப்போது மேம்படுத்தப் பட வேண்டும். இதன் காரணமாக மத்திய பயிற்சி நிலையத்தில் இவர்களுக்கு பலகால கட்ட அளவில் முறையாக புதிதாக பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண் டில் பல்வேறு தொழிற்பிரிவுகளைச் சேர்ந்த 25 இளநிலை பயிற்சி அலுவலர்கள் மத்திய பயிற்சி நிலையத்திற்கு மேலும் பயிற்சி பெற அனுப்பப்பட உள்ளார்கள். 1987–88 ஆம் நிதி யாண்டில் இதற்கான ரூ. 6.63 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.



1987 ஏப்ரல் 20]

## அத்தியாயம் 3.

## அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்.

7·1. அயல்நாட்டு வேலைவாய்ப்புக் கழகம் 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாளன்று இந்தியக் கம்பெனிகள் சட்டத் தின்படி, மாநில தனியார் கம்பனியாக பதிவிக்கப்பட்டு, 1979 ஆம் ஆண்டு சூலை திங்கள் 6 ஆம் நாள் முதல் இக்கழகத்தின் பணிகள் துவங்கின. இதன் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 50 இலட்சம் மற்றும் பங்குவரி மூலதனம் ரூ. 20 இலட்சமும் ஆகும். இக்கழகத்தின் முக்கிய நோக்கம், வெளிநாடுகளில் குறிப் பாக மேற்காசிய நாடுகளில் இந்தியர்களுக்கு வேலைவாய்ப்பு களைக் கண்டறிவதும், இந்தியர்கள் வெளிநாடுகளில் நல்ல சேமிப்பை ஏற்படுத்தி, அவற்றை இந்தியத் திட்டங்களுக்குப் பயன்படுத்துவதும், மேலும் வெளிநாடுகள் மற்றும் இந்திய கூட்டுத் தொழில் அமைப்புகளை நிறுவி இந்தியப்பொருள்களை ஏற்றுமதி செய்வதுமாகும்.

7.2. தற்சமயம் இக்கழகம் செய்யும் பணி இந்தியர்களுக்கு வெளிநாடுகளில் வேலைவாய்ப்பைக் கண்டறிவதாகும். இதுவரை 2,927 நபர்கள் மேற்காசிய நாடுகளில் பணிக்காக அனுப்பப்பட் டுள்ளனர். 1978–79 ஆம் ஆண்டிலிருந்து 1984–85 ஆம் ஆண்டு வரை இக்கழகம் ஆண்டுதோறும் நஷ்டம் கண்டுள்ளது. இருப் பினும் நிலைமை மாறி, 1985–86 ஆம் ஆண்டில் ரூ. 7.29 இலட் சம் இலாபம் ஈட்டியுள்ளது. மேலும் இக்கழகம் ரூ. 2.00 இலட்சம் அந்நியச் செலாவணி ஈட்டியுள்ளது. இத்தொகையை இக் கழகத்தால் அனுப்பப்பட்ட நபர்களால் அவர்கள் குடும்பத்திற்கு செலுத்திய அந்நியச் செலாவணி சேராது. இந்த வருமானம் ஏறக்குறைய ரூ. 90 இலட்சம் இருக்கும்.

## அத்தியாயம் 4·

கோரிக்கை 58-பல்வகை மூலதனச் செலவு—495.ஏ ஏனைய சமூக சமுதாய நலப் பணிகள்—எபி. வேலை வாய்ப்பு.

8.1. 1987–88-ம் ஆண்டிற்கான நிதி மதிப்பீட்டில்கைவினை ஞர் பயிற்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான பகுதி-1 திட் டத்தின்கீழ் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு முதலீட்டு செலவிற்கான ரூ. 25.98 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழிற் பயிற்சி நிலையங்களுக்காக விடுதிக் கட்டிடம் :

8.2. இம்மாநிலத்தில் 25 தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு நிரந்தர விடுதிக் கட்டிடங்கள் உள்ளன. 1986–87 ஆம் ஆண்டில் தேனியில் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு விடுதி கட்டிடம் கட்டு

வதற்கு அரசு அனுமதித்துள்ளது. இதற்கான பணிகளும் தொடங்கப்பட்டு விட்டன. 1987–88 ஆம் ஆண்டில் இதற்காக ரூ. 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரக்கோணம் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு கட்டிடம் கட்டுதல், தருமபுரி, இராமநாதபுரம் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு இயந்திரங்கள் வாங்குதல் :

8.3. அரக்கோணம் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு கட்டிடம் கட்டுவதற்காக ரூ. 2.01 இலட்சமும், தருமபுரி மற்றும் இராமநாதபுரத்தில் புதிதாக துவங்கப்பட்ட தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் வாங்க ரூ. 6.30 இலட்சமும் 1987–88 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொழிற் பிரிவுகள் மாற்றியமைத்தல் :

8.4. ஓசூர், திண்டுக்கல், மேட்டூர் அணை மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களிலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு பணிமனை மற்றும் வகுப்பறைகள் ரூ. 22 இலட்சத்து 15 ஆயிரம் செலவில் அமைக்க 1985–86 ஆம் ஆண்டிலேயே அரசு அனுமதித்துள்ளது. இவ்வேலையின் முடிவுக்காக 1987–88 ஆம் ஆண்டில் ரூ. 5 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது. தொழிற் பிரிவுகளை மாற்றியமைத்தல் என்ற திட்டத்தின்கீழ் தேவைப்பட்ட தளவாடங்கள் வாங்கப்பட்டுவிட்டன. மேலும் தேவைப்படும் சிறிய இனங்களுக்கு ரூ. 8 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே வழங்கப்படாத கருவிகள் மற்றும் தளவாடங்கள் வாங்குதல் :

8.5. தொழிற்பயிற்சி நிலையங்களின் பயிற்சியின் திறத்தை முன்னேற்றமடையச் செய்ய அவைகளில் இல்லாத கருவிகள் மற்றும் தளவாடங்கலை வாங்குவதற்கு 1987–88 ஆம் ஆண்டின் நிதி மதிப்பீட்டில் ரூ. 5.32 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழிற்பயிற்சி நிலையங்களை அபிவிருத்தி செய்தல் :

8.6. காந்தி கிராமம் மற்றும் திருப்பூரிலுள்ள மகளிர் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு தளவாடங்கள் வாங்குவதற்கு ரூ. 2.70 இலட்சமும், கடலூர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு கூடுதலாக வகுப்பறைகள் கட்டுவதற்கு ரூ. 52 ஆயிரமும் 1987–88 ஆம் ஆண்டின் நிதி மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

தொழிற்பயிற்சி நிலையங்களை நவீனப்படுத்துதல் :

8.7. கோயம்புத்தூர் தொழிற்பயிற்சி நிலையத்தில் செயல்பட்டு வருகிற ' வாழ்வியல் மேம்பாட்டுத் திட்டத்திற்காக ' கருவிகள் மற்றும் தளவாடங்கள் வாங்குவதற்கு ரூ. 4 இலட்சம் 1987–88 ஆம் ஆண்டின் நிதி மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

---



## இணைப்பு II

(73-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### எழுதுபொருள்-அச்சுத் துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

**1. இயக்கக வளர்ச்சி :**

1831 ஆம் ஆண்டு அச்சகப் பிரிவிற்காக 10 பணியாளர்களைக் கொண்டு தலைமைச் செயலக அரசிதழ்களை அச்சிடுவதற்காக மட்டுமே ஆரம்பிக்கப்பட்ட இந்த அச்சகத்திற்கு இவ்வாண்டு 155 ஆம் ஆண்டாகும். பிறகு, இது எண்ணிக்கையில் கடந்த ஆண்டுகளில் சீராக வளர்ந்துள்ளது. தற்போது மூன்று அச்சகங்கள் சென்னை நகரிலும், ஐந்து அச்சகங்கள் வெளியூர்களிலும் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர, சென்னை இராசாசி சாலையில் எழுதுபொருள் கிடங்கு அலுவலகமும், வெளியீடுகள் விற்பனை நிலையங்கள் இரண்டும் உள்ளன. எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநர் இத் துறையின் தலைவர் ஆவார். இயக்குநருக்கு, நிருவாகம் சம்பந்தமாக ஒரு இணை இயக்குநரும், அச்சிடும் தொழில் தொடர்பாக ஒரு பொது மேலாளரும், கணக்குகளைப் பொறுத்த வரையில் முதன்மை கணக்கு அலுவலரும், எழுது பொருள் பிரிவிற்காக ஒரு துணை இயக்குநரும், அரசு வெளியீடுகள் விற்பனை நிலையத்தைப் பொறுத்த மட்டில் ஓர் உதவி இயக்குநரும் உதவி புரிகின்றனர்.

**2. இயக்ககம் :**

எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்ககம் பெரும்பாலும் பணியாளர் நிருவாகம், தொழில் உறவுகள், பொது நிருவாகம், பொருள்களின் மைய நிருவாக அமைப்பு, எந்திரங்கள் வாங்குதல், அச்சிடும் பிரிவுகளுக்குத் தேவையான பொருட்களைக் கொள்முதல் செய்தல், இம் மாநிலத்திலுள்ள அரசின் துறைகள் அனைத்திற்கும் தேவையான எழுது பொருள்கள், தட்டச்சுப் பொறிகள், படி பெருக்கிகள் மற்றும் கணக்கிடும் பொறிகள் முதலியவற்றைக் கொள்முதல் செய்து எல்லா அரசுத் துறைகளுக்கும் வழங்குதல் ஆகியவற்றை கவனிக்கிறது. இதில் ஒப்பளிப்புப் பெற்ற

[1987 ஏப்ரல் 20

பணியாளர் 234 பேர் உள்ளனர். மேலும் மாநில அரசுக்கு அச்சிடுதல் மற்றும் எழுதுபொருள் பற்றிய எல்லா விவரங்களுக்கும் ஆலோசகராகவும் இருந்துவருகிறது. அரசு மைய அச்சகம் மற்றும் வெளியூர்களிலுள்ள கிளை அச்சகங்களில் உள்ள தளவாடங்கள் மற்றும் மேஜை, நாற்காலி போன்ற மரச் சாமான்கள், எழுத்துருக்கள் முதலியவற்றின் ஐந்தாண்டுக்கொருமுறை இருப்பைச் சரி பார்ப்பதற்காகத் தேவையான தற்காலிகப் பணியாளர்களுக்கு அதாவது 12 பணியாளர்களை நியமிக்க அரசு அனுமதியளித்துள்ளது.

1987-88-ல் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ள எந்திரங்களும் சாதனங்களும் வருமாறு :—

| | |
|---|---|
| 1. மின்சக்தியால் இயக்கப்படும் செமி ஆட்டோமெடிக் பவர் கட்டிங் மெஷின் (மதுரை, அரசு கிளை அச்சகத்திற்காக) | 1 |
| 2. சிலிண்டர் பாரம் ப்ரூப் பிரஸ் (திருச்சி, அரசு கிளை அச்சகத்திற்காக) | 1 |
| 3. டார்க் ரூம் கேமரா (சென்னை, அரசு மைய அச்சகத்திற்காக) | 1 |
| 4. பிரிண்டிங் டவுன் பிரேம் (சென்னை, அரசு மைய அச்சகத்திற்காக) | 1 |
| 5. லைனிங் அப் டேபிள் (சென்னை, அரசு மைய அச்சகத்திற்காக) | 1 |
| 6. எலக்ட்ரானிக் டைப்ரைட்டர் (சென்னை, அரசு மைய அச்சகத்திற்காக) | 1 |

### 3. அச்சிடும் பிரிவு:

3.1. எழுதுபொருள்-அச்சுத் துறையின் கட்டுப்பாட்டில் பின்வரும் அச்சிடும் பிரிவுகள் இயங்கி வருகின்றன :—

1. அரசு மைய அச்சகம், வள்ளலார் நகர், சென்னை.
2. அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்றவளாகம், சென்னை.
3. அரசு கிளை அச்சகம், சூளை, சென்னை.
4. அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை.
7. அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்.



1987 ஏப்ரல் 20]

6. அரசு கிளை அச்சகம், சேலம்.
7. அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்.
8. அரசு கிளை அச்சகம், மதுரை.

### 3.2. அரசு மைய அச்சகம், வள்ளலார் நகர், சென்னை :

இது 1831 ஆம் ஆண்டு முதன் முதலாக தலைமைச் செயலகத்தில் அரசிதழ்களை அச்சிடுவதற்கென்றே நிறுவப்பட்ட சிறு அச்சகமாகும். அதன் பிறகு, வள்ளலார் நகரில் உள்ள சொந்தக் கட்டடத்திற்கு இது மாற்றப்பட்டது. இவ்வச்சகம் பணி மேலாளரின் கட்டுப்பாட்டின் கீழ், 3,509 பணியாளர்களைக் கொண்டு மூன்று முறைமாற்றுப் பணியில் செயல்பட்டு வருகிறது. இவ்வச்சகத்தில், அச்சிடும் எந்திரங்கள் மற்றும் புத்தகம் கட்டும் எந்திரங்கள், அச்செழுத்து கோர்க்கும் எந்திரம், படிமம் தயாரிக்கும் பிரிவு, போட்டோ கம்போசிங் எந்திரம் மற்றும் ரப்பர் முத்திரைப் பிரிவு ஆகியவை முழு அளவில் உள்ளது.

தலைமைச் செயலகம், துறைத் தலைவர்கள், மாநில கணக்காய்வுத் தலைவர் (தமிழ்நாடு), பொதுத் துறைக் கழகங்கள் ஆகிய துறைகள் ஒப்படைக்கும் அச்சிடும் பணிகளையும் மற்றும் வரவு-செலவுத் திட்ட ஆவணங்கள், தமிழ்நாடு அரசிதழ்கள், மந்தன ஆவணங்கள் ஆகியவையும்; வினாத் தாள்கள், நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் போன்ற மிக இரகசியமான இனங்கள் ஆகியவையும் இந்த மைய அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

மைய அச்சகத்தில் 1986-ல் செய்து முடிக்கப்பட்டுள்ள சில முக்கிய பணிகள் வருமாறு :—

1. ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தலுக்கான வாக்காளர் சீட்டுகள்.

2. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் மாணவர்களுக்கான அடையாள சீட்டுகள், பயணச் சீட்டுகள்.

3. தமிழ்நாடு சட்டமன்றத்திற்கான படிவங்கள், உறைகள், பெயர் அச்சிட்ட கடிதத்தாள்கள்.

[1987 ஏப்ரல் 20

4. மாநிலக் கணக்காய்வுத் தலைவரின் அறிக்கைகள், படிவங்கள், ஓய்வூதியம் வழங்குவதற்கான ஆணைப் புத்தகங்கள், பேரேடு அட்டைகள்.

5. சி. எம். என். எம்.பி.-க்கான உடல் நல பரிசோதனை அட்டை.

6. முதியோர் உதவித் தொகை பெறுவோருக்கான அடையாள அட்டை.

7. நகர்ப்பகுதி நில வரவுப் புத்தகம்.

8. நல்விதை, தோரணவாயில் போன்ற பத்திரிகைகள்.

உடல் ஊனமுற்ற ஒரு தொழிலாளிக்கு மூன்று சக்கர மிதி வண்டி ஒன்று இந்த வருடத்தில், தொழிலாளர் நல வாரியத்திலிருந்து வழங்கப்பட்டது.

பார்வை இழந்தோருக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பு அளித்தமைக்காக, இந்நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்காக பாராட்டுச் சான்றிதழும் மாநில அளவில் 1985-க்கான பரிசும் சமூக நலத் துறையால் 19—3—1986 அன்று வழங்கப்பட்டது.

1985 ஆம் வருடத்தில், பார்வை இழந்த புத்தகம் கட்டும் (நிலை ) தொழிலாளி ஒருவருக்கு அவரின் வேலைத் திறமையைக் கருதி பரிசு ரூ. 150-ம், தகுதிச் சான்றிதழும் வழங்கப்பட்டன.

இவ்வச்சகத்தில் ஓய்வு அறை ஒன்று உள்ளது. தனியார் ஒப்பந்தக்காரர் ஒருவரால் சிற்றுண்டிசாலை ஒன்று நடத்தப்படுகிறது. மேலும் பணிபுரியும் மகளிரின் குழந்தைகளைப் பணி நேரங்களில் கவனித்துக்கொள்ள குழந்தைகள் காப்பகம் ஒன்றும் உள்ளது.

இந்த ஆண்டில் இறந்த பணியாளரின் குடும்பத்திற்கு ரூ. 1,000 தொழிலாளர் நல வாரியத்திலிருந்து கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், இறந்த 18 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு குடும்ப நல நிதியிலிருந்து ரூ. 20,000 வீதம் இந்த ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.



1987 ஏப்ரல் 20]

**3.3. அரசு கிளை அச்சகம், கிண்டி, சென்னை:**

இந்த அச்சகம், 1974 ஆம் ஆண்டிலிருந்து தனியார் வாடகை கட்டிடத்தில் தொடங்கப்பட்டு ரூ. 18,848 மாத வாடகையில் செயல்பட்டு வருகிறது.

இவ்வச்சகத்திற்கு, கிண்டி (டான்சி பௌண்டரி) என்னும் இடத்தில் நிலம் வாங்கிப் புதிய கட்டிடம் கட்டிமுடிக்க எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநர் அரசுக்குச் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். இது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

இவ்வச்சகம், அனுமதிக்கப்பட்ட 696 பணியாளர்களைக் கொண்டு மூன்று முறைமாற்றுப் பணிகளில் இயங்கி வருகிறது. இவ்வச்சகம் முக்கியமாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு, காவல் துறை, மருந்துவத் துறை மற்றும் வணிக வரித் துறை சம்பந்தப்பட்ட அச்சுப் பணிகளைச் செய்து வருகிறது.

பெண் பணியாளர்களின் வசதிக்கென, குழந்தைகள் காப்பகம் ஒன்று உள்ளது. பணியாளர்களின் தேவைக்காக தனியார் ஒப்பந்தக்காரர் ஒருவரால் ஒரு சிற்றுண்டிச்சாலை நடத்தப்படுகிறது.

நடப்பு ஆண்டில் இறந்த மூன்று பணியாளர்களின் வாரிசுகளுக்கு ரூ. 20,000 வீதம் குடும்ப நல நிதியிலிருந்தும் ரூ. 100 வீதம் பணியாளர் நல நிதியிலிருந்தும் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு தொழிலாளர் நல உதவி அலுவலர் இக் கிளை அச்சகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் நலனைக் கவனித்து வருகிறார். இப்பிரிவுக்காகத் தாள் வெட்டும் தானியங்கி இயந்திரம் ஒன்று வாங்கப்பட்டுள்ளது.

**3.4. அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்றக் கட்டட வளாகம், சென்னை:**

1923-ம் ஆண்டு உயர் நீதி மன்றக் கட்டட வளாகத்தில் இலவசமான வாடகையில் திறக்கப்பட்ட இக்கிளை அச்சகம் தொடர்ந்து 239 பணியாளர்களைக் கொண்டு மூன்று முறைமாற்றுப் பணி

களில் இயங்கி வருகிறது. இக் கிளை அச்சகத்தின் முக்கிய பணி உயர் நீதிமன்றத்திற்குரிய தினசரி வழக்குப் பட்டியல்கள் மற்றும் இந்திய சட்ட அறிக்கைகள் ஆகியவற்றை அச்சிட்டு வழங்குத லாகும்.

1986-87-ம் வருடத்தில் இக் கிளை அச்சகத்திற்காக ஈய அச்சுக் களை வெட்டும் கருவிகள் இரண்டும் நீரைக் குளிரவைக்கும் சாதனம் ஒன்றும் டெய்சிவீல் கருவி ஒன்றும் வாங்கப் பட்டுள்ளது.

இவ்வச்சகத்திற்கு மேலும் ஒரு டெய்சிவீல் வாங்க உத்தேசிக் கப்பட்டுள்ளது.

1987-88-ல் புதிய சிலிண்டர் பிரிண்டிங் மெசின் மூன்று வாங்கு வதற்காக எழுதுபொருள்-அச்சுத்துறை இயக்குநர் அனுப்பிய செயற்குறிப்பு பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டில் இக் கிளை அசச்கத்தில் இறந்த இரண்டு பணி யாளர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ. 20,000 வீதம் குடும்ப நல நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

ஒரு மனமகிழ் மன்றம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இதற்குத் தேவையான விளையாட்டுச் சாதனங்கள் தொழிலாளர் நல நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

**8.5. அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை:**

இக் கிளை அச்சகம், 1949-ம் ஆண்டிலிருந்து தனது சொந்தக் கட்டிடத்தில் 258 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறை மாற்றுப் பணிகளில் இயங்கி வருகிறது.

பொதுவாக கீழ்க் குறிப்பிட்டுள்ள அச்சுப் பணிகள் இக்கிளை அச்சகத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. நிலைப்படுத்தப்பட்ட படிவங்களான அடக்க விலை மற்றும ஓய்வு ஊதியப் படிவங்கள், ஆதி திராவிட நலத் துறைப் படிவங்கள், பிற்பட்டோர் நலத் துறைப் படிவங்கள், பதிவுத் துறைப் படிவங்கள், மூன்று விதமான மருத்துவப் படிவங்கள், நில அளவை சிட்டுப் படிவங்கள், பொதுப் படிவம் எண் 222 (தன் பதிவேடு)



போன்றவை இக்கிளை அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன. இதைத் தவிர, கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தனிப் படிவங்களும் அச்சிடப்பட்டன :—

1. புதுக்கோட்டை மாவட்டத்தின் பொருளாதாரப் புள்ளி விவரம்.

2. சூல் மருத்துவம்.

3. உடல் தத்துவம்.

இதைத் தவிர, செங்கல்பட்டு, நீலகிரி, சென்னை, வட ஆற்காடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராஜர், தரும புரி, கோயமுத்தூர், சிதம்பரனார் மாவட்டங்களின் அரசிதழ் களும் இக் கிளை அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

ரூ. 15,867.55 மதிப்புள்ள ஏர் கம்ப்ரெசர் மோட்டார் ஒன்று இக்கிளை அச்சகத்திற்காக வாங்கப்பட்டது.

1986-87-ல் மின் உற்பத்தி எந்திரம் ஒன்று வாங்கக் கருதப் பட்டுள்ளது.

இவ்வச்சகத்தில், தொழிலாளர் நலன் கருதி ஒரு தொழிலாளர் கூட்டுறவு சங்கமும், மனமகிழ் மன்றமும் தொடர்ந்து இயங்கி வருகிறது.

**3.6. அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி:**

இக்கிளை அச்சகம், 1965-ம் ஆண்டிலிருந்து அரியமங்கலம் தொழிற்பேட்டையில் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்குச் சொந்தமான நான்கு கட்டிடங்களில் இயங்கி வருகிறது. இங்கு இரண்டு முறைமாற்றுப் பணியில் 172 பணியாளர்கள் பணி புரிந்து வருகின்றனர்.

இவ்வச்சகத்திற்குச் சொந்தமான கட்டிடம் நிறுவ துவாக்குடி என்னும் கிராமத்தில் 3.08 ஏக்கர் பரப்பளவு நிலம் ஏற்கனவே வாங்கப்பட்டுள்ளது. இந்த நிலத்தைப் பராமரிக்கும்பொருட்டு, ஆண்டுக்கு ரூ. 569.80 தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி

நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டு வருகிறது. ரூ. 20.24 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் இந்த அச்சகத்திற்குக் கட்டிடம் கட்ட அரசு 1986 ஜூனில் நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது. 1986-87 ஆம் ஆண்டில் ரூ. 10 இலட்சத்திற்கு மேற்படாமல் செலவு செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இக்கிளை அச்சகத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த எல்லா அரசுத் துறைகளுக்கும், அன்றாடத் தேவைக்கு வேண்டிய பொதுப் படிவங்களும், பதிவேடுகளும் அச்சிடப்படுகின்றன. இதைத் தவிர, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பற்றிய கையேடு, உள் துறைக்குத் தேவையான வார மற்றும் ஆண்டு அட்டவணைகள், நிலத் தீர்வை மற்றும் நில அளவைத் துறைக்குத் தேவையான 'ஏ' பதிவேடு, மருத்துவப் படிவங்கள் (புறநோயாளிகள் குறிப்புச் சீட்டுகள்), பொதுப்பணித் துறையிலுள்ள காவேரி மேல்அணைக்கட்டு நுழைவுச் சீட்டுகள், திருச்சி, புதுக்கோட்டை, மதுரை தஞ்சாவூர் மாவட்ட பொதுப் பணித் துறை அட்டவணை விதங்கள் மற்றும் மதுரை, திருச்சி, அண்ணா மாவட்ட அரசிதழ்கள் ஆகியவை இக்கிளை அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

1986-87-ல் இக் கிளை அச்சகத்திற்கு நீரைக் குளிர வைக்கும் சாதனம் ஒன்று வாங்கப்பட்டுள்ளது.

1987-88-ல் கீழ்க்கண்ட இயந்திரங்களை வழங்குமாறு எழுது பொருள்-அச்சுத் துறை இயக்குநர் செயற்குறிப்புகளை அனுப்பியுள்ளார்:—

| | |
|---|---|
| 1. தாள்வெட்டும் ஒரு பகுதி தானியங்கி எந்திரம் | 1 |
| 2. கையால் தாள் செலுத்தும் உருளை அச்சுப் பொறி | 1 |
| 3. படிவப் பார்வைப் படி அச்சுப் பொறி | 1 |

இச் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

இக்கிளை அச்சகத்தில் கூட்டுறவு கடன் வழங்கு சங்கம் ஒன்றை ஏற்படுத்த எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநர் நடவடிக்கை எடுத்து வருகிறார். இப்பொருள் கூட்டுறவு சங்க இணை இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.



இக்கிளை அச்சகத்தில் இறந்த பணியாளர் ஒருவரின் வாரிசு தாரருக்கு ரூ. 20,000 குடும்ப நல நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

இவ்வச்சகத்தில் ஒரு மனமகிழ மன்றம் தொடர்ந்து நடை பெற்று வருகிறது.

### 3.7. அரசு கிளை அச்சகம், சேலம் :

இவ்வச்சகம், 1966-ம் ஆண்டு துவங்கப்பட்டு 6—6—1986 முதல் ரெட்டியூர் கிராமத்தில் 59.35 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப் பட்ட தனது சொந்தக் கட்டிடத்தில் 159 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறைமாற்றுப் பணிகளில் இயங்கி வருகிறது. இந்த அச்சகத்தின் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்காக அச்சகக் கட்டிடத்திற்கு அருகே 5.40 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநர் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். இச்செயற்குறிப்பு பரிசீலிக்கப்பட்டு வருகிறது. 1986-87 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் இந்த அச்சகத்திற்குக் கூடுதலாக 23 பதவிகளுக்கு அரசு ஒப்புதலளித்துள்ளது.

இவ்வாண்டில் இவ்வச்சகத்தில் பின்வரும் பணிகள் மேற் கொள்ளப்பட்டன:—

1. தமிழகத்தில் உள்ள எல்லா மாவட்டங்களுக்கும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு சம்பந்தமான படிவங் களும், பதிவேடுகளும் அச்சிட்டு வழங்கப்பட்டு வருகிறது.

2. சேலம், பெரியார் மாவட்ட அரசிதழ்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டன.

3. தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம் (T.N.E.T. Act) தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டம் (T.N.G.S.T. Act) மத்திய விற்பனை வரிச் சட்டம் (C.S.T. Act) தொடர்பான படிவங்களும் பதிவேடுகளும்.

4. நான்கு மாவட்டங்களிலுள்ள ஆதி திராவிட நலப் பள்ளி கள் மற்றும் மாணவர் இல்லங்களுக்கு தேவையான படிவங்களும் பதிவேடுகளும்.

5. சேலம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஊராட்சித் தேர்த லுக்குத் தேவையான படிவங்கள் (10 இனங்கள்).

6. நில அளவை—நிலப் பதிவுருக்கள் துறைக்கு தேவையான 'ஏ' பதிவேடுகள்.

7. இதைத் தவிர, எழுதுபொருள் கிடங்கிற்குத் தேவையான நான்கு குயர் நோட்டுகள், அழுத்திக் கவ்விக் கொள்ளும் கோப்பு அட்டைகள் ஆகியவற்றில் ஒரு பகுதி இங்கு செய்து தரப்படுகின்றன ;

1986-87 ஆம் வருடத்தில் கீழ்க் குறிப்பிட்டுள்ள எந்திரங்கள் இவ்வச்சகத்திற்காக வாங்கப்பட்டன :—

| | ரூ. |
|---|---|
| 1. அச்சு எந்திரம் ஓ.எம். 2 தானியங்கி அச்சு எந்திரம் (எண்ணிக்கை 7). | 16,88,960 |
| 2. டீலக்ஸ் மாடல் ஓரளவு தானியங்கி தாள் வெட்டும் எந்திரம் (எண்ணிக்கை 1) | 35,686 |
| | 17,24,646 |

1987-88 ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின்கீழ் சேலம் அரசு கிளை அச்சகத்திற்குப் பின்வரும் எந்திரங்களை வாங்கக் கருதப் படுகிறது:—

| | ரூ |
|---|---|
| 1. ஓரளவு தானியங்கி அச்சு எந்திரம் (Letter Press) R.A. II ) கையால் தாள் செலுத்தும் வகை அளவு (எண்ணிக்கை 1) | 1,00,000 |
| 2. சுழல்வகை எண்ணிடும் எந்திரம் 20 பெட்டிகள் (எண்ணிக்கை 1) | 3,00,000 |

1986-87-ல் இவ்வச்சகத்திற்கு நீரைக் குளிர வைக்கும் சாதனம் ஒன்று வாங்கப்பட்டது.

இவ்வச்சகத்தில் பணியிலிருந்து இறந்த பணியாளரின் சட்டப் படிக்கான வாரிசுதாரர் ஒருவருக்கு ரூ. 20,000 குடும்ப நல நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கம் ஒன்று தொடர்ந்து இயங்கி வருகிறது.





**3.8. அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் :**

இவ்வச்சகம் 1966-ம் ஆண்டு தொடங்கப்பட்டு, அதன் சொந்தக் கட்டிடத்தில் 209 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறை மாற்றுப் பணிகளில் இயங்கி வருகிறது. இதில் 7 உடல் ஊனமுற்ற பணியாளர்களும் உள்ளனர். இவர்கள் பல்வேறு பிரிவுகளில் பணி புரிகின்றனர்.

இவ்வச்சகத்தில் பொதுப் பணித் துறை, நீதித்துறை, வேலை வாய்ப்பு அலுவலகம், வேளாண்மை, தொழில் மற்றும் வணிகம், வனம், கால்நடை பராமரிப்பு, கூட்டுறவு, தீயணைப்புத் துறைகள், தேசிய மாணவர் படை மற்றும் புள்ளியல் துறை ஆகிய துறைகளுக்குத் தேவைப்படும் நிர்ணயிக்கப்பட்ட படிவங்கள் அச்சிடப் படுகின்றன. மேற்சொன்னவைத் தவிர, தென் ஆற்காடு மாவட்ட அரசிதழ் (ஆங்கிலம் மற்றும் தமிழில்) மாதந்தோறும் அச்சிடப் படுகின்றது.

தொழிலாளர்களின் நலன் கருதி ஒரு மனமகிழ் மன்றமும் கூட்டுறவு கடனுதவிச் சங்கமும் இயங்கி வருகின்றன.

**3.9. அரசு கிளை அச்சகம், மதுரை :**

இக்கிளை அச்சகம் 1976-ம் ஆண்டு துவங்கப்பட்டு நல்ல வடிவமைப்புள்ள சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இதில் 353 பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். இவ்வச்சகத்தில் வருவாய்த்துறை, சிறைத்துறை, கருவூலத்துறைகளைச் சார்ந்த படிவங்களும் மற்றும் மோட்டார் வாகன சட்டம் சம்பந்தமான படிவங்களும் அச்சிடப்படுகின்றன.

இவ்வச்சகத்தில் கீழ்க்கண்ட சிறப்புப் பணிகளும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன:—

1. அருப்புக்கோட்டை, திருநெல்வேலி சட்ட மன்றப் பேரவைத் தொகுதி இடைத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகளை அச்சிடுதல்.

2. மதுரை, ராமநாதபுரம், கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைக் கொண்ட 72 தொகுதிகள் அடங்கிய ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகளை அச்சிடுதல்.

[1987 ஏப்ரல் 20

3. தமிழ்நாடு அரசுத் தேர்வாணைக் குழு விண்ணப்ப படிவங்கள், அடையாளச் சான்றிதழ்கள் மற்றும் விதிக் கோவைத் தாள்கள்.

4. போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத மோட்டார் வாகனங்களுக்கான (10 வகை) மோட்டார் வாகன வரி உரிமப் புத்தகங்கள்.

5. தாள் நாட்காட்டி—1987.

6. மூன்று மாத நாட்காட்டி—1987.

7. அமைச்சர்களின் நாட்குறிப்பேடுகள்—1987.

8. சட்டமன்ற நாட்குறிப்பேடுகள்—1987.

9. சிறப்பு நாட்குறிப்பேடுகள்—1987.

10. நிலச் சீர்திருத்தப் படிவங்கள்—35 (நில அளவைத் துறை).

11. டைபாய்டு தடுப்பு ஊசி வில்லைகள்.

12. காலரா தடுப்பு ஊசி வில்லைகள்.

1986-87-ல் இவ்வச்சகத்திற்கு ஒரு சீட் பெட் ஆப்செட் பிரிண்டிங் மெசின் ஆர்.எ. 1. அளவு ஒன்றும், சிங்கிள் ஹெட் ஒயர் ஸ்டிச்சிங் மெசின் ஒன்றும் வாங்கப்பட்டது. பணியிலிருக்கும் போது இறந்த இரண்டு பணியாளர்களின் சட்டப்படிக்கான வாரிசுதாரர்களுக்கு ரூ. 10,000 வீதம் குடும்ப நல நிதியிலிருந்து வழங்கப்பட்டது. மேலும் பணியிலிருக்கும்போது இறந்த பணியாளர்களின் சட்டப்படிக்கான வாரிசுதாரர் ஒருவருக்கு ரூ. 20,000 குடும்ப நல நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

பணியிலிருக்கும்போது இறந்த பணியாளரின் சட்டப்படிக்கான வாரிசுதாரர் ஒருவருக்கு ரூ. 100 பணியாளர் நல நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

தொழிலாளர் நலன் கருதி கூட்டுறவு கடனுதவிச் சங்கம் ஒன்றும் மனமகிழ் மன்றம் ஒன்றும் இயங்கி வருகிறது.



1987 ஏப்ரல் 20]

1—7—1986 முதல் சிற்றுண்டிச்சாலை ஒன்றும் இவ்வச்சகத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

4. அரசு வெளியீடு விற்பனை நிலையம்:

சென்னையில் அரசு வெளியீடு விற்பனை நிலையம் மற்றும் கிளை விற்பனை நிலையம் (உயர் நீதிமன்ற வளாகம்) ஆகிய இவ்விரண்டும் உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் 58 பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

சென்னை, அண்ணா சாலையில் உள்ள விற்பனை நிலையம் சட்டங்கள், விதிகள், விதிக் கோவைகள், நடைமுறை நூல்கள், அரசிதழ்கள், செய்தி அறிவிப்பு வெளியீடுகள் மற்றும் பணிப் பதிவேடுகள் போன்ற அரசு வெளியீடுகளை விற்பனை செய்து வருகிறது. இந்திய அரசு வெளியீடுகளுக்கும் முகவராமைப்பாகச் செயல்படுகிறது. 1—4—1986 முதல் 30—11—1986 வரையிலான கால அளவில் இந்த அரசு வெளியீடு விற்பனை நிலையத்தின் விற்பனைச் சாதனைகள் வருமாறு:—

| | ரூ. காசு. |
|---|---|
| 1. அரசு அலுவலகங்களுக்கு இலவசமாக வழங்கிய வெளியீடுகளின் மதிப்பு | 32,723.97 |
| 2. மாநில அரசு மற்றும் மைய அரசு வெளியீடுகளின் விற்பனை மதிப்பு | [illegible] |
| 3. உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள கிளை விற்பனை நிலையத்தில் விற்பனை ஆகிய மத்திய அரசு வெளியீடுகளின் மதிப்பு | 62,140.90 |

5. எழுதுபொருள் பிரிவு:

5.1. அரசு எழுதுபொருள் கிடங்கு, இராசாசி சாலை, சென்னை:

எழுதுபொருள்-அச்சுத் துறையின் எழுதுபொருள் பிரிவு எழுதுபொருள்களை, அதாவது தட்டச்சு இயந்திரங்கள், நகல் பொருள்கள், கணக்கிடும் இயந்திரங்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து சேகரித்து வைத்து பின்னர் அரசு

அலுவலகங்களுக்கு இலவசமாக வழங்கும் மைய முகவரமைப்பாக இயங்கி வருகிறது. இது ஒரு துணை இயக்குநரின் பொறுப்பில் 327 பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

எழுதுபொருள் கிடங்கு இயங்கி வரும் தற்போதுள்ள கட்டிடத்தை இடிக்க அரசு பொதுப்பணித் துறையில் உத்தரவு பிறப்பித்ததன் காரணமாக, கிண்டி டான்சி பௌண்டரி என்னும் இடத்தில் நிலம் வாங்கி எழுதுபொருள் கிடங்கிற்காக கட்டிடம் கட்ட எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநர் செயற்குறிப்புகளை அரசுக்கு அனுப்பியுள்ளார். அவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

1986-87 ஆம் ஆண்டில் நீரைக் குளிர வைக்கும் சாதனம் ஒன்று இக்கிளைக்காக வாங்கப்பட்டுள்ளது.

1—4—1986 முதல் 30—11—1986 வரையிலான காலத்தில் ரூ.4,39,11,525.45 அளவிற்கு எழுதுபொருள்கள் வாங்கப்பட்டன. மத்திய அரசின் உதவி பெறும் அல்லது மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களைச் செயல்படுத்தும் நிறுவனங்களுக்கு, அவை முன்கூட்டியே உரிய தொகை செலுத்துவதன் பேரில் எழுதுபொருட்கள் வழங்கப்படுகின்றன.

5.2. எழுதுபொருள் கொள்முதல் :

காகிதம், அட்டை, தட்டச்சு பொறிகள், படிப்பெருக்கிகள், கதர் மற்றும் கைத்தறி துணிகள், அச்சகம் மற்றும் சிறைச்சாலை தயாரிக்கும் பொருட்கள் நீங்கலாக ஏனைய எல்லா எழுது பொருட்களும் ஆண்டுதோறும், ஒப்பந்தப் புள்ளிகள் கேட்டு வெளி அங்காடியில் வாங்கப்படுகின்றன.

5.3. காகிதம் மற்றும் அட்டைகள் கொள்முதல் :

காகிதம் மற்றும் அட்டைகள் போன்றவைகள், புதுடெல்லியில் உள்ள வழங்கல் விற்பனைத் தலைமை இயக்குநர் விலை வீத ஒப்பந்த அடிப்படையில் செய்யும் ஒதுக்கீட்டின் பேரில் பல காகித ஆலைகளில் இருந்து கொள்முதல் செய்யப்படுகின்றன.



சிறப்பு வகைக் காகிதம் மற்றும் அட்டைகள் போன்றவைகள் மைய அரசு விலை வீத ஒப்பந்த அடிப்படையில்லாமல் வெளி அங்காடியில் வெளிப்படையான ஒப்பந்த புள்ளிகளின் வரம்பிற்குட்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், தனி ஒப்பந்த புள்ளிகள் கோருவதன் மூலம் ஆணையர் மற்றும் செயலர், போக்குவரத்துத் துறை அவர்களை தலைவராகவும் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநர் மற்றும் துணைச் செயலர், நிதித் துறை ஆகியவர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட சிறப்புக் கொள்முதல் குழுவின் ஒப்புதல் பெற்று கொள்முதல் செய்யப்படுகின்றன.

பணியிலிருக்கும்பொழுது இறந்த நான்கு பணியாளர்களின் சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு முறையே 20,000 வீதம் குடும்ப நல நிதியிலிருந்தும், ரூ. 100 வீதம் தொழிலாளர் நல நிதியிலிருந்தும் வழங்கப்பட்டது.

6. பணியாளர்களின் வசதிகள் :

(1) குடியிருப்புகள் :—சென்னையிலுள்ள தண்டையார் பேட்டையில் பணியாளர்களுக்கென 300 குடியிருப்புகள் உள்ளன. இவைகளில் 104 குடியிருப்புகள் 'ஏ' வகையிலும், 96 குடியிருப்புகள் 'பி' வகையிலும், 107 குடியிருப்புகள் 'சி' வகையிலும் உள்ளன. இந்த வீடுகளில் கம்பிப் பொருத்திகள் மின்விசிறி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகளும், தெரு விளக்கு வசதிகளும் உள்ளன. கூடுதலாக 232 குடியிருப்புகள் கட்ட அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு அவை அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

(2) தொழிலாளர் நலன் :—தொழிலாளர் நல அதிகாரியும் சுகாதார ஆய்வாளரும் குடியிருப்புகளை அடிக்கடி பார்வையிட்டு குடியிருப்போரின் நலன்களை கவனித்து வருகின்றனர். தொழிலாளர்களின் இன்னல்களைக் களைய, தொழிலாளர் நல அதிகாரி சென்னை மற்றும் வெளியூரிலுள்ள இத்துறைப் பிரிவுகளுக்கு நேரிடையாகச் சென்று வருகிறார். சுகாதாரம் நல்ல முறையில் பராமரிக்கப்படுகின்றதா என்று சுகாதார ஆய்வாளர் நகரில் உள்ள எல்லாப் பிரிவுகளுக்கும் சென்று

மேற்பார்வையிடுகின்றார். கொசுத் தொல்லையை ஒழிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, சுகாதாரம் நல்ல முறையில் பராமரிக்கப்படுகின்றது. ஓய்வு அறை, சிற்றுண்டி அறை, மிதிவண்டி நிறுத்துமிடம், வானொலி மற்றும் பிரிவுநிலை வகுப்புகள் நடத்தும் அறைகள் ஆகியவை அமைக்கப்பட்டு தொழிலாளர்கள் தொடர்ந்து இவற்றை பயன்படுத்தி வருகின்றனர்.

(3) மருத்துவ வசதி:—அரசினர் மைய அச்சகத்திலுள்ள மருந்தகத்தைச் சார்ந்த மருத்துவ அலுவலர் வாரம் ஒருமுறை எழுதுபொருள் இயக்ககம், உயர் நீதிமன்ற கட்டிட கிளை அச்சகம், ஆனைக்காரன் தோட்ட கிளை அச்சகம் ஆகியவற்றிற்கும் சென்று பார்வையிடுகிறார். நாள்தோறும் பணியாளர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் மைய அச்சகத்தில் உள்ள மருந்தகத்தில் மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றது.

(4) பன், தேனீர், பால் இலவசமாக வழங்குதல்.—அரசு மைய அச்சகம், அதன் கிளை அச்சகங்கள் அனைத்திலும் பணி புரியும் எல்லா பணியாளர்களுக்கும் பன், தேனீர் இவற்றிற்குப் பதிலாக ஒரு நபருக்கு மாதம் ரூ. 13 வீதம் படி வழங்கப்படுகிறது. மேலும் உலோகப் புகையினால் உடல் நல இன்னல்களுக்குட்படக்கூடிய பணியாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் 250 மில்லி லிட்டர் பாலுக்கு பதிலாக ஒரு நாளைக்கு 0.60 பைசா ஒவ்வொரு பணியாளருக்கும் வழங்கப்படுகிறது. அத்துடன் இலவசமாக பலவகை ஊட்டச் சத்து மாத்திரைகளும் வழங்கப்படுகின்றன. இரவு நேரப்படி ரூ. 1.50-லிருந்து ரூ. 2.50 ஆக 18—7—1986 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

7 நாள் வார ஈட்டுப்படி, சென்னை அரசினர் மைய அச்சக வரவு-செலவுத் திட்ட இரகசியப் பிரிவிலும், பாம இரகசியப் பிரிவிலும் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு முறையே ரூ. 3-லிருந்து ரூ. 12 ஆகவும், ரூ. 5-லிருந்து ரூ. 15 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.



(5) தொழிலாளர் நல நிதி: எழுதுபொருள்-அச்சுத் துறையில் அந்தந்த பொழுதுபோக்குச் சங்கங்களுக்கு தொழிலாளர் நல நிதியிலிருந்து விளையாட்டுகள், நல பணிகள் ஆகியவற்றுக்கான தொகை வழங்கப்படுகிறது. மேலும் இந்த நிதியிலிருந்து பணியாளர்களுக்கு விடுதலை நாள் விழா, ஆயுத பூஜை, நிருவாக பணியாளர் சங்க ஆண்டு விழா, முதலியன கொண்டாடவும் தொகை வழங்கப்படுகிறது.

தொழிலாளர் நல நிதியில் பங்குத் தொகை செலுத்தும் தொழிலாளர்கள் தங்களுடைய குழந்தைகளின் பள்ளிப் பாடப் புத்தகங்களுக்காகும் செலவை, சென்னை, தொழிலாளர் நல வாரியத்திடமிருந்து ஒவ்வொராண்டும் திரும்பப் பெறுகின்றனர்.

(6) சீருடைகள்: இத்துறையில் தொழிலாளர்களுக்கு இலவசமாக சீருடைகள் வழங்கும் திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதுவரை 1018 தொழிலாளர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 310 தொழிலாளர்களுக்கு சீருடை வழங்குவதற்கு எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநரிடமிருந்து வரப்பெற்ற கருத்துருக்கள் 1987-88 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

(7) தொழிலாளர் நல நிதி: தொழிலாளர் இறக்க நேரிடின் அவருடைய குடும்பத்தினருக்கு உடனடி நிவாரணமாக ரூ. 100 இந்நல நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. இதைத் தவிர ரூ. 200 தொழிலாளர் நல வாரியத்திலிருந்து இறந்த தொழிலாளர்களின் சட்டப்படிக்கான வாரிசுதாரருக்கு வழங்கப்படுகிறது.

(8) நலத் திட்டங்கள்: நலத் திட்டமாக, பெண்கள் துணை வருவாய் பெற உதவும் வகையில் புத்தகம் கட்டும் வேலைகள், மேலுறை தயாரித்தல் ஆகியவை சென்னை மாநகரில் உள்ள காவல் துறை நலப் பிரிவுகள், பட்டினப்பாக்கம் மகளிர் மன்றம், உடல் ஊனமுற்றோர் நலக் கூட்டுறவு சங்கம் போன்ற சமூக நல அமைப்புகளிடம் ஒப்படைக்கப்படுகின்றன. சமூக நலப் பிரிவுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட பணிக்கு புத்தகம் கட்டும்

வேலைகள் குறித்த அட்டவணையில் வரையறுக்கப்பட்டுள்ள விதங்களுக்குப் பதிலாக 1982 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அங்கீகரிக்கப்பட்ட இணைப்பு ஜே-ல் கண்டுள்ள விதங்களில் 80 விழுக்காடு தொகை வழங்கும்படி அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

(9) தொழில் பழகுதல் :—1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டத்தை செயல்படுத்தும் வகையில் வெவ்வேறு வகைத் தொழில்களின் கீழ் 257 தொழில் பழகுவோரும், பதவிகளின் குறுகிய கால பட்டயக் கல்வி சான்றிதழ் பெற்ற 45 பேரும் அச்சகப் பிரிவில் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்தொழில் பழகுவோர் சென்னை மாநகரிலும், வெளியூர்களிலும் உள்ள அரசு அச்சகங்களிலும் பணிபுரிய நியமிக்கப்படுகின்றனர்.

(10) கூட்டுறவு சங்கம் :—சென்னை மைய அச்சகத்தில் இயங்கி வரும் தமிழ் நாடு அரசு அச்சகம் மற்றும் எழுதுபொருள் துறை தொழிலாளர் கூட்டுறவு சங்கம் (வரையறுக்கப்பட்டது) 2,862 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அதன் பங்கு முதலீடு ரூ. 27.41 இலட்சமாகும். உறுப்பினர்களுக்கு இச்சங்கத்தின் மூலம் 1985-86-ல், 3.27 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டது. ஆனால் 1984-85-ல் இச்சங்கத்தில் 3.38 கோடி ரூபாய் கடன் வசதி வழங்கப்பட்டது. இச்சங்கம் 1985-86-ல் 4.77 இலட்சங்கள், நிகர லாபம் கட்டி உறுப்பினர்களுக்கு 12 சதவீதம் ஆதாயப் பங்கு தொகை தொடர்ந்து வழங்கி வருகிறது. 1984-85-ல் 5.17 இலட்சம் நிகர லாபம் கிடைத்தது.

(11) கூட்டுறவு பண்டகசாலை :—மைய அச்சகத்தில் செயல்படும் கூட்டுறவு பண்டகசாலை, உணவுப்பொருள் பங்கீட்டு ஏற்பாட்டின் கீழ் வரும் பொருட்கள் உட்பட, இன்றியமையாத பண்டங்களை நியாய விலையில் பணியாளர்களுக்கு விற்பனை செய்வதன் மூலம் பயனுள்ள வகையில் பணியாற்றி வருகிறது. தற்போது 1,659 உறுப்பினர்களுடன் ரூ. 35,360 பங்கு மூலதனத்தைக் கொண்டுள்ளது. இது அரசிடம் இருந்து பங்கு மூலதன உதவியாக ரூ. 22,500 பெற்றுள்ளது. 591 பங்கீடு அட்டைகள் வைத்திருப்போருக்கு பங்கீடு பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. தொழிலாளர் நலன்





கருதி 3 முதல் 6 சதவீதம் மட்டுமே ஆதாயம் கிடைக்கும் வகையில் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. அதிகப் பட்சமாக மாதமொன்றிற்கு ரூ. 200 வரை பொருட்களை உறுப்பினர்கள் கடனாக வாங்கும் வசதியும் செய்யப்பட்டுள்ளது. பண்டகசாலை 31—12—1986 வரை ரூ. 8,206.17 நஷ்டத்தில் இயங்கியுள்ளது.

(12) அரசு அச்சகக் குழு : இது அச்சகப் பிரிவு தொழிலாளர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பு ஆகும். இக்குழு உறுப்பினர்கள் எவரேனும் இறக்க நேரிடின், அவருடைய குடும்பத்திற்கு தேவையான அவசர உதவிகளை தொடர்ந்து செய்து வருகிறது. இக்குழுவில் 31—12—1986-ல் உள்ளபடி 3,196 உறுப்பினர்கள் உள்ளனர். 1986 ஆம் ஆண்டில் இறந்துபோன அரசு அச்சகக் குழுவின் 63 உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ. 61,600 வழங்கப்பட்டுள்ளது.

பொது : பணியாளர்களின் குறைகளை நேரில் கேட்டு நிவர்த்தி செய்யும் பொருட்டு, எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநரும் மற்றும் இணை இயக்குநரும் நேரம் ஒதுக்கி உள்ளனர்.

ೱ 31 N87
V2M, 3! N87.39:1
136520
சென்னை-600 008.